18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால் நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

Governor of Tamil Nadu

Thiru SADIQ ALI

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Hon. Thiru M.G. RAMACHANDRAN (Chief Minister)—Public General Administration, Planning, Indian Administrative Service District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Public Works Department and Establishment Matters relating ot Public Works Department.

2. Hon. Dr. V.R. NEDUNCHEZHIYAN (Minister for Finance)—Finance, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Electricity)—Electricity, Iron and Steel Control.

4. Hon. Thiru K.A. KRISHNASAMY (Minister for Rural)—Industries)—Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development and Registration.

5. Hon. Thiru S.D. SOMASUNDARAM (Minister for Revenue)—Revenue, Commercial Taxes, Excise and Census.

6. Hon. Thiru R.M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)—Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor Pesmits.

7. Hon. Thiru C. ARANGANAYAGAM (Minister for Education)—Education including Technical Education and Official Language.

8. Hon. Thiru K. KALIMUTHU (Minister for Agriculture) - Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. Hon. Thiru C. PONNAIYAN(Minister for Co-operation and Law)—Law, Courts, Prisons, Legislation onWeights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. Hon. Thiru P. KULANDAIVELU (Minister for Local Administration—Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedeness, Bhoodan and Gram, dhan and Highways.

11. Hon. Thiru S. RAGHAVANANDAM (Minister for Labour—Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. Hon. Dr. H.V. HANDE (Minister for Health)—Health.

13. Hon. Thiru K. RAJA MOHAMMED (Minister for Irrigation)—Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. Hon. Thiru S. MUTHUSAMY (Minister for Transport)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. Hon. Thiru S. THIRUNAVUKKARASU (Minister for Industries)—Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. Hon. Thiru S.N. RAJENDRAN (Minister for Handloom and Khadi)—Handlooms, Khadi, Prohibition excluding grant of Liquor permits and Passports.

17. Hon. Thiru M. VIJAYASARATHY (Minister for Harijan Welfare)—Harijan Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minister for, Social Welfare) Social Welfare including Women and Children Welfare Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர்.

*மாண்புமிகு திரு. க. இராசாராம்.

பேரவைத் துணைத் தலைவர்.

*மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

† மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. வி. வி. சுவாமிநாதன்.
2. திரு. ஜே. எஸ். இராசு.
3. திரு. என். எஸ். வி. சித்தன்.
4. திரு. எஸ். சிவசாமி.

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ.,பி.எல்.

துணைச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. இரா. பாலகுரு, பி.ஏ.
திரு. பி. எம். பத்மநாபன் நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல.

குழு அலுவலர்.

திரு. ச. பாஷ்யம், பி.ஏ. (ஆனர்ஸ்).

சார்புச் செயலாளர்கள்.

திரு. வி. சீதாராமன், பி.காம்.
திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள், பி.ஏ., பி.எல்.
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.
திரு. பா. பாலகிருஷ்ணன், பி.காம்.
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி. ஏ.
திரு. டி. எஸ். துளசிராம் (எஸ்டேட் அதிகாரி).

* 21 6-1980 அன்று தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள்.
† 23-1-1981 அன்று நியமனம் செய்யப்பெற்றார்கள்.

பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்

திரு. பி. கோதண்டராமன்.

தலைமை நிருபர்

திரு. மா. சந்திரசேகரன்.

விவாதப் பதிப்பாளர்

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி.லிட்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கபட்ட பெயர்ப் பட்டியல்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்
(1)	(2)
1 அங்குசாமி, திரு. ச.	திருவாடானை
2 அப்துல் ரசாக், திரு. கே. எம். ..	ஆலந்தூர்
3 அப்பாதுரை, திரு. மு.	ஒட்டப்பிடாரம் (செ.வ.)
4 அம்பிகாபதி, திரு. மு.	மன்னார்குடி
5 அரங்கநாதன், திரு. எஸ். ..	தர்மபுரி
6 அரங்கநாதன், திரு. மு. ..	கூனூர் (செ. வ.)
7 அரங்கநாயகம், திரு. செ. ..	கோவை (மேற்கு)
8 அரங்கராசன், திரு. வெ. ..	உப்பிலியாபுரம்
9 அருணாசலம், திரு. இரா. ..	நாமக்கல் (செ. வ.)
10 அழகர்சாமி, திரு. சோ. ..	கோவில்பட்டி
11 அன்பழகன், திரு. க.	புரசைவாக்கம்
12 அன்பழகன், திரு. தி.	நாட்ராம்பள்ளி
13 அன்பில் தர்மலிங்கம், திரு. ..	லால்குடி
14 ஆண்டி அம்பலம், திரு. மெ. ..	நத்தம்
15 ஆண்டித்தேவர், திரு. எஸ். ..	உசிலம்பட்டி
16 ஆறுமுகம், திரு. எம். ..	அவினாசி (செ. வ.)
17 சேலம் ஆறுமுகம், திரு. மு. ..	சேலம்-2
18 ஆறுமுகம், திரு. த.	அரியலூர்
19 இரத்தினம், திரு. எம். வி. ..	பொள்ளாச்சி
20 இராசகுமார், திரு. மெ. அ. ..	மருங்காபுரி
21 இராசமாணிக்கம், திரு. இரெ. ..	குத்தாலம்
22 இராசரத்தினம், திரு. து. ..	பூந்தமல்லி
23 இராசாம்பாள், திருமதி. தா. ..	தலைவாசல் (செ.வ
24 இராசாராம், திரு. க.	பனமரத்துப்பட்டி
25 இராசாராமன், திரு. எஸ். ..	பாபநாசம்
26 இராசு, திரு. ஜே. எஸ். ..	பெரம்பலூர் (செ.வ.
27 இராசேந்திரன், திரு. எஸ்.என். —	தூத்துக்குடி
28 இராமச்சந்திரன், திரு. எம்.ஜி. ..	மதுரை (மேற்கு)

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
29 இராமச்சந்திரன், திரு. கே.கே. ..	சாத்தூர்
30 இராமச்சந்திரன், திரு. ச. ..	பண்ருட்டி
31 இராமச்சந்திரன், திரு. ந. செஞ்சி. ..	செஞ்சி
32 இராமசாமி, திரு. த. ..	இராமநாதபுரம்
33 இராமசுப்பிரமணியம், திரு. எஸ். ..	ஸ்ரீவைகுண்டம்
34 இராமலிங்கம், திரு. ஏ. ..	காட்டுமன்னார் (செ. வ.)
35 இராமலிங்கம், டாக்டர் கே. பி. ..	இராசிபுரம்
36 இராமலிங்கம், திரு. செ. ..	திருவிடைமருதூர்
37 இராஜசேகரன், திரு. வெ. ..	இராதாகிருஷ்ணநகர்
38 இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. ..	தல்லி
39 இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். ..	ஆண்டிப்பட்டி
40 இளையபெருமாள், திரு. எல். ..	எழும்பூர் (செ. வ.)
41 ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. ..	அம்பாசமுத்திரம்
42 உகம்சந்த், திரு. எஸ். டி. ..	மதுராந்தகம்
43 உச்சி. திரு. கே. ..	கூடலூர்
44 உத்திராபதி, திரு. பொ. ..	திருத்துறைப்பூண்டி (செ. வ.)
45 உமாநாத், திரு. ரா. ..	நாகை
46 கண்ணன், திரு. ம. ..	கண்டமங்கலம் (செ. வ.)
47 கணபதி, திரு. கே. ஆர். ..	சிதம்பரம்
48 கணேசன், திரு. இ. ..	இடைப்பாடி
49 கணேசன், திரு. சி. ..	அச்சரப்பாக்கம் (செ. வ.)
50 கந்தசாமி, திரு. கா. வே. ..	கிணத்துக்கடவு
51 கந்தசாமி, திரு. பி. ..	பொங்கலூர்
52 கபாலி, திரு. டி. கே. ..	மைலாப்பூர்
53 கருணாநிதி, டாக்டர், மு ..	அண்ணாநகர்

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.		தொகுதியின் பெயர்.
(1)		(2)
54	கருப்பசாமிப் பாண்டியன் திரு. வி. ..	பாளையங்கோட்டை
55	கருப்பையா, திரு. இரா. ..	குளித்தலை
56	கருப்பையா, திரு. ஏ. டி. ..	வால்பாறை (செ. வ.)
57	கல்லன், திரு. கே. ..	உதகமண்டலம்
58	கலிதீர்த்தான், திரு. சோ. ..	சங்கராபுரம்
59	கலியமூர்த்தி, திரு. பெ. ..	மங்களூர் (செ. வ.)
60	நன்னிலம் கலையரசன், திரு. ஆ. ..	நன்னிலம் (செ. வ.)
61	காளிமுத்து, திரு. கா. ..	திருப்பரங்குன்றம்
62	கிட்டப்பா, திரு. என். ..	மாயூரம்
63	கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. ..	காங்கேயம்
64	கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. ..	ஆயிரம் விளக்கு
65	கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. ..	ஆண்டிமடம்
66	கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. ..	நெல்லிக்குப்பம்
67	கிருஷ்ணராஜ், திரு. ஜி. ..	சேலம்-1
68	கிருஷ்ணன், திரு. ரா. ..	வாசுதேவநல்லூர்
69	குப்புசாமி, திரு. என். ..	மொரப்பூர்
70	குப்புசாமி, திரு. கே. ..	ஒட்டன்சத்திரம்
71	குப்புசாமி, திரு. செ. ..	வந்தவாசி (செ. வ.)
72	குமரிஅனந்தன், திரு. ..	திருவொற்றியூர்
73	குருசாமி, திரு. ப. ..	அந்தியூர் (செ. வ.)
74	அண்ணாதாசன், திரு. எம். ..	திருவரும்பூர்
75	குலசேகர், திரு. ஏ. டி. ..	சிங்காநல்லூர்
76	குலசேகரப் பாண்டியன், திரு. ந. ..	வாணியம்பாடி
77	குழந்தைவேலு, திரு. ப. ..	உடுமலைப்பேட்டை
78	கேசவ ஆதித்தன், திரு. சி. ..	திருச்செந்தூர்
79	கோபால், திரு. சி. ..	சோளிங்கர்
80	கோபாலகிருஷ்ணன், திரு. கா. ..	பெரியகுளம்
81	கோபாலன், திரு. ஆர். டி. ..	கம்பம்
82	கோமதி சீனிவாசன், திருமதி. ..	வலங்கை (செ. வ.)
83	கோவேந்தன் திரு. எம். ஆர். ..	பேராவூரணி
84	கோவைத்தம்பி, திரு. ..	பேரூர்

LEGISLATIVE ... வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தொடர் எண்ணும் உறுப்பினர் களின் பெயரும்.		தொகுதியின் பெயர்.
	(1)	(2)
85	சக்கரபாணி, திரு. ஆர். ..	பொன்னேரி
86	சங்கரய்யா, திரு. என். ..	மதுரை (கிழக்கு)
87	சட்டநாத கரையாளர் திரு. கி...	தென்காசி.
88	சண்முகம், திரு. இரா.	திருத்தணி
89	சண்முகம், திரு. ஏ. சி.	ஆரணி
90	சத்தியமூர்த்தி, திரு. வ. ..	கடலாடி
91	சந்திரசேகரன், திரு. ஏ. ..	சோழவந்தான்
92	சபாபதி, திரு. சி.	அரூர் (செ. வ.)
93	சமரசம், டாக்டர் கே. ..	காவேரிப்பட்டணம்
94	சாகுல் ஹமீது, திரு. ஏ. ..	கடையநல்லூர்
95	சாமிக்கண்ணு, திரு. தா. ..	செங்கம்
96	சித்தன், திரு. என். எஸ். வி. ..	திருமங்கலம்
97	சிதம்பரம், திரு. சி. த. ..	காரைக்குடி
98	சிவசாமி, திரு. செ. ..	இளையான்குடி
99	சிவஞானம், திரு. ந. ..	திருவோணம்
100	சிவப்பிரகாசம், திரு. சி. ..	சேந்தமங்கலம் (செ. வ.)
101	சிவபெருமான், திரு. மு ..	ஓமலூர்
102	சிவராமன், திரு. எஸ். ..	சின்னசேலம்
103	சின்னசாமி, திரு. எம். ..	கரூர்
104	சின்னதுரை, திரு. ஏ. ..	மேல்மலையனூர்
105	சின்னராசு, திரு. க. இரா. ..	கிருஷ்ணகிரி
106	சின்னராஜ், திரு. எம். ..	தொண்டமுத்தூர்
107	சுந்தரம், திரு. கே. ஆர். ..	குடியாத்தம்
108	சுந்தரம், திரு. ப. ..	திருப்பத்தூர்
109	சுந்தரம், திரு. மு. ..	ரிஷிவந்தியம்
110	சுந்தரமூர்த்தி, திரு. ஆர். ..	முகையூர்
111	சுந்தரராஜ், திரு. நா. ..	திருமயம்
112	சுந்தரராஜன், திரு. மு. ..	விருதுநகர்
113	சுப்பிரமணியன், திரு. உ. ..	சிவகங்கை
114	சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். ..	போடிநாயக்கனூர்
115	சுப்பிரமணியன், திரு. மா. ..	திருவையாறு
116	சுப்பிரமணியன், திரு. வி. ..	திருநாவலூர்

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1)		தொகுதியின் பெயர். (2)
117 சுப்பிரமணியன், திரு. ஜி. கே.	..	பவானிசாகர்
118 சுவாமிநாதன், திரு. வி. வி.	..	புவனகிரி
119 செங்கோட்டையன், திரு. கு. அ.	..	கோபிச்செட்டிப் பாளையம்
120 செம்மலை, திரு. செ.	..	தாரமங்கலம்
121 செல்லமுத்து, திரு. எம்.	..	திருவாரூர் (செ. வ.)
122 செல்வராசன், திரு. அ.	..	துறைமுகம்
123 சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. பூ. செ.	..	அரவக்குறிச்சி
124 சேதுராமன், திரு. ஏ. எம்.	..	ஆற்காடு
125 சொக்கலிங்கம், திரு. கே.	..	திருப்போரூர்
126 சோமசுந்தரம், திரு. எஸ். டி.	..	பட்டுக்கோட்டை
127 சோமு, திரு. என். வி. என்.	..	பூங்கா நகர்
128 சௌந்திரராசன், திரு. கே.	..	திருச்சி—2
129 டாக்டர் சௌரிராஜன், திரு. கே.	..	தி. நகர்
130 தங்கமணி கவுண்டர், திரு. கே. எம்.	..	திண்டிவனம்
131 தங்கராசு, திரு. ஏ.	..	குறிஞ்சிப்பாடி
132 தங்கவேல்ராஜ், திரு. பி. எம்.	..	கிருஷ்ணராயபுரம் (செ.வ)
133 தங்கவேலு, திரு. பி.	..	செயங்கொண்டான்
134 தவசி, திரு. ஆர்.	..	பரமக்குடி (செ. வ.)
135 தனபால், திரு. ப.	..	சங்கரி (செ. வ.)
136 தனுக்கோடித் தேவர், திரு. கே.	..	முதுகளத்தூர்
137 தாமரைக்கனி, திரு. இரா.	..	ஸ்ரீவில்லிப்புத்தூர்
138 தியாகராசன், திரு. ஆர்.	..	விருத்தாசலம்
139 திருச்சி சௌந்திரராஜன், திரு. ஆர்.	..	ஸ்ரீரங்கம்
140 திருநாவுக்கரசு, திரு. எஸ்.	..	அறந்தாங்கி
141 திருமாறன், திரு. பெ.	..	ஆலங்குடி
142 திருமான், திரு.	..	ஏற்காடு (செ.வ.)
143 திருவேங்கடம், திரு. பெ. சு.	..	கலசப்பாக்கம்
144 தீர்த்தராமன், திரு. பு.	..	பென்னகரம்

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
145 துரைசாமி, திரு. பி. எஸ். ..	பர்கூர்
146 துரைமுருகன், திரு. ..	ராணிப்பேட்டை
147 துரைராமசாமி, திரு. ..	வெள்ளக்கோவில்
148 துரைராஜ், திரு. பி. ..	சங்கரநாயினார் கோவில் (செ.வ.)
149 தேவராஜ், திரு. வி. எம். ..	வேலூர்
150 நடராசன், திரு. எஸ். ..	தஞ்சாவூர்
151 நரசிம்மன், திரு. பூ. மு. ..	பள்ளிப்பட்டு
152 நல்லப்பன், திரு. தி. கா. ..	பெருந்துறை
153 நவநீதகிருஷ்ணபாண்டியன், திரு. ..	ஆலங்குளம்
154 நாச்சிமுத்து, திரு. கே. பி. ..	மேட்டூர்
155 நாராயணசாமி, திரு. கே. ..	திருவண்ணாமலை
156 நாராயணன், திரு. பி. ஜி. ..	பவானி
157 நெடுஞ்செழியன், டாக்டர் இரா. ..	திருநெல்வேலி
158 நெடுமாறன், திரு. ப. ..	மதுரை (மத்திய)
159 பக்கீர் முகம்மது, திரு. இ. எஸ். எம். ..	கும்பகோணம்
160 பட்டாபிராமன், திரு. செ. ..	திருவள்ளூர்
161 பம்மல் நல்லதம்பி, திரு. ..	தாம்பரம்
162 பரமசிவ கவுண்டர், திரு. பி. என். ..	பல்லடம்
163 பலராமன், திரு. இல. ..	போளூர்
164 பழனிசாமி, திரு. சு. ..	மேட்டுப்பாளையம்
165 பழனிமுத்து, திரு. சி. ..	ஆத்தூர்
166 பழனியப்பன், திரு. கு. ப. ..	விழுப்புரம்
167 பழனிவேல், திரு. என். ..	பழனி (செ. வ.)
168 பாண்டியன், திரு. பி. எச். ..	சேரன்மாதேவி
169 பாபு கோவிந்தராஜன், திரு. ..	கடலூர்
170 பாபு ஜனார்த்தனன், திரு. ..	செய்யாறு
171 பாரமலை, திரு. க. ..	மானாமதுரை (செ. வ.)
172 பாலகிருஷ்ணன், திரு. ஈ. ..	மொடக்குறிச்சி
173 பாலகிருஷ்ணன், திரு. ..	வெகாளி

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும்.		தொகுதியின் பெயர்.
	(1)	(2)
174	பாலசுப்பிரமணியன், திரு. க. ..	சீர்காழி (செ. வ.)
175	வேடசந்தூர் பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. ..	வேடசந்தூர்
176	பாலன், திரு. சு. ..	பெரம்பூர் (செ. வ
177	பாலுச்சாமி, திரு. ஏ. ..	சமயநல்லூர் (செ. வ.)
178	பிச்சை, திரு. எம். ..	அருப்புக்கோட்டை
179	பிரபாகரன், திரு. ஜே. சி. டி. ..	வில்லிவாக்கம்
180	புருஷோத்தமன், திரு. து. ..	சைதாப்பேட்டை
181	பூங்காவனம், திரு. என். ஏ. ..	காட்பாடி
182	பெரியசாமி, திரு. ஏ. ..	தாராபுரம் (செ. வ.)
183	பெரியசாமி, திரு. ரா. ..	தொட்டியம் (செ.வ)
184	பெருமாள், திரு. என். ..	வரகூர் (செ.வ.)
185	பெருமாள், திரு. ரா. கு. ..	விளாத்திகுளம்
186	பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். ..	நிலக்கோட்டை (செ. வ.)
187	பொன்னுரங்கம், திரு. ப. ..	ராயபுரம்
188	பொன்னையன், திரு. சி. ..	திருச்செங்கோடு
189	மணி, திரு. டி ..	விளவங்கோடு
190	மணிமாறன், திரு. ஆர். ..	திருப்பூர்
191	மாணிக்கம், திரு. எம். எஸ். ..	வேதாரண்யம்
192	மாரிமுத்து, திரு. த. ..	குளத்தூர் (செ. வ.)
193	முகமது இஸ்மாயில், திரு. பி. ..	பத்மநாபபுரம்
194	முசிறிப்புத்தன், திரு. ம. ..	திருச்சி–11
195	முத்துக்கிருஷ்ணன், திரு. சு. ..	கன்னியாகுமரி
196	முத்துசாமி, திரு. சு. ..	ஈரோடு
197	முத்துராமலிங்கம், திரு. இ. ..	ராதாபுரம்
198	முத்துவேல், திரு. என். ..	வானூர் (செ. வ.)
199	முத்தையா, திரு. இரா. ..	சேடப்பட்டி
200	முனிரத்தினம், திரு. இரா. சா. ..	கும்மிடிபூண்டி
201	முனுசாமி, திரு. மு. ப ..	பாலக்கோடு
202	மூர்த்தி, திரு. ஜி. ..	பேரணாம்பட்டு (செ. வ.)

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும்.		தொகுதியின் பெயர்
(1)		(2)
203 மொக்கையன், திரு. பி.	..	ராஜபாளையம் (செ.வ.)
204 யசோதா, திருமதி டி.	..	ஸ்ரீ பெரும்புதூர் (செ.வ.)
205 ரகுமான்கான், திரு. அ.	..	சேப்பாக்கம்
206 ரங்கசாமி, திரு. ஆர்.	..	சத்தியமங்கலம்
207 ரங்கசாமி, திரு. க.	..	உளுந்தூர்பேட்டை (செ.வ.)
208 ரமணி, திரு. கு.	..	கோயம்புத்தூர் (கிழக்கு)
209 ராமசாமி, திரு. எஸ். என்.	..	சாத்தான்குளம்
210 ராஜமாணிக்கம், திரு. எஸ். கே	..	முசிறி
211 ரெத்தினராஜ், திரு. எஸ்.	..	குளச்சல்
212 வரதராஜன், திரு. என்.	..	திண்டுக்கல்
213 (வெற்றிடம்)		
214 விசயலட்சுமி, செல்வி. வி.	..	வீரபாண்டி
215 வின்சென்ட், திரு. மி.	..	நாகர்கோவில்
216 விஜயசாரதி, திரு. எம்.	..	அரக்கோணம் (செ.வ)
217 விஜயபாலன், திரு. என்.	..	பூம்புகார்
218 விஜயரெகுநாத தொண்டமான், திரு.	..	புதுக்கோட்டை
219 விஜயராகவன், திரு. பொ.	..	கிள்ளியூர்
220 விஸ்வநாதன், திரு. கோ.	..	அணைக்கட்டு
221 வீராசாமி, திரு. த.	..	ஓரத்தநாடு
222 வீரானம்பலம், திரு. க. வெ.	..	மேலூர்
223 வெங்கடசுப்பிரமணியம், திரு. ப.	..	காஞ்சி
224 வெங்கடரெட்டி, திரு. டி.	..	ஓசூர்
225 வெங்கடேசன், திரு. பி. எம்.	..	பெரணமல்லூர்
226 வெள்ளைச்சாமி, திரு. அ.	..	ஆத்தூர்
227 வேணுகோபால், திரு. த.	..	தண்டராம்பட்டு
228 வேலப்பன், திரு. சி. வி.	..	கபிலர்மலை
229 ஜகத்ரட்சகன், திரு. எஸ்.	..	உத்திரமேரூர்
230 ஜான் வின்சென்ட், திரு. மு.	..	நாங்குனேரி

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும்.		தொகுதியின் பெயர்.
	(1)	(2)
231	ஜெகதீசன் ஆனூர், திரு. பு. கோ. ..	செங்கல்பட்டு
232	ஜெயராமன், திரு. வே. இரா. ..	தேனி
233	ஹாஜாஷெரீப், திரு. கே. எஸ். ஜி. ..	திருவல்லிக்கேணி
234	ஹேமச்சந்திரன், திரு. ஜே. ..	திருவட்டார்
235	மார்க்ரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி. ..	நியமன உறுப்பினர்

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். — அமைச்சர்.
2. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம். — அமைச்சர்.
3. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே. — அமைச்சர்.
4. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது. — அமைச்சர்.
5. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி — தலைமை வழக்கறிஞர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1981 ஏப்ரல் 25.

சித்திரை 13, துன்மதி—திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்".

செவிக்குக் கேள்வியாகிய உணவு இல்லாதபோது அதற்குத் துணையாக உடலை ஓம்புமாறு வயிற்றுக்கும் சிறிது உணவு தரப்படும்.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 872 மற்றும் 873 ஆகியவை மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகின்றன.

கீரனூருக்கு அருகிலுள்ள ராமச்சந்திரா கெமிக்கல்ஸ் நிறுவனம்.

*வினா எண் 874.—திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, கீரனூருக்கு அருகாமையில் ராமச்சநதிரா கெமிக்கல்ஸ் என்னும் கம்பெனி கடந்த பல ஆண்டுகளாக மூடிக் கிடப்பது அரசு அறியுமா?

(ஆ) அதன் விவரம் என்ன ?

(இ) அரசு கடன் எவ்வளவு பெற்றுள்ளது?

(ஈ) இயங்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ)-விலிருந்து (ஈ) வரை. ஆம். * விவர அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப் பெற்றுள்ளது.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, விவர அறிக்கையிலிருந்து அந்தத் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் அதனுடைய பொறுப்புக்கள் ஒரு சீரியஸ் நிலையை எட்டியிருக்கிறது. அரசைச் சேர்ந்த பொது நிறுவனங்களிடமிருந்து அந்தத் தொழிற்சாலைக்கு 1.31 கோடி ரூபாய் கடனாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி இருந்தும், இந்த விவர அறிக்கைப்படி, அது எப்போதும் மூடியே இருக்கிறது. ஆகவே, கிட்டத்தட்ட 1½ கோடி ரூபாய் வாங்கிய பின்னாலும் மூடிக் கிடக்கிறது என்றால் வேண்டுமென்றே இது ஒரு நிறுவனம் என்ற பெயரைப் பயன்படுத்தி, அரசாங்கப் பணத்தைக் கொள்ளையடிப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. அதனுடைய 'ப்ரொப்ரைட்டர்ஸ்' யார், யார்? அது சம்பந்தமாக ஸ்பெஷல் என்குயரி, கடன் வாங்கியதைப் பொறுத்தவரையில், நடத்தப்பட்டிருக்கிறதா? இல்லை என்றால் ஸ்பெஷல் என்குயரி நடத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவரவர்களே, இது எப்போதும் மூடியே இருக்கிறது என்பதைவிட எப்போதுமே உற்பத்தியை ஆரம்பிக்கவில்லை என்றுகூடச் சொல்லலாம். அவர்கள் கடன்களைப் பெற்று பம்பாயில் இருக்கிற ஒரு நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு நிர்வாகப் பணிகள் எல்லாம் நடைபெற்றது. அதற்குப் பின்னர் அந்த நிறுவனத்திற்கும் இவர்களுக்கும் ஏற்பட்ட தகராறு காரணமாகப் பணி முடியாமல் உற்பத்தி தொடங்கப்படவில்லை. இப்போது கடன் கொடுத்திருக்கிற நம்முடைய அரசு கார்ப்பரேஷன்கள் எல்லாம் கடனைத் திரும்பப் பெறுவதற்கு கோர்ட்டிலே நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதனால் அந்தக் கம்பெனியை விற்க வேண்டிய நிலைமை வந்திருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது இலட்சக்கணக்கில் நம்முடைய பொது நிறுவனங்களிலிருந்து அந்த நிறுவனத்திற்குக் கடன் கொடுத்திருந்தாலும் கூட அங்கே உற்பத்தியே ஆரம்பிக்கவில்லை என்று சொன்னார்கள். எப்போது அந்த நிறுவனத்திற்குப் பணம் கொடுக்கப்பட்டது? அவர்களால் அந்த நிறுவனத்தை செயல்படுத்த முடியவில்லை என்றால் அரசு ஏற்று நடத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது நடைபெற்ற நிகழ்ச்சிகளிலே இதுவும் ஒன்று. அந்த நிறுவனத்தார் தொழிலைத் தொடங்காமலே

* 142-143 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

பணத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். கொடுக்கப்பட்ட ஆண்டு என்னிடம் இல்லை. ஆனால் 1977-க்கு முன்னால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : தலைவரவர்களே, அந்த நிறுவனத்திற்கு யார் யார் டைரக்டர்கள், எத்தனை பேர் டைரக்டர்களாக இருக்கிறார்கள் ? இப்போது மானேஜிங் டைரக்டர் யார் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. என். இராமச்சந்திரன், திரு. என். சீனிவாசன் என்ற இருவரும் சகோதரர்கள், அவர்கள் சென்னையைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தான் பொறுப்பாளர்கள்.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, ஒரு கோடியே 31 இலட்சம் ரூபாய் நம்முடைய பல்வேறு துறைகளிலிருந்து கடனாகப் பெற்றிருக்கக்கூடிய ரூபாயாகும். அப்படிக் கடனாகப் பெற்றிருக்கக்கூடிய இந்தத் தொழிற் சாலையில் இயந்திரங்கள் ஏதாவது இருக்கின்றனவா? அப்படி ஏதாவது இயந் திரங்கள் நிறுவப்பட்ட பிறகு வேலை நடைபெறாமல் இருக்கின்றதா? இவ்வளவு பணம் பெற்றுக்கொண்டு எதுவுமே செய்யாமல் பணம் மோசடி செய்யப்பட்டிருக்கிறதா ? அல்லது ஏதாவது இயந்திரங்கள் இருந்தால் நாமே எடுத்து நடத்துவதற்கு முயற்சி எடுத்தால் என்ன ? அது தேசியச் சொத் தல்லவா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து விவர அறிக்கையிலே இருக்கின்றது. அதற்கு மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இருக்கின்ற ஆவலைப்போன்று அதாவது அங்கே ஏதாவது இருக்கின்றதா என்று பார்க்க வேண்டும் என்ற ஆவல் எனக்கும் இருக்கின்றது. நான் இன்னும் உள்ளே போய்ப் பார்க்கவில்லை. நம்முடைய தொழில் துறையிலே இருக்கின்ற உயர் அதிகாரிகள் யாரையாவது அனுப்பி அங்கே என்ன இருக்கின்றது என்பதைப் பார்த்ததற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுகுறித்து கேட்டால் அவர்களுக்குத் தக்க தகவலை நான் நிச்சயமாகத் தருகிறேன்.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[1981 ஏப்ரல் 25

பேரணாம்பட்டில் தோல் பதனிடும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

***வினா எண் 875.—திரு. ஜி. மூர்த்தி:** மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டில் துவங்க இருக்கும் தோல் பதனிடும் தொழிற்சாலை இவ்வாண்டே துவங்கும் உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது துவக்க வேலை ஆரம்பிக்கும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) மற்றும் (ஆ) பேரணாம்பட்டில், தோல் பதனிடும் தொழிற் கூட்டுறவுச் சங்கம் பதிவாகி கட்டிடம் கட்ட நிலம் வாங்குவதற்கு ஏற்பாடு நடந்து வருகிறது. தொழிற்சாலை 1981-வது ஆண்டில் கட்டி முடிக்கப்படும் என்றும் உற்பத்தி 1982-ல் துவங்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டில் துவங்கப்பட்ட தொழிற்சாலையின் மதிப்பு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் இது தோல் பதனிடுகின்ற ஒரு தொழில் கூட்டுறவுச் சங்கம். அதிலே 56 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களிடத்திலே இருந்து பங்குத் தொகையாக 1,16,500 ரூபாய் வசூலிக்கப்பட்டு ஏறத்தாழ 3.54 ஏக்கர் பரப்பளவு உள்ள நிலம் வாங்கப்பட்டு அதிலே இந்தத் தொழில் கூட்டுறவுச் சங்கம் துவக்கப்பட இருக்கின்றது.

காரைக்குடி அருள்மிகு கொப்புடைய நாயகியம்மன் கோயில் திருமண மண்டபம்.

***வினா எண் 876.—திரு. சி. த. சிதம்பரம்:** மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காரைக்குடி கொப்புடைய நாயகி அம்மன் கோவிலில் திருமண மண்டபம் கட்ட திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: ஆம். இராமநாதபுரம் மாவட்டம், காரைக்குடி அருள்மிகு கொப்புடைய நாயகியம்மன் ஆலயத்தின் சார்பில் ரூ. 1,50,000 மதிப்பீட்டுச் செலவில் திருமண மண்டபம் கட்டும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

சத்யமேவ ஜயதே TRUTH ALONE TRIUMPHS

1981 எப்ரல் 25]

திரு. செ. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, இந்தத் திருமண மண்டபம் திட்டமிடப்பட்டதோடு நிற்கின்றதா ? அல்லது கட்டுமான வேலைகள் துவங்கப் பட்டு விட்டனவா? உடனடியாக அது கட்டி முடிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, 1965 ஆம் ஆண்டிலே மதுரைத் துணை ஆணையாளர் அவர்களுடைய உத்தரவுப்படி 11 பேர்கள் கொண்ட கல்யாண மண்டபக் குழு அமைக்கப்பட்டு அதிலே மேலும் 5 பேர் சேர்க்கப்பட்டு இந்தத் திருப்பணிக் குழு இந்த வேலையினை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் எந்த வேலையும் செய்யப்பட வில்லை. இந்தக் குழுவினர் ஒரு கோடி அர்ச்சனை நடத்தி மற்றும் வேறு சில நிதிகளின் மூலமும் பணம் சேர்த்து 50,000 ரூபாயை வங்கியிலே போட்டு இருக்கிறார்கள். மேலும் ஒரு இலட்ச ரூபாய்க்கான நிதியாதாரத்தைக் கண்டுபிடித்தாக வேண்டும். இது குறித்து இப்போதுதான் அறநிலையத் துறையினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. இது போன்ற திருப்பணி வேலைகளைப் பொறுத்தவரையில் முறையாகத் திட்ட மிட்டு நிர்வாக அனுமதியைப் பெற்று அதற்குப் பிறகு பொறியாளர்களுடைய மதிப்பீடு மற்றும் அனுமதி ஆகியவை எல்லாம் பெறப்பட்டு அதற்குப் பிறகு தான் பணிகளைத் துவக்குவது என்ற திட்டம் இப்போது நடைமுறைப்படுத்தப் பட்டு வருவதாலே இந்தத் திட்டம் குறித்து பரிசீலித்து நடவடிக்கை எடுப்ப தற்காக துறை ஆராய்ந்து வருகின்றது.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, கொப்புடைய நாயகி அம்மன் கோவிலுக்குப் பக்கத்திலே திருமண மண்டபம் கட்டக்கூடிய அளவுக்கு இடம் இல்லாமல் இருக்கின்றதா ? எந்த இடத்திலே கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொப்புடைய அம்மன் கோவிலுக்குப் பக்கத்திலே, இந்தத் திருமண மண்டபம் கட்டப்படப் போவதில்லை. அந்த கோவிலுக்குச் சொந்தமான மகர்நோம்பு அக்ரஹாரம் என்று அழைக்கப்படுகிற பகுதியிலே இடம் இருக் கிறது. டி.எஸ்.எஸ். 201, 202 என்று. அந்த இடத்திலேதான் மண்டபம் கட்டுவதற்காக திட்டமிருக்கிறது.

[1981 ஏப்ரல் 25

ஏலக்காய் பயிரிட குத்தகை.

* வினா எண் 758.—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு செய்தி-அற நிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த மூன்று ஆண்டுகளில் ஏலக்காய் பயிரிடுவதற்காக எவ்வளவு நிலங்கள் குத்தகைக்கு (தனியார்களுக்கு) விடப்பட்டது ?

(ஆ) அதன் மூலம் கிடைத்த வருமானம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மொத்தம் 627.50 ஹெக்டேர் பரப்பளவுள்ள நிலங்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் தனியார்களுக்கு ஏலக் காய் பயிரிடுவதற்காகக் குத்தகைக்கு விடப்பட்டது.

(ஆ) அதன் மூலம் கிடைத்த மொத்த வருமானம் ரூ. 6,15,647.66 ஆகும்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 3 ஆண்டுகளில் ஏலக்காய் பயிரிடுவதற்குத் தனியார்களுக்கு நிலங்கள் குத்தகை விடப்பட்டிருக்கிறது. கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குத்தான், குத்தகை விட வேண்டும், இனிமேல் தனியார்களுக்கு விடக்கூடாது என்று அரசு உத்தரவு இருக்கிறதா? இதற்கு முன்னால் தனியார்களுக்கு 20 ஆண்டு களுக்கு, குறைந்த தொகையிலே குத்தகை விடப்பட்டிருக்கிறதே, அந்தக் குத்தகை முடிந்தவுடன் அதை அரசு கையப்படுத்தி, ஏழை விவசாயிகளுக்கு 5 ஏக்கர் அளவுக்குக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6—11—1979 ஆம் நாள் அரசு ஆணை ஒன்றின் மூலம் இந்த ஏலக்காய் குத்தகையினுடைய நடைமுறையில் மாற்றங்கள் செய்து அரசினு டைய கொள்கை வெளியிடப்பட்டிருக்கிறது. அதற்கு முன்னாலே நீண்ட காலமாக, தொடர்ந்து அதைக் குத்தகை எடுத்தவர்கள், அவர்களுடைய சொத்தைப்போல பரம்பரை பரம்பரையாக அனுபவித்து வந்தார்கள். அதிலே 76 ஆம் ஆண்டிலே சில மாற்றங்கள் செய்யப்பட்டன. அதற்குப் பிறகு, இந்த அரசு வந்ததற்குப் பிறகு 79 ஆம் ஆண்டு பரிசீலித்து அப்படி ஏலக்காய் குத்தகையைப் பரம்பரையாக அனுபவித்துக்கொண்டு வருகிற முறை மாற்றப் பெற வேண்டும் என்று ஆணையிடப்பட்டது. ஆகவே முடிந்த குத்தகைகளை மறுபடியும் புதுப்பிக்கக் கூடாது என்று உத்தரவு இடப்பட்டிருக்கிறது.

அப்படிப் புதுப்பிக்கிறபோது அந்த ஏலக்காய் விவசாயத்தையே நம்பிக் கொண்டிருக்கிற ஏழை விவசாயிகளுக்கு அதைக் கொடுக்க வேண்டும் என்றும், அவர்களுக்கு முன் உரிமை கொடுக்க வேண்டும் என்றும் உத்தரவில் வெளியிடப்

பட்டிருக்கிறது. அதுவே 5 ஏக்கர், அதாவது 2 ஹெக்டேர்தான் இருக்க வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் 15 வருடம் தவணை கொடுத்து, பிறகு வேண்டுமானால் ஒரு 5 வருடக் காலம் நீட்டிக்க லாம் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே, இந்தப் புதிய திட்டத்தின்படிதான், இங்கே தரப்பட்டிருக்கிற தகவலின்படிதான், இந்த மூன்று ஆண்டுகளில் புதிய ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. ஆணையை எதிர்த்துக்கூட, பரம்பரையாக குத்தகையை அனுபவித்து வந்தவர்கள், ஏழைகள் என்று சொல்லிக்கொண்டு லட்சக்கணக் கான ரூபாய்களை வைத்திருப்பவர்கள், பல ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து வழக்கு மன்றத்திற்குப் போய் அரசாங்கத்தை எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. ஆர். டி. கோபாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஏலக்காய் தோட்டம் பயிரிடுவதைப் பொறுத்தவரையில் என்னுடைய பகுதியிலே மாவடி என்ற இடத்தில் கிட்டத்தட்ட கொழுத்த பணக்காரர்கள் தான் நிலங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை எடுத்து ஏழை களுக்குக் கொடுக்க அரசு முன் வருமா? அதற்கு அரசு முயலுமா ? இன்னும் வேறு பல இடங்களில் உண்மையாகவே ஏழை எளிய மக்கள் பயிரிட்டுக்கொண் டிருக்கிறார்கள், ஆனால் அவர்களை அதிகாரிகள் துன்புறுத்தி வெளியேற்ற ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியின் முதற் பகுதிக் குத்தான் நான் முதலிலேயே விரிவான பதிலைத் தந்திருக்கிறேன். பெரிய பெரிய நிலச்சுவான்தார்கள் 100 ஏக்கர்களுக்கு மேல் நிலங்களை வைத்துக் கொண்டிருப்பவர்கள் பரம்பரையாக நீண்ட காலமாக இந்தக் குத்தகை பாத்தியதை அனுபவித்து வந்தார்கள். அதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்றுதான் அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. சிறிய ஏழை விவசாயிகள், நிலமற்றவர்கள், குறிப்பாக அந்த ஏலக்காய் விவசாயத்தையே நம்பி வாழக் கூடிய அந்தப் பகுதி விவசாயிகளுக்குத்தான் கொடுக்க வேண்டும் என்று தீர்மானமாக முடிவு செய்து, உத்தரவு போட்டிருக்கிறது. ஆகவே அந்த ஏழை விவசாயிகளுக்கு எந்தவிதமான தொல்லையும் வன இலாகாவினரால் அல்லது அதிகாரிகளால் ஏற்படுத்த முடியாது. அப்படி எங்காவது நடை பெறுமானால், அது குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் உடனடியாக அதற்கான நடவடிக்கைகளை எடுத்து அந்த ஏழை விவசாயி களுக்கு ஏற்படுகிற அந்தக் கஷ்டங்களை இந்த அரசு நீக்கும்.

[1981 ஏப்ரல் 25

திரு. பெ. சு. திருவேங்கடம்: இந்த அரசு நிலம் தனிப்பட்டவர்களுக்கு இப்போது குத்தகைக்கு விடப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படி குத்தகைக்கு விடும்போது ஏக்கருக்கு இவ்வளவு தர வேண்டும் என்று அரசாங்கமே நிர்ணயம் செய்கிறதா அல்லது டெண்டர்கள் மூலம் குத்தகைத் தொகை நிர்ணயிக்கப்படுகிறதா? ஒருமுறை எவ்வளவு ஆண்டுகளுக்கு என்று இந்தக் குத்தகை விடப்படுகிறது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: முன்னால் இருந்த முறை டெண்டர் அல்ல. பொது ஏலத்தில் விடப்பட்டு வந்தது. ஏலத்தில் எடுக்கிறபோது பெரும் பணக்காரர்கள், பெரிய நிலச்சுவாந்தார்கள், விவசாயிகள் எல்லாம் எடுத்து வருவதற்கான வாய்ப்பு இருந்தது. ஆகவே அந்த முறையை மாற்றி இப்போது நிலமற்ற ஏலக்காய் விவசாயத்தை மாத்திரமே நம்பியிருக்கிற ஏழை விவசாயிகளுக்குத் தருவதற்கான ஆணையை அரசாங்கம் இப்பொழுது பிறப்பித்திருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: ஏலக்காய் சாகுபடி என்பது அதிகமான வருமானம் வரும் மகசூல். இது ஏழை எளிய விவசாயிகளுக்குத் தரப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒரு விவசாயிக்கு இரண்டரை ஹெக்டேர்ஸ் என்று சொன்னால், அது ஏறக்குறைய ஐந்து ஏக்கர் வரும். எனவே இந்த அளவைக் குறைத்து ஒரு ஏக்கருக்கு மேற்படாமல் விவசாயிகளுக்குக் கொடுத்தால் அதிகப்படியான விவசாயிகளுக்குப் பயன் அளிக்கும் அல்லவா? அதுமாதிரி அமைச்சர் அவர்கள் செய்வார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இந்த ஏலக்காய் விவசாயத்தைப் பொறுத்தவரையில் ஒரு குறைந்தபட்ச வயபிள் யூனிட் என்று ஒரு விவசாயி அதற்குள் பாடுபட்டால் அதில் போடுகிற முதலீடும் அவரது உழைப்பும் எல்லாம் சேர்ந்து அவருக்குப் பலன் இருக்கவேண்டும். அதுபற்றி ஏலக்காய் வாரியத்திடம், இந்திய சர்க்கார் அமைத்திருக்கிற ஏலக்காய் வாரியத்தினிடம் கலந்து ஆலோசித்து அவர்கள் தெரிவித்த ஆலோசனைப்படி ஒரு குறைந்தபட்ச வயபிள் யூனிட் ஐந்து ஏக்கர் என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவேதான் ஒரு விவசாயிக்கு ஐந்து ஏக்கர் பரப்பளவு. காட்டுக்குள்ளே பாடுபடும்போது சில பகுதிகள் பாறையாக இருக்கும், சில பகுதிகள் விளையாத இடமாக இருக்கும் என்கிற அந்தச் சூழ்நிலையை மனதில் வைத்து ஒருவருக்கு ஐந்து ஏக்கர்கள் அல்லது 3 ஹெக்டேர் என்று தீர்மானித்துள்ளோம்.

திரு. வே. இரா. ஜெயராமன்: கனம் அமைச்சர் அவர்கள் மாவாடி பகுதியில் ஏலக்காய் பயிரிட நிலங்களைக் குத்தகைக்கு எடுத்திருப்பதாகச் சொன்னார்கள். அந்தப் பணக்காரர்கள் பெயர்களை அறிவிக்க இயலுமா?

1981 ஏப்ரல் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பட்டியல் கொடுக்க முடியாது.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : இப்போது புதிய சட்டத்தை அரசு கொண்டு வந்திருப்பதை வரவேற்கிறேன். ஒவ்வொருவரும் 50, 70, 100 ஏக்கர்கள் என்று லீஸ் எடுத்து வைத்துக் கொண்டு, பரம்பரையாக வைத்துக் கொண்டு இருப்பதை மாற்றியமைக்கும் வகையில் சட்டம் கொண்டு வந்து ஏழைகளுக்குக் கிடைக்கும் அளவில் செய்திருப்பதை வரவேற்கிறேன். அதே நேரத்தில் சில ஏரியாக்களில் மொஸைக் டிஸீஸ் இந்த ஏலக்காய் பயிருக்கு வந்திருக்கிறது. அந்த மொஸைக் டிஸீஸ்-னால் ஏலக்காய் பயிர் அழிந்துபோய் விடுகிறது. இது அரசுக்குத் தெரியுமா? இந்த நிலங்களை ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்கும்போது அவர்கள் மேலும் பணம் செலவு செய்து ஏலக்காய் விவசாயம் செய்யும்போது இந்த மொஸைக் டிஸீஸ் வந்து அந்தப் பயிரை அழித்தால் அவர்களுக்குப் பெரிய நஷ்டம் ஏற்படும். ஆகவே அந்த வியாதி வராமல் தடுத்து நிறுத்த அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இந்த நோய் ஏற்பட்டு ஏலக்காய் பயிரை நாசம் செய்கிறது அல்லது அழிக்கிறது என்ற தகவல் இதுவரை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. இப்போதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். இதைப்பற்றிய தகவல்கள் சம்பந்தப்பட்ட ஏழை விவசாயிகளிடமிருந்து வருமேயானால் அதற்கான உதவிகளை ஏழை விவசாயிகளுக்கு, மற்ற விவசாயிகளுக்கும் உதவிகள் அளிப்பதுபோல் இந்த ஏலக்காய் குத்தகை விவசாயிகளுக்கும் அரசாங்கம் உதவிகள் வழங்கும்.

திரு. என். வரதராஜன் : இந்த ஏலம் பயிரிடும் நிலங்கள் 99 ஆண்டு குத்தகை என்ற பெயரில் இன்றைக்கும் இருந்து வருகிறது. ஆகவே அந்த குத்தகையை இடையில் நாம் நிறுத்திவிட்டு, இந்த குத்தகை நிலத்திற்கு ஒரு ஏக்கருக்கு ஆண்டுக்கு ரூ. 30 கொடுக்கிறது என்ற வரைமுறை இருக்கிறது. அந்தக் குத்தகை காலம் முடியும்வரை காத்திராமல் குத்தகையை உயர்த்த அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : முடிந்து போன குத்தகையை மீண்டும் புதுப்பிக்கமாட்டோம் என்று சொன்னதற்கு வழக்குமன்றத்திற்குப் போய் தடுப்பாணை பெற்றிருக்கிறார்கள். அதிலேயே இந்தச் சங்கடம் என்றால் உயிரோடு இருக்கிற ஒப்பந்தக் காலத்தை ரத்து செய்வதென்றால் இன்னும் எவ்வளவு பெரிய சிக்கல் ஏற்படும் என்பதை உணர்ந்துகொள்ளலாம். இருந்தாலும் அரசாங்கம் இதில் மிகுந்த தீவிர கவனம் செலுத்திக்

கொண்டிருக்கிறது. எதற்கெடுத்தாலும் வழக்குமன்றத்திற்குப் போவது என்பது இன்றைக்கு வழக்கமாகிவிட்டது. வழக்குமன்றத்திலும் எல்லாவற்றிற்கும் தடையாணை கொடுப்பது என்பதும் இன்றைக்கு நடைமுறையில் இருந்து கொண்டு வருகிறது. ஆகவே எந்தத் திட்டத்தையும் அமல்படுத்த முடியாமல் இன்றைக்குத் தடைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. உறுப்பினர் கருத்து அரசின் தீவிர பரிசீலனையில் இருக்கிறது. சட்டத் திருத்தங்கள் மூலம் இதைச் செய்ய முடியுமா என்று பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். சட்டத்தைத் திருத்தினாலும் அந்தச் சட்டமும் செல்லாது என்றுகூட வழக்கு மன்றத்திற்குப் போவார்கள்.

வடலூர் சத்திய ஞானசபை

* வினா எண் 759.—திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடலூரில் கட்டப்பட்டுள்ள சத்திய ஞானசபை பழுது அடைந்து இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

(முற்பகல் 9-20)

திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமலிங்க சுவாமிகள் வசித்த ஊர் வடலூர் ஆகும். அங்கே வருகின்றவர்கள் தமிழ் நாட்டிலே இருந்து மட்டும் வரவில்லை; வெளி மாநிலங்களிலே இருந்தும், வெளி நாடுகளிலே இருந்தும் வருகின்றார்கள். அங்கே மாதம் ஒருமுறை ஆறு திரைகளை நீக்கி, ஜோதியைக் காட்டுகிறார்கள். அந்த பிரசித்தி பெற்ற இடத்தில், புகழ்பெற்ற இடத்தில், அவர்கள் பேரிலே மண்டபம் கட்டி விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வடலூரிலே வள்ளலார் ஏற்படுத்திய சத்திய ஞான சபை புதுப்பிக்கப்பட்டு, அங்கே இருந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவர் பிறந்த மருதூர் கிராமத்தைப் பற்றிக் கேட்கிறார்கள் என்று கருதுகிறேன். அவர் பிறந்த அந்த மருதூர் கிராமத்திலே அவருக்கு நினைவு மண்டபம் எழுப்புவதற்கு, அந்த ஊரைச் சார்ந்த பலர் முன்னாலே முயற்சி எடுத்து, அது

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

பாதியிலே நிற்கிறது. அதை மீண்டும் அரசு அறநிலையத் துறையின் மூலம் முயற்சி எடுத்து, அங்கே ஒரு நினைவு மண்டபம் எழுப்புவதற்கான முயற்சிகள் இப்போது நடந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நினைவு மண்டபம் எழுப்புவதற்கு அரசு செய்தித் துறை மூலம் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அறநிலையத் துறையின் மூலமாக இந்த முயற்சியை அரசு மேற்கொண்டிருக்கிறது. அங்கே முதலிலே ஆரம்பித்தவர்கள், பெரிய அளவிலே திட்டமிட்டு, அப்படிச் செலவழிப்பதற்கான முயற்சி எடுத்திருக்கிறார்கள். கற்களைக் கொண்டுவந்து போட்டிருக்கிறார்கள். இந்த கிராமத்து மக்கள் இதிலே தீவிரமாக இருக்கிறார்கள். ஆகவே, எந்த அளவிற்கு அங்கே நினைவுச் சின்னம் அமைக்க வேண்டுமென்பதற்கான வரைபடம் கேட்டிருக்கிறோம். அது வந்ததற்குப் பிறகுதான், அறநிலையத் துறை முடிவு செய்யும்.

கன்னியாகுமரியில் சுற்றுலாத்துறை மூலம் நிறைவேற்றப்பெற்ற வளர்ச்சித் திட்டங்கள்.

* வினா எண் 760.—திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) International Tourist Centre ஆக்கப்பட்ட கன்னியாகுமரியில் என்ன என்ன வளர்ச்சித் திட்டங்களை அரசு ஏற்படுத்தியுள்ளது ?

(ஆ) சுமார் 2 மைல் நீளமுள்ள பறக்கை குளத்தை செம்மைப்படுத்தி படகுவிட ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) இதுவரை கீழ்க்கண்ட வளர்ச்சித் திட்டங்களை சுற்றுலாத் துறையின் மூலம் இம் மாநில அரசு கன்னியாகுமரியில் நிறைவேற்றியுள்ளது :—

1. கன்னியாகுமரியில் ஒரு சுற்றுலா அலுவலகத்தை ஏற்படுத்தியுள்ளது.

2. சுற்றுலா பயணிகளுக்கு ஒரு துயிலக விடுதியை அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

3. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கேப் விடுதி (Cape Hotel) ஒன்றும் சுற்றுலா மாளிகை ஒன்றும் நடத்தி வருகின்றது.

(ஆ) இத்தகைய திட்டம் எதுவும் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அங்கே தங்கும் விடுதி பற்றிய தகவலைச் சொல்லி, இண்டர்நேஷனல் டூரிஸ்ட் சென்டர் ஆக்குவதற்கு மேற்கொண்டு திட்டங்கள் எதுவும் இல்லை என்ற தகவலைத் தந்தார்கள். நீண்ட நாட்களுக்கு முன்னாலே காந்தியடிகள் அஸ்தி வைத்த இடத்தில், ஒரு மணி மண்டபம் கட்டி வைத்திருப்பதைப் போல், காமராஜ் அவர்கள் அஸ்தி வைத்ததன் நினைவாக அங்கே ஒரு பூங்காவும், நினைவு மண்டபமும் எழுப்புவதாகத் திட்டமிருந்தது. அந்தத் திட்டம் அரசின் பரிசிலனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியின் இரண்டாவது பகுதிக்குத்தான், அத்தகைய திட்டம் எதுவும் தற்சமயம் பரிசிலனையில் இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டாவது பகுதி சுமார் இரண்டு மைல் நீளம் உள்ள பறக்கைக் குளத்தில் படகுவிட ஏற்பாடு செய்யப்படுமா என்றால், அதைச் செய்ய இயலாது ; அதற்கு ஏற்ற ஏரியும் அல்ல. ஆனால், இன்டர்நேஷனல் டூரிஸ்ட் சென்டர் ஆக்கப்பட்ட கன்னியாகுமரியில் என்ற கேள்வியில், அதை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது, அதற்காக, இப்படிப்பட்ட திட்டங்களை உருவாக்குவதற்கு நிபுணர் டாக்டர் டி. கிருஷ்ணசாமி அவர்களை ஒரு மாஸ்டர் பிளான் கேட்டிருக்கிறோம். அவர்கள் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை மத்திய அரசிற்கு அனுப்பும்படி சொல்லியிருக்கிறார்கள். இதை ஒரு சுற்றுலா நகரமாக ஆக்க வேண்டுமென்று மைய அரசோடு நாங்கள் வாதாடிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த யோசனைகள் எல்லாம், அந்த மாஸ்டர் பிளான் வந்ததற்குப் பிறகு பரிசீலிக்கப் படும்.

Moore Market

* Q.—No. 877.—THIRU S. RAJARAMAN : Will the Hon the Minister for Local Administration be pleased to state:

(a) whether the Government have received any represent tation in September 1980 from the Moore Market Merchants Association in Madras against the demolition of the Moore market Buildings ?

(b) if so, the action taken thereon?

1981 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) மூர் மார்க்கட் கட்டிடம் உள்பட 42.03 ஏக்கர் நிலம் தென் பிராந்திய ரயில்வேக்கு மாற்றம் செய்து கொடுக்கப்பட்டது. இந்த நிலத்தைக் காலி செய்து இரயில்வேக்கு கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த வியாபாரி களுக்கு மாற்று இடம் அளிக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

* வினா எண். 878—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது 'மூர் மார்க்கட்' உள்ள இடத்தை இரயில்வே இலாகாவிற்குக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றனவா ?

(ஆ) ஆம் எனில், அங்கு வணிகம் செய்பவர்களுக்கு வேறு இடம் ஏதும் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) அங்கு வணிகம் செய்பவர்களுக்கு மாற்று இடம் கொடுக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூர் அங்காடியை இடிப்பதற்கு முன்பு இந்தக் கட்டிடத்தை இடிக்கக் கூடாது என்று ஏதாவது ஒரு ஷரத்து அதிலே இருக்கிறதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூர் அங்காடியை இடிக்கக் கூடாது என்று ஷரத்து இருப்பதாகத் தெரியவில்லை. அதுபற்றிய குறிப்புகளும் இல்லை. அந்த மூர் அங்காடியைக் காலி செய்ய வேண்டிய நிலை இருக்கிறது என்பதை மட்டும்தான் இந்த நேரத்தில் சொன்னேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூர் அங்காடியிலே இருக்கின்ற வணிகர்கள் நீண்ட நெடும் நாட்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அங்கு எத்தனை கடைகள் இருக்கின்றன. மாற்று இடங்கள் கொடுப்பதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்த இடத்தை அரசு தேர்வு செய்திருக்கிறது? அதனை அந்த வணிகர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்களா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — வாய்மையே வெல்லும் — TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, மொத்த கடைகளினுடைய எண்ணிக்கை 1,492 ; இதில் உடனடியாக காலி செய்யப்பட வேண்டிய கடைகளின் எண்ணிக்கை 752. ஆகவே இவர்களுக்கு கண்ணப்பர் திடல், 'சைடன்ஹேம்ஸ்' ரோடு ஆகிய பகுதிகளிலே கடைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே இதுகுறித்து பல்வேறு சங்கங்களை கூட்டி வைத்து நானே நேரில் பேசி அவர்களுடைய ஒப்புதலைப் பெற்றிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதிருக்கும் இடம் மத்திய சர்க்காருக்கு மாநகராட்சி இலவசமாகக் கொடுத்திருக்கிறதா? இல்லை, பணம் வாங்கி கொடுத்திருக்கிறதா? பணம் வாங்காது கொடுத்திருக்கிறது என்றால் இதனால் ஏதாவது பெரிய திட்டம் தென்னகத்திற்கு ரெயில்வே துறையினரால் வர இருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இடத்தை இரண்டு கோடியே எழுபது இலட்சம் ரூபாய்க்கு நாம் கொடுத்திருக்கிறோம். It is a concessional rate; 42 ஏக்கர், ஆகவே இரண்டு கோடியே எழுபது இலட்சம் என்பது concessional rate தான். அதேபோல இப்போதிருக்கிற வியாபாரிகளுக்கு மாற்று இடமாக 'வில்லி பாண்ட்' என்ற அல்லிக்குளத்திலே பலமாடிக் கட்டிடம் கட்டுவதற்கு ஒரு திட்டம் தீட்டப்பட்டு அங்கு அது வெகு சிக்கிரமாக நடைமுறைப்படுத்தவிருக்கிறது. அதற்காக மதிப்பீடு ஒன்பது கோடியிலிருந்து பத்து கோடி ரூபாய் வரை செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய சர்க்காருக்கு மிகுந்த குறைவு விலையில் கொடுத்திருக்கிறோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மிகவும் நன்றி. இந்த பலமாடிக் கட்டிடம் எப்போது கட்டி முடிக்கப்படும். ஏனென்றால் இது அவர்களுக்குக் கிடைத்து விடுமேயானால் இங்கே இருக்கிற வணிகர்கள் அங்கே போய் வணிகம் செய்வதற்கு அதிக காலம் ஆனாலும் ஆகும். இடைக்காலத்தில் அப்படி வியாபாரம் தடைபடாமல், வாழ்க்கை பாதிக்கப்படாமல் இருக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது. பல மாடிக் கட்டிடம் எப்போது கட்டி முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல உடனடியாக காலி செய்யப்பட வேண்டிய கடைகளின் எண்ணிக்கை 752 ; அதற்கு பின்னர் காலி

செய்யப்பட வேண்டிய கடைகளின் எண்ணிக்கை ஏறத்தாழ 700-க்கு மேல் இருக்கிறது. அவர்கள் எல்லோரும் 'பெர்மெனென்ட்' ஸ்டால்களில் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த லில்லி பாண்ட், அல்லிக் குளத்திலே பலமாடிக் கட்டிடம் கட்டிய உடனே அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு அதற்குப் பின்னாலேதான் காலி செய்ய வேண்டிய ஒரு நிலை ஏற்படும்.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 1,400 கடைகள் அங்கு இருப்பதாகச் சொன்னார்கள். அவர்கள் புழங்குகின்ற இடம் 42 ஏக்கர் என்றும் சொன்னார்கள். அதற்கு ஏற்றாற்போல 42 ஏக்கருக்கு மாற்று இடம் எந்த இடத்தில் இருக்கிறது. எப்படி இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு உத்தேசித்துள்ளது? ஏனென்றால் 42 ஏக்கர் இங்கே உள்ள இடம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்போல கட்டிடம் கட்டுகிறோம் என்று சொல்லப்பட்டதே தவிர, 42 ஏக்கருக்கு எங்கே போவது?

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவரவர்களே, உடனடியாகக் காலி செய்ய வேண்டியவர்கள் 750 பேர்கள்தான் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். மாற்று இடம் எங்கே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது? (பதில் இல்லை).

(முற்பகல் 9-30)

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மூர்மார்க்கட் என்பது பிரசித்திபெற்ற இடம். மத்திய அரசாங்கத்திற்கு ரொம்பவும் குறைந்த விலையில் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் எப்போதும் குறைந்த விலையில் தான் வாங்குவார்கள். நாம் வாங்குவதற்குத்தான் அதிகமான விலை தரவேண்டும். அங்கே கடை வைத்திருக்கின்றவர்கள் அனைவருக்கும் கடைகள் கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை என்றும் சிலருக்குத்தான் வாய்ப்பு இருக்கிறது என்றும் சொல்லப்படுகிறதே, அப்படியில்லாமல் அங்கே கடை வைத்திருக்கின்றவர்கள் அனைவருக்கும் கடைகளைக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நான் ஏற்கெனவே சொன்னதைப் போல் 1,492 கடைகள் அங்கே இருக்கின்றன. உடனடியாக காலி செய்யப் படுகின்றவை 752. கண்ணப்பர் திடலில் ஒதுக்கப்பட்டு இருப்பவை 413. பாக்கி யிருப்பவர்களில் சிலர் வழக்கு மன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். வழக்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வருகிற ஜூன் மாதத்திலே எடுத்துக் கொள்ள இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். எல்லோருக்கும் கிடைக்க வேண்டுமென்ற எண்ணத்தில்தான் அந்தத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

திரு. சு. பாலன் : தற்போதுள்ள மூர் அங்காடி மக்களுடைய நலனைக் கருதி, மக்களுக்குத் தேவைப்படுகின்ற பல்வேறு உணவுப் பொருட்களையும் விற்கிற முறையில் பறவை இனம் தனியாகவும், மாமிச இனம் தனியாகவும், காய்கறிகள் தனியாகவும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூர்மார்க்கட்டிலே என்ன என்ன விற்கிறது என்று ஆரம்பித்தால் எங்கே போய் முடியும் ? (சிரிப்பு).

திரு. சு. பாலன் : தனித்தனியாக கடைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன, அதைப்போலவே புத்தகங்களுக்குத் தனியாகவும் மற்ற மற்ற பொருட்களுக்குத் தனித்தனியாகவும் கடைகள் அமைத்து விற்கப்படுகின்றன. அந்த அமைப்புகள் மாறாத நிலைமையில் அவைகளை மனதிலே கொண்டு அந்த வடிவத்திலேயே அங்கே அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அங்கே கடைகள் வைத்திருக்கின்றதைக் கவனமாகக் கொண்டுதான் கடைகள் பிரித்துக் கொடுக்கப்படுகின்றன.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : கண்ணப்பர்திடலிலே மாற்றியமைக்கப் படக்கூடிய கடைகளை மேல்நாடுகளில் உள்ளதைப்போல் நவீனமுறையிலே, டிபார்ட்மென்டல் ஸ்டோர்ஸ் என்ற முறையிலே அமைக்க அரசு முன்வருமா ? அப்படி அமைக்கப்படுகிறபோது பெருந்தலைவர் காமராஜ் அவர்களுடைய பெயரை வைப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: கண்ணப்பர் திடலிலே இப்போது இங்கே காலி செய்கிறவர்களுக்கு கடைகள் கொடுக்கப்படுகின்றன. ஆகவே நிரந்தரமான கடைகள் வைக்கப்படுகிறபோது யார் பெயரை வைப்பது என்பதுபற்றி முடிவு செய்யலாம்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : தலைவர் அவர்களே, இன்றைய தினம் பிரசித்தி பெற்ற மூர் அங்காடியைக் குறைந்த விலைக்கு நம்முடைய அரசு மத்திய அரசுக்குக் கொடுத்திருக்கிறது. அதைப்போல் மாநில அரசுக்கு, மாநில அரசு கோரிய மத்திய அரசு நிலத்தை மத்திய அரசு குறைந்த விலையில் கொடுத்திருக்கிறதா ? சுற்றுலா பொருட்காட்சி நடத்தப்படுகிற இடத்தை மாநில அரசு கேட்டும் மத்திய அரசு கொடுக்கவில்லை என்ற நிலைமை இருக்கிறது. அது எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இரயில் இலாகா விரிவாக்க திட்டத்திற்காகத்தான் நாம் அதைக் கொடுத்திருக்கிறோம். அந்தத் திட்டம் நமக்கு வருவது நல்லது. ஏறத்தாழ ஐந்து கோடி ரூபாயில் விரிவாக்கத்

1981 ஏப்ரல் 25]

திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறார்கள். வந்துபோகின்ற பயணிகளுக்கு ஏற்ப அமைகின்ற திட்டம், அதற்காக கொடுத்திருக்கிறோம், அதற்காக மாற்று இடம் அவர்கள் கொடுக்கவில்லை. அதற்காகப் பணம் பெற்றுக்கொண்டோம்.

தர்மபுரியில் குழந்தைகள் கலையரங்கம் கட்டும் திட்டம்

*வினா எண். 879—திரு. எஸ். அரங்கநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி நகரில் குழந்தைகள் கலையரங்கம் ஒன்று கட்டும் செயல் குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(ஆ) ஆமெனில், எப்போது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இந்த வினாவிற்கு இடமில்லை.

டாக்டர் கே. சமரசம் : தலைவர் அவர்களே, தர்மபுரி நகரத்திலே குழந்தைகள் கலையரங்கம் வேண்டுமென்று மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே முடிவெடுக்கப்பட்டு வளர்ச்சிக் குழுவிலேயும் எடுத்துச் சொல்லப் பட்டிருக்கிறது. அரசாங்கம் பரிசீலனை செய்வதாக ஏற்கெனவே சொல்லப் பட்டிருக்கிறது. ஆகவே, அதனைப்பற்றி மீண்டும் பரிசீலனை செய்து கலை யரங்கம் ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்பதை அரிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, தற்பொழுது பரிசீலனையிலே இல்லை ; பின்னாலே எடுத்துக்கொள்ளலாம்.

நாப்பாளையத்தில் மேம்பாலம் கட்டும் பணி

*வினா எண். 880—திரு. ஆர். சக்கரபாணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டம் பொன்னேரி தொகுதி மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த நாப்பாளையம் (பொன்னேரி நெடுஞ்சாலை) மேம்பாலம் பணி எப்போது துவக்கப்பட்டது ?

(ஆ) அம்மேம்பால வேலை பாதி தூண்கள் வரை கட்டப்பட்டு நிற்பதற்கான காரணம் என்ன ?

(இ) அது எப்போது முடிவுபெறும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) 8—12—1975.

[1981 ஏப்ரல் 25

(ஆ) மற்றும் (இ) பாலம் கட்டும் பணியினை தாமதப்படுத்தியதால் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு, ஒப்பந்தக்காரர் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். வழக்கு 18—6—1981-க்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. எனவே மீதமுள்ள பணிகளை சிறு பணி ஒப்பந்தக் காரர்கள் மூலம் துறை வாயிலாகவே முடித்து விட தீர்மானிக்கப்பட்டு அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. ஆர். சக்கரபாணி : மாண்புமிகு தலைவரவர்களே, அரசே எடுத்து நடத்தும் என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். அதற்காக மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது எப்பொழுது முடிக்கப்படும் என்பதைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, ஒப்பந்தக்காரர் வழக்குமன்றத்திற்குச் சென்றிருக்கிறார். 18—6—1981-க்கு அந்த வழக்கு ஒத்திப் போடப்பட்டிருக்கிறது. ஆனாலும் சிறு பணிகளையெல்லாம் எவ்வளவு சீக்கிரமாக முடிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரமாகச் சிறு பணி ஒப்பந்தக் காரர்கள் மூலமாக முடிக்க நடவடிக்கை எடுத்து அந்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. ஆகவே, மிகச் சீக்கிரமாக அந்தப் பாலவேலைகள் முடிவடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசம்பட்டி-பண்ணந்தூர் பாலம் கட்டும் திட்டம்.

*வினா எண். 881—டாக்டர் கே. சமரசம் மற்றும் திரு. எஸ். அரங்கநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம் அரசம்பட்டி-பண்ணந்தூர் பாலம் (தென் பெண்ணை ஆற்றில்) கட்ட பல்லாண்டுகளாக திட்டமிட்டும் கட்டப்படாமல் இருப்பதன் காரணமென்ன ?

(ஆ) அந்தப் பாலம் கட்ட அரசு உடனடி நடவடிக்கையினை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இப்பாலத்திற்குத் தேவைப் படும் ரூ. 50 இலட்சத்தை ஒரு மொத்தமாக ஒதுக்க நிதி நிலைமை இடம் தராத காரணத்தால், இப்பணி மேற்கொள்ளப்படாமல் உள்ளது.

(ஆ) நிதி நிலைமை மேம்படும் சமயம் இதுபோன்ற பணிகளை மேற்கொள்ள அரசு ஆவன செய்யும்.

1981 ஏப்ரல் 25]

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, தருமபுரி மாவட்டத்திலே இருக்கும். அந்த அரசம்பட்டி-பண்ணந்தூர் பாலம் 1947 ஆம் ஆண்டிலேயிருந்து பொதுமக்கள் மத்தியிலேயும், அரசியல் வல்லுநர்களிடத்திலேயும் அடிபட்டு அடிபட்டு அது அடிபட்டே போய்விட்டது. இந்த நிலையில் மீண்டும் அதனைச் சீர்படுத்தும் வகையில் செய்தால் அங்கேயிருக்கின்ற மக்கள் ஏழு மைல், பத்து மைல் அளவிற்குச் சுற்றிவராமல் இரண்டு பர்லாங் தூரத்திற்குள்ளேயே அடுத்த நகரங்களைப் பார்க்கின்ற வாய்ப்பு இருக்கிறது. எனவே, தென்பெண்ணை ஆற்றில் அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, நிதி நிலைமை சரியானவுடன் கண்டிப்பாக அரசு முன்வரும்.

அரூர் நகரிலுள்ள அரசு மருத்துவமனை

*வினா எண். 882—திரு. சி. சபாபதி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம் அரூர் நகரில் தற்பொழுது உள்ள மருத்துவமனையை மாற்றி புதிய மருத்துவமனை கட்டுவதற்கு அரசிடம் திட்டமுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) இந்த மருத்துவமனைக்கு ரூ. 10.63 லட்சம் செலவில் ஒரு புதிய கட்டிடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு 1981-82 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பகுதி திட்டமாகக் கருதப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, தருமபுரி மாவட்டம் அரூர் நகரில் இருக்கும் அந்த மருத்துவமனையை மாற்றியமைத்துப் புதிய மருத்துவமனை கட்டுவதற்கு ஆறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே திட்டம் சொல்லப்பட்டு, ஏற்கனவே இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேயும்கூட பரிந்துரை செய்யப்பட்டு, கட்டுவதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனாலும்கூட இன்றையதினம் அரசு 1981-82 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பகுதித் திட்டமாக கருதப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது என்று கூறியிருப்பது குறித்து என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதை எவ்வளவு சீக்கிரம் விரைவுபடுத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரம் விரைவுபடுத்துவதற்கு அரசு முயற்சியை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதை உடனடியாகக் கட்டுவதற்காக நாம் உத்தரவு போட்டிருக்கிறோம். A new hospital building 24 படுக்கைகள் கொண்ட Out-patient blocks, operation theatre, X-ray block, மற்றும் Kitchen block இவைகளெல்லாம் சேர்ந்து 10.63 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும். அதுமட்டுமல்லாமல் இதிலே Assistant Surgeons 2, Nurses 3, Auxiliary mide-wife இவைகளிலெல்லாம் யார் யாரை நியமிக்க வேண்டுமென்பதையும் அரசாங்கம் ஏற்கனவே முடிவு செய்திருக்கிறது. ஆகவே, இந்த மருத்துவமனை, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் எழுப்பிய வினாவிற்கிணங்க நிச்சயமாக விரைவில் கட்டப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெருந்துறை காசநோய் மருத்துவமனை

* 883 வினா.—திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெருந்துறை காசநோய் மருத்துவமனையில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஆண்டுக்கு ஒரு படுக்கைக்கு மட்டும் பணம் கட்டப்பட்டு வருவதை மாற்றி நிதி வசதியுள்ள ஒன்றியங்களில் அதிக அளவு 10 படுக்கைகள் வரை பணம் கட்ட அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பெருந்துறை இராமலிங்கம் காசநோய் மருத்துவமனை ஒரு தனியார் மருத்துவ மனையாகும். ஆதலால் அரசு எந்த முடிவும் எடுக்க இயலாது.

திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்திற்கும், கோவை மாவட்டத்திற்கும் காசநோய் மருத்துவ மனையாக இந்தப் பெருந்துறை காசநோய் மருத்துவமனை தொன்றுதொட்டு விளங்கி வருகிறது. அது தனியார் கையிலே இருக்கின்ற காரணத்தினால் அங்கே பணியாற்றுகின்ற மருத்துவர்களுக்குக்கூடச் சரியாகச் சம்பளம் கொடுக்கப்படாமல் இரண்டு மாதங்கள், மூன்று மாதங்கள் சம்பளம் கிடைக்காத நிலை இருந்து வருவது அரசுக்குத் தெரியுமா ? ஆகவே, அதை அரசே எடுத்து அப்படிப்பட்ட குறைபாடுகளைப் போக்கி அந்த மாவட்டங்

களிலே இருக்கக்கூடிய பல்வேறு நோயாளிகளுக்கும் வசதிவாய்ப்புகளை ஏற்படுத்தும் அளவிற்கு அரசு அதைக் கையகப்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கொறடா அவர்கள் எழுப்பிய அந்த வினாவிலே, அவர் இப்பொழுது இங்கே சொல்லியிருக்கக்கூடிய அந்தக் கோரிக்கையையும் பல பேர்கள் பல நேரங்களிலே சொல்லியிருக்கிறார்கள். அதை நான் கவனிப்பதற்கு முன்பாக ஒரு நல்ல வேலை செய்திருக்கிறோம். அது என்னவென்றால், அதற்காக ரூ. 1.5 இலட்சம் கிரான்ட்டாகக் கொடுத்துக் கொண்டிருந்தோம். பிறகு ரூ. 2 இலட்சம் கிரான்ட்டாக உயர்த்தியிருக்கிறோம். இப்பொழுது, இந்த ஆட்சியிலே ரூ. 5 இலட்சம் அரசாங்கம் அதற்கு மானியம் கொடுக்கின்றது. கொடுக்கின்ற நேரத்தில் சில விதிகளையும் நாம் விதித்திருக்கிறோம். இலவசமாகப் படுக்கைகளைக் கொடுக்கவேண்டும். அரசாங்கத்திலே பணியாற்றுகிறவர்களாக இருந்தாலும், யாராக இருந்தாலும், இலவசமாகப் படுக்கைகளை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நாம் நிபந்தனை விதித்து, ரூ. 5 இலட்சம் கொடுத்திருக்கின்றோம். மாண்புமிகு கொறடா அவர்கள் அதை அரசாங்கமே ஏற்றுக்கொள்ளுமா என்று கேட்கிறார்கள். எவ்வளவு செலவாகும், எவ்வளவு கமிட்மென்ட் என்பதையெல்லாம் ஆராய்ந்து பிறகு, தீர யோசித்து எடுக்க வேண்டிய முடிவாக அது இருக்கிறது.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு எடுப்பதற்கு ஆலோசனை செய்கிறது என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி அரசு எடுத்துக் கொண்டால், அதற்குரிய செலவை, பெரியார், கோவை மாவட்டத்திலே இருக்கிற எல்லா ஒன்றியங்களும் ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கின்றன. அந்த நிலையில் முதலில் கொடுக்கப்பட்டிருக்கிற படுக்கைகள் இப்பொழுது ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்படுகின்ற தன்மை மாறியிருக்கிறது என்பதையும் ஆகவே அரசு அந்த மருத்துவமனையை எடுத்து நடத்த முடியாவிட்டாலும், அரசு எடுக்கின்றேன் என்று சொன்ன பிறகு ஒன்றியங்கள் பங்குத் தொகை செலுத்த வேண்டுமென்று சொன்னால், ஒன்றியங்கள் செலுத்துவதற்குத் தயாராக இருந்தால் அரசு எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி உடனடியாக நாம் சொல்வதற்கில்லை. இப்பொழுது ஒரு படுக்கைக்காக ஒரு ஒன்றியம் ரூ. 1,000 கொடுத்துக் கொண்டிருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

முனிசிப்பாலிட்டியைப் பொறுத்தவரையில், 30 படுக்கைகள் போடுவதற்கென்று, அதற்கு ஒரு சீலிங் வைத்திருக்கிறோம். ஆகவே, அரசாங்கம் எடுத்துக் கொண்டால், எவ்வளவு செலவாகும்? ஒன்றியங்கள் அதற்கு எவ்வளவு கொடுக்கத் தயாராக இருக்கின்றன என்பதை யெல்லாம் நல்ல முறையிலே ஆராய்ந்து, தீர யோசித்து, நாம் ஒரு முடிவுக்கு வருகிறோம். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் கோவைத்தம்பி அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய அந்த உணர்வு, அந்தக் கருத்து நாம் எடுக்கும் முடிவுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, பெருந்துறை சானட்டோரியம் தமிழ் நாட்டிலே ரொம்ப முக்கியமான பெயர்போன சானட்டோரியம். அதற்கு இராமலிங்கம் செட்டியார் போன்ற மில் முதலாளிகள் ஏராளமான பணத்தைக் கொடுத்து, தனியாரால், நல்ல முறையிலே அந்த சானட்டோரியம் நடக்கிறது. அரசாங்கப் பணமும் அதற்கு நிறையக் கொடுக்கப்படுகிறது. அதிலே ஏராளமான நோயாளிகள், அதுவும் ஏழைகளாக இருக்கிற நோயாளிகள், சிபாரிசு இல்லாத நோயாளிகள் போனால் அங்கு படுக்கை கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. இப்பொழுது, அது தனியாக, பெரியார் மாவட்டமாகப் போய்விட்டதால், கோவை மாவட்டத்திலே அப்படிப்பட்ட ஒரு சிறந்த காச நோய் மருத்துவ மனையை தனியாகக் கட்டினால் இங்கும் கஷ்டம் தீரும், அங்கும் கஷ்டம் தீரும். அந்த ஆலோசனையை அரசு முன்வைக்குமா? அதற்கான நடவடிக்கையை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ரமணி அவர்களுக்கே தெரியும், கோயம்புத்தூர் மருத்துவ மனையிலேயிருக்கிற, தனியாக இருக்கிற டி.பி. பிரிவுகளை, இரண்டு பேரும் சேர்ந்துதான் பார்வையிட்டோம். அங்கேயும் இப்பொழுது டி.பி.-க்காக வைத்தியம் செய்து கொண்டு வருகிறார்கள். ஆகவே, அதை விரிவு படுத்தக்கூடிய வாய்ப்பிருக்கும். ஆனால், இன்னொன்று, புதிதாக டி.பி. சானட்டோரியம் ஆரம்பிக்க வேண்டுமென்று மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கேட்கிறார்கள். அதை இப்பொழுது நான் கேள்வி நேரத்திலே சொல்வதற்கில்லை. என்றாலுங்கூட, அதையெல்லாம் என்ன என்று எழுதிக் கொடுப்பார்களேயானால் நிச்சயமாக ஆராய்வோம்.

நன்னிலம் அரசு மருத்துவமனை.

* வினா எண் 884.—திரு. நன்னிலம் அ. கலையரசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் அரசினர் மருத்துவமனைக்கு வெளி நோயாளிகள் சிகிச்சைக்கூடம் புதிதாக கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) படுக்கை வசதிகள் விரிவுபடுத்தும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) இல்லை.

(ஆ) இல்லை.

கூக்கல் துறையிலுள்ள அரசு மருத்துவமனை

*வினா எண் 885.—திரு. கே. உச்சி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூர் தொகுதி கூக்கல் துறையில் அரசு மருத்துவமனைக்குக் கட்டிடம் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் கட்டிடம் கட்டத் திட்டம் ஏதேனும் உண்டா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) இந்த மருத்துவமனைக்குப் புதிய கட்டிடமும் மற்றும் இம்மருத்துவமனையில் பணி புரியும் பணியாளர்களுக்காகக் குடியிருப்பும் கட்டுவதற்காக ரூ. 7,30,000 (ரூபாய் ஏழு லட்சத்து முப்பதாயிரம் மட்டும்) அங்கீகரித்து 10—3—1981 அன்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, இந்த அரசாணையை வெளியிட்டதற்காக மகிழ்ச்சி. அதற்கு நன்றி செலுத்துவதோடு இந்தக் கட்டிடம் கட்ட எவ்வளவு மதிப்பீட்டுத் தொகை ஒதுக்கப்பட்டது என்பதையும் இந்த வேலை எப்போது ஆரம்பிக்கப்பட்டு முடிக்கப்படும் என்பதையும் அறிவிக்க இயலுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7.30 லட்சம் ரூபாய் என்று சொல்லி இருக்கிறேன். அது Construction of buildings and Staff Quarters இந்த இரண்டுக்குமாக நாம் ஒதுக்கி இருக்கக்கூடிய பணம் Construction of buildings -க்கு மட்டும் ஏறத்தாழ 5 லட்சம் ஆகும். மீதியுள்ள 2.30 லட்சம் அந்த ஸ்டாப்புக்காகப் பயன்படும். அதுமட்டுமல்லாமல், Hill Area Development Scheme என்ற ஸ்கீம் இருக்கிறது. அந்த ஸ்கீம் அடிப்படையில் கொண்டு வந்து இருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே இன்னும் என்ன செய்யலாம் என்று ஆராய்ந்து தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, ஆஸ்பத்திரிக்கு வேண்டிய கட்டிடங்கள், பணியாளர்களுக்கு இருப்பிடம் தயாரிப்பதோடு அங்கே படுக்கை வசதிகள் ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவரங்களைக் கொடுப்பார்களேயானால், அது பரிசீலிக்கப் படும்.

இராஜபாளையம் நாய்களின் இனப் பெருக்கத் திட்டம்.

*வினா எண் 886.—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாய் வளர்க்கும் திட்டத்தின்கீழ் இராஜபாளையம் இனப்பெருக்கத் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : நாய் வளர்க்கும் திட்டத்தின் கீழ் ஏற்கனவே இராஜபாளையம் நாய்களின் இனத்தைப் பெருக்க சைதாப் பேட்டையிலே ஒரு கால்நடை மருத்துவப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, உலகத்திலேயே வீரத்திற்கும், விவேகத்திற்கும் பெயர் பெற்றது இராஜபாளையம் நாய்கள், அந்த இராஜபாளையம் நாய்கள் பிறந்த மண்ணிலேயே இனப்பெருக்கம் செய்ய அரசு நாய்ப் பண்ணையை ஏற்படுத்துமா ? இன்றைக்கு வீட்டுக்கு ஒரு மரம் வளர்க்கவேண்டும் என்று விளம்பரப்படுத்துவதைப்போல, பாதுகாப்பாக இருக்க வீட்டுக்கு ஒரு நாய்—அதுவும் இராஜபாளையம் நாய்—வளர்க்க வேண்டும் என்று அரசு விளம்பரம் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் பதில் கூறும்போது நாய் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் இராஜபாளையம் நாய்களை வளர்க்க சைதாப்பேட்டையில் கால்நடைப் பிரிவு ஏற்படுத்தப்பட்டு இனப்பெருக்கம் செய்து கொண்டு வருகிறது என்று கூறினேன். இதற்காக நாய்கள் வாங்க 5 ஆயிரம் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டு, 10 இராஜபாளையம் நாய்கள் 2,135 ரூபாயில் வாங்கப் பட்டுள்ளன.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய பெரிய பணக்காரர்கள், நடிகர், நடிகைகள் எல்லாம் அல்சேஷன் நாய்களைத்தான் வளர்க்கிறார்கள். ஆனால் பாதுகாப்புக்குச் சிறந்த நாய்கள் இராஜபாளையம் நாய்கள்தான் என்று அரசு பெரிய அளவில் விளம்பரம் செய்யுமா? அந்த இராஜபாளையம் நாய்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுமா ? அப்படி ஏற்றுமதி செய்யப்படும் நாய்களைப் பராமரிக்க உயர்மட்டக் குழு ஒன்றினை அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

1981 ஏப்ரல் 25]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, மூலக் கேள்வி 'நாய் வளர்க்கும் திட்டத்தின்கீழ் இராஜபாளையம் இனப்பெருக்கத் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா' என்பது. அதற்கு சைதாப்பேட்டையில் ஆரம்பித்திருப்பதாகச் சொல்லி இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் அல்சேஷன் நாய்களுக்குப் பதிலாக, வசதி படைத்தவர்கள், இராஜபாளையம் நாய்கள் வளர்த்தால் நன்றாக இருக்கும் என்று கூறினார்கள். அப்படிப்பட்ட திட்டம் ஒன்றும் இல்லை.

(முற்பகல் 9-50)

திரு. பாபு ஜனார்த்தனன் : * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கான இல்லங்கள்.

* வினா எண் 887.—திரு. பூ. மு. நரசிம்மன்: மாண்புமிகு சமூக நலத்துறை கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கான இல்லங்களை மேலும் கட்டும் உத்தேசமுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் தொழுநோய் பிச்சைக்காரர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) தொழுநோய் பிச்சைக் காரர்களுக்கான இல்லங்களை மேலும் கட்டும் உத்தேசமில்லை.

(ஆ) மறுவாழ்வு இல்லங்களில் உள்ளவருக்கு துணி நெய்தல், பாய் பின்னுதல், செருப்பு செய்தல், தையல் தொழில், தச்சு வேலை, பட்டுப்புழு வளர்ப்பு, விவசாயம் கயிறு திரித்தல் முதலிய வாழ்க்கைத் தொழில் பயிற்சி அளிக்கப்பட்டு வெளியில் அனுப்பப்படுகிறார்கள். அவ்வாறு பயிற்சி பெற்று வெளியில் செல்பவர்கள் பிச்சை எடுக்காமல் தொழில் செய்து பிழைக்க உதவுவதே மறுவாழ்வு இல்லங்களின் நோக்கமாகும்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டையில் இருக்கும் தொழுநோய் பிச்சைக் காரர்கள் மறுவாழ்வு இல்லத்தில் எவ்வளவு பேர் தற்போது இருக்கிறார்கள் ?

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. இரா. கருப்பையா : தலைவரவர்களே, அரசு பொறுப்பிலே கால்நடை மருந்தகங்கள் தொடங்குவதில் தாமதம் ஏற்படுகிறது என்பதால் பல கிராமங்களில் பொதுமக்களே முன்வந்து கால்நடை மருந்தகத்திற்குக் கட்டிடம் கட்டித்தருகிறோம் என்று சொல்கிறார்கள். அப்படி பொது மக்களே கட்டிடம் கட்டித்தரும் இடங்களில் கால்நடை மருந்தகங்களை தொடங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, கால்நடை நிலையங்கள், கால்நடை மருந்தகங்கள் ஆரம்பிக்கப்படுவது என்பதைப் பொறுத்தவரையில் கால்நடைகளின் எண்ணிக்கை, அவற்றின் தேவை, ஏற்கெனவே இருக்கின்ற கால்நடை மருந்தகத்தின் அருகாமை ஆகியவை குறித்து பரிசிலித்து எங்கு தேவைப்படுகிறதோ அங்கே அமைக்கப்படுகிறது. ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை மருந்தகங்கள் திறக்கப்பட வேண்டுமானால், எந்த ஒன்றியத்தில் திறக்கப்பட வேண்டுமோ அந்த ஒன்றியம் தீர்மானம் நிறைவேற்றித்தர வேண்டும். அந்தத் தீர்மானம் வரவில்லை என்றால் கால்நடை மருந்தகத்தை ஆரம்பிப்பது கடினம். நிரந்தரக் கட்டிடம் கட்டப்படும் வரையில் மருந்தகம் நடத்துவதற்கு வாடகை இல்லாமல் கட்டிடம் வழங்க அந்த ஒன்றியம் ஏற்பாடு செய்ய வேண்டும். கட்டிடம் கட்டுவதற்கும் இதர காரியங்களுக்கும் ஒரு ஏக்கர் நிலம் தரவேண்டும். கட்டிடம் கட்டுவதற்காக ஒன்றியம் பங்குத்தொகை செலுத்துவதற்கு ஒப்புக் கொள்ள வேண்டும். அந்தத் தொகை, முதல் கால்நடை மருந்தகம் என்றால் 25 சத விகிதம் ஒன்றியம், 75 சத விகிதம் அரசு ; இரண்டாவது கால்நடை மருந்தகம் என்றால் 50 சத விகிதம் ஒன்றியம், 50 சத விகிதம் அரசு ; மூன்றாவது கால்நடை மருந்தகம் என்றால் 75 சத விகிதம் ஒன்றியம், 25 சத விகிதம் அரசு; நான்காவது கால்நடை மருந்தகம் என்றால் 100 சத விகிதமும் ஊராட்சி ஒன்றியம் என்ற அடிப்படையிலே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். ஆகவே, மக்களுடைய ஒத்துழைப்பை ஏற்றுக்கொண்டு அந்த இடத்திலே கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டுமென்று திட்டம் இல்லை. ஊராட்சி ஒன்றியம் தீர்மானம் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். தீர்மானம் நிறைவேற்றிக் கொடுத்தால் அந்த இடத்தில் கால்நடை மருந்தகம் அமைக்கப்படும்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : தலைவரவர்களே, 3 கால்நடை மருந்தகங்கள் உள்ள ஊராட்சி ஒன்றியம் எத்தனை இருக்கின்றன என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, தனிக் கேள்வி போடவும்.

1981 ஏப்ரல் 25]

(ஆ) கால்நடைகளின் நோய் நீக்கப் பணிகளுக்காக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் குறைந்த பட்சம் 2 கால்நடை மருந்தகங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பது அரசின் கொள்கையாகும். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும், கால்நடைகளின் எண்ணிக்கை, ஏற்கனவே கால்நடை நிலையத்தின் அருகாமை, நிதி நிலைமை, எவ்விடத்தில் மிக அவசியமாகத் தேவைப்படுகிறதென்பதை ஆராய்ந்து ஒவ்வொரு ஆண்டும், கால்நடை மருந்தகங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் இரண்டு கால்நடை மருந்தகங்கள் அமைக்கப்படவேண்டும் என்று அரசு கொள்கை அளவில் முடிவு எடுத்து இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி 376 ஒன்றியங்களிலும் இரண்டு கால்நடை மருந்தகங்கள் வந்தாலும் கூட, அது தேவையைப் பூர்த்தி செய்வதாக அமையாது. எனவே, இப்போது மக்கள் நல்வாழ்வுத் துறையில் செயல்பட்டு வருகிற 'மொபைல் மருந்தகம்' போல் நடமாடும் மருத்துவ மனைகள் உருவாக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி அரசு பரிசீலித்து பின் செயல்படுத்தப்படும்.

திரு. செ. செம்மலை: தலைவரவர்களே, இந்தக் கால்நடை மருத்துவமனைகளில் மிகவும் சிக்கனமானதும் சக்தி வாய்ந்ததுமான சித்த வைத்திய முறைகளை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, சித்த வைத்திய முறை ஓரளவுக்குப் பயன்படுத்தப்படுகிறது. அதை விரிவாக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள கால்நடை கிளை பராமரிப்பு நிலையங்களில் பெரும்பகுதி பணியாளர்கள் இல்லாமல் மூடிக்கிடக்கின்றன. அவைகளை மீண்டும் பயன்படுத்துவதற்குத் திறந்து, பணியாளர்களையும் நியமிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, அதைப் பற்றிய விவரம் என்னிடம் இல்லை. எந்தக் கால்நடை மருந்தகத்தில் பணியாள் இல்லை, எங்கே மூடிக்கிடக்கிறது என்ற விவரங்களைக் கொடுத்தால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒவ்வொருவருக்கும் மாதத்திற்கு எவ்வளவு செலவிடப்படுகிறது ? அதில் இருந்து குணம் பெற்று வெளியேறுகிறவர்களுக்கு வேலைவாய்ப்புத் தேடித்தர அரசு முன்வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அரசினர் மறுவாழ்வு இல்லத்தில் 261 ஆண்களும், 76 பெண்களும், 56 சிறுவர்களும்—ஆக மொத்தம் 393 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களில் வயது வந்தவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் அன்றாட உணவுக்காக செலவிடப்படும் தொகை ரூ. 2.30 பைசா, 12 வயதுக்குட்பட்டவர்களுக்கு ரூ. 1.15 பைசா, எலும்புருக்கி நோயாளிகளுக்கு ஒரு நோயாளிக்கு ரூ. 3.77 பைசா வீதம் செலவிடப்படுகிறது.

திரு. வே. அரங்கராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது நாட்டில் இருக்கின்ற தொழுநோய் பிச்சைக்காரர்கள் பார்ப்பதற்கு அருவருப்பாகவும், தொழுநோய்க்குச் சரியாக வைத்தியம் பார்த்துக் கொள்ளாததால் மற்றவர்களுக்கு அதைப் பரவிடும் முறையிலும் இருக்கிறார்கள். அதோடு, வெளிநாட்டினர் வருகின்றபோது அவர்கள் துறைமுகங்களின் முன்னாலே பிச்சை எடுத்துக்கொண்டு இருப்பதாலே, கட்டாயமாக அவர்களைப் பிடித்து வந்து, வைத்தியச் சிகிச்சை அளிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லத்தில் சேர்ந்துள்ளவர்களுக்கு இலவசமாக மருத்துவ வசதி செய்யப்பட்டு வருகிறது.

அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் கால்நடை மருத்துவ மனைகள் ஏற்படுத்தும் திட்டம்.

* வினா எண் 888.—திரு. செ. செம்மலை : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது இரண்டு கால்நடை மருத்துவ மனைகளைக் கொண்டுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் எத்தனை ?

(ஆ) அனைத்து ஊராட்சி—ஒன்றியங்களிலும் இரண்டு கால்நடை மருத்துவமனைகளை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளதா

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) 179 ஊராட்சி ஒன்றியங்கள்.

1981 ஏப்ரல் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப்பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒழுங்குப் பிரச்சினை.

(அ) மன்ற உறுப்பினர் அந்நிய நாட்டின் தூதுவர் பணியை ஏற்றல்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். நேற்று முன்தினம் இதே அவையில் தங்களுடைய கவனத்திற்கு ஒரு பிரச்னையைக் கொண்டு வந்தேன். * * * *

(முற்பகல் 10-00)

THIRU V. KRISHNAMURTHY: Sir, he should not be permittd to raise it in the House.

(கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றையதினம் என்னிடத்திலே ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் மாதிரி பல கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் கொடுத்தார்கள். அதை இங்கே எழுப்பினாலும் அதுபற்றி தீர்ப்பளிக்க எந்த விதமான அதிகாரமும் எனக்கு இல்லை. ஏனென்றால் இது இங்குள்ள உறுப்பினர் பற்றிய பிரச்சினை. அதுபற்றித் தீர்ப்புக் கூறுகின்ற இடத்திலே நான் இல்லை. என்னால் தீர்ப்புக் கூறவும் முடியாது. ஆனால் இதைப் பற்றி என்ன கருதுகிறீர்கள் என்பதை மட்டும் சொல்லலாம் என்று சொன்னேன். நான் ஒன்றும் இதிலே கருத்து சொல்வதற்கில்லை. அரசின் தரப்பிலும் இதற்குப் பொறுப்பு இல்லை.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் தீர்ப்புக்குப் பின்னால் அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பற்றி (குறுக்கீடு) இது குறித்து நானும், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். ஆண்டித்தேவர் அவர்களும்; திரு. அழகர்சாமி அவர்களும் . . . (கூச்சல், குழப்பம்).

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்களும் மற்றும் பல கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் ஒரு ஐயப்பாட்டைக் கிளப்பி இருக்கிறார்கள். ஆனால் அந்த ஐயப்பாடு இங்கே உறுப்பினராக இருக்கின்ற ஒருவரைப் பற்றியது. அவர் ஒரு குறிப்பிட்ட பொறுப்பினை ஏற்றுக்கொண்டு இருப்பதன் காரணமாக அரசியல் அமைப்புச் சட்டத்தினுடைய விதிகளிலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற விதிகளின்படி அவர் இங்கே தொடர்ந்து உறுப்பினராக இருக்கலாமா இருக்கக் கூடாதா என்ற அளவுக்கு ஐயப்பாடு வந்திருக்கிறது. ஆனால் அது பற்றி முடிவு செய்ய வேண்டிய பொறுப்பு அவைத் தலைவருக்கு இல்லை. அதுபற்றிய முடிவினைச் செய்ய வேண்டியவர் ஆளுநர் அவர்கள்தான். ஆளுநர் அவர்களுக்கே ஐயப்பாடு இருக்குமேயானால் எலக்ஷன் கமிஷனரிடத்திலே தான் கேட்கவேண்டும். ஆனால் இங்கே ஐயப்பாடு எழுப்புவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. ஆனால் அந்த ஐயப்பாடு பற்றி ஆளுநர் அவர்களுக்கு அனுப்புவதற்கு முன்பாக குறிப்பிட்ட உறுப்பினர் அவர்களின் கருத்தையும் கேட்க வேண்டும் மாண்புமிகு அவைத் தலைவர் அவர்கள். அவர்கள் இங்கே இருந்திருப்பார்களேயானால் அது குறித்துச் சொல்லி இருப்பார்கள். அந்த வகையிலே பொறுப்பு ஏற்றுக் கொண்டது அரசியல் சட்டத்தின் அமைப்பு விதிகளுக்கு உட்பட்டு இருக்கின்றதா? அல்லது வெளிப்பட்டு இருக்கின்றதா? என்பது பற்றி குறிப்பிட்ட உறுப்பினர் அவர்கள் விளக்கம் கொடுத்ததற்குப் பிறகுதான் இதுகுறித்து ஆளுநர் அவர்களுக்கு அனுப்பவேண்டும் என்ற முடிவினைத் தாங்கள் எடுக்க வேண்டும். மேலும் இப்போது விளக்கங்கள் சொல்வதிலே வேறு வகைக்குப் போகாமல் அது ஒரு ஐயப்பாடு என்ற அளவுக்குத்தான் சொல்லப்பட வேண்டுமே தவிர ஏதேனும் குற்றச்சாட்டுகளைச் சொல்கின்ற அளவுக்கு போகக்கூடாது. மேலும் இதுகுறித்து ஒரு முடிவு ஏற்படுகின்ற வரையில் அவர் இங்கே உறுப்பினராகத்தான் இருப்பார். ஆகவே இது குறித்து விளக்கங்கள் தருகின்றபோது குற்றச்சாட்டு என்ற அளவுக்கு இல்லாமல் ஐயப்பாடு என்ற அளவுக்குத்தான் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்னையைப் பற்றி மாண்புமிகு முன்னவர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் எல்லாம் உட்கார வேண்டும். உட்கார்ந்தால்தான் நான் என்னுடைய கருத்தைச் சொல்ல முடியும். தயவுசெய்து யாரும் உணர்ச்சி வசப்படாதீர்கள் (கூச்சல், குழப்பம்).

1981 ஏப்ரல் 25]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கும், மற்றவர்களுக்கும் ஒன்றை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது சட்டப் பிரச்னை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உரிமையை இந்த அவையில் யாரும் முடிவு செய்து நீக்கிவிட முடியாது. சட்டப் பிரச்னையில் என்ன நியாயம் இருக்கிறதோ, அந்த நியாயத்தைப் பெற முழு உரிமையும் உறுப்பினர் அவர்களுக்கு இருக்கிறது. தீர்மானம் கொண்டு வந்த உறுப்பினர் அவர் தரப்பை விளக்கிருக்கிறார். பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் வேண்டுமானால் சம்பந்தப்பட்ட உறுப்பினரிடத்தில் விளக்கங்கள் கேட்கலாம். குறிப்பிட்ட உறுப்பினருடைய கருத்தை அறிந்த பிறகு, இந்த ஐயப்பாட்டை பற்றி ஆளுநருக்கு அனுப்பலாமா என்பது குறித்து, தாங்கள் முடிவு செய்யலாமே தவிர, வேறு எந்த நடவடிக்கையையும் இந்த அவை எடுக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் (கூச்சல், குழப்பம்).

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, நீங்கள் இதை எக்சாமின் பண்ண சம்பந்தப்பட்ட உறுப்பினர் * * அவர்களை தம் கருத்தை எழுதி அனுப்பச் சொல்லுங்கள். அதற்குப் பிறகு எடுக்கலாம் (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி அவரவர்களுடைய கருத்தை வலியுறுத்துகிற நிலையிலேயே இருந்தால், இந்தப் பிரச்னையில் எந்த முடிவையும் எடுக்க இயலாது. ஆகவே, இந்தப் பிரச்னையைப் பற்றி ஒரு முடிவினை எடுக்க தாங்கள் அலுவல் ஆய்வுக் குழுவினைக் கூட்டி, தலைவர்களை வைத்து, எல்லோரும் சேர்ந்து ஒரு முடிவினை எடுக்கும் வகையில் கொண்டு வரலாம். இல்லாவிட்டால் எந்த முடிவும் வராது. இதற்கு முன் உதாரணமும் இல்லை. ஆகவே, அலுவல் ஆய்வுக்குழுவைக் கூட்டி முடிவு செய்யலாம். ஒரு உறுப்பினர் இன்னொரு உறுப்பினரைப் பற்றி ஐயப்பாட்டை எழுப்பியிருக்கிறார். (குறுக்கிடு) உங்களுக்கு தெரிந்தால் விளக்கங்களை நீங்கள் சொல்லுங்கள். அல்லது உறுப்பினர் இருக்கும்போது இதை எழுப்பி அவரே விளக்கம் அளிக்கட்டும். (கூச்சல்; குழப்பம்).

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து எல்லோரும் கொஞ்சம் அமைதியாக இருங்கள். என்னுடைய எண்ணத்தை தெரிவிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் அவர்கள் வேறு ஒரு உறுப்பினரைப் பற்றி ஐயப்பாட்டைக் கிளப்பி பிரச்னையை கொண்டு வந்திருக்கிறார்கள். அதைப்பற்றி ஒவ்வொருவரும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறார்கள். (கூச்சல், குழப்பம்).

(முற்பகல் 10-10)

திரு. ரா. உமாநாத்: அதிகாரம் இருக்கிறது என்பது எங்கள் கருத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதைப் பற்றி நிறைய உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். எல்லோருக்கும் ஒவ்வொரு எண்ணம் இருக்கும். எல்லோரும் எழுதியனுப்புங்கள். அதைப் பரிசீலனை செய்து அதற்குப் பிறகு நான் முடிவு சொல்கிறேன். (கூச்சல், குழப்பம்). காரண காரியங்களை பூராவும் எழுதி அனுப்புங்கள். (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்களுக்கு இந்த ஐயப்பாடு இருக்கிறது என்று முதலில் குறிப்பிட்டேன். அதை எழுதி—அவைத் தலைவர் அவர்கள் கூறியபடி—கொடுக்கட்டும். எந்த வகையில் அவர்கள் மறுக்கிறார்கள் என்று எழுதிக் கொடுத்ததற்குப் பிறகு—உரிய உறுப்பினர்கள் எழுதிக் கொடுக்கட்டும்—அதை ஆராய்ந்து பிறகு அதைப் பற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் இருந்தால் 27-ம் தேதி அன்று எடுத்துக்கொள்ளலாம். இரண்டு பேர்களிடமிருந்தும் விளக்கங்கள் பெற்று விவாதிப்பதற்கு இடமளிக்கலாம். (கூச்சல், குழப்பம்.)

திரு. குமரி அனந்தன்: தலைவர் அவர்களே, ...

திரு. துரைமுருகன்: என்ன விஷயம் என்றே தெரியவில்லை. (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் விஷயம் என்ன என்று தெரிந்து கொள்ள விரும்புகிறார்கள். என்ன விஷயம் என்பதைத்தான்—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னமாதிரி அவரவர்கள் எழுதிக் கொடுக்க வேண்டும். பிறகு விவாதிக்க வேண்டிய அவசியம் இருந்தால் அதற்குப் பிறகு ஒரு நாள் ஒதுக்கி இரண்டு தரப்பினரும் பேசலாம். ஆகவே இந்த அவளோடு

முடித்துவிட்டு, அவரவர்கள் எழுதிக் கொடுத்த பிறகு அவசியம் இருந்தால்—முடிவு செய்ய வேண்டியது தாங்களே தவிர இங்கே இருக்கிறவர்கள் கொண்டு வரவேண்டும் என்று சொல்வதும், கொண்டுவரக்கூடாது என்று சொல்வதும் தேவையற்றது. முடிவு எடுக்க வேண்டிய பொறுப்பு தங்களிடம்தான் இருக்கிறது. அவர்கள் எழுதிக் கொடுக்கட்டும். சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் பதில் சொல்லட்டும். பிறகு அவசியப்பட்டால் விவாதித்து எடுக்கவேண்டிய முடிவை எடுத்துக்கொள்ளலாம்.

திரு. குமரி அனந்தன்: * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. குமரி அனந்தன், உணர்ச்சி வசப்படக் கூடாது. இதையெல்லாம் அவைக் குறிப்பிலே ஏற்றாதீர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையைப் பொறுத்தவரையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் உணர்ச்சிவசப்பட்டு பேச வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே பேசுவதன் காரணமாக, இந்தப் பிரச்னை எந்த வகையிலும் தீர்ந்துவிடப் போவதில்லை. இன்றே எடுத்துக்கொண்டு தீர்க்க வேண்டிய பிரச்னையும் அல்ல. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் அவர்கள், இன்றுள்ள நிலைமைக்கு ஏற்ப, தம்முடைய கருத்தை பேரவைத் தலைவருக்கு எழுத்துமூலம் எழுதித் தரலாம். அதற்கு உரியவர்களிடம் இருந்தும் கருத்தை அறிந்து, இந்த இரண்டையும் ஆராய்ந்து, தேவைப்பட்டால் இங்கே திரும்பவும் பேசுவதற்கான வாய்ப்பு ஏற்படும். இந்தப் பிரச்னையில் முடிவெடுக்க வேண்டிய நிலையில் நாம் இல்லை அரசும் முடிவெடுக்க ஒன்றுமில்லை. இந்த அளவிலே இந்தப் பிரச்சினையை முடித்துக் கொள்ளலாம்.

டாக்டர் மு. கருணாநிதி: இந்தப் பிரச்னைக்கு தாங்கள் அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவு எடுத்துக் கொள்ளலாம்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: முடியாது, பேரவைத் தலைவர்தான் அனுமதி கொடுத்தார்கள். (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எனக்கிருக்கிற ஓரே அதிகாரம் அனுமதிப்பதும், அனுமதிக்கப்பட்டதைத் திரும்பப் பெறுவதும் தான். கொடுத்த அனுமதியைத் திரும்பப் பெற்று விட்டேன் என்று சொல்லி விட்டேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஆகவே, தயவு செய்து உங்கள் கருத்தை எழுதிக் கொடுத்து விடுங்கள். இந்தப் பிரச்சினையைப் பற்றி நான் சம்பந்தப்பட்ட உறுப்பினரிடத்தில் பதில் வாங்கி, அதற்குப் பிறகு என்ன செய்யலாம் என முடிவு செய்கிறேன். அவை முன்னவர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் சொன்னதைப் போல், இந்தப் பிரச்னையை அலுவல் ஆய்வுக் குழுவிலே விவாதித்து முடிவு செய்யலாம். (கூச்சல், குழப்பம்). எல்லோரும் உட்காருங்கள். இன்னும் கால் மணி நேரத்தில் அலுவல் ஆய்வுக் குழுவை கூட்டுவதாக இருக்கிறேன். அங்கே இதுபற்றி தலைவர்கள் அனைவரையும் கலந்து முடிவெடுக்கிறேன்.

(முற்பகல் 10-20)

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். . (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டி முடிவெடுக்கிறேன். இதுபற்றி பாயிண்ட் ஆப் ஆர்டர் என்னுடைய அனுமதி இல்லாமல் எழுப்ப முடியாது.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டருக்கு அனுமதி கிடையாதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயிண்ட் ஆப் ஆர்டருக்கு அனுமதி உண்டு. அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டுகிறேன். அங்கே பேசலாம். (கூச்சல், குழப்பம்). இப்போது எல்லோரும் அமைதியாக உட்காருங்கள்.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர் அனுமதிக்கவில்லை என்பதால் எங்களுடைய உரிமை பாதிக்கப்படுகிறது, தடுக்கப் படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய உரிமையை யாரும் தடுக்கவில்லை, உட்காருங்கள். நீங்கள் எப்போது வேண்டுமானாலும் பேசலாம். (கூச்சல், குழப்பம்)

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவரவர்களே, நீங்கள் எப்படி இவைகளை அனுமதிக்கிறீர்கள் (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டி முடிவெடுக்கிறேன் என்று சொல்கிறேன். கூட்டக் கூடாது என்கிறீர்களா ? என்ன சொல்கிறீர்கள் ? சபையை நடத்துவதா, இல்லையா ? அமைதியாக எல்லோரும் உட்காருங்கள்.

1981 ஏப்ரல் 25]

திரு. குமரி அனந்தன்: தலைவரவர்களே, எங்களுடைய உரிமை பறிக்கப் படுகிறதென்பதால், வேதனையான நிலையில் நாங்கள் வெளி நடப்புச் செய்கி றோம்.

(காந்தி—காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தனர்)

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, ஒரு சீரியஸ் பிரச்சினை. மெம்பர் களுடைய பாயிண்ட் ஆப் ஆர்டர் என்ற ரைட் * * (கூச்சல், குழப்பம்).

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவரவர்களே, நீங்கள் எப்படி இதை அனுமதிக்கிறீர்கள். என்னையும் ஒரு கருத்தைச் சொல்ல அனுமதிக்க வேண்டும்.

திரு. வெ. இராஜசேகரன்: தலைவரவர்களே, உங்களால் தீர்ப்புக் கூற முடியாத விஷயத்தை சபையில் பேசுவதற்கு அனுமதிக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்).

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, எங்களுடைய உரிமை பாதிக்கப் படுகிறதாலே, எங்களது அதிருப்தியை நாங்கள் தெரிவித்து, ஆட்சேபித்து வெளிநடப்புச் செய்கிறோம்.

(கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).

திரு. இரா. கருப்பையா: தலைவரவர்களே, இந்த பேரவையிலே அங்கத் தினர்கள் எழுப்ப வேண்டிய உரிமைப் பிரச்சினைகளை * * நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

(கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

திரு. எஸ். ஆண்டித்தேவர்: தலைவர் அவர்களே, * * (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அனுமதி கொடுக்கலாம், அதைத் திரும்பப் பெறவும் எனக்கு உரிமை இருக்கிறது. அனுமதி கொடுத்ததை மட்டும் ஏற்றுக்கொள்கிறீர்கள், அனுமதியை நான் திரும்பப் பெற்றுக்கொண் டதை மட்டும் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்கிறீர்களே என்ன அர்த்தம்?

திரு. எஸ். ஆண்டித்தேவர்: அனுமதி கொடுத்தீர்கள். * *

(அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியினர் வெளிநடப்புச் செய்தனர்).

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கேற்ப அகற்றப்பட்டது.

திரு. க. பாரமலை : தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள், இந்த அவையிலே அதுபற்றி முடிவு எடுக்க முடியாது என்று ; இருந்தாலும் உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லலாம் என்ற நிலையிலே சொல்கிறபோது * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெளியே போவதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. எழுதித் தரவேண்டுமென்று சொன்னது உரிமை மறுக்கப் பட்டதல்ல. ஒரு உறுப்பினருக்கு பைத்தியம் பிடித்துவிட்டது என்று இன்னொரு உறுப்பினர் குற்றஞ்சாட்டினால் அது சரியா தவறா என்று நான் முடிவு எடுத்துவிட முடியாது. இது ஒரு உறுப்பினருடைய பிரச்சினை. ஆகவேதான் அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டி எல்லாத் தரப்பினரையும் அழைத்துக் கேட்போம் என்று சொன்னேன். அதுவும் முடியாது என்று சொன்னால் என்ன செய்வது ?

திரு. க. பாரமலை: நேற்றே எழுத்து மூலமாக எழுதிக் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதற்கேற்ப அனுமதி இங்கே கொடுக்கப்பட்டது. * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எழுத்துமூலமாக ஒத்திவைப்புத் தீர்மானம் என்று கொடுத்திருக்கிறீர்கள். அதை ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்வதற்கு எந்தச் சட்டமும் அனுமதிக்கவில்லை. ஆகவே தான் முடியாது என்று சொன்னேன். வேறு ஏதாவது முறையிலே கொண்டுவர லாம் என்று கருதி ஒழுங்குப் பிரச்சினையில் கொண்டுவருவதாகச் சொன் னார்கள். அதன் மீதும் பிரச்சினை எழுந்தபோதுதான் அவை முன்னவர் அவர்கள் தலையிட்டு எழுதிக் கொடுக்கலாம் என்ற முடிவுக்கு வந்தார்கள். ஆனால் அதிலேயும் பிரச்சினை வந்தது. பிறகு அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டி முடிவு செய்யலாம் என்று தெரிவித்தபோது அதுவும் முடியாது என்று சொன்னால் என்ன செய்ய முடியும் ?

திரு. க. பாரமலை : * *

(தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சியினர் வெளிநடப்புச் செய்தனர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒழுங்குப் பிரச்சினை, வெளிநடப்பு பிரச்சினை என்பதையொட்டி விவாதம் எழுந்தபோது நான் இங்கே குறிப்பிட வேண்டாம் என்று சொன்ன கருத்துக்களைச் சிலர் குறிப்பிட்டுள்ளார்கள். அவை அனைத்தும் பேரவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற ஆணையிடுகிறேன்.

* *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

விருத்தாசலத்தில் 1981 ஏப்ரல் 23 ஆம் நாள் நடந்த கலவரம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ஆர். தியாகராசன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ரா. உமாநாத், கு. ரமணி, என். எஸ். வி. சித்தன், கே. எம். தங்கமணி, ரா. கிருஷ்ணன், என். வரதராசன், என். பழனி வேல், அ. ரகுமான்கான், எஸ். ஆண்டித்தேவர், பெ. சு. திருவேங்கடம், குமரி அனந்தன், எஸ். என். இராமசாமி, சோ. அழகர்சாமி, எம். ஆறுமுகம், பொ. உத்திராபதி, இரா. கருப்பையா, எஸ். இராசாராமன், ந. சிவஞானம், பாபு ஜனார்த்தனன், ப. பொன்னுரங்கம், சி. பழனிமுத்து, செ. இராமலிங்கம் ஆகிய 24 பேர் " 23—4—1981 அன்று விருத்தாசலத்தில் நடந்த கலவரம் குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் " என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்துச் சுருக்கமாகக் கூறும்படி திரு. தியாகராசன் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

திரு. ஆர். தியாகராசன்: மரியாதைக்குரிய சபாநாயகர் அவர்களே, விருத்தாசலம் பகுதியிலே இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய பதட்ட நிலையின் காரணமாக நகர மக்களெல்லாம் வெளியேறிக்கொண்டிருக்கின்ற நிலைமை அங்கே ஏற்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்றால் 22—4—1981 இரவு சுமார் 12 மணிக்கு திட்டக்குடி பஸ் நிலையத்தில் நாராயணன் பஸ் டிரான்ஸ்போர்ட் பஸ் ஒன்று டிரிப் முடிந்து நின்றுகொண்டிருந்திருக்கிறது. டிரைவர் கண்டக்டர் இருவரும் திட்டக்குடி பஸ் நிலையத்தில் பஸ்ஸில் உறங்கிக்கொண்டிருந்தார்கள். இரவு 12 மணிக்கு திட்டக்குடி காவல் நிலையத்திலிருந்து காவல் அதிகாரிகளும் சில காவலர்களும் காவல் நிலையத்திற்கு வந்து, நாராயணன் டிரான்ஸ்போர்ட் பஸ் நிலையத்திற்கு வந்து, நாராயணன் டிரான்ஸ்போர்ட் பஸ்ஸின் டிரைவரை எழுப்பி உடனே பஸ்ஸை எடு, அடிபட்ட சிலரைக் கடலூர் மருத்துவமனைக்குக் கொண்டு போக வேண்டுமென்று சொன்னார்களாம். டிரைவர், டிரிப் முடிந்துவிட்டதால் அந்த பஸ்ஸை எடுக்க முடியாது. கடலூருக்குச் செல்வதற்கு எங்களுக்கு பர்மிட்டும் கிடையாது, அப்படியும் அந்த பஸ் கடலூருக்குப்போக வேண்டுமென்றால் முதலாளியின் உத்தரவு வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

இந்த நிலையிலே, உடனே கோபம் கொண்ட அந்தக் காவலர்கள் டிரைவரை அடித்து இழுத்துப் போய், உதை வேண்டுமா அல்லது நாங்கள் சொல்கிறபடி வண்டியை எடுக்கிறாயா என்று மிரட்டியிருக்கிறார்கள். அவர் மறுக்கவே அவரை உதைத்து லாக்கப்பில் அடைத்து விட்டார்கள். இதன் விளைவாக அன்று காலையிலே பஸ் நிலையத்திலேயே பெரிய கலவரம் ஏற்பட்டு, விருத்தா சலம் பகுதிக்குப் பரவி, 23—4—1981 அன்று காலையில் இதைக் கேள்விப் பட்ட தனியார் பஸ் டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்கள், கண்டக்டர்கள், டிரைவர்கள் எல்லாம் சேர்ந்துகொண்டு வேலைநிறுத்தம் செய்தனர். திட்டக்குடி, விருத்தாசலம் பகுதியில் பதட்ட நிலை ஏற்பட்டதால் தனியார் பஸ் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.

இதைத் தொடர்ந்து 24—4—1981 அன்று விருத்தாசலம் ஆர்.டி.ஓ., எஸ்.பி., முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சென்று மத்தியஸ்தம் செய்திருக்கிறார்கள். அந்த மத்தியஸ்தத்தின்பொழுது விருத்தாசலம் ஆர்.டி.ஓ. கொஞ்சம் ஆணவமாகப் பேசி, அந்தத் தொழிலாளர்களை மிரட்டி பஸ்ஸை எடுக்கிறீர்களா அல்லது போலீஸை விட்டு உதைத்து பஸ்ஸை எடுக்க வேண்டுமா என்று கேட்டு மிரட்டியிருக் கிறார்கள். இதனால் தொழிலாளர்கள், திட்டக்குடி போலீஸ் அதிகாரி இங்கு வந்து வருத்தம் தெரிவித்தால்தான் நாங்கள் பஸ்ஸை எடுப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்பொழுதுதான் வேலைக்குச் செல்வோம் என்று சொன்னார்கள். அதற்கு அதிகாரிகள், இரண்டு நாள் கெடு கொடுங்கள், அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். தொழிலாளர்கள், போலீசார் அடித்ததற்கு மன்னிப்புக் கேட்கும் வரையில் பஸ்ஸை எடுக்க மாட்டோம் என்று சொன்னார்கள். அங்கிருந்த முன்னாள் எம்.எல்.ஏ., ஆர்.டி.ஓ. அவர்கள் போலீஸை அனுப்பி பஸ்ஸை உடனே எடுக்கச் சொல்லியிருக்கிறார்கள். கடலூர் போகும் பெரியார் பஸ் உடனே கடலூருக்கு அனுப்பப்பட்டுவிட்டது. ஆத்திரமடைந்த பஸ் தொழிலாளர்கள் பஸ்களை ரோட்டுக்குக் குறுக்கே போட்டு, மற்ற பஸ்களை மறித்திருக்கி றார்கள்.

இந்த நேரத்தில் போலீஸார் அங்கே சென்று அந்த பஸ் தொழிலாளர் களைச் செம்மையாக உதைத்து, பஸ்ஸையும் உடைத்திருக்கிறார்கள். இதனால் தொழிலாளர்களுக்குக் காயம் ஏற்பட்டு குறைந்தது 15 பேர், 20 பேர் ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள். இந்த நிலையில் விருத்தாசலம் பகுதியில் அனைத்துப் பொதுமக்களும், மற்றவர்களும் சேர்ந்து பெரிய கலாட்டா நடந்து, பெரியார் பஸ், பல்லவன் பஸ் என்று இப்படி இரண்டு பஸ்கள் கொளுத்தப்பட்டிருக்கின்றன. அங்கே 200 போலீசார், 250 போலீசார் குவிக்கப்பட்டு, வீடுவீடாகப் புகுந்து, எல்லா வீடுகளிலும் உள்ள பெண்கள், ஆண்களையெல்லாம் அடித்துத் துன்புறுத்திக்கொண்டிருக்கிறார்கள். இந்த

1981 ஏப்ரல் 25] [ஆர். தியாகராசன்]

நிலையில் குறுக்கும் நெடுக்குமாகப் போகும் பொதுமக்கள் மீதெல்லாம் 75-லே கேஸ் போடுகிறார்கள். சந்தேகத்திற்கு உரியவர்கள் என்று கேஸ் போடு கிறார்கள்; கிரிமினல் குற்றம் சாட்டி பஸ்ஸைக் கொளுத்தியதாகக் கேஸ் போடுகிறார்கள். இதுவரைக்கும் குறைந்தது கிட்டத்தட்ட 200 பேர் அரெஸ்ட் ஆகியிருக்கிறார்கள். இரண்டு நாளாக இராத்திரியிலும், தொடர்ந்து வீடு, வீடாகப் புகுந்து உள்ளே ஆள் இருக்கிறார்களா என்று பார்த்து, ஒரு பெண்ணின் சிகையைப் பிடித்து வெளியே இழுத்துத் தள்ளியிருக்கிறார்கள். போலீசார் கொடுமை விருத்தாசலம் பகுதியிலே அளவுமீறி நடந்து கொண் டிருக்கிறது. இரண்டு நாளாக, தெரு, கடை, கடைத்தெரு, எந்தப் பகுதி யிலும் நடமாட்டமில்லாமல், துக்ககரமாக, பார்ப்பதற்கு இருண்டு கிடக்கிறது என்று சபாநாயகர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். போலீ சாருடைய நடவடிக்கை எந்த அளவுக்கு இருக்கிறது என்பது சபாநாயகர் அவர்களுக்குத் தெரிய வேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறேன்.

பதில் சொல்லும்போது, நம் மரியாதைக்குரிய முன்னவர் அவர்கள், எதற்கெடுத்தாலும், போலீஸ் டிபார்ட்மெண்ட் கொடுக்கக்கூடிய ரிப்போர்ட்டை வைத்து, அழகான பதிலைச் சொல்லிவிடுகிறார்கள். அதில், உண்மை நிலையை ஆராய, இந்த அரசு, சர்வ கட்சி குழு போட வேண்டும். ஏனென்றால், டிபார்ட்மெண்ட்—அதிகாரிக்கு, அதிகாரி சொல்லிவிடுகிறார்கள், ஆர்.டி.ஓ., டி.டி.ஓ. என்று அவர்களுக்குச் சாதகமாகச் சொல்லிவிடுகிறார்கள். ஆனால், பொதுமக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அந்த வகையிலே முன்னவர் அவர்கள் அதிகாரிகள் கொடுத்ததைச் சொல்வார்கள். ஆகவே, உண்மை நிலையை அறிய மோட்டார் தொழிலாளர் மீது குற்றமா, அல்லது, அந்தப் போலீசார் மீது குற்றமா, அல்லது, வேறு யார் மீது குற்றம் என்பதை விசாரிக்க வேண்டும்.

இன்னொன்றைச் சொல்ல மறந்து விட்டேன். மதிப்பிற்குரிய நாராயணசாமி ரெட்டியார் இந்த சட்டமன்றத்திலே உறுப்பினராக இருக் கிறார். அவருடைய வீட்டிலே புகுந்து, அந்த வீட்டினுடைய கண்ணாடியை உடைத்து அங்கே நின்று கொண்டிருந்த பஸ்ஸை உடைத்திருக்கிறார்கள். போலீசாரே உடைத்திருக்கிறார்கள் அந்த அடித்த பஸ்ஸை. பார்த்து, உடைத் ததைப் பார்த்து ஆத்திரப்பட்டு, அங்கே குறுக்கே நிறுத்தினார்கள் பஸ்ஸை. அந்த பஸ்ஸையும் போலீசார் அடித்து நொறுக்கினார்கள். அதைப் பார்த்து ஆத்திரப்பட்டுதான் அரசு பஸ் கொளுத்தப்பட்டது. யார் காரணம் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டுமென்பதற்காகத்தான் விளக்கமாகச் சொல் கிறேன். எதற்கெடுத்தாலும் தொழிலாளர்கள், தொழிலாளர்கள் என்று சொல்லக்கூடாது. இந்த அரசு அதைக் கவனித்து, காவலர்களுடைய ஆண

வத்தினுடைய காரணத்தினாலேயும், அவர்களுடைய அதிகாரிகளுடைய போக்கினாலேயும் அந்தக் கலவரம் நடந்திருக்கிறது. அந்தக் கலவரத்திற்கெல்லாம் காரணம், ஏற்கெனவே ஒரு கஸ்பா காலனி கொளுத்தப்பட்டிருக்கிறது. சில கிராமங்களில் பெரிய தகராறுகள் நடந்தன. அங்கே இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னாலே, பெரிய மிராசுதார் வீட்டிலே ஜாதி இந்துக்கள் புகுந்து, ரூபாய் 10,000, ரூபாய் 12,000 கொள்ளை அடிக்கப்பட்டிருக்கிறது. அங்கேயிருந்து சிலைகள் திருடு போய்விட்டன. அது அங்கேயிருந்த காவல் துறையினர் பொறுப்பற்ற முறையிலே நடந்ததால்தான் ஏற்பட்டது. அந்தக் காவல் துறையிலே இருக்கக்கூடிய அதிகாரிகள் மீது அரசு தக்க முறையிலே நடவடிக்கை எடுத்து அதிகாரமற்ற சர்வ கட்சிக் குழுவை நியமித்து, நல்லதொரு விசாரணையை அங்கே ஆரம்பித்து, நீதி வழங்க வேண்டுமென்று கேட்டு, விருத்தாசலம் பகுதியிலே இன்றைக்கு ஏற்பட்டுள்ள பதட்ட நிலையை விவாதிக்க அவையின் இதர நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்து, இதுகுறித்து விவாதிக்க சபாநாயகர் அவர்கள் உத்தரவிட வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, இன்றைக்கு பல்வேறு பிரச்னைகளிலே சிக்குண்டு மக்கள் அவதிப்படுகிறார்கள். இந்த நிலையில் ஏதோ ஒரு ஸ்பார்க் வந்தவுடனே வெடிக்கிற மாதிரி இந்த நிகழ்ச்சிகள் நடக்கின்றன. பொதுவாக, திட்டக்குடியில் ஏற்பட்ட மோதலில், வேலாயுதம் என்பவர் படுகாயம் அடைகிறார். அவரை மருத்துவ மனைக்கு எடுத்துக் கொண்டு செல்லும்போது, அங்கே இருக்கக் கூடிய டாக்டர் கடலூர் மருத்துவ மனையிலோ அல்லது விருத்தாச்சலம் மருத்துவ மனையிலோ சேர்க்க வேண்டுமென்று சொல்கிறார். அந்த அடிப்படையில் கடைசி தங்கள் அந்தக் காயமுற்றவரை விருத்தாச்சலம் கொண்டு செல்ல வேண்டுமென்று கூறும்போது, அந்த டிரைவர் சொல்கிறார், முதலாளியினுடைய அனுமதியில்லாமல் கொண்டு செல்ல முடியாது என்று சொல்கிறார். அப்படி சொன்ன அந்த டிரைவரை நேரடியாகக் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் கடுமையாகத் தாக்கி, காவல் நிலையத்தில் வைத்து அடித்து காவல் துறை லாக்கப்பில் அடைக்கிறார்கள். இந்தச் செய்தி விருத்தாசலத்திற்குப் பரவுகிறது. விருத்தாசலத்தில் இருக்கக்கூடிய போக்குவரத்துத் தொழிலாளிகள் அங்கே வேலை நிறுத்தம் செய்கிறார்கள். மணிமுத்தாறு பாலம் என்ற இடத்திலே பேருந்துகள் நிறுத்தப்படுகின்றன. இந்த நிலையில், டி. எஸ். பி. வருகிறார், ஆர். டி ஓ வருகிறார். பேச்சு வார்த்தை வருகிறது. டிரைவரைத் தாக்கிய காவல் துறையைச் சேர்ந்தவர் வருத்தம் தெரிவிக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். அது நியாயமான கோரிக்கைதான். ஆனால், அதற்கு அந்த அதிகாரிகள் அசட்டை

செய்கிறார்கள். அதுபற்றி அக்கறை கொள்ளவில்லை. உடனே அந்தப் பிரச்சினை மீது பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. இந்தச் சூழ் நிலையில், அந்தக் கூட்டத்தைக் கலைப்பதற்கு உத்தரவு இடுகிறார்கள். உடனே, கண்ணீர்ப் புகை, தடியடி 6 ரவுன்ட் துப்பாக்கிச்சூடு, இதிலே 11 பேர்கள் காயம் அடைகிறார்கள். அதுமட்டுமல்ல, அப்படிப்பட்ட சூழ்நிலை யிலே கூட, அதை ஒழுங்குபடுத்தி, ஒரு கட்டுக்குள் வந்த பிறகு, ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டும். அதையும் விட்டுவிட்டு, உடனடியாகப் பேருந்து களை விடுங்கள் என்று அதிகாரிகள் பணிக்கிறார்கள்.

(முற்பகல் 10-40)

ஆத்திரம் அடைந்த கும்பல் 3½ லட்சம் ரூபாய் பெருமான ஈரோடு—பாண்டிச்சேரி சூப்பர் டீலக்ஸ் பஸ் சேதம் செய்தது. அதேபோன்று கடலூர்—திருச்சி டி. பி. டி. சி. பஸ்சும் கொளுத்தப் பட்டது இப்படிப் பட்ட சூழ்நிலை ஏற்படுவதற்குக் காரணம் இந்த அதிகாரிகள் அந்த சூழ் நிலையை மனதில் கொள்ளாமல் உத்தரவிட்டதும், ஆத்திரம் அடைந்த கும்பல் இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியதும் ஆகும்.

அதற்குப் பிறகும் கூட, இன்றைக்கு பல சாதாரண மக்கள் சம்பந்த மில்லாத மக்கள் மீது வழக்கு போடப்பட்டிருக்கிறது. ஒரு வழக்கறிஞர் அந்தப்பக்கம் போகும்போது சந்திரன் என்ற வழக்கறிஞர் அவர் மீது கூட வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. ஒரு மைலுக்கு அப்பால் உள்ள டீ கடை களில் இருந்தவர்கள், பசாரில் போனவர்கள் அனைவரும் கடுமையாகத் தாக் கப்பட்டிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்தக் காவல்துறையைச் சேர்ந்தவர்கள் நடந்து கொண்ட முறை, முறையில்லாத ஒரு நடைமுறை அதன் காரணமாகத் தான் இப்படிப்பட்ட சம்பவம் நடந்திருக்கிறது. அங்கே வந்திருந்த அதிகாரிகள் பொறுப்பற்ற முறையிலே நடந்து கொண்ட காரணத்தினால்தான் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. ஆகவே இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை முழுமையாக விவாதித்து ஒரு நல்ல முடிவெடுக்க வேண்டும் என்பதற்கான இன்றைய அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நான் கொடுத்திருக்கிற இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் அவசியமே இன்றைக்கு காவல் துறையைச் சேர்ந்தவர்கள் உங்களுடைய நண்பனாக, மக்களுடைய நண்பனாக இருக்கக் கூடிய காவல் துறையைச்

சேர்ந்த சிலர் மக்களுடைய விரோதியாக ஆகி, தங்களுடைய அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தகாரணத்தினலேயே இன்றைக்கு விருத்தாசலத்திலே துப்பாக்கிச் சூடு, தடியடிப்பிரயோகம், கண்ணீர் புகைப் பிரயோகம், இப்படிப்பட்டவைகளை எல்லாம் இன்றைக்கு இந்த அவை விவாதிக்க இன்றைக்கு அந்த ஊரே ஸ்தம்பித்துப் போய் இருக்கிறது. மக்கள் சகஜ நிலையில் இல்லை என்ற அளவுக்கு நிலைமை இருக்கிற காரணத்தினால் இந்த ஒத்திவைப்புத் தீர்மானம், அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்று கொடுத்து அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதிலே உண்மையான சம்பவங்களை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும்.

இதிலே காவல் துறையைச் சேர்ந்த இரண்டு அதிகாரிகள் தவறாகத் தங்கள் அதிகாரத்தைத் தப்பாக பயன்படுத்திய காரணத்தினால் எங்களிடத்திலே அதிகாரம் இருக்கிறது சட்டத்திற்கு விரோதமாகச் செயல்படலாம். செயல்பட்டால் தங்களை யாரும் ஒன்றும் செய்ய முடியாது என்ற முனைப்பில், அவர்கள் பணியாற்றிய காரணத்தினால், என்ற முனைப்பில் அவர்கள் நடந்து கொண்ட காரணத்தினால்தான் மிகப் பெரிய அசமபாவிதம் நடைபெற்றிருக்கிறது. 22—4—1981 அன்று இரவு சுமார் 11 மணிக்கு திட்டக்குடியிலே உள்ள நான் சென்ற கோவில் தெருவில் வசிக்கும் ஆறுமுகம், வேலாயுதம் ஆகிய இவர்கள் தங்கள் குடும்ப சம்பந்தமாக தகராறு செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வீடு பக்கத்துப் பக்கத்து வீடுகளாகும். அந்த சமயத்திலே திட்டக்குடியைச் சேர்ந்த காவலர்கள் இப்ராகீம், சுந்தரமூர்த்தி ஆகிய இருவரும் அந்த வழியாக வருகிறார்கள். இரண்டு பேர்கள் குடும்பப் பிரச்சினை சம்பந்தமாகத் தகராறு செய்து கொண்டிருக்கிறார்கள். அப்போது அந்த வழியாக வந்த திட்டக்குடி காவலர்கள், அவர்களுடைய தகராறைத் தீர்த்துவைப்பதற்குப் பதிலாக, அந்தத் தகராறை பெரிய பிரச்சினையாக ஆக்காமல் இருப்பதற்குப் பதிலாக, அங்கே இருந்த இப்ராகிம் என்ற போலீஸ்காரர் ஆறுமுகத்தையும், சுந்தரமூர்த்தி என்கின்ற போலீஸ்காரர் வேலாயுதத்தையும் தாக்கி இருக்கிறார்கள். அதனாலே வேலாயுதம் அடி தாங்காமல், அலறி இருக்கிறார். அப்போது சுந்தரமூர்த்தி என்கிற போலிஸ்காரர் அவரை எட்டி உதைத்து தள்ளியபோது அவர் வேலாயுதத்தின் வீட்டுச் சுவரிலே விழுந்திருக்கிறார். அப்போது அவருடைய மூக்கு உடைந்து பலத்த காயம் ஏற்பட்டிருக்கிறது. அவருடைய மூக்கு வாயிலே இருந்து ரத்தம் கொட்ட அவருடைய உயிருக்கே ஆபத்து என்றிருக்கிற நிலைமை ஏற்பட்டதை கண்டு, அடித்த அந்தப் போலீஸ்காரர், உடனே அடிப்பட்ட அந்த நபரை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றிருக்கிறார். இங்கே இருக்கக்கூடிய

டாக்டர் அதைப்பார்த்து உடனே இதற்கு வைத்தியம் செய்தாகவேண்டும் என்றும், அபாயகரமான நிலைமை—போலீஸ்காரர் அடித்த பிறகு அபாய கரமான நிலை ஏற்பட்டது என்றும் சொல்லி இருக்கிறார். உடனே கட லூருக்கு எடுத்துச் சென்று மருத்துவ மனையிலேயே சேர்ப்பித்து அவருடைய உடலைப் பேண வேண்டும் என்று சொல்லியதற்குப் பிறகு, அங்கே இருக்கின்ற அந்தக் காவல் துறை அதிகாரி அந்த அடிபட்ட நபரை கடலூருக்கு அனுப்புவதற்கான முயற்சிகளை எடுத்து இருக்கிறார். ஆகவே நிலைமையை அறிந்த காவலர் சுந்தரமூர்த்தி உடனே காவல் நிலையம் சென்று நடந்ததை சப் இன்ஸ்பெக்டர், சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஆகியோரிடம் கூறி இருக்கிறார். உடனே அவர்கள் அனைவரும் திட்டக்குடி பேருந்து நிலையத்திற்குச் சென்றிருக்கிறார்கள். அப்போது நாராயணா மோட்டார் வண்டி நின்று கொண்டிருந்தது. எனவே அந்த வண்டியிலே இருக்கக்கூடிய டிரைவரை அன்றைக்குப் பயமுறுத்தி அந்த வண்டியை எடுக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள்.

எதற்காக? அடிபட்டவனை மருத்துவ மனையில் சேர்ப்பதற்காக. ஆனால் அந்த வண்டியில் கண்டக்டர் இல்லை. அங்கே இருக்கக்கூடிய போலீஸ் அதிகாரி உடனே அந்த டிரைவரை அழைத்து வண்டியைக் கடலூருக்கு விடு என்று சொல்லி சட்டவிரோதமாக நடந்து இருக்கிறார். அதற்கு டிரைவர் சொல்லியிருக்கிறார்: என்னுடைய வண்டியின் முதலாளி ஒப்புதல் அளித்தால் தான் நான் வண்டியை எடுத்துக்கொண்டு வரமுடியும். அசம்பாவிதமானதற்குக் காரணம் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். அதற்காக நீங்கள் என்னைக் கட்டாயப்படுத்தி வண்டியை எடுக்கச்சொல்ல முடியாது என்று சொன்ன காரணத்தால், அவரைத் திரும்பவும் அடித்து உதைத்து இருக்கிறார். அது மட்டுமல்லாமல் இப்படி நிலைமை இருந்து கொண்டு இருக்கிறபோது திட்டக்குடி பேருந்து நிலையத்தின் முன் மக்கள் கூடியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கருத்தெல்லாம் ஏற்கனவே இந்த அவையில் சொல்லப்பட்டு விட்டது. சுருக்கமாகப் பேசவேண்டும்.

திரு. அ. ரகுமான்கான்: சட்டம் ஒழுங்கு கட்டுப்பாடற்றுப் போன இந்தச் சூழ்நிலையில் அங்கே என்ன நிலைமை ஏற்பட்டது என்று சொன் னால், அந்த நாராயணன் பஸ் கம்பெனி டிரைவர்—மிகவும் நல்லவர், குடிப்

பழக்கம் இல்லாதவர்—அவரை அடித்து உதைத்து இருக்கிறார்கள். குடித்து இருக்கிறார் என்று அவர் மீது வழக்குபோட்டு இருக்கிறார்கள். அது மட்டு மல்லாமல், காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று, ஏற்கனவே பேசிய உறுப்பினர் குறிப்பிட்டதுபோல், திரும்பவும் அடித்து, உதைத்து இருக்கி றார்கள். இந்த மாதிரி சம்பவம் நடந்து இருப்பதாக அறிந்து, மக்கள் எல்லாம் ஒன்று கூடி, அங்கே இருக்கும் பஸ் டிரைவர்கள் தங்களுடைய சகோதர தொழிலாளிக்கு இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. போலீஸ் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் ஒரு டிரைவரை அடித்து, உதைத்து இருக்கிறார்கள் என்று தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவிக்க ஒன்று கூடி, வேலைநிறுத்தம் செய்ய முற்பட்டு இருக்கிறார்கள். பஸ்களை வெளியே போக முடியாமல் செய்து இருக்கிறார்கள். வெளியூர் பஸ்கள் உள்ளே நுழைய முடியாமல் தடுத்து இருக்கிறார்கள்.

இந்த நிலையில் காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் அவர்களோடு முறையாகப் பேசி சமரசம் காண முற்படுவதற்கு மாறாக அங்கே இருக்கும் கூட்டத்தைக் கலைப்பதற்காக சட்டவிரோதமான முறையில் அங்கே இருக்கும் பஸ்களை எல்லாம் வெளிய கொண்டுவர முரட்டுத்தனமான முயற்சியில் ஈடு பட்டதன் காரணமாக, அங்கே தடியடிப் பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம், கண்ணீர்ப்புகை பிரயோகம் ஆகியவையும் நடத்தி இருக்கிறார்கள். அதன் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள், அங்கேயிருந்த டிரான்ஸ்போர்ட்டிலே வேலை பார்க்கும் அனைத்துத் தரப்பு தொழிலாளர்களும் ஒன்று சேர்ந்து காவல் துறைக்கு எதிராக தங்களுடைய கண்டனத்தைத் தெரிவித்து, அவர் களும் வன்முறையில் ஈடுபட்டு, எதிர் தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள். இதன் விளைவாக வேலாயுதம் என்ற டிரைவர் அடிபட்டு இருக்கிறார். அவர் கதி என்ன? அதைப்போலவே தடியடிப் பிரயோகம், கண்ணீர்ப்பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக எத்தனை பேர் கொல்லப்பட்டார்கள், எத்தனை பேர் மருத்துவ மனையில் அடைக்கப்பட்டு இருக்கிறார்கள், அவர் களுடைய கதி என்ன? என்கிற தகவல்கள் தெரியவில்லை. எனவே சட்டம் ஒழுங்கு கெட்டுப்போய் இருக்கிறது. காவல் துறையினர் சட்டத்தைத் தங்க

ளுடைய கையில் எடுத்துக்கொண்டு நடந்து இருக்கிறார்கள். இப்படி சட்டம் ஒழுங்கைக் கெடுக்கின்ற அளவில் நடந்து கொண்ட சக்திகளைக் கண்டிக்கின்ற அளவிற்குத் தகுந்த நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவில்லை. ஆகவே, இந்த நாட்டிலே இருக்கும் பிரஜைகளுக்குக் கூட நியாயமான முறையிலே தங்களுடைய உரிமைகளை காத்துக்கொள்ள இயலவில்லை என்பதைத் தெரிவித்து எனவே இது அவசியமும், அவசரப் பொதுமுக்கியத்துவமும் வாய்ந்த பிரச்னையாக இருப்பதால், இந்த நாட்டுக் குடிமகனுக்கு வாழ உரிமை இருக்கிறது, சட்டவிரோதமாக நடந்துகொண்ட காவல் அதிகாரிகளின் மீது, தங்களுடைய அதிகாரத்தைத் தவறாக பயன்படுத்தியதற்காக அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது எல்லாம் விவாதிக்கப்பட வேண்டும் என்பதால்தான், இந்தப் பொருள் குறித்து விவாதிக்க அவையின் இதர நிகழ்ச்சிகளை ஒத்திவைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : பேரவைத் தலைவர் அவர்களே, 22-4-1981 நாள் கிட்டக்குடியில் இரு சாராருக்கும் இடையே நடந்த தனிநபர்களின் கலவரத்தின் காரணமாக ஒருவர் காயமுற்று இருக்கிறார். அந்த காயமுற்றவரை போலீசார் மருத்துவ மனைக்கு எடுத்துச்சென்று இருக்கிறார்கள். அங்கேயிருந்த மருத்துவ மனையில் அவருக்கு வைத்தியம் செய்ய முடியாத நிலையில் இருந்ததால், அவரை கடலூருக்கு எடுத்துச்செல்ல வேண்டும் என்று அங்கேயிருந்த மருத்துவர் சொன்ன காரணத்தால், அந்தப் போலீஸ் அதிகாரிகள் அங்கேயுள்ள தனியார் கம்பெனியின் ஒரு பஸ்ஸை எடுக்க வேண்டும் என்று முயற்சி செய்கிறபோது, அந்த பஸ்சின் டிரைவர் தனது முதலாளியின் அனுமதி பெற்றுத்தான் எடுத்துச்செல்ல முடியும் என்று சொன்னதற்காக, அந்த டிரைவரை காவல் துறையைச் சேர்ந்தவர்கள் அடித்து, அவர் மீது வழக்கும் போட்டு, காவல் நிலையத்தில் அவரை அடித்து இருக்கிறார்கள். இந்தச் செய்தி காலையில் தெரிந்த உடனே, அங்கேயுள்ள அத்தனைத் தொழிலாளர்களும், ஒரு டிரைவர் காவல் துறையைச் சேர்ந்தவர்களால் நியாயமற்ற முறையில் தாக்கப்பட்டிருக்கிறார் என்பதற்காக தங்க

ளுடைய எதிர்ப்பு உணர்வுகளை காட்ட வேண்டும் என்ற முறையில், ஒன்று கூடி, காவல் துறையைச் சேர்ந்தவர்கள் அந்த டிரைவரை அடித்தது தவறு. அதை ஒப்புக்கொள்ளச் செய்வதற்காக ஒரு போராட்டம் நடத்தியிருக் கிறார்கள்.

(முற்பகல் 10-50)

அங்கே பஸ்கள் மறிக்கப்படுகின்றன; வெளியூர்களிலிருந்து வருகின்ற பஸ்கள் அத்தனையும் நிறுத்தப்படுகின்றன. அங்கே துப்படிப்பட்ட ஒரு நிலை நிலவியதற்குப் பின்னால் ஆர். டி.ஓ. அவர்கள் வந்திருக் கிறார்கள்; காவல்துறை பெரிய அதிகாரிகள் வந்திருக்கிறார்கள்; மற்றும் அங்கே இருக்கிற அதிகாரிகள் எல்லாம் வந்து, பேச்சுவார்த்தை நடத்தி யிருக்கிறார்கள். அன்று மாலைவரையில் பேச்சுவார்த்தை நடந்திருக் கிறது. இருந்தும் தொழிலாளர்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற முடியாத நிலையில் முடிந்திருக்கிறது. அந்த அதிகாரிகள் பொறுப்போடு நடந்திருந்தால் இந்த விபத்தைத் தடுத்திருக்கலாம்.

தொழிலாளர்கள் போராடுகிறார்கள். கோரிக்கையை நிறைவேற்ற பேச்சுவார்த்தை நடைபெறுகிறது. ஆனால் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட அதிகாரிகள் எப்படியும் அந்த பஸ்களை கட்டாயமாக ஓட்டியே ஆகவேண்டு மென்ற எண்ணத்தோடு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை கடுமை யாகத் தாக்கியிருக்கிறார்கள். துப்பாக்கிப் பிரயோகம் நடத்திருக்கிறது. இவ்வளவு பதட்ட நிலை இருந்தபோதிலும் பஸ்களை ஓட்டவேண்டுமென்று சொன்னால், அந்த பஸ்களுக்கு நல்ல பாதுகாப்பு கொடுத்திருக்க வேண்டும்; பாதுகாப்பு கொடுக்காததால் இரண்டு பஸ்கள் கொளுத்தப்பட்டிருக்கின்றன. 11 பேர்கள் காயம் அடைந்திருக்கிறார்கள். துப்பாக்கிச் சூடு நடைபெற் றிருக்கிறது. காயம் அடைந்தவர்கள் என்ன நிலையில் இருக்கிறார்கள்? ஆஸ்பத்திரியில் இருக்கிறார்களா? அவர்களில் எத்தனை பேர் இறந்தார்கள் என்பது தெரியவில்லை.

1981 ஏப்ரல் 25] [திரு. எஸ். ஆண்டித்தேவர்]

அதற்கு மாறாக இன்றைக்கு பொதுமக்கள்மீது வழக்குப் போடப்பட்டு, ஏறத்தாழ 130 பேர்கள் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது. சம்பந்தப்பட்டவர்கள் யார், யார் என்று கூட தெரியாத நிலையில் சாதாரண மக்கள் எல்லாம் அங்கே கைது செய்யப்படுகிறார்கள். சந்திரன் என்ற ஒரு வழக்கறிஞரைக் கூட கைது செய்திருக்கிறார்கள்; அண்ணா தி.மு.க.-வைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று பத்திரிகையில் பார்க்கிறோம். ஒழுங்காக நடவடிக்கை எடுத்து, போலீஸ் அதிகாரிகள் துயர நிகழ்ச்சிகளை தடுப்பதற்கு மாறாக இப்படி ஒரு பதட்டமான நிலையை உருவாக்கியிருக்கிறார்கள் என்கிறபோது அங்கே பொதுமக்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். யாருக்கு எந்த நேரத்தில் என்ன நடக்கும் என்று தெரியாத அளவுக்கு நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. இரண்டு பஸ்கள் கொளுத்தப்பட்டிருக்கின்றன. பஸ் ஊழியர்கள் பற்றிய பதட்ட நிலையும் இதிலே இருக்கிறது. ஆகவே, இந்த அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியைப்பற்றி விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இட்டக்குடியிலே நடைபெற்றிருக்கிற மிகப்பெரிய துயர சம்பவத்தை இங்கே விவாதிக்க வேண்டுமென்பதற்காக அவையை ஒத்திவைக்க வேண்டுமென்ற வேண்டுகோளை பல மாண்புமிகு உறுப்பினர்களோடு யானும் கொடுத்திருக்கிறேன். அங்கே நடைபெற்ற நிகழ்ச்சிகளை உற்றுநோக்கும்போது அமைதி படுத்த வேண்டிய ஒரு நிலையில் இருக்கிற அதிகாரிகள் தங்களுடைய தவறுகளுக்கு மன்னிப்பு கேட்கப்பட வேண்டுமென்று சிலர் சொல்லுகின்ற நேரத்தில் அதை ஒத்துக்கொள்ளாமல் தொடர்ந்து தங்களுடைய நிலையிலே நின்று கொண்டிருந்த காரணத்தினாலேதான் இத்தகைய துயர சம்பவங்கள் நடந்திருக்கின்றன என்று தெரிகிறது.

மோதல் ஏற்பட்டது என்பது மனிதர்கள் இருக்கின்ற இடங்களில் எல்லாம் இயல்பாக நடக்கக்கூடிய ஒன்றுதான். ஆனால் அதிலே நியாயம் என்று தெரிந்தவுடனே, நியாயத்திற்குப் புறம்பாக அதிகாரம் வைத்திருப்பவர்கள்

ஒரு நிலையை எடுத்துவிட்டாலும், எடுத்த நேரத்திலே அவர்களுக்குத் தெரியாமல் இருந்தாலும், தாங்கள் எடுத்த முடிவு தவறு என்று தெரிந்தால் உடனே மன்னிப்பு கேட்டுவிட்டால் அதிலே தவறு ஒன்றும் இல்லை. மாபெரும் மகாத்மாவாக இருந்த காந்திமகான் கூட நான் இமாலய தவறு செய்து விட்டேன் என்று சொல்லிய இந்த பூமியில் தவறு செய்தவர் தான் சொல்லி விட்டால் சரிதான் என்ற எண்ணத்தில் இருக்கின்ற காரணத்தால் இந்த துன்பங்கள் வந்திருக்கின்றன.

இந்த துன்பங்கள் மட்டுமல்ல. எந்தத் துன்பம் வருவதற்கும் காரணமாக இருப்பது தவறு இருக்கிற ஒன்றை நிலைநாட்ட முயல்வதும், அதிலே நிலைத்து நிற்பதும்தான். அப்படிப் பார்க்கிறபோதுதான், அங்கே தொழிலாளர்களால் எழுப்பப்பட்ட, பொது மக்களால் எழுப்பப்பட்ட, நியாயத்தின் குரலை நசுக்க வேண்டுமென்ற நோக்கில், அவர்கள் துன்புறுத்தப்பட்ட நிலையிலேதான் இப்படிப்பட்ட கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த கொந்தளிப்புக் காரணமாக இருப்பது யார் என்று பார்த்தால் அதிகாரத்தை கையிலே வைத்திருக்கிறவர்கள்தான்.

அதிகாரத்தைக் கையிலே வைத்துக்கொண்டிருப்பவர்கள் சற்று சாமர்த்தியாக நடந்துகொண்டிருந்தால் கூட இவ்வளவு தூரத்திற்கு அந்தப் பகுதியில் இரத்தம் சிந்தவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது. பலருடைய வீடு புகுந்து தாக்குகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்காது. நூற்றுக்கு மேற்பட்டவர்கள் மருத்துவமனையிலே கிடந்து உயிருக்கு துடிதுடித்துக்கொண்டு இருக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்காது. எனவே இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி நடைபெறுவதற்குக் காரணமாக இருந்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதோடு இப்படிப்பட்ட சம்பவங்கள் இனிமேலும் நடக்காமல் இருப்பதற்குரிய முயற்சியினை எடுப்பதற்கு இந்த அவையின் இதர அலுவல்களை எல்லாம் ஒத்திவைத்துவிட்டு விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1981 ஏப்ரல் 25]

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில் திட்டக்குடியில் தனிப்பட்ட ஒரு நபரால் ஏற்பட்ட ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாக காவல் துறையினர், ஒரு தனியார் பஸ்சிலே இருக்கக்கூடிய ஓட்டுநர் தன்னுடைய முதலாளியைக் கேட்ட பிறகு தான் பஸ்ஸை எடுப்பேன் என்று தெரிவிப்பதற்கு உரிமை இருந்தும் கூட அதை மறுத்து காவல் துறையினர் அந்தத் தொழிலாளியைத் தாக்கி அவரைக் கைது செய்திருக்கின்றனர். அப்படி கைது செய்யப்பட்டதற்குப் பின்னால் மற்ற சகோதரத் தொழிலாளர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து நியாயத் திற்காக நின்ற ஒரே காரணத்திற்காக அவர்கள் பேரில் தாக்குதலில் ஈடுபட்டி ருக்கின்றனர். பெரிய அதிகாரிகளும் பொதுமக்களும் தொழிற்சங்கத் தலைவர் களும் அந்த அதிகாரி ஓட்டுநரைத் தாக்கியதைத் தவறு என்று குறிப் பிட்டதற்குப் பிறகு அந்த அதிகாரி தன்னடக்கத்தோடு தான் செய்தது தவறு என்று ஒத்துக் கொண்டிருக்கலாம். அப்படி ஒத்துக்கொண்டிருந்தால் மேலும் பதட்டநிலை உருவாகி இருக்காது. ஆனால் அமைதியினை நிலை நாட்ட வேண்டிய அதிகாரிகள் தான் போட்டதுதான் சட்டம் என்று ஒரே உறுதியோடு நின்ற நியாயம் கேட்ட மக்களையும் அவதிக்குள்ளாக்கி இருக் கிறார்கள். அவர்களை அடித்ததோடு மட்டுமல்ல, துப்பாக்கிச் சூடும் நடந் திருக்கின்றது. அந்தப் பகுதியில் உள்ள வழக்கறிஞர்கள் எல்லாம் தாக்கப் பட்டிருக்கிறார்கள். பெண்கள் கூட தாக்கப்பட்டிருக்கிறார்கள். பொது மக்களும் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அதுவும் ஒரு குறிப்பிட்ட இளம் பெண்ணுடைய சட்டைகள் எல்லாம் கிழிக்கப்பட்டு அவதிக்கு ஆளாக்கப்பட் டிருக்கிறாள். அந்தப் பகுதியிலே பொதுமக்கள் சாலையிலே போக முடிய வில்லை. 144 தடை உத்தரவு போட்டதற்கும் பின்னால் காவல் துறையினர் எல்லாத் தெருக்களுக்கும் தங்கள் இஷ்டம்போல் சென்று இரவு 2 மணிக்குக்கூட தாக்கிக்கொண்டு இருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே போலீஸ் அதிகாரிகளின் அதிகாரத் தன்மைதான் மேலோங்கி இருக்கிறது. இதைப் பத்திரிகையின் வாயிலாகத் தெரிந்து கொண்டிருக்கிறோம். எனவே, உண்மை நிலையினை அறிந்து உண்மைக் குற்றவாளியின் மீது தகுந்த நடவடிக்கை எடுப்பது பற்றிய பிரச்சினை குறித்து பேசித் தீர்வு காண்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை எல்லாம் ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டு முடிக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 22—4—1981 அன்று இரவு 10-30 மணியளவில், விருத்தாசலம் தாலுகாவைச் சார்ந்த திட்டக்குடி காவல் துறை ஆய்வாளர், மண்டையில் பலத்த காய

முற்ற திரு. வேலாயுதம் என்பவருக்கு உடனடி சிகிச்சையளிப்பதற்காக, பெண்ணாடத்திற்கு எடுத்துச் செல்வதற்கு வேறு வாகன வசதி கிடைக்காத காரணத்தினால் ஸ்ரீநாராயணன் பஸ் டிரான்ஸ்போர்ட் என்கிற தனியார் பேருந்து ஒன்றின் ஓட்டுநர் திரு. சுலைமான் என்பவரின் உதவியை நாடினார். ஆனால், ஓட்டுநர் திரு. சுலைமான், இரவுத் தங்களுக்கான பேருந்தை எடுத்து வர முடியாது என மறுத்ததுடன், பொறுப்பில்லாமலும் நடந்து கொண்டுள்ளார். அவரிடம், காவல் துறை ஆய்வாளர், ஓட்டுனருக்குரிய சான்றிதழைக் காட்டுமாறு கோரியுள்ளார். அதற்கு ஓட்டுநர் திரு. சுலைமான், தன்னுடைய ஓட்டுநர் சான்றிதழ் காலங்கடந்துவிட்டது என்றும், புதுப்பிக்கப்படவில்லை என்றும் கூறியுள்ளார். இதனால், காவல்துறை ஆய்வாளர், ஓட்டுநர் சான்றிதழை அடுத்த நாள் காலை 8 மணிக்குள் காட்டிவிட்டு, பேருந்தை எடுக்க வேண்டும் என மேற்படி ஓட்டுனரைப் பணித்துள்ளார். மேற்கண்ட நிகழ்ச்சியைத் தொடர்ந்து, ஓட்டுநர் திரு. சுலைமான் மற்றுத் தனியார் பேருந்துகளைச் சார்ந்த ஓட்டுநர்கள், நடத்துநர்கள் மற்றும் மோட்டார் தொழிலாளர்கள் சங்கத்தின் ஒத்துழைப்பையும் பெற்று, திரு. நாராயணசாமி என்பவர் தலைமையில் 23—4—1981 அன்று காலை 6 மணிக்கு, விருத்தாசலத்திலிருந்து கிளம்பும் அனைத்துப் பேருந்துகளையும் தடுத்துவிட்டனர். நிலைமையை அறிந்த விருத்தாசலம் கோட்டாட்சித் தலைவரும், துணைக் காவல் துறைக் கண்காணிப்பாளரும் அவ்விடத்திற்கு விரைந்து, சமாதான உடன்படிக்கைக் கூட்டத்தினைக் கூட்டி, உண்மையாக நடந்தனவற்றை எடுத்துக்கூறி, பேருந்தைத் தடுத்தவர்களுக்கு அறிவுரையும், உறுதிமொழியும் அளித்துள்ளனர். ஆனால் அவர்கள் அதனைச் செவி மடுக்கவில்லை. கோட்டாட்சித் தலைவரும், காவல் துறையினரும், பேருந்துகளைத் தடுத்து நிறுத்தியதால் ஏற்பட்ட போக்குவரத்துத் தடைகளை நீக்கி, மிகுந்த சிரமத்திற்கிடையே விருத்தாசலம் பாலக்கரை சந்திப்பை அடைந்தனர். கூட்டத்தினர் சுமார் 1,000 பேர்கள் திடீரென்று கற்களையும், சோடா பாட்டில்களையும் கொண்டு தாக்க ஆரம்பித்தனர். இதனால், காவல் துறையினர் கூட்டத்தைக் கலைப்பதற்காக வேண்டி, கண்ணீர்ப் புகைக் குண்டுகளை உபயோகப் படுத்தினர். ஆயினும் எவ்விதப் பயனும் ஏற்படாமல் போகவே முன் எச்சரிக்கை கொடுத்தபின்னர், குறைந்த அளவு பிரம்படிப் பிரயோகம் செய்தனர்.

1981 ஏப்ரல் 25] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

(முற்பகல் 11-00)

ஆனால் வன்முறைக் கும்பல் தாக்குதலின்றும் பின்வாங்காமல் முன்னேறி திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்றிற்கும், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்றிற்கும் தீ வைத்து விட்டனர். நிலைமை மிகவும் மோசமாகிக் கொண்டிருப்பதை உணர்ந்து, வேறு வழியின்றி, முன்னெச்சரிக்கைகள் கொடுத்த பின்னர் வன்முறைக் கூட்டத்தினர் மீது ரவைக் குண்டுத் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. தீயணைப்புப் படையின் உதவியும் நாடப்பட்டது. தீயணைப்புப் படை பிரிவினர் வந்து தீயை அணைப்பதற்குள் மேற்கண்ட இரு பேருந்துகளில் பெரும் பகுதிகள் எரிந்து விட்டன. சுமார் ரூபாய் 5½ லட்சம் மதிப்பிற்குச் சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

மேற்கண்ட நிகழ்ச்சியில், காவல் துறையினர் 8 பேர்களுக்கும் கைது செய்யப்பட்ட 13 பேர்களுக்கும் காயம் ஏற்பட்டுள்ளது. அனைவரும் புற நோயாளியாகச் சிகிச்சை பெற்றனர். இச்சம்பவம் தொடர்பாக, விருத்தாசலம் காவல் நிலையத்தில் குற்ற எண் 245—81-ல் இந்தியத் தண்டனைச் சட்டம் 147, 148, 188, 341, 323, 427, 332, 336 மற்றும் 307 ஆகிய பிரிவுகளின் கீழ் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு, புலனாய்வு செய்யப்பட்டு வருகிறது. இதுவரை 118 பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவரும், காவல் துறைக் கண்காணிப்பாளரும் சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து, அங்கு அமைதியை நிலைநாட்டுவதற்காக, பொதுமக்கள், அரசியல் கட்சிப் பிரமுகர்கள், தனியார் பேருந்து உரிமையாளர்கள் கொண்ட அமைதிக் குழுக் கூட்டத்தைக் கூட்டியுள்ளனர். அனைவரும் அமைதியை நிலை நாட்டுவதற்கு ஒத்துழைப்பதாக உறுதி அளித்துள்ளனர். 24—4—1981 அன்று காலை முதல் பேருந்துகளின் போக்குவரத்து சுமூகமாக நடைபெறுவதற்கு ஒத்துழைப்பதாக உறுதியளித்துள்ளனர்.

அரசு போக்குவரத்துப் பேருந்துகள் 23—4—1981 அன்று மாலை 6 மணி முதல் சுமூகமாகச் சென்று வருகின்றன. நகரில் தகுந்த காவல் துறை பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. நடமாடும் ரோந்தும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 23—4—1981 அன்று மாலை முதல் குற்றவியல் விசாரணைச் சட்டம் 144-வது பிரிவின் கீழ் நகரில் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது அங்கு நிலைமை அமைதியாக உள்ளது. எனவே இப்பிரச்சினை குறித்து விவாதிக்க சட்டமன்றப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முன்னவர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

(3) ஒழுங்குப் பிரச்சினை (தொடர்ச்சி)

இ. நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I stand on a point of order. காலையிலே ஒழுங்குப் பிரச்னையில் நாங்கள் பேசிய குறிப்புகள் அனைத்தும் அவைக் குறிப்பேட்டிலிருந்து எடுக்கப்பட்டிருப்பதாக எங்களுக்கு தகவல் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே எந்தெந்த சொற்கள் அன்-பார்லிய மெண்டரி வார்த்தைகள் என்பதை இங்கே எடுத்துச் சுட்டிக்காட்ட இயலுமா? எங்களைப் பொறுத்தவரைக்கும் . . . (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அதில் எல்லாவற்றையும் நீக்கி விட்டேன். பார்லிமெண்டரி, அன் பார்லியமெண்டரி என்று இல்லை. அந்த குழப்பம் கூச்சலுக்கு நடுவில் வருகிற அத்தனையையும் நீக்கிவிட்டேன். அப்படி நீக்குவதற்கான உரிமை எனக்கு இருக்கிறது. அதைப்பற்றிய விளக்கம் தருவதற்கில்லை . . . (குறுக்கீடு)

திரு. ரா. உமாநாத்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே ரூல்ஸைப் படிக்கிறேன். நீக்குவதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது என்றாலும், நீங்கள் இந்த அவையிலே இந்த விதிக்கு உட்பட்டுத்தான் நடக்க வேண்டும். நான் ரூல்ஸைப் படிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள். அதற்கு முன்பாக, இன்னொரு நீக்கம். காலையிலே கேள்வி நேரத்தின் போது, திரு. பாபு ஜனார்த்தனன் அவர்கள் * * என்று குறிப்பிட்டுப் பேசினார். அதையும் நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 25]

Thiru R. Umanath : I am on rules. If the Speaker is of the opinion that words have been used in debate which are defamatory or unparliamentary or undignified, he may in his discretion order that such words be expunged from the proceedings of the House. என்னுடைய பாயின்ட் என்னவென்று சொன்னால், காலையிலே நடந்ததிலே அந்த மாதிரி அன்-பார்லிமெண்டரியாக, அன்-டிக்னிபைடாக என்ன இருக்கிறது. சப்போஸ் நானே ஒரு கான்சல் ஜெனரல் என்று வைத்துக் கொள்ளுங்கள், அது ஒரு ஃபேக்டாக இருந்தால் அதை எப்படி எக்ஸ்பென்ஜிலே வரும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ரூல்ஸ் இருக்கிறது அதைச் சொல்லி விடுகிறேன், விதி 112 (8)-ல்

'The Speaker may order the expunction of any portion of proceedings of the House relating to any point of order by the member, when in his option it is an abuse of the right of raising a point of order.'

ஆகவே, நான் அனுமதி மறுத்துவிட்டேன், மறுத்த பிறகு பேசியது எதுவாக இருந்தாலும் சபைக் குறிப்பில் ஏறாது என்பதுதான் பொருள். பேரவை விதி ஒன்றை நீங்கள் சொன்னீர்கள். பேரவை விதிகளின்படிதான் நானும் சொல்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: நீங்கள் ஒரு கட்டத்தில் அனுமதித்த பிறகு நீங்களே சொல்லியிருக்கிறீர்கள்.

'If I have the right to grant, I have the right to withdraw.'

MR. SPEAKER: Now I withdraw.

திரு. ரா. உமாநாத்: இப்போது withdraw செய்கிறேன் என்று சொன்னீர்கள். இதுவரை இருக்கக்கூடிய 'ஃபாக்ட்ஸ்' யைக்கூட எக்ஸ்பஞ்ச் செய்வது என்ன நியாயம்? பி.எ.ஸி. கூட்டுவதாகச் சொன்னீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தக் குழப்பமான சூழ்நிலையில் எதில் ஃபாக்ட்ஸ் இருக்கின்றன எதில் ஃபாக்ட்ஸ் இல்லை என்று பார்த்துக் கொண்டிருக்க முடியாது. (குறுக்கீடு) பி.எ.ஸி.-யை 15 நிமிடங்களில்

கூட்டி விவாதிக்கலாம் என்று நான் கேட்டுக்கொண்டேன். அதை ஒத்துக் கொள்ள முடியாது என்று வெளிநடப்புச் செய்துவிட்டீர்கள். நான் என்ன செய்வது? நீங்கள் ஒத்துக்கொள்ள மறுத்ததை மீறி நான் எப்படி பீ.ஏ.ஸி. யைக் கூட்ட முடியும்?

திரு. ரா. உமாநாத்: பீ. ஏ. ஸி. கூட்டவேண்டுமென்று இப்போதும் நாங்கள் சொல்லவில்லை.

We have got the right to raise a point of order so long as the subject is kept alive. The issue is alive. It is a different matter.

நான் சொல்வது என்னவென்றால் * * *

MR. SPEAKER: Do not go into the details. I will not allow you to go into the details. You are a good Parliamentarian. You must not use your discretion in an unnecessary way. It is not good on your part.

திரு. ரா. உமாநாத்: எங்களுக்கு இருக்கக்கூடிய சில குறைந்தபட்ச உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களது உரிமைகளைப் பாது காக்க உங்களோடு முழு அளவிற்கு ஒத்துழைப்பேன். ஆனால் என் வேண்டு கோளைப் புறக்கணித்ததற்குப் பிறகு நான் என்ன செய்யமுடியும்?

திரு. ரா. உமாநாத்: எதிர்ப்பு வந்தவுடன் நீமா என்று சொன்னால் டோட்டல் எக்ஸ்பஞ்ச் செய்வது என்று சொன்னால் மறுக்கப்படாத ஃபாக்ட்ஸைப் பொறுத்தவரையில் அதை எப்படி நீங்கள் எக்ஸ்பஞ்ச் செய்ய லாம், அது நியாயம் அல்ல. டோட்டலாக எக்ஸ்பஞ்ச் செய்வது என்பது சரியல்ல. நீங்களாகப் பார்த்து இவை இவை அன்பார்லிமெண்டரி வேர்ட்ஸ் என்று சொன்னால் எங்களுக்கு ஆட்சேபணையில்லை. அது உங்கள் ரைட். கண்ஸேர்ன்ட் மெம்பரே மறுக்காத ஒரு ஃபாக்டை எக்ஸ்பஞ்ச் செய்வது என்று சொன்னால் . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரேநேரத்தில் மூன்று பேர்கள், நான்கு பேர்கள் பேசினால் எப்படி அவைக் குறிப்பில் ஏற்ற முடியும்?

திரு. குமரி அனந்தன்: தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குமரி அனந்தன் அவர்கள் இன்று உணர்ச்சிவசப்பட்டிருக்கிறார்கள்.

THIRU KUMARI ANANDAN: You have told us that a portion of the proceedings has been expunged. What is the portion? You have not expunged the portion totally. We have given the facts. How can the Hon. Speaker expunge the facts?

MR. SPEAKER: The entire thing went in pandemonium.

THIRU KUMARI ANANDAN: It was audible.

MR. SPEAKER: It may be audible to you. It was not audible to me.

THIRU R. UMANATH: *** *** It is a fact. I do not understand at all how the entire thing has been expunged. அவர் பேச ஆரம்பித்தபோது பாண்டிமோனியம் இல்லை. உங்களுக்கு எக்ஸ்பஞ்ச் செய்ய உரிமை இருக்கிறது. ஆனால் ஃபாக்ட்ஸாக உள்ளதையும் சேர்த்து எப்படி எக்ஸ்பஞ்ச் செய்ய முடியும்? திரு. சித்தன் தயவில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு உறுப்பினர் தயவில் இன்னொரு உறுப்பினர் இல்லை. எதற்கும் உள்நோக்கம் கற்பித்தால் நான் பொறுப் பேற்றுக் கொள்ள முடியாது.

திரு. ரா. உமாநாத் : உள்நோக்கம் கற்பிப்பதாக இல்லை. அவை முன்னவர் அவர்கள் கூறியவை, தாங்கள் பேசியவை எல்லாம் இருக்கின்றன. நாங்கள் கூறியது பூராவையும் எக்ஸ்பஞ்ச் செய்வது என்றால் என்ன நியாயம்?

திரு. குமரி அனந்தன் : குற்றம் சாட்டக்கூடாது. ஐயத்தை வெளியிடு கிற வகையில் உறுப்பினர்கள் பேசலாம் என்ற கருத்து தெரிவித்ததன் அடிப் படையில் * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரும்பத்திரும்ப அந்தப் பிரச் னைக்கே போகிறீர்கள். அவையெல்லாம் அவைக் குறிப்பில் வராது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

THIRU KUMARI ANANDAN: There is Constitutional provision.

MR. SPEAKER: There is no such provision in the Constitution. I have seen the Constitution. I have read the Constitution.

THIRU KUMARI ANANDAN: I earnestly seek your direction on this point of order with regard to expunction (கூச்சல், குழப்பம்)

(முற்பகல் 11-10)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதைப் பொறுத்தவரைக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் என்னை வற்புறுத்த முடியாது. (கூச்சல், குழப்பம்).

திரு. கு. ரமணி: நீங்கள் படித்த ரூல் 112-லே . . (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்னையைப் பற்றி எழுதிக் கொடுக்கச் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் எனது தீர்ப்பை ஏற்றுக்கொண்டு, எழுதிக் கொடுக்க வேண்டுமே தவிர, திரும்பத் திரும்ப அதைப்பற்றிய விவாதத்தை இங்கே எழுப்ப நான் அனுமதிக்க முடியாது.

திரு. கு. ரமணி: பேரவை விதி 112-ன் கீழ் நீங்கள் சொல்வது

The Speaker may order expunction, when in his opinion it is an abuse of the right of raising a point of order.

இங்கே என்ன அப்யூஸ்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொன்னதை மீறுவதுதான் அப்யூஸ். யூஸ் அதற்கு அப்போசிட் அப்யூஸ். எழுதிக் கொடுங்கள் என்று நான் சொல்லியிருக்கிறேன். மேலும் இங்கே பேசுவதுதான் அப்யூஸ். (கூச்சல், குழப்பம்).

திரு. ரா. உமாநாத்: முதலில் அனுமதித்தீர்கள், உறுப்பினர் பேசினார். அப்போது நீங்கள் உங்கள் இடத்தில் அமைதியாக உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தீர்கள். இவர் ஆட்சேபித்தவுடன், கொடுத்த அனுமதியைத் திரும்பப் பெறுவதாக அப்புறம் சொன்னீர்கள். நீங்கள் சொன்ன பிறகு பேசியதை நீக்கலாம். உங்கள் அனுமதியோடு முன்னால் பேசியவைகளையும் நீக்குவது என்பது என்ன நியாயம்? எங்களுக்குப் பாதுகாப்பு இல்லை. (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு முழுப் பாதுகாப்பு உண்டு. அதுபற்றி நான் தீர்ப்புக் கொடுத்து விட்டேன். என் தீர்ப்புக்கு உறுப்பினர்கள் கட்டுப்பட்டு செயல்படுவதுதான் அவையை முறையாக நடத்திச் செல்ல உதவும். நான் சொன்னபடி எழுதிக் கொடுங்கள். இங்கே அந்தப் பிரச்னையைத் திரும்பவும் எழுப்ப அனுமதியில்லை.

திரு. ரா. உமாநாத்: எல்லாப் பிரச்சினைகளையும் எழுதிக் கொடுக்கச் சொல்லுகிறீர்களா? எங்களுக்குப் பாதுகாப்பு இல்லை. நாங்கள் வெளியேறுகிறோம்.

(அகில இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சி, அகில இந்திய பார்வேர்ட் பிளாக் கட்சி, ஆகியவற்றின் உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

4. கவன ஈர்ப்புகள்.

அ. கோவை மாவட்டம் சிறுமுகை "சவுத் இந்தியா விஸ்கோஸ்"-லிருந்து வெளியேறும் கழிவு நீரை பவானி ஆற்றில் கலக்க விடுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கோவை மாவட்டம் சிறுமுகையிலுள்ள சவுத் இந்தியா விஸ்கோஸ் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீர் பவானி ஆற்றில் விடப்படுவதால் பல்வேறு வியாதிகள் உண்டாவது குறித்து திருவாளர்கள் கு. அ. செங்கோட்டையன், ச. பாலகிருஷ்ணன், ஆர். ரங்கசாமி மற்றும் துரை ராமசாமி ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. "கோவை மாவட்டம் சிறுமுகையிலுள்ள சவுத் இந்தியா விஸ்கோஸ் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவுநீர் பவானி ஆற்றில் விடப்படுவதால் பல்வேறு வியாதிகள் உண்டாவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை

கோவை மாவட்டம் சிறுமுகையிலுள்ள திருவாளர்கள் சவுத் இந்தியா விஸ்கோஸ் லிமிடெட், ரயான், கார்பன்-டை சல்பேட், செயற்கை நூல், கந்தக அமிலம் முதலிய பொருட்களை தயாரிக்கின்றன. இத்தொழிற்சாலை நாள் ஒன்றுக்கு 110 லட்சம் கேலன் கழிவு நீரை வெளியேற்றுகிறது.

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1981 ஏப்ரல் 25

இத் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீரால், பவானி ஆற்றின் நீர் கெட்டு அதனால் மக்கள் வியாதியால் அவதியுறுகிறார்கள் என்ற தகவல் இதுவரையில் கிடைக்கப்பெறவில்லை. இத்தொழிற்சாலையில் இருந்து வெளியேறும் கழிவு நீரை தூய்மைப்படுத்த வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்யுமாறு பொது சுகாதார இயக்குநர் இத்தொழிற்சாலையை கேட்டுள்ளார். இத் தொழிற்சாலையில் இருந்து வெளியேறும் கழிவு நீரில் ஒரு லிட்டருக்கு 800 முதல் 1200 மி. கிராம் வரை பயோகெமிக்கல் ஆக்சிஜன் காணப்படுகிறது. கழிவு நீரை தூய்மைப்படுத்தும் எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன என்றும் கழிவு நீரை தூய்மைப்படுத்தும் பரிசோதனைகள் நடைபெறுகின்றன என்றும் கழிவு நீர் முற்றிலும் தூய்மையாக்கும் பணி இன்னும் சிறிது காலத்தில் முடிவுபெறும் என்றும் இத்தொழிற்சாலை கூறியுள்ளது

கழிவு நீரைத் தூய்மைப்படுத்த அதை பவானி ஆற்றில் விடும் வகையில் சிறந்த அளவிற்கு மாற்றும் பணிகளை படிப்படியாக விரைவில் முடிக்க வேண்டும் என்று பொது சுகாதார இயக்குநர் இத் தொழிற்சாலையை கேட்டுக் கொண்டும் மேலும் கீழ்க்கண்ட நிபந்தனைகளை விதித்துள்ளார்.

(1) கழிவு நீரைத் தூய்மைப்படுத்துவதற்கான காலவரை 1981-க்கு மேல் நீடிக்கப்படமாட்டாது.

(2) கழிவு நீரைத் தூய்மைப்படுத்தும் பணி முடிக்கப் பெறுவதற்கு முன்பு இத் தொழிற்சாலையின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்தக் கூடாது. இத் தொழிற்சாலை கழிவு நீரைத் தூய்மைப்படுத்தும் நிலையத்தை 28—3—1981 கட்ட தொடங்கி செயல்படுத்தி வருகிறது. இதனால் இத் தொழிற்சாலையில் இருந்து வெளியேறும் கழிவு நீர் தூய்மைப்படுத்தப்பட்டு வெளியேற்றப் படும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கழிவு நீரைத் தூய்மைப்படுத்துவதற்கு பரிசோதனை நடைபெறுகின்றன என்றும் கழிவு நீர் முற்றிலும் இன்னும் சிறிது காலத்தில் முடிவு பெறும் என்றும் இந்தத் தொழிற்சாலை கூறுகிறது என்றும் கூறப்பட்டுள்ளது. ஆகவே அந்த பகுதியிலே இருக்கிற, ஆற்றோரப் பகுதியிலே இருக்கிற மக்கள் இந்த தண்ணீரை அருந்துவதால் பல்வேறு நோய் ஏற்படுகிறது. அந்த மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே கழிவு நீரை சரி செய்வதற்கு வெகு விரைவிலே நடவடிக்கை எடுக்கப்பட்டு பவானி ஆற்றிலே விழாமல் இருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1981 ஏப்ரல் 25] [டாக்டர் எச். வி. ஹண்டே]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 28—3—1981 அன்று அதற்காக ஒரு treatment. Effluent treatment plant இந்தக் கழிவு நீரைச் சுத்தப்படுத்தக்கூடிய ஒரு இயந்திரத்தை ஆரம்பித்திருக்கிறார்கள் They have commissioned on 28th அதுமட்டுமல்லாமல் நாம் இங்கே Director of Public Health authorities மூலமாக திட்டவட்டமாக அந்தக் கம்பெனிக்கு சொல்லியிருக்கிறோம். நீங்கள் அந்தக் கழிவு நீரை நல்ல வகையிலே சுத்தப்படுத்தாமல் இந்தத் தொழிற் சாலையை நடத்திக்கொண்டு போக வேண்டுமென்று நினைத்தால் அது முடியாத காரியம். உடனடியாக அதற்கு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். Expansion விஸ்தரிப்புக்குக்கூட இந்த ஏற்பாட்டுக்கு பிறகுதான் உங்களுக்கு அனுமதி தர முடியும் என்றுகூட நாம் சொல்லி இருக்கிறோம்.

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாற்றுத் தலைவர் அவர்களே, விஸ்தரிப்பு ஏற்படுகிற வரையில் அந்த கழிவு நீரை விடக்கூடாது என்று அமைச்சர் அவர்கள் அந்த தொழிற்சாலைக்கு உத்தரவிட்டிருப்பதாக சொன்னார்கள். அந்தத் தொழிற்சாலையிலே இருந்து போடப்பட்ட அறிக்கையில் இன்னும் சில காலத்திலே அந்த கழிவு நீரை விடுகிற அந்த முறையை தொழிற்சாலையில் இருக்கிறவர்கள் அதைக் கட்டுப்படுத்த முடியும் என்று கூறப்பட்டிருக்கிறது. இதுவரையில் அந்தக் கழிவு நீரால் பாதிக்கப்பட்டிருக்கிற மக்களுக்கு உதவி செய்கிற வகையில் அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாற்றுத் தலைவர் அவர்களே, Effluent என்னென்ன அதிலே இருக்கிறது என்றும் தவறான பொருள் கள் poisonous material எனபதற்கு நாம் அதை பரிசோதனை செய்து Bio-chemical oxygen எண்ணூறிலே யிருந்து 1800 மிலிகிராம் per litre அதிலே இருந்து கண்டு பிடித்து இருக்கிறோம். அதற்கு பிறகு அந்த தண்ணீரிலே வியாதி வராது என்ற ஒரு முடிவும் அங்கே டி. பி. எச். லே இருந்து சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் கூட எந்தவிதமான that is called minimum level of toxity என்றெல்லாம் சில விவரங்கள் இருக்கின்றன. அவற்றை எல்லாம் பார்த்து தண்ணீர் அப்போதைக்கப்போது sample எடுத்துக் கொண்டு நாம் அதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல் ஏறத்தாழ 10 நாட்கள் கழிவு நீர் விடப்படுமேயானால் தானாகவே அந்த toxity குறைந்துவிடும் என்று கூட அங்கே இருக்கிற டி.எச்.ஓ. தாக்கீது அனுப்பியிருக்கிறார்.

ஆ. இளம் வயதினரிடையே பரவும் நீரிழிவு நோயைத் தடுத்தல்.

திரு. எஸ். இராசாராமன்: மாற்றுத் தலைவரவர்களே, "தமிழ்நாட்டில் அதிக அளவில் இளம் வயதினருக்கு நீரிழிவு நோய் பரவியுள்ளதால் அதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

தமிழ்நாட்டில் இளைஞர்களிடம் நீரிழிவு நோய் ஓரளவு உள்ளதாகத் தெரியவருகிறது. அரசு மருத்துவமனைகளில் நீரிழிவு நோயை கண்டறிவதற்கு கீழே குறிப்பிட்டுள்ளபடி வசதிகள் உள்ளதாலும் மக்களிடையே இந் நோய் பற்றி விழிப்புணர்ச்சி ஏற்பட்டு சிகிச்சை பெற்று வருவதாலும், இந் நோய் சிறுவர்களிடையே பரவியுள்ள விவரம் தெரிய வருகிறது.

1. எல்லா மருத்துவக் கல்வி பயிற்சி நிலையங்களிலும் நீரிழிவு நோயை அதன் ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடிப்பதற்கு வேண்டிய வசதிகள் இருக்கின்றன.

2. மக்கள் இந் நோயின் தன்மைபற்றி அறிந்துகொண்டு பெருமளவில் சிகிச்சைபெற்று வருகிறார்கள்.

3. மருத்துவக் கல்விப் பயிற்சி நிலையங்களில் முறையான புள்ளி விவர ஆய்வுகள் (Periodical survey) நடத்தப்படுகின்றன.

2. சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 1968, 1979 மற்றும் 1980 ஆம் ஆண்டுகளில் கணக்கிடப்பட்டுள்ள நீரிழிவு புள்ளி விபர ஆய்வின் மூலம் மொத்தம் பதிவு செய்யப்பட்ட நீரிழிவு நோயாளிகளின் எண்ணிக்கை முறையே 905, 849, 920 ஆகும். இவர்களில் சிறார்களின் எண்ணிக்கை முறையே 55, 64, 63 ஆகும். எனவே இந் நோயால் பாதிக்கப்

1981 ஏப்ரல் 25] [டாக்டர் எச். வி. ஹண்டே]

பட்டுள்ள மொத்த நபர்களில் சிறார்கள் சுமார் 5 சதவிகிதத்தினராவார்கள். சென்னை நகரின் ஏனைய மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்த மருத்துவ மனைகளின் நீரிழிவு புள்ளிவிபர ஆய்வுகளும் மேற்கண்ட புள்ளி விவரத்தை உறுதிப்படுத்துகின்றன.

3. சிறுவர்களிடையே காணப்படும் நீரிழிவு நோயை கீழ்க்கண்ட முறைகளினால் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(அ) மக்களுக்கு ஊட்டச்சத்தை அதிகமாக வழங்குதல்.

(ஆ) வம்சாவழி முறையில் ஆலோசனை கூறுதல் (Genetic Counselling).

(இ) இந்நோயை பரப்பும் கிருமிகளை ஒழிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுதல்.

(ஈ) இந்நோய் பரவி உள்ளதற்கும் அதற்குரிய காரணத்தையும் தொற்று நோய் புள்ளிவிபர ஆய்வின் (Epedimiological Survey) மூலம் கண்டறிதல்.

4. தற்பொழுது எல்லா மாவட்ட மற்றும் முக்கிய வட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் நீரிழிவு நோயை கண்டுபிடிப்பதற்கும், குணப்படுத்துவதற்கும் வசதிகள் உள்ளன.

திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கடந்த சில ஆண்டுகளாகத் தான் இந்த நீரிழிவு வியாதி, அதுவும் சிறுவர்களிடையே தமிழ்நாட்டிலே பரவி வருகிறது. இந்த வியாதி பாம்பரையாக வரக்கூடிய வியாதி. இளம் சமுதாயமே இந்த நோயினால் பாதிக்கப்படக் கூடிய அளவிற்கு இந்த நோய் பரவி வருகின்றது. வருங்காலத்தில் சந்ததிகள் பூராவும் இந்த நோய் பரவும் என்பதை இந்த அரசு கவனித்திற்கு கொண்டு வருகின்றேன். இந்த வியாதிக்கு மூல காரணம், அத்யாவசிய உணவுப் பொருள்களில் கலப்படம் நடைபெறுவதால் தான் அதிக அளவில் பரவி வருகிறது. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். இந்த வியாதி பரவுவதைத் தடுப்பதற்கு தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-20)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே தரப்பட்டிருக்கின்ற புள்ளிவிவரத்தை மாண்புமிகு உறுப்பினர் கூர்ந்து கவனித்திருப்பார் என்று கருதுகிறேன். இந்த மூன்று

ஆண்டுகளிலே, 1978, 1979, 1980 ஆகிய ஆண்டுகளிலே எந்த அளவுக்கு ஜுவினியல் டயபெட்டிஸ் சிறுவர்களுக்கு டயபெட்டிஸ் உயர்ந்திருக்கிறது என்று பார்த்தால் 5 சதவீதம்தான் உயர்ந்திருக்கிறது. அது மட்டுமல்லாமல் இயற்கையிலே Pancreatic glands என்பதிலே இருக்கின்ற கோளாறினாலே வருகின்றது என்று பல்வேறு நிபுணர்கள் தெரிவித்திருக்கிறார்கள். கலப்படத்தைக் கட்டுப்படுத்துவது அவசியம்தான், அதிலே கருத்து மாறுபாடு இல்லை. ஆனால் ஜுவனியல் டயபெட்டிஸுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 21—மீனவம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

"மானியக் கோரிக்கை எண் 21. மீனளம் என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 3,41,14,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

திரு. சு. பாலன்: மாற்றுத் தலைவர் அவர்களே, மீன் பிடிப்பதற்கான நவீன யந்திரங்கள் உபரியாக்குவதற்கான நிலைமை ஏற்படுத்துவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

"மானியக் கோரிக்கை எண் 21—மீனளம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 3,41,14,000-இல் ரூபாய் 100 குறைக்கவேண்டும்."

THIRU S. RAJARAMAN: To discuss the need to train members from all the communities in fishing and to offer incentives to such persons, I move—

"That the allotment of Rs. 3,41,14,000 under Demand No. 21 be reduced by Rs. 100."

திரு. டி. மணி: மாற்றுத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் நீரோடியிலிருந்து எரேமியன் துறை வரை கடந்த 3 ஆண்டு காலமாக கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்ட மீனவ மக்களுக்கு இலவச வீடு கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம்பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 21—மீனளம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 3,41,14,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

திரு. செ. சிவசாமி: மாற்றுத் தலைவர் அவர்களே, வங்காள விரிகுடாவிலும் பாக்ஸ் ஜலசந்தி பகுதியிலும் மீன் பிடிக்கும்போது மீனவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கும் முறையிலும் அயல்நாட்டு மீன்பிடி படகுகள் திருட்டுத்தனமாக வந்து மீன் பிடிப்பதை தடுக்கும் முறையில் தூத்துக்குடியிலும் சென்னையிலும் கடற்படை பிரிவுகள் அமைப்பது சம்பந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 21—மீனளம் என்ற தலைப்பின்கீழ், ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 3,41,14,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்".

(ஆ) கோரிக்கை எண் 35—நுகர்பொருள் வழங்கல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

"மானியக் கோரிக்கை எண் 35—நுகர்பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 4,96,25,000-க்கு மேற்படாத தொகை வழங்கப்பெறவேண்டும்."

திரு. த. வேணுகோபால்: மாற்றுத் தலைவர் அவர்களே, ரெவின்யூ கிராமங்கள் அல்லாத மற்ற கிராமங்களிலும் நியாய விலைக் கடைகள் திறப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 35—நுகர்பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 4,96,25,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

திரு. கே. கல்லன்: மாற்றுத் தலைவர் அவர்களே, மலைப் பிரதேசமான நீலகிரியில் அத்தியாவசியமான பொருள்கள் தட்டுப்பாடின்றி கிடைக்க விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 35—நுகர்பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 4,96,25,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

திரு. கே. ஆர். சுந்தரம்: மாற்றுத் தலைவர் அவர்களே, கிராமங்களிலும், நகரங்களிலும் உள்ள கூட்டுறவு, நுகர்பொருள் கழகக் கடைகளில் குறைந்த விலையில் அரிசி, கோதுமை, கேழ்வரகு, சோளம், சர்க்கரை, பருப்பு, சமையல் எண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்க மாநில அரசு மத்திய அரசிடம் பெறவேண்டியது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 35—நுகர்பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 4,96,25,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்): மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாற்றுத் தலைவர் அவர்களே, மீனளம்பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகளும் நுகர் பொருள் வழங்கல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகளும், பேரவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றை அவைக் குறிப்பில் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். அதுவே என்னுடைய முன்னுரையாக அமையும். விவாதத்திற்குப் பிறகு பதில் சொல்வதற்கு ஏதுவாக இருக்கும்.

திரு. ப. பொன்னுரங்கம்: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மீனளம், நுகர்பொருள் வழங்கல் மானியக் கோரிக்கைகளின்மீது நான் சார்ந்து இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றையதினம் நிதியமைச்சர் அவர்கள் மீனளத்திற்கு ரூபாய் 3,41,14,000 ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் அந்தத் தொகையை அவர்கள் எந்த அடிப்படையில் கோரியிருக்கிறார்கள் என்பதைப் பதிலுரையிலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன். தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு ஒப்பாக உள்ள சமுதாயத்தின் வளர்ச்சிக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகை பொருளாதாரத் துறையிலும், சமூகத் துறையிலும் மற்ற அனைத்துத் துறைகளிலும் பின்தங்கியிருக்கிற தொழில் சமுதாயத்திற்கு இந்த நிலையில் இதற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை. இதில் கோரப்பட்டிருக்கும் தொகை முறையானதுதானா? நியாயமானதுதானா? நிறைவானதுதானா? என்று கேட்க முதலில் நான் ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்லாமல், பாலிசி நோட்டில் வெகு விளக்கமாகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறீர்கள்? என்னவென்று தெரியுமா? பக்கம் 9-இல் சொல்லியிருக்கிறீர்கள். "மீனவர்களிடையே பொதுவாக தாங்கள் சரியாகக் கவனிக்கப்படுவதில்லை என்ற எண்ணமும், நம்பிக்கையற்ற உணர்வும் இருந்து வருகிறது" என்று யார் சொல்வது தெரியுமா? அரசாங்கமே சொல்கிறது. நம்பிக்கையற்ற உணர்வும், தாங்கள் சரியாகக் கவனிக்கப்படுவதில்லை என்ற உணர்வும், இந்த ஆட்சியிலே வசதி செய்து தரப்படவில்லை என்ற உணர்வும் மீனவர்களிடம் இருப்பதாக நீங்களே சொல்கிறீர்கள். ஆனால் இப்படிச் சொல்லு

* 143-186 ஆம் பக்கங்களில் இணைப்புகள் II, III ஆக அச்சிடப் பெற்றுள்ளன.

கின்ற நீங்கள் அதற்காக ஒதுக்கியிருக்கின்ற தொகையைப் பார்க்கும்பொழுது போதுமானதா என்பதை அருள்கூர்ந்து மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் சீர்தூக்கிப் பார்க்க வேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதுவும் எந்தக் காலகட்டத்தில் என்று பார்த்தால், இந்த ஆண்டு ஒட்டுமொத்தமாக, பல்வேறு துறைகளுக்கும் மாநிலத்திற்கும் நீங்கள் செலவழிக்கின்ற தொகை 1,137 கோடியே 84 இலட்சம் ரூபாய். 1,137 கோடியே 84 இலட்சம் ரூபாய் செலவழிக்கின்ற இந்த அரசு மீனவர்களுக்காக 3 கோடியே 41 இலட்சம் ரூபாயைத்தான் ஒதுக்கியிருக்கிறது. ஆனால் நீங்கள் சொல்லிக் கொள்வீர்கள், மீனவ நண்பனுடைய ஆட்சி நடக்கிறது, ஆகவேதான் இந்தப் பெருந்தொகையை ஒதுக்கியிருக்கிறோம் என்றுகூடச் சொல்லுவீர்கள்.

ஆனால் எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், 1973-74 ஆம் ஆண்டில் 2 கோடியே 58 இலட்சத்து 39,300 ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். இப்பொழுது நீங்கள் கோரும் தொகைக்கும் இந்தத் தொகைக்கும் பார்த்தால் எட்டாண்டுகளுக்கு முன்பு ஒதுக்கப்பட்ட இந்தத் தொகை குறைவானதாகத்தான் உங்களுக்குத் தெரியும். ஆனால் அப்பொழுது மாநில அரசாங்கம் ஒட்டுமொத்தமாகச் செலவு செய்தது 472 கோடியே 63 இலட்சம் ரூபாயாகும். இப்பொழுது நீங்கள் செலவு செய்ய இருக்கின்ற தொகை 1,137 கோடியே 84 இலட்சம் ரூபாய். இதை ஒப்பிட்டுப் பார்க்கின்ற பொழுது இரண்டரை மடங்கு அதிகமாகிறது. அந்த முறையில் பார்த்தால் என் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒதுக்கியதை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது இப்பொழுது நீங்கள் குறைந்தது ஆறு அல்லது ஏழு கோடி ரூபாயை உயர்த்தியிருக்க வேண்டும். ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை, இந்த ஆட்சியாளர்கள், மீனவர்களின் மீது உள்ள நல்லெண்ணத்தின் காரணமாகவோ என்னவோ தெரியவில்லை, 3 கோடியோடு நிறுத்திக்கொண்டார்கள்.

கடந்த ஆண்டு மானியக் கோரிக்கையிலே நான் சொன்னேன். உங்கள் அறிக்கையை, பர்ஃபார்மன்ஸ் பட்ஜெட்டைப் பார்த்துவிட்டுச் சொன்னேன். 2 கோடியே 88 இலட்சம் ரூபாய் அட்மினிஸ்ட்ரேட்டிவ் எக்ஸ்பென்டிச்சருக்காக நிர்வாகச் செலவுக்காக ஃபிஷரீஸ் டிபார்ட்மெண்டுக்கு ஒதுக்கப்படுகிறது. இந்த 3 கோடியில் 2 கோடியே 88 இலட்சம் ரூபாய் நிர்வாகத்திற்கே செலவாகி விட்டால் மிச்சம் எவ்வளவு இருக்கும் என்பதைப் புள்ளிவிவரம் தெரிந்த நிதியமைச்சரவர்கள் சீர்தூக்கிப் பார்ப்பார்கள் என்று கருதுகிறேன்.

அதுவும் எப்படியென்றால், எந்த முறையிலேயும், எந்தத் துறையிலேயும், எந்தச் சந்தர்ப்பத்திலேயும் இந்த ஆட்சியில் மீனவர்களுக்குத் துணையாக இல்லாத ஒரு நிர்வாகம், ஒரு இலாக்கா 67 அதிகாரிகளைக் கொண்டிருக்கிறது.

[திரு. ப. பொன்னுரங்கம்] [1981 ஏப்ரல் 25

டைரக்டரிலிருந்து அசிஸ்டன்ட் டைரக்டர், ஜாயின்ட் டைரக்டர், டெபுடி டைரக்டர் என்று இதுபோன்ற கேட்டகிரிகள் வரையில் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள், நீங்கள் தந்திருக்கின்ற பர்ஃபார்மென்ஸ் பட்ஜெட்டிலேயே இருக்கிறது, 67 அதிகாரிகள் என்று. நான், இன்ஸ்பெக்டர்களின் எண்ணிக்கைக்குச் செல்லவில்லை, சப்-இன்ஸ்பெக்டர்களின் எண்ணிக்கைக்குச் செல்லவில்லை, சூப்பிரண்டெண்டுகளின் எண்ணிக்கைக்குச் செல்லவில்லை, யூ.டி.சி., மற்றும் எல்.டி.சி ஆகியவர்களின் எண்ணிக்கைக்குச் செல்லவில்லை ; இவர்களெல்லாம் இல்லாமல் அதிகாரிகள் மட்டும் இவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள்.

(முற்பகல் 11-30)

இந்த அதிகாரிகளெல்லாம் இந்த ஆண்டு என்ன செய்யப் போகிறார்கள் என்றால், ஆபிசைப் பார்த்துக்கொண்டிருப்பார்கள் ; காரிலே செல்வார்கள், வேறு வேலைகளைப் பார்ப்பார்கள் ; அடுத்து நீங்கள் இப்பொழுது ஒதுக்கியிருக்கின்ற ஐந்தே ஐந்து இலட்சம் ரூபாயை சுமார் 7 இலட்சம் மீனவர்களைக் கொண்டிருக்கின்ற கூட்டுறவு சொசைட்டிகளுக்கு கடன் கொடுக்க ஏற்பாடு செய்வார்கள். அதாவது அதில் தலைக்கு ஒரு ரூபாய் என்று ஒரு ஆண்டுக்குக் கிடைக்கின்ற வகையில் அப்படிப்பட்ட நிதி ஒதுக்கீட்டை நீங்கள் செய்திருக்கிறீர்களே, அந்த 5 இலட்சத்தைக் கொடுப்பதற்காக இந்த 67 அதிகாரிகள், அவர்களுக்குக் கீழே சபார்டினேட் ஆபீசர்கள், பல அலுவலகங்கள் தேவையாக இருக்கின்றன. அப்படிப்பட்ட புரோகிராமான டிமாண்டை நீங்கள் வைத்திருக்கிறீர்கள் என்பதை மெத்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து நான் ஒன்றைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன், நீங்கள் 1977-78-லேயே சொன்னீர்கள். இப்பொழுது எங்கு பார்த்தாலும் சர்ச்சை. எனக்கு முன்னால்கூட, திரு. சிவசாமி அவர்கள் சொன்னார்கள். வெளிநாட்டிலிருந்து நம்முடைய கரைகளில் வந்து மீன் பிடிக்கிறார்கள். அதையெல்லாம் தடுத்து நிறுத்தவேண்டும். அதைத் தடுத்து நிறுத்துவது என்றால், சர்ச்சையிலே ஈடுபடுகிறவர்கள் பொருள்களைக் கடலிலே இழந்து விடுகின்றபொழுது, அதை எடுத்துவந்து இழந்தவர்களிடம் ஒப்படைத்தல்; அது மட்டுமல்ல, கடலிலே மீன் பிடிக்கின்றவர்கள் தவறிவிடுகின்ற நேரத்திலே, அவர்களைத் தேடிக் கண்டு பிடித்து, காப்பாற்ற, ஒரு பெரு முயற்சி, உங்கள் ஆட்சியின் ஆரம்பத்திலே எடுக்கப்பட்டது என்று சொல்லப்பட்டது. என்ன முயற்சி ? ரெஸ்க்யூ வெசல்ஸ்—காப்பாற்றும், கப்பல்கள்—மீனவர்கள் உயிரைப் பாதுகாக்கும் கப்பல்கள் இரண்டு வாங்கப்படும் என்று 1977-78 டிமாண்டிலே சொல்லியிருக்கிறார்கள். அதற்கு ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கப்படும் என்று சொன்னார்கள்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஒரு வெசல் ரூபாய் 5 இலட்சம் என்று சொன்னார்கள். அந்த இரண்டு கப்பல் எங்கே ஓடுகின்றது? கடலில் ஓடுகின்றதா? ஆற்றில் ஓடுகின்றதா அல்லது தரையில் ஓடுகின்றதா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, இன்னொன்று, 1977-78-ல் கடலூர், நாகப்பட்டினம் போன்ற துறைமுகங்களிலே தூர் எடுக்க, ஆறு தூர்ந்து போகின்ற நேரத்திலே, வழியை, பாசேஜ் உருவாக்க 1977-78-லே, பட்ஜெட்டிலே நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள்—என்னவென்று? ஒரு ட்ரெட்ஜர் வாங்குகிறோம், பணத்தை ஒதுக்கி விட்டோம் என்று சொல்லி இருக்கிறீர்கள். அந்த ட்ரெட்ஜரின் விலை ரூபாய் 16 இலட்சம். அதற்காக ஒரு கம்பெனியைக் கூடத் தேடிப் பிடித்து விட்டோம் நாங்கள். அது கல்கத்தாவிலே இருக்கிறது. அங்கே ஆர்டர் கொடுத்து விட்டோம் என்று சொன்னீர்கள். அந்தக் கம்பெனியின் பெயர் என்ன? இதுவரை அந்த ட்ரெட்ஜர் வந்ததா? வேலை நடைபெறுகிறது என்று 1977-78-லே சொன்னார்கள். இல்லை, ட்ரெட்ஜருக்கு மூடு விழா செய்து விட்டார்களா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இந்த பட்ஜெட்டிலே 4705 வீடுகள் மீனவர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்டன, 1467 வீடுகள் to be constructed என்று சொல்லுகிறார்கள். ஆனால், நான் தெரிந்து கொள்ள விரும்புவது, நீங்களே, 1977-ல் ஒரு பட்டியலைத் தந்திருக்கிறீர்கள். அந்தப் பட்டியலில் என்ன தந்திருக்கிறீர்கள் தெரியுமா? மீனவர்களுக்கு வீடு கட்டியுள்ளபட்டியல். 1977-லே நீங்கள் ஆட்சிக்கு வந்தவுடனே, மீன் துறை வீட்டு வசதித் திட்டம் என்று 421 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. அடுத்து, மீன்துறை சிறப்பு வீட்டு வசதித் திட்டம், கல்பாக்கம், 181 வீடுகள்; மீன்துறை சிறப்பு வீட்டு வசதித் திட்டம், அம்மாம்பட்டினம். அடுத்து சிறப்பு மானியத்தில் கட்டப்பட்ட வீடுகள், ரெயமான் துறை என்ற இடத்தில் 72 வீடுகள்; அதற்கடுத்து வீட்டு வசதி, அதாவது, சிறப்பு வீட்டு வசதித் திட்டம், வானகிரி 400 வீடுகள், பூம்புகார் 500 வீடுகள், தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி மற்றும் அரிசன வளர்ச்சிக் கழகத்தின் சிறப்புக் குடியிருப்புத் திட்டம் 2,100 வீடுகள். அதற்கடுத்து, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்—சென்னையிலே அமைக்கப்பட்டது—4,180 வீடுகள். இவைகள் அனைத்தும் கலைஞர் ஆட்சிக்காலத்திலே கட்டப்பட்ட வீடுகள் என்று 1977-லே நீங்கள் வந்தபொழுதே உண்மை என்று தெரிகிறது. 1977 மானியக் கோரிக்கையிலேயே அதைத் தெரிவித்திருக்கிறீர்கள். ஆக, மொத்த வீடுகள் 8,039 வீடுகள் அப்பொழுதே கட்டி முடிக்கப்பட்டு விட்டன. ஆனால், இந்த மானியத்திலே நீங்கள் சொல்கிறீர்கள், 4,705 வீடுகள் கட்டப்

பட்டு விட்டன, 1,461 வீடுகள் to be constructed என்று சொல்கிறீர்கள். அதில், நிலைமை என்னவென்றால், குடிசை மாற்று வாரியத்தைக் கழித்து விட்டு, கலைஞர் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்ட வீடுகளை எடுத்துப் போட்டுக் கொண்டு, நாங்கள் கட்டுகிறோம் என்று சொன்னால், என்ன பொருள். (மணி யடிக்கப்பட்டது). நான் அட்ஜார்ன்மென்ட் மோஷன் கூட தந்திருக்கிறேன். ரிஜக்ட் ஆகியிருக்கிறது. ஆகவே, கூடுதல் நேரம் வேண்டுமென்று தலைவரிடம் கூடச் சொல்லிவிட்டேன். கலைஞர் ஆட்சிக்காலத்தில், ஸ்லம் கிளியரன்ஸ் போர்ட் தவிர, 4,000 வீடுகள் கட்டப்பட்டு விட்டன. அதை எடுத்து வைத்துக் கொண்டு நீங்கள் சொல்கிறீர்கள்.

நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன், ஒவ்வொரு ஆண்டு மானியக் கோரிக்கையிலும் ரூபாய் 100 இலட்சம் மீனவர்களுக்கு வீடு கட்ட ஒதுக்கு கிறோம் என்று சொல்கிறார்கள். ரூபாய் 100 இலட்சம் என்றால், எத்தனை வீடுகள். ஒரு வீட்டுக்கு ரூ. 35,000 என்று கூடச் சொல்லவில்லை. அரிசன நல வீட்டு வசதி வாரியத்திலே அவர்கள் கட்டுகிறார்கள் என்று சொல் கிறார்கள். ஆனால், ரூபாய் 5,000 ஒரு வீட்டிற்கு என்று வைத்துக்கொண்டால் கூட, ரூபாய் 100 இலட்சத்திற்கு ஆண்டிற்கு இரண்டாயிரம் வீடுகள் வரும். நீங்கள் ஆட்சிக்கு வந்த பின்னால், 4 ஆண்டுகளுக்கு ரூபாய் 100 இலட்சம் ஒதுக்கியிருக்கிறோம் என்று தொடர்ந்து சொல்கிறீர்கள். 8,000 வீடுகள் எங்கே கட்டியிருக்கிறீர்கள் ?

எனக்கு இதிலே ஒரு சந்தேகம். ஒதுக்கப்படுகின்ற தொகை சரியான முறையில் பயன்படுத்தப்படுகின்றதா? இதற்கும் ஒரு விசாரணை வைக்க வேண்டும் போல் இருக்கிறது. அந்தத் தொகையை என்னதான் செய்கிறீர்கள்? எதிலே போடுகிறீர்கள் என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இப் படிப்பட்ட முரண்பாடான உண்மையை மறைக்கின்ற, ஊரை ஏமாற்றுகின்ற, மீனவர்களைப் பழி வாங்குகின்ற முறையிலே இது அமைந்திருக்கின்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாற்றுத் தலைவர் அவர் களே, உண்மையை மறைக்கவும் முடியாது, ஊரை ஏமாற்றவும் முடியாது. அதைக் கண்டு பிடிக்க பொதுக்கணக்குக் குழு இருக்கிறது, இந்தத் தொகையை அமைச்சர் அவர்கள் செலவழிப்பதல்ல. ஆடிட்டர் ஜெனரல் இருக்கிறார்.

1981 ஏப்ரல் 25] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

எனவே அவர் குறைகளைச் சொல்லட்டும், குற்றங்களைச் சொல்லட்டும். அதற்காக அளவுக்கு மீறி சொல்லுகின்ற நிலைமை நல்லதல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம்: மாற்றுத் தலைவர் அவர்களே, அடுத்த திட்டம் மத்திய அரசாங்கத்தின் நிதி உதவியோடு இந்த அரசாங்கத்திற்கு அப்ரூவல் கொடுத்தாகிவிட்டது. 1978-79-லே இதிலே நீங்கள் தந்திருக்கிறீர்கள் performance as well as policy note அதிலே தஞ்சையிலே பழையாற்றிலும் இராமநாதபுரத்திலே வாலிநோக்கத்திலும், துறைமுக அபிவிருத்திக்கான திட்டம் மத்திய அரசாங்கத்திலே ஒத்துக்கொள்ளப்பட்டு, அதற்காகத் தொகையையும் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று தெளிவாகச் சொல்லி இருக்கிறீர்கள். 1981-82-லே இப்போது என்ன சொல்லுகிறீர்கள் என்றால் அந்தத் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லுகிறீர்கள். நான் கேட்க விரும்புவது, மத்திய அரசு கொடுக்கத் தயாராக இருந்தும், உங்களுக்கு வாங்க வழி தெரியவில்லையா அல்லது வக்கு இல்லையா? அதைக் கிடப்பிலே போட்டதற்கு என்ன காரணம்?

இப்போது எங்கு பார்த்தாலும் வறட்சி இருக்கின்றது. வரண்டு போய் இருக்கின்ற மோசமான நிலை இருக்கின்றது. ஆனால் மீனவர்களைப் பொறுத்தவரையில் கடந்த 2 ஆண்டுகாலமாக கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். நேற்றைக்குக் கூட தமிழ் பத்திரிகை ஒன்றில் ஒரு நடிகை மீன் பிடிப்பதைப் போன்று ஒரு படத்தைப் போட்டு, அதற்கு அந்த நடிகை வெளியே மீன் வாங்க முடியவில்லை, அதனாலே நானே மீன் பிடிக்கிறேன் என்று கார்டூன்தான் போட்டிருக்கிறார்கள். இப்போது மீனே கிடைக்கவில்லை. அப்படி கிடைக்காததனால் மார்க்கட்டுக்கு வரவில்லை. கட்டுமரத்திலே சென்று மீன் பிடிக்கிற மீனவர்கள் அத்தனைபேர்களும் தரையிலே எப்படி விவசாயிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்களோ அதைவிட பல மடங்கு வாடுகிறார்கள். அவர்களுக்குக் கட்டுமரத் தொழிலாளர்களானாலும் சரி, அல்லது கன்னாவிலே போகிற தொழிலாளர்களானாலும் சரி, அல்லது விசைப்படகு தொழிலாளர்களானாலும் சரி, கடந்த இரண்டு ஆண்டு காலமாக வருவாய் இன்றி வறுமையிலே வாடிக்கொண்டு இருக்கிறார்கள். நான் மெத்தப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கை ஒரு தனித்தன்மை வாய்ந்ததாக இருக்கும் என்று கருதினேன். வறுமையை உள்ளடக்கி அமைத்து வரும் என்று கருதினேன். ஆனால் அப்படி இல்லாமல் பெரிய ஏமாற்றத்தை அளிக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

[திரு. ப. பொன்னுரங்கம்] [1981 ஏப்ரல் 25

அடுத்து நான் பணிவோடு கேட்டுக் கெள்வது, அமைச்சர் அவர்கள் இப்போது உங்கள் ஆட்சியிலே ஒரு பெரிய உத்திரவினை திடுதிப்பென்று போட்டிருக்கிறீர்கள், காமராஜர் காலத்திலே வாங்கிய விசைப் படகுகள், காமராஜர் காலத்தில் கொடுக்கப்பட்ட லோன்கள் இவைகளை எல்லாம் மீனவர்கள் கட்ட முடியாத அவல நிலையில் இருக்கிறார்கள். அந்தப் படகுகளிலே சில உதிரி பாகங்கள் இல்லை என்றால் கிரைமுக்கு அனுப்பிவிடுகிறீர்கள். கிரைமிலே இருந்து போலீசார் வருகிறார்கள். பலர் செத்துவிட்டார்கள், சிலர் உயிரோடு இருக்கிறார்கள். அவர்களும் செத்துக் கொண்டு இருக்கிறார்கள், வருமானம் இல்லாத காரணத்தால், அவர்களை எல்லாம் கிரைம் போலீசை விட்டு மிரட்டுகிறார்கள். நான் மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்வது இதைப்போன்ற கடன்களை அது விசைப் படகு கடனாக இருந்தாலும் சரி, அல்லது கட்டுமரத் தொழிலாளர்கள் அந்தந்த கூட்டுறவு சொசைட்டியிலே வாங்கி இருக்கிற கடன்களாக இருந்தாலும் சரி அவைகளை எல்லாம் உடனடியாக—விவசாயிகளுக்கு ரத்து செய்ததைப்போல—ரத்து செய்ய வேண்டும் என்று இந்த அரசாங்கத்தைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

நீங்கள் மீனவர்கள் வளர்ச்சிக்காக குறிப்பாகவும் சிறப்பாகவும் கட்டுமரத் தொழிலாளர் வளர்ச்சிக்காக ஒரு விரிவான திட்டத்தை இதிலே தெரிவித்து இருப்பீர்கள் என்று நான் கருதினேன். ஆனால் ஏமாற்றம் அடைந்தேன். கட்டுமர மீனவர்கள் பெரும் அவதிக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உண்மையிலேயே வசதிகள் செய்யவேண்டுமானால் சில யோசனைகளை நான் கூறுகிறேன். இப்படிப்பட்டவர்களுக்குக் கட்டுமரங்களை வாங்கிக் கொடுங்கள். பைபர்போட்டு என்பதை விட கட்டுமரம் வாங்கிக் கொடுங்கள். அதுமட்டுமல்ல. வலைக்கு பயன்படுகின்ற அரை, முக்கால், ஒன்று இரண்டு, மூன்று எண்ணுள்ள நூல்களை கட்டுமர மீனவர்களுக்கும் தருவீர்களேயானால்—அது பலனுள்ளதாக இருக்கும். முடிந்தால் இலவசமாக கொடுங்கள். இல்லை என்றால் சப்சிடைஸ்டு விலையில் கொடுங்கள் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-40)

தமிழகத்திலே விசைப்படகு கட்டும் தொழிற்சாலைகள் நான்கு இடங்களில் இருக்கின்றன. சென்னையிலே இரண்டும், நாகையிலே ஒன்றும், மண்டபத்திலே ஒன்றும் இருக்கின்றன. அங்கெல்லாம் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் நாம் எந்த நேரத்தில் எப்படி ஆவோமோ என்று ஒரு அச்ச நிலையில் இருந்து கொண்டு இருக்கி

னார்கள். திரு. வெங்கட்ராமன் தலைமையில் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. அதனுடைய விவரம் என்ன என்று தெரிவிக்கப்படவில்லை என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, நான் ஒன்றைத் தெரிவிக்க விரும்பு கிறேன். கைத்தறித் துணிகள், மற்ற பண்டங்கள், பொருள்கள் ஆகியவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக அரசு முயற்சிகளை மேற்கொள்வது போல், நம்முடைய தமிழகத்திலே தயாரிக்கப்படுகின்ற படகுகளையும் வெளி நாடுகளுக்கு, வெளி மாநிலங்களுக்கு அனுப்புவதற்கு அரசாங்கம் முயற்சி களை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய தமிழகத்தில் தயாரிக்கப்படுகின்ற படகுகளை வாங்குவதற்கு வெளி மாநிலத் தினர் தயாராக இருக்கின்றனர். மேற்கு வங்கம் போன்ற மாநிலங்கள் அந்தப் படகுகளை வாங்குவதற்காக இங்கே வந்தன. அதிலே என்ன பிரச்னை வந்தது என்று சொன்னால், அந்தப் படகுகளின் விலை அதிகமாக இருக் கிறது. அதற்குக் காரணம், அந்தப் படகுகள் தற்போது பிஷரீஸ் கார்ப்ப ரேஷன் மூலமாகத் தயாரிக்கப்படுவதேயாகும் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, அந்த போட் யார்ட்டிலே வேலை செய்கிற தொழிலாளர்கள் விரும்புவதுபோல், அந்தத் தொழிற்சாலையை பிஷரீஸ் கார்ப்பரேஷனிடமிருந்து மாற்றி, பிஷரீஸ் துறையிடமே கொடுப்பதற்கு அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். அந்த முறையில் அரசாங்கம் முடிவு எடுத்தால் படகுகளை குறைந்த விலையில் தயாரிக்க முடியும் என்பதோடு, அந்தத் தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்பு அளித்ததாக இருக்கும் என்பதையும் இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். பெரிய தலைவர் களின் படங்கள் அனைத்தும் இந்த மன்றத்தில் வைக்கப்பெற்றுள்ளன. பகுத் தறிவுத் தந்தை—நமது அவை முன்னவர் அவர்களுக்குத் தெரியும்—பகுத் தறிவிலே மட்டுமல்லாமல் சுயமரியாதைக் கொள்கையிலும் பற்றுக்கொண்டவர். தெளிவான முறையில் பொதுவுடைமைக் கொள்கையைப் பரப்புவதிலே தலை சிறந்த தலைவராக விளங்கியவர் நமது சிங்காரவேலர் அவர்கள். அவருடைய படத்தை இங்கே வைக்காதது மிகப் பெரிய குறையாக இருக்கிறது. அவர் படத்தை இங்கே வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நுகர்பொருள் பற்றி ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள்—3 ஆண்டுகளுக்கு முன்பு சொன் னார்கள்—அப்போது திரு. எட்மண்ட் அவர்கள் உணவு அமைச்சராக இருந்

தார்—காமதேனு சிறப்பங்காடி மூலமாக அனைவர் வீட்டு வாசலிலும் காய் கறிகள் பாலிதின் பைகளில் போட்டு 3 சக்கர வண்டிகள் மூலம் விற்கப்படும் என்று சொன்னார்கள் (மணியடிக்கப்பெற்றது).

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே அவை முன் வைக்கப்பட்டுள்ள உணவு மானியக் கோரிக்கை மீது பேசுகின்ற வாய்ப்பு பெற்றமைக்கு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். 1980-81 ஆம் ஆண்டில் அரசு வினியோக முறையின் மூலம் 7,500 டன் முதல் 11,000 டன் வரை அரிசி விற்பனை செய்ததன் மூலமாக, அரிசியின் விலை உயர்வு ஏறாமல் பார்த்துக்கொண்டதற்காக இந்த அரசை நான் பாராட்டு கிறேன். ஒரு வருஷ காலமாக பருவ மழை பொய்த்ததன் காரணமாக உணவு நிலைமை சற்று மோசமாகியிருந்தாலும், மற்ற பொருள்களின் விலையேற்றத் தோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, அவற்றின் விலை ஏற்றத்தை விகிதாச்சார அடிப்படையில் பார்க்கிறபோது, அரிசியின் விலையேற்றம் அதிகம் என்று சொல்ல முடியாது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதை வேளாண் மைத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களும் ஒப்புக்கொள்வார்கள் என்று நான் கருது கிறேன். ஆனால், இங்கே அதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதற்காக பருவ மழை தவறியதன் காரணமாக, அரிசி விற்பவர்கள் மீது 40 சதவிகிதம் லெவி தற்போது திடீரென்று விதித்து இருக்கிறார்கள். அதனால் நுகர் வோரிடத்திலும், வாங்கிச் சாப்பிடுகிறவர்களிடத்திலும், விவசாயிகளிடத்திலும், இன்றைக்குப் பதட்ட நிலை ஏற்பட்டு இருக்கிறது. கடந்த ஓராண்டு கால மாகவே பருவமழை பொய்த்து விட்டதால், மகசூல் குறைவாக இருக்கும் என்பது நமக்குத் தெரியும். அதன் காரணமாக வறட்சி நிலையும் இங்கே ஏற்பட்டு இருக்கிறது. இதையெல்லாம் கருத்தில் கொண்டு, பெரிய பதவியில் இருக்கின்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் முதலிலேயே தஞ்சை மாவட்டத்தில் குறுவை காலத்திலேயே கொள்முதல் ஆரம்பித்து இருக்கவேண்டும். அப்படி நேரடியாகக் கொள்முதலை தஞ்சை மாவட்டத்தில் ஆரம்பித்தார்களா, அல்லது லெவிக்கு உத்தரவு போட்டார்களா, அல்லது தஞ்சை மாவட்டத்தில் இருந்து கேரளாவிற்குச் செல்லும் அரிசி நெல்லை தடுத்து நிறுத்தினார்களா ? அவை களை எல்லாம் செய்து இருந்தால் நிலைமை சற்று சீராக இருந்து இருக்கும். ஆனால் ஏதோ கவனக்குறைவு காரணமாக அதைச் செய்யவில்லை. அதைச் செய்யத் தவறியதற்கு என்ன காரணம் என்று புரியவில்லை. ஆகவே, வெளி மாநிலங்களுக்குச் செல்கிற அந்த நெல்லுக்கோ, அரிசிக்கோ அவர்கள் 40 சத விகிதம் அல்லது 50 சதவிகிதம் லெவி வைத்து இருந்தால், இந்த நிலைமை

யைத் தவிர்த்து இருக்கலாம். ஆனால் தற்போது போட்டுள்ள லெவி காரண மாக—சில்லரை வியாபாரிகள், கிராமத்தில் சாப்பிடுவதற்காக வாங்கி வைத்து இருந்தவர்களிடமிருந்து லெவி போட்டுள்ளதால்—ஒரு குவிண்டாலுக்கு 75 ரூபாய் முதல் 100 வரை விலை ஏற்றம் ஏற்பட்டு இருக்கிறது என்பதை இங்கே நான் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். நான் நம்முடைய நிதி அமைச்சர் அவர்களை அணுகி கேட்டபோது சொன்னார்கள். இந்த நிலையை மத்திய சர்க்கார் உருவாக்கியிருக்கிறது; பலமுறை லெவி போட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்; நாங்கள் லெவியை நிதானமாகப் போட்டிருக்கிறோம்; அதனால் சற்று அதிகமாகப் போட்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். அதிகமாக லெவி போட்டிருப்பதால் இதிலே அதிகமாகத் திருட்டுத்தனம் வியாபாரிகளாலும் அதிகாரிகளாலும் நடைபெறக்கூடும்; தவறான காரியங்கள் செய்ய முடியும் என்பதை நான் இந்தத் துறையிலே சம்பந்தப்பட்டவன், நன்றாகத் தெரிந்தவன் என்ற முறையிலே தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே லெவியை 10 சதவிகிதம் அல்லது 20 சதவிகிதம் வரை தமிழ் நாட்டுக்கு உள்ளே நடைபெறுகின்ற வியாபாரத்திற்கும் தமிழ் நாட்டுக்கு வெளியே செய்யப்படுகின்ற வியாபாரத்திற்கு வேண்டுமானால் 40 சதவிகிதம் அல்லது 50 சதவிகிதம் வரை போடலாம் என்ற என்னுடைய யோசனையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த லெவி முறை இருக்கலாம். எப்படி மதுவிலக்கை தமிழ்நாட்டிலே நாம் ஒழுங்காக நடைமுறைப்படுத்த முடியவில்லையோ அப்படி அரிசி நெல் வியாபாரத்திலும் இருக்கிறது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். இப்போது மதுவிலக்கு தளர்த்தப்பட்ட காரணத்தால் சமூக விரோதிகளுக்கு கிடைக்கின்ற வருவாய் அரசுக்கு கிடைக்கின்ற நிலையை ஏற்படுத்தியிருக் கிறோம். அதைப்போல இந்த லெவி முறையைத் தளர்த்தினால் நல்ல பலன் அளிப்பதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கெ. சிவசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, ஒரு விளக்கம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது அதிகாரிகளையும் மற்ற வர்களையும் குறைசொல்லிவிட்டு, 'அதிலே நான் சம்பந்தப்பட்டிருக்கிறேன் என்று சொன்னார்கள். எதிலே சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஏ. எம். சேதுராமன்: நான் அதிகாரிகளைக் குறை சொல்லவில்லை; அதிகாரிகளும் குறை ஏற்படுவதற்கு ஒரு காரணமாக இருக்கலாம் என்று சொன்னேன். நான் ஒரு வியாபாரி என்ற முறையில் சொன்னேன். நான் இங்கே உறுப்பினராக இருந்தாலும், நான் முறைப்படி ஒரு நெல் வியாபாரி என்பதால் சொன்னேன்.

இன்றைக்கு மழை மட்டும் தவறாமல் பெய்திருந்தால், நம்முடைய மாநிலத்தில் 32.05 இலட்சம் டன் அரிசி உற்பத்திக்கு பதிலாக 35 இலட்சம் டன் உற்பத்தியாகியிருக்கும்; மழை தவறியதால் இந்த அளவுக்கு உற்பத்தியாகி யிருக்கிறது.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"

என்று சொல்வார்கள். அதைப்போல விவசாயிகள் தங்களுடைய வாழ்க்கையில் ஒளிபெற, வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய வேண்டுமென்று தமிழக அரசு விரும்புகிறது; மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் விரும்புகிறார்கள். ஆகவேதான் கிராமப்புற விவசாயிகள் வாழ்க்கை முன்னேற, அவர்களுடைய வாழ்க்கை வளம்பெற அவர்கள் வாங்கிய கடனில் 73 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். அதைப்போல இந்த விவசாயத் துறையிலே உணவுப் பொருட்களை உற்பத்தி செய்ய ஊக்கமளிக்கும் வகையில் நிறைய உதவிகளைச் செய்ய வேண்டும்; கூட்டுறவுத் துறையின் மூலம் அவர்களுக்குக் கடன் தந்தாக வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது நம்முடைய மாநில சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்தி நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 130 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறது. 130 ரூபாய் என்றாலும் 75 கிலோ கொண்ட ஒரு மூட்டைக்கு 97.50 ரூபாய்தான் வருகிறது. அரசாங்க கொள்முதல் நிலையங்களுக்கு கொண்டுசென்று நெல்லை விற்றால் குவின்டாலுக்கு 112 ரூபாய், 115 ரூபாய் கொடுக்கிறார்கள். ஆனால் 75 கிலோவுக்கே இந்த 115 ரூபாய் கிடைக்கிறது தமிழகத்திற்கு வெளியே. மற்ற மாநிலங்களில் இப்படி கூடுதலாகக் கிடைக்கிறபோது, அதைக் கணக்கில் கொண்டால் இங்கே 25 கிலோவுக்கு விலையே இல்லாமல் இருக்கிறது. ஆகவே, 40 சதவிகிதம் லெவி கேட்கும் போது 25 கிலோவுக்கு ஏற்படுகின்ற நஷ்டத்தை நகர்ப்புறங்களில் ஈடு செய்ய வேண்டியிருக்கிறது. அதனால் இன்றையதினம் ஓட்டல்களிலும் அதிக விலை வைக்க சந்தர்ப்பம் ஏற்படுகிறது. ஆகவே, மாநில சர்க்கார் மத்திய சர்க்காரை

வற்புறுத்தி 150 ரூபாய் கேட்டாலும் தவறு இல்லை. இப்போது கோதுமைக்கு 130 ரூபாய் போட்டிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. ஆகையால் நெல்லுக்கு 150 ரூபாய் கேட்கலாம்.

நியாய விலைக் கடைகளை எடுத்துக்கொண்டால் இன்றைக்கு இந்தியா பூராவையும் பார்த்தால் தமிழ் நாட்டில்தான் நல்லமுறையில் நடைபெறுகின்றன. இன்றைக்கு தமிழகத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அளித்த வாக்குறுதியின் அடிப்படையிலே 17,300 கடைகள் கிராமப் புறங்களிலே கூட்டுறவுத் துறையின் மூலம் திறக்கப்பட்டிருக்கின்றன. 1,900 கடைகள் நகரங்களில் இருந்தாலும் 15,400 கடைகள் கிராமப் புறங்களில் கூட்டுறவுத் துறையின் மூலம் நல்லமுறையில் செயல்பட்டு வருகின்றன. இருந்தாலும் நிர்வாகத்திலே சற்று குறைகள் இருப்பதால் எல்லாப் பொருட்களும் கிராமங்களுக்கு சரியாக கிடைக்கவில்லை. எல்லாப் பொருட்களும் உரிய நேரத்தில் கிடைப்பதற்கு ஏற்ற முறையில் அதிகாரிகளும் அமைச்சரவர்களும் தகுந்த கண்காணிப்புகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-50)

அந்தக் கடையிலே சோதனையிடுவதற்கும் அல்லது நாங்கள் நேரிலே சென்று பார்ப்பதற்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுமதி அளித்தால் கூட நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து 107 இலட்சம் குடும்பக் கார்டுகள் இப்போது வழங்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் சில இடங்களில் குடும்பக் கார்டுகள் வழங்கப்படவில்லை என்று கூட புகார்கள் வந்திருக்கின்றன. ஆகவே தாலுக்கா அலுவலகத்திலுள்ள விநியோக அதிகாரி டி.எஸ்.ஓ. மூலமாகக் குடும்பக் கார்டுகள் கிடைக்காதவர்களுக்கு விரைவாகக் குடும்பக் கார்டுகள் கிடைக்க ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து 1981 ஆம் ஆண்டில் நியாயக் விலைக் கடைகளின் மூலம் 24,000 டன் அரிசியை விற்றிருப்பதாகக் காட்டி இருக்கிறார்கள். இந்த ஆண்டு புரட்சித் தலைவரின் ஆட்சியிலே அவ்வாறு 24,000 டன் அரிசி கூட்டுறவுக் கடைகளின் மூலமாக விற்பனை செய்யப்பட்டிருக்கின்றது என்று அந்த மொத்த விற்பனையின் அளவைக் காட்டி இருக்கிறார்கள். மத்திய அரசு கூட்டுறவுக் கடைகளின் மூலம் விநியோகம் செய்வதற்காக நமக்குக் கொடுக்கின்ற கோதுமை 4,000 டன்தான். மாநில அரசு மத்திய அரசிடம் இந்தக் கோதுமையின் அளவை 10,000 டன்னாக உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று

கேட்டிருக்கிறார்கள். அவ்வாறு அதிக அளவுக்கு கோதுமையை மத்திய அரசு, மாநில அரசுக்குக் கொடுத்தால் நம்முடைய நாட்டிலே அரிசிச் செலவைக் குறைத்து இந்த வறட்சி இருக்கின்ற சூழ்நிலையிலே கோதுமையை அதிகமாக வினியோகிப்பதற்கு ஏதுவாக இருக்கும்.

அடுத்து கூட்டுறவுக் கடையின் கடைகளின் மூலம் விற்கப்படுகின்ற பருப்பு, எண்ணெய் போன்ற பொருட்களோடு அரிசி நொய்யையும் சேர்த்து வழங்க வேண்டும். இந்த நொய் என்பது தஞ்சையிலே இருக்கின்றது. அதற்கு அடுத்தபடியாக ஆந்திராவிலே நிறைய நொய் இருக்கின்றது. இந்த வறட்சி நோத்திலே இந்த நொய்யை கிராம மக்களுக்கு அளித்தால் அது அவர்களுக்கு பேருதவியாக இருக்கும்.

அடுத்து மக்களுக்கு வினியோகிப்பதற்காக தமிழக அரசுக்கு 30,000 டன் மண்ணெண்ணெய் கொடுக்கப்படுவதாக மத்திய அரசு அறிக்கை கொடுத்திருக்கின்றது. அதை சற்று அதிகமாக்கி மண்ணெண்ணெய் சுலபமான வழியிலே மக்களுக்குக் கிடைப்பதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நுகர்பொருள் வாணிபக் கழகம் ஏறக்குறைய 10 ஆண்டுகளாகச் செயல்பட்டுக்கொண்டு வருகின்றது. அதிலே 15.39 கோடி ரூபாய் டர்ன் ஓவர் காட்டியிருக்கிறார்கள். ஏறக்குறைய 180 கோடி அளவுக்கு இதிலே முதலீடு செய்துவிட்டு 15.39 கோடி ரூபாய் விற்பனையாகக் காட்டி இருப்பது ஒரு பெரிய அதிசயம் என்று சொல்லிவிட முடியாது. இன்னும் சுறுசுறுப்பாக அதிகாரிகளை இயங்கச் செய்து இதனைக் கண்காணிப்பதன் மூலம் இந்த விற்பனையை 30 கோடி ரூபாய் அளவுக்குக் கூட உயர்த்த முடியும். அந்த அளவுக்கு டர்ன் ஓவரைக் காட்ட முடியும் என்பதிலே ஐயமில்லை.

அடுத்து 1,75,000 ரூபாய் அளவுக்கு நெல்லூர் அரிசியை ஆந்திராவிலே இருந்து கொண்டு வருகிறார்கள். இன்னும் அதிகமான அளவுக்கு தமிழ் நாட்டிலே மகசூலிருக்கின்ற காலத்திலேயே கொண்டு வந்திருந்தால் தற்போது ஏற்பட்ட விலையேற்றமும் ஏற்பட்டிருக்காது. பற்றாக்குறையும் வந்திருக்காது. அடுத்து ஆற்காடு நகரிலே 18 இலட்சம் ரூபாய் அளவில் கிடங்குகளைக் கட்டுவதாக அரசு அறிவித்துள்ளது. அது ஏற்கெனவே பெரிய வியாபாரிகள் இருக்கின்ற நகரம். அங்கே 300-க்கு மேற்பட்ட, லைசன்ஸ் பெற்ற மொத்த வியாபாரிகள் இருக்கின்றனர். 80-க்கு மேற்பட்ட அரவை மில்கள்

1981 ஏப்ரல் 25] [திரு. ஏ. எம். சேதுராமன்]

இருக்கின்றன. லெவி கொடுக்கின்ற வியாபாரிகள் எல்லாம் அங்கே அதிகமாக இருப்பதால் அங்கே குடோன் கட்டுவதற்கும் மில் அமைப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்து கடன்களைப் பொறுத்தவரையிலே சிறிய விவசாயிகளுக்கு மட்டுமல்லாது, பெரிய விவசாயிகளுக்கும் கடன் தொல்லையிலிருந்து நிவாரணம் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். தனி நபர் கடன்களைப் பொறுத்தவரையிலே சுபிட்ச காலத்திலே ஒத்திவைத்திருக்கிறோம். அதுபோன்று இப்போது வறட்சி நிலவுகின்ற காலத்திலேயும் தனி நபர் கடன்களை எல்லாம் தள்ளிவைக்கின்ற நடவடிக்கையினை அரசு எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன், நன்றி வணக்கம்.

* திரு. ஏ. சந்திரசேகரன்: மதிப்பிற்குரிய பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டுக்கான மீனளம், நுகர்பொருள் வழங்கல் ஆகிய கோரிக்கைகள் மீது காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக என் கருத்துக்களை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் நாம் உணவுத் துறையில் தன்னிறைவு அடைந்துவிட்டோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் காங்கிரஸ் கட்சி ஆட்சி பீடத்தில் இருந்த போது நல்லபல திட்டங்களை போட்டதின் விளைவாகத்தான் இன்று நாம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். உணவு உற்பத்தியைப் பெருக்குகிற விவசாயிகள் ஆகட்டும் அல்லது அதை வாங்குகிறவர்கள் ஆகட்டும் அவர்களுக்கு முறையான விலை கிடைக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. ஆகவே நியாயவிலை கிடைக்கவேண்டும். பொதுவாக நாம் உணவு உற்பத்தியைப் பெருக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். 1966-ல் கோவையில் ஒரு நீதிபதி ஒரு தீர்ப்பு வழங்கும்போது அந்தத் தீர்ப்பிலே உணவு உற்பத்தியை எப்படி பெருக்கவேண்டும் என்று, எக்கனாமிக் இம்ப்ரூவ்மென்ட் பற்றியும் பல யோசனைகள் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பும் அவர் யோசனைகளும் பொதுப்பணித்துறை ஆய்வில் இருக்கிறது. அந்த யோசனைகளைக் கவனித்து செயல்பட்டால் நிச்சயமாக எக்கனாமிக் இம்ப்ரூவ்மென்ட் காண ஏதுவாகும் என்று இந்த சந்தர்ப்பத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக நீர்தான் தமிழகத்தைப் பொறுத்தவரையில் உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு தடைக்கல்லாக இருக்கிறது. உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று சொன்னால் நதிநீர் பிரச்னைகளுக்கு நாம் நல்லமுறையில்

தீர்வு காணவேண்டும். அந்த அடிப்படையில் அதற்குரிய அந்த நீதிபதி யோசனைகளை நிச்சயமாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். அந்த தீர்ப்பை விரைவாக ஆய்வு செய்தால் நிச்சயமாக நம் அரசுக்கு நல்ல வருவாய் கிடைக்கும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கார்ட்ஸ் வழங்கும் முறையில் ரூ. 1000-க்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்கு சர்க்கரை 5 கிலோ என்றும், ரூ. 500-1000-க்குள் இருக்கிறவர்களுக்கு 3 கிலோ என்றும், ரூ. 500-க்குக் கீழ் வருமானம் உள்ளவர் களுக்கு இரண்டு கிலோ என்றும் ஒரு முறையை அறிவித்திருக்கிறார்கள். பொதுவாக ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு ஆயிரம் ரூபாய் வருமானம் வருகிறது என்றால் அவர் வீட்டில் இரண்டு பேர்கள் இருப்பார்கள். ரூ. 500 வருமானம் உள்ளவர் வீட்டில் அதிக நபர்கள் இருக்கலாம். ஆகவே வருமான அடிப் படையில் கோட்டா பிக்ஸ் செய்வதன்மூலம் அதிகத் தேவை உள்ளவர்கள் அவர்களுக்கு வேண்டியதைப் பெறமுடியாத நிலைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். ஆகவே நாம் நபர்வாரி முறையில் இந்தக் கார்டுகளை வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என் தொகுதியில் பல கிராமங்களில் வெள்ளம் வந்தது. அந்த வெள்ளத்தில் பல குடிசைகள் பாதிக்கப்பட்டன. அப்படி பாதிக்கப் பட்டவர்களுக்கு இன்னும் கார்ட்ஸ் வழங்கப்படவில்லை. ஆகவே இதையும் கருத்தில்கொண்டு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவு அங்காடிகளில் கண்ட்ரோல் துணிகள் விற்கப் படுகின்றன. ஆனால் அங்குள்ளவர்கள் கண்ட்ரோல் துணிகளை அவர்களே எடுத்துக்கொள்கிறார்கள். அவர்களே பில்ஸ போட்டு துணிகளை எடுத்துக் கொள்கிற நிலையைப் பார்க்கிறோம். ஆகவே இதில் கவனம் செலுத்தி சரியான முறையில் செயல்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிவில் சப்ளைஸ் பொறுத்தவரையில் அதிகமான நிதி ஒதுக்கப்படவில்லை. இப்போது ஒதுக்கப்படுகிற நிதி போதுமானதாக இல்லை. சிவில் சப்ளைஸ் டிப்பார்ட்மென்டில் பல ஊழியர்கள் வேலை பார்க்கிறார்கள். அவர்கள் வேலை நிரந்தரமாக்கப்படவில்லை. ஆகவே அவர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1981 எப்ரல் 25] [திரு. ஏ. சந்திரசேகரன்]

அடுத்தபடியாக அய்யம்பாளையத்தில் கொட்டாங்குளம் ஏரி, மருதா நதியைச் சேர்ந்தது. 75 ஏக்கர் நிலப்பரப்புள்ளது. அதில் இருந்து பாசன வசதி செய்ய வேண்டுமென்று மக்கள் கேட்டார்கள். அதிகாரிகள் தண்ணீர் விடாததால் அங்கே தண்ணீர் கிடைக்காத அவலநிலை இருக்கிறது. இதெல்லாம் எதைக் காட்டுகிறது என்றால் அங்குள்ள அதிகாரிகள் பொறுப் போடு செயல்படாததைக் காட்டுகிறது.

அடுத்தபடியாக, இப்போது நம் தமிழகத்தில் வறட்சி நிலை இருக்கிறது. இந்த வறட்சி நிலையைப் போக்க என்ன செய்திருக்கிறார்கள்?

(நண்பகல் 12-00)

இப்போது நம்முடைய நெல்லை வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்கிற நிலை இருக்கிறது. அந்த முறையைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்பொழுது நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில், நமக்கே நெல் பற்றாக்குறை இருக்கிறது. ஆகவே அந்த அடிப்படையிலே நெல்லை ஏற்றுமதி செய்யக்கூடாது என்று இந்த அரிய சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மீனளத்தைப் பற்றி ஒரு சில கருத்துக்களை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்திய நாட்டைப் பொறுத்தவரையில் வேறு எந்த நாட்டுக்கும் கிடைக்காத ஓர் வரப்பிரசாதமாக அமைந்திருப்பது நமது நீண்ட கடற்கரைதான், மூன்று புறமும் கடல் வளம் கொண்ட நமது நாட்டில், ஒரு சில மாநிலங்களுக்கு மட்டுமே கிடைத்துள்ள அரிய வாய்ப்பாக நமது தமிழகத்திலும் கடல் வளம் அமைந்துள்ளது.

இந்தியாவின் கடலோர அளவு 5,500 கிலோ மீட்டர் என்றால் தமிழகத் திற்கு அதில் கிட்டத்தட்ட 1000 கிலோமீட்டருக்கு கடல் வளம் அமைந் துள்ளது. இந்தியா முழுவதும் சுமார் 65 லட்சம் மீனவர்கள் வாழ்கிறார்கள். அதில் குறைந்தது 5 லட்சம் பேர் தமிழ்நாட்டில் கடலை நம்பி வாழும் மக்கள்.

நிலத்தின் எல்லா வளங்களையும் பயன்படுத்தி எக்ஸாஸ்ட் ஆகிவிட்ட இந்த நிலையில் இப்பொழுது உலகம் முழுவதுமே கடல் வளத்தை நம்பி இருக்கும் காலம் இது. கடலுக்கடியில் இருந்து பெட்ரோல் ஏற்கெனவே எடுக்கப் படுகிறது. கனி வளமும் கடலுக்கடியில் அபரிமிதமாகப் புதைந்து கிடப்பதாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதைவிட முக்கியமான கடல் உணவைப் [illegible]

உலக முழுவதும் ஆராய்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்தியாவைப் பொறுத்தவரை நமது அந்நியச் செலாவணியில் பெரும் பகுதி கடல் உணவின் மூலமே கிடைக்கிறது. ஏறத்தாழ ஆண்டுதோறும் 400 கோடி ரூபாய்க்கும் அதிகமான இறால் மீன்கள் நாம் ஏற்றுமதி செய்கிறோம். ஜப்பான் நாட்டுக்கு நாம் ஏற்றுமதி செய்வதில் இரும்பு தாதுக்கு அடுத்த இடத்தைப் பெற்றிருப்பது இறால் மீன்கள்தான். கடல் உணவில் அதிகமான புரோட்டீன் சத்து இருக்கிறது, எளிதில் ஜீரணமாகக் கூடியது, கொழுப்புச் சத்து அதிகம் இல்லாதது என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளார்கள்.

நமக்கு இவ்வளவு அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் அந்த மீனவ குடி மக்கள் படும்பாட்டைப் பார்த்தால்தான் கண்ணீர் வருகிறது. பயங்கர அலைகளை எதிர்த்துப் போராடும் அந்த மக்கள் வாழ்வு முழுவதுமே போராட்டமாகத்தான் உள்ளது. அந்த மீனவ மக்களுக்கு வாழ்வில் எந்த உத்தரவாதமும் இல்லை. கடலிலும் ஆபத்து. கரையிலும் ஆபத்து. புயல் மழை எதுவந்தாலும் முதலில் அவர்களைத்தான் அது பாதிக்கிறது.

இயற்கையின் சீற்றத்தால் ஏற்படும் புயல் போதாது என்று இங்கே இன்னும் ஒரு புயல் வீசத் தொடங்கியுள்ளது. விசைப்படகு என்ற பெயரால் கட்டுமர மீனவர்களின் வாழ்வு பாழாகிறது. இறால் மீன்களுக்கு நல்ல விலை கிடைக்கிறது, என்று தெரிந்ததும் பெரும் பணக்காரர்கள் எல்லாம் போட் வாங்கிவிட்டார்கள். சுயமாக சுதந்திரமாக தொழில் நடத்திய மீனவ மக்கள் இன்று பணக்காரர்களுக்கு அடிமைகளாகிவிட்டனர்.

ஆளும் கட்சியான அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் நின்றபோதுகூட, கடற்கரையோரங்களில் செய்த பிரச்சாரங்களில் அவர்கள் என்ன சொன்னார்கள் என்று தெரியுமா? ஓட்டுப் போடுங்கள், போட்டுகளை ஒழிக்கிறோம் என்பதுதான் அந்தப் பிரச்சாரம். மீனவ மக்களும் நம்பி ஓட்டளித்தனர். ஆனால் போட்டுகள் ஒழிந்தனவா என்றால் இல்லை. அதிகரித்துள்ளன.

இந்த விசைப்படகுகளை அமுல்படுத்தியதின் நோக்கமே, ஆழ்கடலில் மீன் பிடிப்பதுதான்: ஆனால் இவர்கள் ஆழ்கடலுக்குப் போகாமல் கரையிலேயே—அதாவது கட்டுமர மீனவர்கள் வலை போடும் இடத்திலேயே மீன் பிடிப்பதால் ஏழை கட்டுமர-நாட்டுப் படகு மீனவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களின் வலைகள் கிழிக்கப்படுகின்றன. சிறு சிறு முட்டைகள் மிதந்துகொண்டு, குஞ்சுகள் மிதந்துகொண்டு, விசைப்படகுகளின் இழுவை [illegible] கொண்டு போவதால், இறால்களின் இனப் பெருக்கமே

பாதிக்கப்படுகிறது. இதன் காரணமாக கன்னியாகுமரி முதல் பழவேற்காடு வரை நடுக்கடலிலும், கரையிலும் கட்டுமர மீனவர்களுக்கும் விசைப்படகு காரர்களுக்கும் இடையே மோதல்கள் அடிக்கடி நடைபெற்று, இதுவரை 25 பேருக்கு மேல் உயிரிழந்திருக்கிறார்கள்.

நெல்லை மாவட்டத்தில் வீரபாண்டியன் பட்டினம் என்ற ஊரில் மீன்பிடி தொழிலில் ஈடுபடாதவர்களை கேரளாவில் இருந்து விசைப் படகுகளை வரவழைத்து இறால் பிடிக்கிறார்கள். இதனால் ஒவ்வொரு ஆண்டும் இறால் சீசன் வந்துவிட்டால் அங்கு கட்டுமர மீனவர்களுக்கும், விசைப்படகுக்கார் களுக்குமிடையே ஒரு யுத்தமே நடக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன் ஆத்திரமடைந்த கட்டுமர மீனவர்கள் 18 படகுகளுக்கு தீ வைத்துக் கொளுத்திய சம்பவம் நடைபெற்றது.

அடுத்தபடியாக, மீன்பிடி தொழிலை நவீனப்படுத்துவதாகச் சொல்லப் படுகிறது. ஆனால், அந்த மீன்பிடி வளர்ச்சிக்காகச் செய்யும் திட்டங்கள் அந்த மீனவர்களுக்குப் போகிறதா என்றால், போகவில்லை. தமிழக அரசில் மீன்வள இலாகா என்று இருக்கிறது. இந்த இலாகாவின் டைரக்டர்களாக இருந்தவர்கள் பலர் மீனே சாப்பிடாதவர்கள். இந்த இலாகாவினால் ஒதுக்கப் படும் படகுகள் மீனவர்களுக்குப் போவதில்லை. மீனவர்கள் இந்தப் படகை வாங்கப் பொருள் வசதியில்லை. எனவே, வசதி படைத்தவர்கள் ஏழை மீனவர்கள் என்ற பெயரால் விண்ணப்பம் செய்கிறார்கள். அவர்கள் படகை வாங்குகிறார்கள். படகு அவர்களுக்குச் சொந்தம். பெயரளவில் மட்டுமே மீனவர் உரிமையாளர். உண்மையில் அவர்கள் ஒரு கூலியாளாக இருக்கிற நிலைமையைப் பார்க்க முடிகிறது. இதே சென்னையில் ஓடும் விசைப் படகு களில் எத்தனை மீனவர்களுக்கு சொந்தம்? கடலிலேயே காலடி எடுத்து வைக்காத—ஷூட்டிங்குக்காகக்கூட கடலில் இறங்காத நடிகைகளுக் கெல்லாம்கூட விசைப்படகுகள் உள்ளன. அவர்கள் எல்லாம் மீனவர்களா? என்பதை சிந்தித்துப் பார்க்க கடமைப்பட்டிருக்கிறோம். (மணியடிக்கப் பெற்றது).

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று அவையில் நமது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் மீன்வளம், மற்றும் நகர் பொருள் வழங்கல் ஆகிய இரண்டு மானியங்களையும் வரவேற்று, எனது கருத்தினைச் சொல்ல விழைகிறேன். தமிழகத்தில் மீன்வளம் எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை

நாம் இங்கே இன்னும் ஆராய்ந்து பார்க்கவேண்டிய நிலையில் இருக்கிறோம். ஆகவேதான், நாவளம் கொண்டிருக்கின்ற மாண்புமிகு நாவலர் அவர்களிடம் மீனளத் துறை ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில், கல்வித் துறையைப் பொறுப்பேற்று, அது இன்றையதினம் அவர்களுடைய முயற்சியாலும், இப்போது இருக்கின்ற கல்வி அமைச்சர் அவர்களுடைய திறமையினாலும், இந்தியாவிலேயே கல்வித் துறையிலே தமிழகம்தான் முன்னிலையில் நிற்கிறது என்ற அறிவிப்பு வந்து கொண்டிருக்கிறது. இதுபோன்று, இன்றையதினம் மீனளத் துறையை மாண்புமிகு நாவலர் அவர்களிடம் ஒப்படைத்திருப்பது இன்னும் 10 ஆண்டு களுக்குள் இந்தியாவிலேயே மீனளத் துறையில் தமிழகம்தான் தலைசிறந்து விளங்குகிறது என்று ஒருநாள் செய்தி வரும் என்பதை நான் இந்த அவையில் என்னுடைய தூரதிருஷ்டிக் கண்ணோட்டத்தோடு சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.

இந்த மீனள மானியத்தில் மீனவ கிராமங்களுக்கு இணைப்புச் சாலை களுக்காக ரூ. 30 இலட்சமும், வீட்டு வசதியை முன்னிட்டு ரூ. 100 இலட்சமும் தரப்பட்டிருப்பது பாராட்டுக்குரியதாகும். அதை நான் வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன். அதையொட்டி, என்னுடைய கோரிக்கைகளை முன்வைக்க விழைகிறேன்.

என்னுடைய தொகுதியாகிய கடலாடி சட்டமன்றத் தொகுதியில், கடலோ ரத்திலுள்ள சேர்மாநகர், மூக்கையூர், முந்தல், பெரியபட்டணம், முத்துப் பேட்டை, பள்ளிவாசல்பாடு, சேதுக்கரை, களிமண்குண்டு போன்ற கிராமங்கள் எல்லாம் சாலை வசதி சிறிதும் இல்லாது, மின் வசதியில்லாமல் குடிசைகளிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த கிராமங்கள் அனைத்திற்கும் மீனளத் துறையின் மூலம் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு அரசு ஆலோசனை செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு நாட்டுப் படகுகள் மீனவர்களுக்கு இந்த மானியத்தில் அறிவித் துள்ளபடி 80 சதவிகிதம் விலையில் நைலான் நூல் விநியோகித்து, அதன் விலையைத் தவணைகளில் வசூல் செய்வது, மற்றும் இதுபோன்ற பொருள்கள் வழங்குவதற்கு இந்த அரசு முன்வந்துள்ளதை நான் பாராட்ட விழைகிறேன். அதுமட்டுமல்ல. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் மீனவ சமுதாயத்தினருக்கு 33-1/3 சதவிகிதம் மானியத்தில் நைலான் வலைகள், மற்றும் பொருள்களை வழங்குவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்துள்ளதை நான் பாராட்டுகிறேன். அதே தருணத்தில், இந்த மானியத்தைப் பயன்படுத்தி

1981 ஏப்ரல் 25] [திரு. வ. சத்தியமூர்த்தி]

நைலான் வலைகளை இந்த ஏழை மீனவர்களுக்கு வாங்குவதற்கு தேசியமய மாக்கப்பட்ட வங்கிகள் கடனுதவி அதிகமாக அளிக்க முன்வரவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே இந்த அவையிலே சுட்டிக்காட்டுவது என் கடமை என்று கருதுகிறேன். ஆகவே, அரசு தலையிட்டு, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளோடு தொடர்பு கொண்டு, பேச்சு வார்த்தைகள் நடத்தி, எந்தவிதத் தடங்கலும் இல்லாது மீனவர்களுக்கு நைலான் வலைகள் வாங்குவதற்கு, உடனடியாக இந்த அரசு ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

அதேபோல கடலிலே சென்று மீன் பிடிக்கும்போது உயிரிழக்கும் மீனவ தொழிலாளர்களுக்கு 5,000 ரூபாய் உதவி பணமாக அளிப்பது என்று அரசு கொள்கை அளவிலே ஏற்பு இதுவரை நூற்றுக்கும் அதிகமான பேர்களுக்கு அவ்வாறு தொகை வழங்கப்பட்டிருக்கிறது என்று அறிக்கை சமர்ப்பிக்கப்பட் டுள்ளது. அதை நான் பாராட்டுகிறேன். உயிர் இழந்த மீனவ தொழிலா ளர்கள் குழந்தைகள் அவருடைய தொழிலைச் சேர்ந்த மேற்படிப்புக்காக ரூபாய் 5,000 வரை செலவழிக்கப்படும் என்று அறிகிறேன். என்னுடைய தொகுதியின் சில குறைகளை சுட்டிக் காட்டுவது என்னுடைய கடமையாக நினைக்கிறேன். என்னுடைய தொகுதியைச் சார்ந்த 'ரோச்' மாநகரத்தில் கிராமத்தில் 1978 ஆம் ஆண்டு ஏற்பட்ட புயலின்போது 5 மீனவர்கள் அருகா மையிலுள்ள வேம்பார் கிராமத்தைச் சேர்ந்த விளாத்திக்குளம் தொகுதியைச் சேர்ந்த 4 மீனவர்கள் கடலிலே தப்பிவிட்டார்கள். அவர்கள் இறந்துவிட்டார் களா? உயிரோடு இருக்கிறார்களா என்ற விவரம் தெரியவில்லை. இரண்டு, மூன்று முறைகள் அவர்களுடைய குடும்பத்தினர் இலங்கை நாட்டிற்கு சென்று தேடி வந்திருக்கிறார்கள். அரசு இதில் முனைப்பாக செயல்பட்டு அந்த ஒன்பது பேர்கள் இலங்கையில் இருப்பதாக வதந்திகள் இருக்கிறது. அந்த அடிப்படை யில் இலங்கை நாட்டிற்கு அவர்களின் குடும்பத்தினர் சென்று வந்திருக்கி றார்கள். இருந்தும் விவரம் தெரியவில்லை. அவர்கள் உயிரோடு இருந்தால் அரசு கொண்டு வந்து சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில் அப்படி இறந்து விட்டார்கள் என்று அறியுமேயானால் அவர்களின் குடும் பத்தை காக்க அரசாங்கம் அளிக்க வேண்டிய தலா ஐந்தாயிரம் ரூபாயை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கடலிலே மீன் பிடிக்கச் செல்லும் தொழிலாளர்கள் இறந்து விட்டாலோ, தப்பி விட்டாலோ அவர்கள் இறந்து விட்டார்கள், அல்லது உயிரோடு இருக்கிறார்கள் என்பது அந்த மீனவ தொழிலாளர்களுடைய குடும்பத்திற்கு தெரிய முடிவதில்லை. கடலில் இறக்கும் மீனவ தொழிலாளர் இறந்து விட்டார்கள் என்ற ஒரு

சான்றிதழ் பெறுவதில் மிகவும் தாமதம் ஏற்படுகிறது. அதை நிவர்த்தி செய்ய தக்க நடவடிக்கைகளை அரசு ஏற்படுத்தி தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிழக்கு இராமநாதபுரம் பகுதியிலே, கடலோரப் பகுதியிலே இறால் மீன் அதிகமாக கிடைக்கிறது என்பதை அரசு அறியும். இறால் மீன்களை பதனிடும் தொழிற்சாலை இதுவரையில் அங்கே அமைக்கப்படாததன் காரணமாக கிழக்கு இராமநாதபுரத்தில் கிடைக்கும் இறால் மீன்கள் இன்றையதினம் தனி நபர் களால் பல வேன்களின் மூலம் ஏற்றிச் சென்று கேரளத்திலே பதனிட்டு அங்கிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதாக அறிகிறேன். இதைப் போக்க கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் நல்ல இடத்தைத் தேர்ந்தெடுத்து தமிழக அரசு இறால் மீன் பதனிடும் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பித்து வெளி நாடுகளுக்கு அவைகளை அனுப்பும் பணியினை தொடங்கி, அங்குள்ள மீனவ தொழிலாளர்களுக்கு இறால் மீன்களுக்கு நியாயமான விலை கிடைப் பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியாவிலேயே மிக அதிகமாக சங்கு கிடைக்கும் கடற்கரை பகுதி தமிழ் நாட்டில் குறிப்பிட்டு சொல்வதென்றால் கிழக்கு முகவை மாவட்டத்தில் இருக்கிறது. அங்கு தூத்துக்குடியிலே இராமேஸ்வரத்திலே, கன்னிராஜபுரம் போன்ற பகுதிகளிலே மிக அதிகமாக சங்குகள் கிடைக்கின்றன. நமது அரசாங்கம் மீன்வளத் துறையின் மூலம் மட்டும் ஆண்டுக்கு 12 இலட்சம் ரூபாய்க்கு அதிகமாக பெற்று வருகிறது என்பதாக அறிகிறேன். இந்த சங்குகள் அனுப்புவதை தொன்றுதொட்டு கல்கத்தாவிற்கே அனுப்பி வருகிறோம். இந்த சில தொழிலதிபர்கள் குறுகிய முதலீட்டில் சங்கு களிலிருந்து வளையல் தயாரிக்கும் தொழிற்சாலைகளை நடத்தி வருகிறார்கள். அவர்களுக்கு தங்கு தடையின்றி சங்குகள் கிடைப்பதற்கு அரசு வழிவகை செய்திட வேண்டும். நமது அரசு ஆணை பிரகாரம் சங்கில் கண்டதில் பாதியை கல்கத்தாவிற்கும் மீதியை இங்குள்ளவர்களுக்கும் விநியோகிக்கலாம்; அதை ஏலம் கூட விடலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அங்கே தோற்று விக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளை ஊக்குவிக்கும் வகையில், அதன்மூலம் குடிசைத் தொழில் போன்ற தொழில்கள் அபிவிருத்தி ஆகும் வகையில் வாய்ப்பு இருக்கிறது. சங்கை இங்கே வளையல்களாக டிசைன் போட்டுத்தர மறுத்தாலும், அறுக்கப்பட்ட வளையல்களை வடிவம் கொடுப்பதற்கு அங்கே தீப்பெட்டித் தொழிற்சாலை போன்று ஒவ்வொரு வீட்டிலும் ஒரு ராட்டினம்,

1981 ஏப்ரல் 25] (திரு. வ. சத்தியமூர்த்தி)

பல் சக்கரம் வைத்து சாதாரண பெண்கள்கூட செய்கிற வேலையாக இருக்கிறது. ஆகவே பெண்கள் இரண்டு வளையல்களை செப்பனிட்டு கொடுப்பார்களானால் அவர்களுக்கு இரண்டு ரூபாய் வரையில் கூலி கிடைக்கும் நிலை ஏற்படுகிறது. இந்த நிலைமை கல்கத்தாவில் மிக நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. ஆகவே அதேபோல சங்கிலிருந்து வளையல்களை முழுமையாக தயாரிக்கும் தொழிலை தமிழ்நாட்டில் ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், சங்கை மீனளத் துறையிலே மட்டும்தான் விற்க வேண்டுமென்ற சட்டம் இருக்கிறது. ஆனால் தனியார்கள் சிலர், சமூக விரோதிகள் கள்ளக்கடத்தல் வியாபாரத்திலே மிகத் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள் என்பது தெளிவாகப் புரிகின்ற ஒன்றாகும். அதைத்தடுத்து நிறுத்துகிற வகையிலே கடுமையான சட்டத்தைப் போட்டு தடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய பகுதியிலே ரோச்மா நகரப் பகுதியிலே கேரளாவைச் சேர்ந்தவர்கள், கொல்லிமணி என்ற வலையை வைத்துக்கொண்டு அங்கே வந்து 2 பர்லாங் நீளத்திற்கு அந்த வலையை கடலின் மேல் மட்டத்கிலிருந்து கீழ்மட்டம் வரையிலே விரித்து அந்தச் சுற்றுப் புறங்களிலே உள்ள பெரிய மீன்கள், சிறிய மீன்கள் பிடித்துக்கொண்டு போய் இருக்கிறார்கள். இராமநாதபுரத்திலே உள்ள பிஷரிஸ் சொசைட்டிக்கு நான் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு சொல்லியும், தந்திகள் கொடுத்தும் கூட எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது மிகவும் கண்டிக்கத்தக்கது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மூன்று மாதங்களுக்கு முன்னாலே வாலிநோக்கத்திலே தைவான் நாட்டுக் கப்பல்கள் 8 பெரிய கப்பல்கள்—பயணிகள் அதிகமாக பயணம் செய்யக்கூடிய பெரிய கப்பல்கள், ஒவ்வொன்றும் பெரிய மாடிக் கட்டடம் போன்று இருந்தது—15 நாட்களாக மீன் பிடித்தார்கள். அங்கே உள்ள தாசில்தாரும் மற்ற அதிகாரிகளும் போட் மூலமாக அங்கே சென்று பார்த்து வந்தும்கூட அதை கப்பற்படை அதிகாரிகளுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக பிரதமர், ஜனாதிபதி அவர்களுக்குத் தகவல்கள் கொடுக்கப்பட்டும், தந்திகள் கொடுக்கப்பட்டும் அந்தக் கப்பல்கள் பிடிக்கப்படவில்லை. அவை எங்கிருந்து வந்தன என்றுகூட கண்டுபிடிக்கப்படவில்லை என்பதற்காக நான் என்னுடைய வருத்தத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நுகர் பொருள் வழங்கல் பற்றிய மானியக் கோரிக்கையின்மீது பேசுகின்ற போது சிறப்பாக விநியோக முறை பாராட்டத்தக்கதாக இருக்கிறது. தமிழகத்திலே, தி.மு.க, ஆட்சிக் காலத்திலே வறட்சி ஏற்பட்டபோது 3 ரூபாய்

விற்ற அரிசி 8 ரூபாயாக உயர்ந்தது. இன்றைய தினம் நாடு முழுவதும் அதிர்ச்சியடையக்கூடிய வகையிலே வறட்சி இருந்தும் உணவுபொருட்கள் விநியோக முறை செம்மையாக சீராக இருந்துவருகிறது. லெவி முறையினால் விவசாயிகள் பாதிக்கப்படவில்லை என்ற நல்ல செய்தி வருகிறது. இந்த லெவி முறையை நான் வரவேற்கிறேன். உணவுப் பொருட்கள், அத்தியாவசியப் பண்டங்கள் தமிழ்நாட்டிலே பதுக்கப்படாத நிலைமை இருந்து வருகிறது. இன்னொன்று இங்கே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. உணவுப்பொருள் வழங்கு துறை குற்றப் புலனாய்வு துறை 1980 ஆம் ஆண்டிலே 5 கோடி ரூபாய் மதிப்புள்ள உணவுப் பொருட்களை கைப்பற்றியிருக்கிறது என்று குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. தீவிரக் கண்காணிப்போடு அந்தத் துறை செயல் பட்டுக்கொண்டு வருகிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு ஆகும். உணவுப் பொருள் தங்குதடையின்றிக் கிடைக்கிறது, அதற்குக் காரணம் இந்தத் துறையால் பதுக்கல் தடுத்து நிறுத்தப்பட்டிருப்பதுதான். சர்க்கரை விநியோகத்தைப் பொறுத்தவரையிலே கிராமங்களிலே 80 சதவீதம்தான் கொடுக்கப்படுகிறது. அதை மாற்றியமைத்து ஒவ்வொரு ரேஷன் கார்டுக்கும் 1 கிலோ சர்க்கரை என்ற முறையிலே கொடுக்க வேண்டும். என்னுடைய தனிப்பட்ட கருத்தையும் இங்கே சொல்ல விரும்புகிறேன். நகர்ப்புறங்களில மாநகராட்சிகளில் உள்ளவர்களுக்கு 1,000 ரூபாய் அளவுக்கு வருமானம் உள்ள வர்களுக்கு 5 கிலோ சர்க்கரை கொடுக்கப்படுகிறது. ஆனால் கிராமங்களிலே ஊராட்சி பகுதிகளிலே உள்ளவர்கள், 500 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கு 1 கிலோ தான் கொடுக்கப்படுகிறது. இது சமுதாய அமைப்பில் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை. இப்போது விநியோக முறைக்காக இப்படிச் செய்திருந்தாலும் அதிகமான வருமானமுள்ளவர்கள் அதிக விலைகொடுத்து வாங்கிக்கொள்ளலாம், ஆகவே ஊராட்சிப் பகுதிகளிலே உள்ள குறைந்த வருமானக்காரர்களுக்கும் போதுமான சர்க்கரை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

* திரு. டி. மணி : மாற்றுத் தலைவர் அவர்களே, நுகர்பொருள் வழங்கல், மீனளம் குறித்த மானியக் கோரிக்கைகள்மீது நான் சார்ந்திருக்கின்ற கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் போதுமான நெல் மற்றும் தானியங்களைச் சேகரிக் காததின் விளைவாக நம்முடைய மாநிலத்திலே பொதுவாகப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, சர்க்கார் கையாண்டு வருகின்ற லெவிக்

1981 ஏப்ரல் 25] (திரு. டி. மணி)

கொள்கையின் காரணமாக வெளி மார்க்கெட்டிலே அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலைமையிருக்கிறது. லெவிக் கொள்கையின் காரணமாக, வியாபாரிகள் அதிக விலைகொடுத்து வாங்கி அரசுக்குக் குறைந்த விலைக்குத் தருகின்ற காரணத்தால் ஓப்பன் மார்க்கெட்டிலே அரிசியின் விலை அதிகமாகிக் கொண்டே செல்லுகின்ற நிலைமையிருக்கிறது. அந்த நிலையை மாற்ற நுகர் பொருள் வாணிப கழகம் அரிசி, நெல் போன்ற உணவு தானியங்களை கொள் முதல் செய்து இதை முறைபடுத்தி, சீராகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரிசியையும், கோதுமையையும் பொறுத்தவரையில் நம்முடைய மாநிலத்தின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வெளி மாநிலங்களிலிருந்து போதுமான அரிசியையும், கோதுமையையும் வாங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது மாநிலம் முழுவதும் 17,000 நியாய விலைக்கடைகள் இருப்ப தாகச் சொல்லப்படுகிறது. 500 குடும்பக் கார்டுகளுக்கு ஒரு நியாய விலைக் கடை என்ற முறையில் ஏற்பாடு செய்ய வேண்டும். இப்பொழுது ஆயிரம், இரண்டாயிரம் குடும்பகார்டுகள் ஒரு நியாய விலை கடைக்கு இருக்கிறது. அதன் காரணமாக அரிசி அல்லது மற்ற உணவு தானியங்களை வாங்குவதற்கு வரும் மக்கள் நீண்ட நேரம் காத்து நிற்கும் நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, 500 குடும்பக் கார்டுகளுக்கு ஒரு கடை என்ற முறையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிராமப்பகுதிகளில் சர்க்கரையின் அளவைக் குறைத்திருக்கிறார்கள். அந்த அளவை ஓரளவுக்குக் கூட்ட வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். பாமலின் ஆயில் குடும்ப அட்டைகளுக்கு வாரந்தோறும் கிடைக்கின்ற வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும்.

மண்ணெண்ணெய் விநியோகத்தையும் முறைப்படுத்தி வாரம் தோறும் கிடைக்கும் வகையில் வழிவகைகள் செய்தாக வேண்டும். சில கிராமங்களில் மின்சாரப் பற்றாக்குறை அல்லது மின்சாரம் இல்லாத குறை இன்று பரவலாக இருக்கிறது. எனவே, அங்கெல்லாம் மண்ணெண்ணெயைப் போதுமான அளவு விநியோகம் செய்து, அவர்களுக்குக் கொடுக்கின்ற அளவையும் அதிகப் படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல மாவட்டங்களிலும், தாலுக்காக்களிலும் கொடுக்கப்படுகின்ற அரிசியின் அளவு போதுமானதாக இல்லை. சென்னை நகரம் நீங்கலாக இருக்கும் பல பகுதிகளில் குடும்பத்திற்கு வாரத்திற்கு 6 கிலோ அரிசிதான் வழங்குகிறார்கள். அது போதுமானது அல்ல. குறிப்பாகக் கன்னியாகுமரி மாவட்டத்திலே, விளவங்கோடு, கல்குளம் தாலுக்காக்களிலே வெளி மார்க்கெட்டிலே அரிசி, மற்றும் தானியங்கள் கிடைப்பதில்லை. கடலோரப் பகுதிகளில், மலையோரப் பகுதிகளில் இருக்கின்றவர்களுக்கும், கிராமப் பகுதி மக்களுக்கும் ரப்பர் பிளான்டேஷன் தொழிலாளர்களுக்கும் வாரம் 6 கிலோ அரிசி என்பது மூன்று நாட்களுக்குத்தான் சரியாக இருக்கிறது. ஆகவே, அந்த பகுதிக்கு அரிசியின் அளவை கூட்ட கட்டாய ரேஷன்—' ஸ்டேட்சுட்டரி ரேஷன் ' முறையை அமுல் படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வெளிமார்க்கெட்டில் விற்கப்படும் அரிசியின் விலையைக் கட்டுப்படுத்து வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் இருக்கின்ற எந்த மாவட்டத்தை எடுத்துக் கொண்டாலும், அங்கேயுள்ள குவாலிட்டி இன்ஸ்பெக்டர்கள் அரிசியின் தரத்தைப் பார்க்கின்ற பொழுது திருச்சி மாவட்டமோ நெல்லை மாவட்டமோ வேறு எந்த மாவட்ட மானாலும் அரிசியின் தரம் மோசமாக இருந்தால் இந்த அரிசி வேண்டுமா என்று கேட்டால் அவர்கள் வேண்டாமென்று சொல்லிவிடுகிறார்கள். இப்படிப் போய்ப் போய்க் கடைசியாகக் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு உளுத்துப் போன நாற்றமடிக்கின்ற, உண்பதற்கு இலாயக்கற்ற அரிசியை விநியோகிக் கின்ற நிலைமை பல மாதங்களாக நடந்து வருகிறது. இதற்கு முன்னால் இதுபற்றி ஆட்சித் தலைவரிடத்திலேயும் சொல்லப்பட்டிருக்கிறது. அபிவிருத்தி மன்றக் கூட்டத்திலேயும் அரிசியைக் காட்டி இந்தப் பிரச்னையைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் மாற்றம் ஒன்றும் ஏற்படவில்லை. ஆகவே தமிழகத்தின் எல்லையோரப் பகுதியில் இருக்கிற அந்த மக்களுக்கு நியாய விலைக் கடைகள் மூலம் நல்ல ரகமான அரிசியைக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் வெளிமார்க்கெட்டில் வருகின்ற நல்ல ரக அரிசி கேரள மாநிலத் திற்குச் சென்று விடுகிறது. ஆகவே, குமரி மாவட்ட மக்களுக்கு நல்ல ரக அரிசியைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவுப் பண்டங்களை விநியோகம் செய்வதைப் பொறுத்தவரையில், சென்னை நகரில் எடுத்துக்கொண்டால் அவற்றின் விலை மிகவும் அதிகமாக இருக்கிறது. பப்ளிக் சர்வீஸ் கமிஷன் நடத்தும் காண்டீனில் மிகக்குறைந்த

விலையில் தரமான உணவுப் பண்டங்களைக் கொடுக்கிறார்கள். ஆனால் வெளிக்கடைகளில் அதிக விலைக்கு உணவுப் பண்டங்கள் விற்கப்படுகிறது. இந்த நிலைமையை மாற்றி எல்லாக் கடைகளிலும் குறைந்த விலைக்கு கிடைக்கும்படியான வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மீன் வளத்தைப்பற்றி எடுத்துக்கொண்டால், மீன் மிக முக்கியமான உணவுப் பொருளாகப் பயன்படுகிறது. அதை அதிகமாக அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால் அதிகமான அன்னியச் செலாவணி கிடைக்கும் என்பது உண்மைதான். ஆனாலும் நம் நாட்டிலேயே இலட்சக்கணக்கான மக்கள் இந்த மீனை உணவுப்பொருளாக ஏற்றுக்கொண்டிருக்கின்ற காரணத்தி னால் அதை நம் நாட்டிலேயே சரியாக விநியோகம் செய்கின்ற சம்பிரதா யத்தை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிக அளவில் சந்தை கடைகளில் மீன் அங்காடிகளை ஏற்பாடு செய்து மக்களுக்குக் குறைந்த விலைக்குச் சாதாரணமாக மீன்கள் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மீன்களை ஆழ்கடலிலிருந்து அதிக அளவில் பிடிப்பதற்கேற்ற வகையில் சிறிய வகை கப்பல்களை ஏற்பாடு செய்ய வேண்டும். அதிக அளவில் மீன்களைப் பிடிக்க விசைப் படகுகளையும் அதிக அளவில் ஏற்பாடு செய்ய வேண்டும். விசைப் படகுக்காரர்களுக்கும் நாட்டுப் படகுக்காரர்களுக்கும் இதனால் ஏற்படும் தகராறுகளை முடித்துக்கொள்வதற்காக, மூன்று மைல் களுக்கு அப்பால்தான் விசைப்படகுக்காரர்கள் சென்று மீன்பிடிக்க வேண்டு மென்ற உத்தரவாதமும், கட்டுப்பாடும் இருந்தால்தான் இவர்களிடையே ஏற்படும் தகராறுகளைத் தவிர்க்க முடியும். மாநிலத்தின் பல்வேறு பகுதி களிலேயும், குறிப்பாக என்னுடைய பகுதியிலே இப்படிப்பட்ட தகராறுகள் பல நேரங்களில் நடந்துள்ளன. அப்படிப்பட்ட சம்பவங்களை தடுக்க மேற் கூறிய நடவடிக்கைகளை கையாண்டால்தான் அதைத் தடுக்க முடியும். ஆகவே, இந்த மீனளத்தைப் பொறுத்த மட்டிலே, நம்முடைய நாட்டிலே அதிகப்படியான மீன் உற்பத்தி செய்ய நம்முடைய மாநிலத்திலே உற்பத்தியைப் பெருக்குவதற்காக இறால் பண்ணைகளை அதிகமாக உற்பத்தி செய்வதோடு, நம்முடைய நீர்த் தேக்கங்களிலே, அணைக்கட்டுகளிலே நீர்வற்றாத குளங் களிலே, ஏரிகளிலே அதிகப்படியான மீன்களைத் வளர்ப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்திலே மணக்குடிக்காயல் என்று சொல்கின்ற 3 மைல் நீளத்திற்கு அதிகமான ஒரு காயல் இருக்கிறது. அந்தக் காயலிலே, இந்த இறால் மீன் பண்ணை வளர்ப்பதற்கான சாத்தியக்கூறுகள்

இருக்கின்றன. பேச்சிப்பாறை, சிற்றாறு போன்ற நீர்த்தேக்கங்களிலே விசேஷமான மீன்களை நான் நேரடியாகப் பார்த்த ஒரு நிகழ்ச்சியைச் சொல்கிறேன். கட்லா, மிருகால், லேவியா, கல்பாஸ் போன்ற விசேஷமான மீன்கள் இருக்கின்றன. கட்லா என்ற மீனினுடைய அளவு, 3 ஆண்டுகளுக்குள் 40 கிலோ வரை வளரக் கூடிய தன்மையிருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட மீன்களை, இந்த நீர்த் தேக்கங்களிலே அதிகப்படியாக வளர்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதுவும் நீர் வற்றாத குளங்களில் இந்த மீன்களை வளர்க்க ஏற்பாடு செய்யவேண்டும். அப்படி மீன்வளத்தைப் பெருக்கவேண்டும். நம்முடைய நாட்டிலே உணவுப் பற்றாக்குறை இருக்கிற காரணத்தாலே, இலட்சக்கணக்கான மக்கள் இந்த மீனை உணவாக ஏற்றுக் கொள்கிற காரணத்தாலே, இந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆனால், அந்த நீர்த் தேக்கங்களிலே மீனைப் பிடிக்கப் போதுமான படகுகள் இல்லை. படகு இருந்தால் அதிலே இயந்திரம் இல்லை. பேச்சிப் பாறையிலே இருக்கிற படகிலே இயந்திரம் இல்லை. அதுபோல், சிற்றாறிலே யுள்ள படகிலே இயந்திரம் இல்லை. இந்தக் குறைபாடுகள் இருக்கின்றன. ஆகையால், அந்தக் குறைபாடுகளை அகற்றி, அந்த மீனவ மக்களுக்கு உதவக் கூடிய வகையிலே அந்தப் பிராந்தியத்திலே இந்தப் பிரச்னைகளுக்கு முடிவு கட்டியாக வேண்டும்.

இன்னொரு முக்கியமான பிரச்சினை என்னவென்றால், தமிழகத்திலிருந்து மீன்களை அதிகமான அளவுக்கு ஏற்றுமதி செய்யப் போதுமான துறை முகங்கள் இல்லாத குறைபாடு இருக்கிறது. அதற்காக சிறிய துறைமுகங்கள் என்று சொல்லி, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்கனவே சின்னமுட்டத்தில் ஒரு சிறிய மீன்பிடி துறைமுகத்தை ஏற்பாடு செய்வதாகச் சொல்லி இருந்தார்கள். ஆண்டுகள் சில தாண்டி விட்டன. இன்னும் ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. சின்ன முட்டத்திலும் அதுபோன்று தூத்தூரிலும் அந்தச் சின்ன மீன் பிடி துறைமுகங்கள் ஏற்பாடு செய்வதோடு, குளச்சலிலே, இருக்கிற துறைமுகத்தைப் பயன்படுத்தக்கூடிய அளவிலே உருவாக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோன்று அந்த மாவட்ட மக்களின் குறைகளை தீர்க்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, கடந்த சுமார் 4 மாதங்களாக, ஜனவரி மாதத்திலிருந்து, இந்த மாதம் வரையிலும் குமரி மாவட்டத்திலே இருக்கிற கடலிலே பொதுவாக மீன் கிடைப்பதே இல்லை. ஏற்கனவே இரண்டு மாதங்களுக்கு முன்னால்,

நம்முடைய கதர் கிராமத் தொழில் அமைச்சர் அவர்கள் அங்கே வள்ளவிளைக்கு அருகாமையில் ஒரு தண்ணீர் தொட்டியைத் திறக்க வந்தபொழுது, அந்த மக்கள் நேரடியாகப் பல்வேறு மகஜர்களை அவரிடம் கொடுத்தார்கள். மூன்று மாதங்களாக எங்களுக்கு மீனே கிடைக்கவில்லை. ஆகவே, எங்களுடைய வாழ்க்கை பெரும் பிரச்னையாக ஆகிவிட்டது. 1961-62-லே இப்படி ஒரு நிலை ஏற்பட்ட காலத்திலே, அந்த மீனவ மக்களுக்கு இலவசமாக அரிசி அதுபோல் மரவள்ளிக் கிழங்கும் விநியோகம் செய்தார்கள். அந்த நிலையை அவர்கள் சுட்டிக்காட்டி, எங்களுக்கு அப்படி இந்த மாநில சர்க்கார் உதவி செய்யவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, இந்த மீன்களைச் சந்தைக்குக் கொண்டுவரப் போதுமான கடலோர சாலை வசதிகள் போதுமானவையாக இல்லை. சென்னையிலே யிருந்து குமரி முனையின் கடைசிப் பகுதிவரை, குமரி முனையிலிருந்து நீரோடி வரை, குமரியிலிருந்து எரேமியம் முனைவரை, சாலை வசதிகளில்லாத குறை இருக்கிறது. அதை நிவர்த்தி செய்யவேண்டும். அதே போன்று அந்தப் பகுதிகளில் கடல் கொந்தளிப்பினால், வீடுகள் ஆக்கிரமிக்கப்படுகின்ற ஒரு அபாயம் எந்த நேரத்திலும் இருக்கிறது. கடந்த 3 வருடங்களிலே, எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்திலே, 6 தடவை கடல் கொந்தளிப்பினால், நூற்றுக்கணக்கான வீடுகள் சேதம் அடைந்தன. ரூ. 500 லிருந்து ஆயிரக்கணக்கான விலை மதிப்புள்ள வீடுகள் சேதம் அடைந்துள்ளன. அவை குறிப்பாக நீரோடிபூத்துறை, சின்னத்துறை, கொமியன்துறை, சாத்தூர். ஆனால், அரசாங்கம் கொடுத்த உதவி, ரூ. 100-லிருந்து ரூ. 150 வரைதான் அது, அவர்களுக்குத் தென்னங்கீற்று ஓலை வாங்கி அடைத்துக் கொள்ளக்கூடப் போதுமானதாக இல்லை. இதற்கு முன்னால், ஒரு கால கட்டத்திலே, அவர்களுக்கு இலவசமாக வீடுகளைக் கட்டித் தந்தார்கள். அது போன்று இலவசமாக வீடுகளைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அதுமட்டுமல்ல, மீனவ மக்களுக்குள் விசைப் படகுக்காரர்களுக்கும் சாதாரண படகுக்காரர்களுக்கும் வருகின்ற சண்டையைத் தவிர்க்கப் போதுமான, தகுதியான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும். குறிப்பாக, நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், குமரி மாவட்டத்திலே, நம்முடைய இருக்கின்றது. தொன்றுதொட்டு, அந்தக் குமரிப் பகுதிகளில் மீன் பிடித்து இருக்கின்றது. தொன்றுதொட்டு, அந்தக் குமரிப் பகுதிகளில் மீன் பிடித்து வாழ்கின்றார்கள், கடலை நம்பி வாழ்கின்ற மக்கள். சமீபகாலத்திலே விவேகானந்த ராக் வந்த பிறகு, பல்வேறு பகுதிகளிலே மீனவர்களுக்கும் அவர்களுக்கும் சண்டை சச்சரவுகள் ஏற்பட்டு வருகின்றன. ஆகவே, அதை

களைப் போக்குகின்ற வகையிலே, எங்களுடைய சுருக்கமான யோசனை என்னவென்றால், அந்த விவேகானந்த பாறைக்குச் செல்கின்ற அந்தப் பகுதியிலே, படகை உபயோகிக்கின்ற நேரத்திலேதான் அந்த சிக்கல் வருகிறது. ஆகவே அந்த பகுதியிலே விவேகானந்தர் பாறைக்குச் செல்ல ஒரு பாலத்தைக் கட்டி இந்தப் பிரச்சினையை முடித்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஆகவே குறிப்பாக இந்தப் பிரச்சினையில் தீர்வு காணவில்லை என்று சொன்னால் அங்கே நிலைமை சீரடையக் கூடிய நிலை இல்லை.

(பிற்பகல் 12-30)

அதுமட்டுமல்ல, கடலிலே மீன் பிடிக்க செல்லும்போது கடல் கொந்தளிப் பால் சில நேரங்களில் மீனவ மக்கள் காணாமல் போய்விடுகிறார்கள். அப்ப டிக் காணாமல் போய்விடுகிறவர்களுக்கு ஏதாவது உதவித் தொகை வேண்டும் என்று கேட்டால் காணாமல் போனவர்களுடைய சடலங்கள் கிடைக்கவில்லை என்று சொல்லி உதவித் தொகை மறுக்கப்படுகிறது என்று எனக்குப் பதில் தெரிவித்திருக்கிறார்கள். கடந்த 4 மாதங்களுக்கு முன்னாலே ஆத்தூரிலே நான்கு மீனவர்கள் கடலில் அடித்துச் செல்லப் பட்டார்கள். அவர்களுடைய சடலங்கள் கிடைக்கவில்லை. இன்றுவரையில் அவர்களுடைய குடும்பங்கள் நடுத்தெருவில் நிர்க்கதியாக நிற்கின்றார்கள். கணவனை இழந்த மனைவி, தகப்பனை இழந்த மக்கள் கண்ணீரும் கவலையுமாக அந்தக் குடும்பங்கள் 14, 17 பேர்கள் எந்தவிதமான வாழ்க்கை வசதியும் இல்லாமல் இருக்கிறார்கள். அரசிடம் கேட்டால் அவர்களிடமிருந்து வருகிற பதில் இந்த முறையில் இருக் கிறது. ஆகவே சடலம் கிடைத்தாலும் சரி, கிடைக்காமல் போனாலும் சரி, ஒரு 3 மாத காலத்திற்கு அவர்களைப் பற்றி விவரம் இல்லை என்று சொன் னால், அந்த மீனவ மக்களுக்கு உதவக் கூடிய, அவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கக் கூடிய 5 ஆயிரம் இருக்கிறதே அதை கொடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். தூத்தூரில் 17—12—1980-ல் விசுவாசம், அந்தோணிப்பிள்ளை, பேதிரு, அருளப்பன் என்ற அந்த 4 பேர்களும் இதுவரையில் காணாமல் போயிருக்கிறார்கள்.

நான் இன்னொன்றைக் குறிப்பிடவிரும்புகிறேன். பனைமரத்திலே இருந்து விழுந்து இறந்து போன தொழிலாளர்களுக்கு விபத்து நிதி 5,000 என்று அறிவித்தார்கள். சிலருக்கு கொடுக்கவும் செய்தார்கள் அது நல்ல

காரியம்தான். ஆனால் இப்போது அது கையிலே வருகிறதா என்று கேட்டால் இல்லை. கையிலே வருவது வாய்க்கு எட்டவில்லை. கடைசியாக இப்போது ஒரு ஜி. ஓ. போட்டிருக்கிறார்கள். அது என்ன ஜி. ஓ. என்றால் உயரமான பனை மரத்தில் இருந்து விழுந்து சந்தேகத்திற்கிடமின்றி சான்றிதழ் வழங்கப்படாததால், அவர்களுக்கு மறுக்கப்படுகிறது. அதேபோல தான், மீனவத் தொழிலாளர்கள் சடலம் கிடைக்காததால் அவர்களுடைய அந்த நிதி மறுக்கப்படுகிறது. ஆகவே இந்தக் குறைபாடுகளைப் போக்கி இந்தப் பிரச்சினையில், தாராளமான மனப்பான்மையோடு அரசு நடந்து கொண்டு விபத்து நிதி வழங்குவதோடு அவர்களுடைய வீடு கட்டும் பிரச்சினை, சாலை வசதிகள், அதுபோல் படகுகள் பிரச்சினைகளை நியாயமாக தீர்வு காணவேண்டும் என்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மீன்வளம், நுகர்பொருள் சம்பந்தமான மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றியைக் கூறி, மீன்வளத் துறை தமிழ்நாட்டிலே பின்தங்கி இருக்கின்றது. மீனவர்களுக்கு புரட்சித் தலைவர் அரசு மீனவ நண்பனாக இருந்து பல நல்ல காரியங்களைச் செய்து வருகிறது. புரட்சித் தலைவர் மீனவ மக்களிடையே, மீனவ மக்கள் அவர்களிடத்திலே வைத்திருக்கிற நம்பிக்கையினால்தான் மீனவர்களுக்கு இந்த அரசு பல நல்ல காரியங்களைச் செய்து வருகின்றது. என்றாலும் இன்னும் மீனவ மக்கள் அறியாமையிலே, படிப்பு அறிவு இல்லாதவர்களாக இருக்கிற காரணத்தினால், வசதி படைத்தவர்கள் அல்லது அதிகாரத்திலே இருக்கிறவர்கள் அந்த மீனவ மக்களை அடிப்படுத்து, அவர்களுக்கு வருகிற சலுகைகளை எல்லாம் தங்களுடைய சலுகையாக மாற்றி வருகிற நிலைமை இருக்கிறது. அதைப் போக்குவதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக் கொண்டாலும், அதிகாரிகளுடைய சக்திக்கு முன்னாலே அதை மாற்றுவதற்கு முடியாமல் இன்னும் தடைக்கல்லாக இருந்து வருகிறார்கள். எனவே மீனவ மக்களுக்கு இன்னும் அதிகமாக நன்மைகள் செய்யவேண்டுமானால், மீனவ மக்கள் மட்டுமே கூட்டுறவு சங்கங்களிலே இருக்கவேண்டும் என்ற நிலைமை இருந்து, மீனவர் அல்லாதவர்கள் கூட்டுறவுச் சங்கங்களிலே இருந்து விலக்கவேண்டும் என்று அரசு உத்தரவிட்டாலும், அதை வழக்குமன்றத்திற்கு எடுத்துச் சென்று அதற்குத் தடை வாங்கி இன்னும் அவர்களே மீனவர் அல்லாதவர்களே தலைவராக இருந்து கொண்டு, அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் என்ற பெயராலே மீனவர்களுக்குக் கிடைக்கக் கூடிய நலன் எல்லாம் தங்களுடைய

நலன்களாக உருவாக்கிக் கொண்டு இருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் பாபநாசம், கும்பகோணம் மாயவரம் போன்ற பகுதிகளிலே இப்படி அதிக மாக இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல கடல் மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மெக்கனைஸ்ட்டு போட்டு என்று அமல் படுத்துகிற நேரத்திலே வசதி படைத்தவர்கள் அப் படிப்பட்ட படகுகளை வாங்கி, மீனவர்களுக்கு எந்த பலனும் கிடைக்காமல் செய்திருக்கிற நிலைமை இருக்கிறது. இந்த நிலைமைகளை மாற்றி அதிக மான படகுகள் மீனவர்களுக்கு, கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் வழங்கு வதற்கு அரசு முன்வரவேண்டும். அந்தப் படகுகளின் விலை இன்று அதிக மாக இருக்கின்றது. சாதாரண மீனவர்கள் இன்று அந்த சங்கங்களின் மூலம் இதைப் பெற முடியாமல் இருக்கிறார்கள்.

தமிழ் நாட்டில் 4 படகு கட்டும் துறை இருந்தாலும் கூட, அந்த 'யார்ட் டுகளுக்கு', 'எ.ஆர்.டி.சி' ஸ்கீம் மூலமாக உதவி கிடைக்காததால், அந்த போட் இன்ஜின் பொருத்தப்படாமல், படகுகள் கெட்டுப்போய், மீண்டும் ரிப்பேர் செய்யப்பட்டு, அதன் காரணமாக அந்தப் படகின் விலை அதிகமா கிறது. மேலும், தனியார் உற்பத்தி செய்யும் போட் விலை குறைவாக இருக் கிறது. இந்த யார்ட்டில் செய்யப்படும் போட்டுகள் தரத்தில் சிறந்தவையாக இருந்தாலும், அதை வாங்குவதற்கு மீனவர்கள் வராததற்குக் காரணம், இந்த விலை அதிகம் தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, மீனவர்களுக்கு 20 சதவிகிதம் மானியம் என்று வழங்குவதை, 50 சதவிகித மானியம் என்று மாற்றியளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த முறையில் செய்தால் போட்டுகள் குறைந்த விலையில் மீனவர்களுக்குக் கிடைப்பதோடு மட்டுமல்ல, அவர்களுடைய வாழ்வில் ஒளி ஏற்றிவைத்ததாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி மீனவர்கள் வாழும் பகுதியை அதிகமாகக் கொண்டது. கிட்டத்தட்ட 30 மைல் அளவிற்கு மீனவர்கள் வாழும் பகுதி இருக்கிறது. அந்தப் பகுதிகளில் 10,000 முதல் 15,000 வரையில் மீனவ மக்கள் வாழ்கிறார்கள். அந்தப் பகுதியில் வாழும் மீனவர்களுக்கு இன்னும் வீட்டு வசதி செய்து தரப்படவில்லை. கடந்த ஆண்டு வேதாரண்யம் தாலுக்காவில் 500 வீடுகள் கட்டித்தரப்படும் என்று அதற்கான சிபார்சுகள் எல்லாம் செய்யப் பட்டு இருந்தும் இன்னும் ஒரு வீடு கூட கட்டப்படவில்லை. அதற்குக் காரணம், அந்த வேதாரண்யம் ஆறுகாட்டுத் துறை பகுதியில் உள்ள நிலம் கோவிலுக்குச் சொந்தமானது என்றும், அந்த நிலத்தை மீனவர்கள் கூட்டுற

வுச் சங்கம் விலைக்கு வாங்கிக்கொள்ளத் தயாராக இருந்தும், அந்த நிலத்திற்கு இன்னும் விலை நிர்ணயிக்காததால், நிலம் கிடைக்காத காரணத்தால் வீடுகள் கட்டப்படாமல் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. மேலும், புஷ்பவனம் பகுதியில் சாலை வசதி இல்லாததால் 7 மைல் தூரம் கடற்கரையில் நடந்து வந்து, அல்லது சைக்கிள்களில் மீன்களை எடுத்து வந்து, அல்லது தலைச் சுமையாக எடுத்து வந்து விற்கவேண்டியிருக்கிறது. இந்தப் பகுதிக்கு சாலை வசதி செய்து தர ரூ 7.80 லட்சத்தில் கடந்த ஆண்டு திட்டம் தீட்டப்பட்ட போதிலும், இன்னும் அது நிறைவேற்றப்படாமல் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒளி விளக்கு அமைத்துத் தரும் திட்டத்தின் அடிப்படையில், வானமா தேவி பகுதியில் ஒளி விளக்குகள் விரைவில் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

புயல் வெள்ளப்பாதுகாப்பு இல்லங்கள் மீனவர்களுக்குக் கட்டிக்கொடுக் கிறோம் என்று சொல்லி, சில இடங்களில் ஊருக்கு உள்ளே கட்டியிருக் கிறார்கள். வானமாதேவி பகுதியில் வசிக்கும் மீனவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பு வசதியும் இல்லை. சமூகக்கூடம் கிடையாது. ஆகவே, அங்கே சமூகக் கூடம் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் பள்ளிக்கூடத்திற்கு கட்டிடம் இல்லை. கூரை கட்டடத்தில் இருக் கிறது. ஆகவே, அதற்கு ஒரு நிரந்தரக் கட்டிடம் கட்டித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில், பள்ளிக்கூடம் இல்லாத நாட்களில் அதை வேறு காரியங்களுக்கும் அவர்களால் பயன்படுத்த முடியும்.

அதேபோல, சிறுதலைக்காட்டுப் பகுதியில் 500-க்கு மேல் மீனவர்கள் குடும்பங்கள் இருக்கின்றன. அவர்களுக்கு சரியான வீட்டு வசதி இல்லை. ஆகவே, இந்த ஆண்டு 100 வீடுகளாவது அந்தப் பகுதியில் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர்கள் வாழும் பகுதியில் அரிசி, அல்லது மண்ணெண்ணை, சர்க்கரை போன்ற பொருள்களை எல்லாம் வெளிக்கிராமங்களில் இருந்து அவர்கள் வாங்கிவரவேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட பொருள்களை அங்கங்கே இருக்கும் மீனவர்கள் கூட்டுறவுச் சங்கம் மூலம் அளிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்தால், அவர்கள் வாங்கிச் செல்வதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மீன்பிடித் துறைமுகம் ஒன்றை வேதாரண்யம், ஆற்றுக்காட்டுத்துறையில் அமைத்துத் தரவேண்டும். அங்கே 150 விசைப்படகுகள் இருந்தபோதிலும் சரியான பாதுகாப்பு வசதி இல்லாததால் தங்குவதற்கு முடியவில்லை. புயல் வெள்ளக்காலங்களில் நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, அங்கே மீன்பிடி துறைமுகம் கட்டித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு வாய்ப்பாக இருக்கும் வகையில் வடிகால் வெட்டிக்கொடுக்க வேண்டும் என்று அங்கேயிருக்கின்றவர்கள் கேட்டுக்கொண்டார்கள். அதற்கான செலவையும் ஏற்றுக்கொள்வதாகச் சொன்னார்கள். இருப்பினும், பராமரிப்பு செலவு அதிக மாகும்—ஆகவே, ஒப்புக்கொள்ள முடியாது என்று சொல்லப்பட்டதால், அந்தப் பராமரிப்புச் செலவையும் அவர்களே ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதால், அந்த வடிகால் வெட்டித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள மீனவப் பகுதிகளில் குறிப்பாக புஷ்ப வனம் பகுதியில் ஒளிவிளக்குத் திட்டத்தையும், புயல்வெள்ளக் காலங்களில் பாதுகாப்பிற்காக 2—3 சமூகக் கூடங்களும், வீட்டு வசதி, சாலைவசதி போன்றவைகளும், குடிநீர் வசதியும் செய்து தரவேண்டும் என்று கேட்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

திரு. செ. சிவசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் மீனளத்திற்கு 3,41,14,000 ரூபாயும், நுகர்பொருள் வழங்கு வதற்கு 9,96,25,000 ரூபாயும் இன்றைக்கு கேட்டிருக்கிறார்கள்.

தமிழகம் 1000 கிலோமீட்டர் நீள கடற் பகுதியைக் கொண்டதாக இருக் கிறது. சுமார் 9.5 இலட்சம் ஏக்கர் பரப்பளவு உள் நாட்டிலும் உவர்நீர் நிலைகளிலும் மீன் வளர்க்க வாய்ப்பு உள்ளது. சாதாரண உணவுக்கு அடுத்தபடியாக மீன் உணவு தமிழக மக்களுக்கு மிகவும் மலிவாக கிடைக் கிறது. இன்னும் அபிவிருத்தி செய்தால் நாமும் உண்டு, வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யும் சாத்தியக் கூறுகள் நிறைய உள்ளது. மத்திய அரசு உதவியோடு மீன் வளத்திற்கு 2,400 இலட்சமும், உலக வங்கி உதவியோடு 1,000 இலட்சமும் செலவுகள் செய்ய ஏற்பாடுகள் உள்ளன.

2,300 விசைப்படகுகளும் 38,000 நாட்டுப் படகுகளும் உள்ளன. இறால் மீனில் மட்டும் 30 கோடிக்குமேல் கிடைக்கிறது. உள்நாட்டில் மீன் உற்பத்தி 1,20,000 டன்னிலிருந்து 1,60,000 டன்னாக உயர்ந்துள்ளது. நல்ல தரமுள்ள

1981 ஏப்ரல் 25] (திரு. செ. சிவசாமி)

மீன் குஞ்சுகளை உற்பத்திச் செய்து, நீர்வளம் நிறைந்த கண்மாய், குளம், குட்டைகளில் விட்டு வளர்க்க ஏற்பாடு செய்யவேண்டும்.

கடலில் 70 சதவிகிதம் நாட்டுப் படகுகளால் மீன் பிடிக்கப்படுகிறது. மீனவர்களுக்கு கிராம இணைப்புச் சாலைகளுக்காக 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது போதுமானதல்ல. இணைப்புச் சாலைகள் ஒருங்கிணைக்கப் பட்டு முக்கிய நெடுஞ்சாலையும் நல்ல பராமரிப்பில் கொண்டுவரப்பட வேண்டும். கிழக்குக் கடற்கரை சாலை அடிக்கடி கடல் கொந்தளிப்பு, வெள்ளத்தால் பாதிப்பதால் போக்குவரத்து நின்று மீன் யாவும் கெட்டுவிடு கிறது. இந்தக் குறைபாட்டை சீக்கிரமாக போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வீட்டு வசதிக்கு 100 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது போதுமான தல்ல. மீன் பிடிப்பில் ஈடுபட்ட எல்லா மீனவக் குடும்பங்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும். திருப்பாலைக்குடி, தொண்டி, கணகொள்ளான் பட்டினம், தேவிப்பட்டினம், சுந்தரபாண்டியபட்டினம், முல்லிமுனை, காரங் காடு, மோர்பண்ணை, நம்புதாளை போன்ற இடங்களில் அதிகமான வீடுகள் கட்டப்பட வேண்டும்.

உவர் நீர் மீன் பண்ணைகளில் இரால் வளர்த்தல் திட்டத்தின் மூலம் அடையாற்றில் ஆராய்ச்சி பண்ணை பற்றியும் அதிராமபட்டிணத்தில் 50 ஹெக்டேரில் கூட்டுறவு முறையில் அமைப்பது பற்றியும் சொல்லப்பட்டிருக் கிறது. ஆனால் கடலோரப் பகுதி முழுவதும் ஷாவலஸ், டாட்டா, பிர்லா, முத்தையா செட்டியார், பன்னீர்தாஸ் போன்றவர்களுக்கு உடல் நீர் இரால் வளர்ப்புக்கு குத்தகைக்கு விடப்பட்டிருப்பது மறைக்கப்பட்டிருக்கிறது. இவைகள் யாவும் மீனவர்களுக்குத்தான் கொடுக்கப்பட வேண்டும்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மீன் வளர்ப்புக்கு நிதி உதவி அளித்திட மறுத்துவிட்டது மத்திய அரசு. எனினும் மாநில அரசு தன்னிடமுள்ள நிதி வசதியைக் கொண்டு பணியை தொடரும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இது மத்திய அரசின் ஜன விரோத போக்கின் குணாம்சமாகும். இதற்கு ஒரு முடிவு கட்டியாக வேண்டும்.

மீனவர் கிராமங்கள் ஒவ்வொன்றிலும் வழிகாட்டும் விளக்குகள் அமைக்கப் பட வேண்டும். மீன் இறக்கு மேடைகள் அமைக்கப்பட வேண்டும். புயல் பாதுகாப்பு இல்லங்கள் ஒவ்வொரு கிராமத்திலும் ஜனத்தொகை அடிப்படையில்

அமைக்கப்பட வேண்டும். அபாயச் சங்குகள் அமைக்கப்பட வேண்டும். படகில் செல்பவர்களுக்கு நல்ல கம்பளி ஆடைகள் கொடுக்கப்பட வேண்டும். ஒவ்வொரு படகிலும் ஒயர்லெஸ் செட்டுகள் பொருத்தி, கரையிலிருப்பவர்களுக்கும் மீன் பிடிப்பவர்களுக்கும் தொடர்பு ஏற்படுத்தப்பட வேண்டும். தரமான நல்ல நைலான் வலைகள், நூல்கள் கொடுக்கப்பட வேண்டும். நாட்டுப் படகுகளை படிப்படியாக மெஷின் போட்டுகளாக மாற்ற வேண்டும். பாய்மரங்களும், கம்பங்களும், துடுப்புகளும், பாய்த் துணியும் மலிவான விலையில் கொடுக்கப்பட வேண்டும்.

கடல் பாசியிலிருந்து சாயப் பொருள்கள் செய்வதை மகாராஷ்டிரத்திற்கு கொண்டு செல்லாமல் இங்கேயே தொழிற்சாலைகள் ஆரம்பிக்க வேண்டும் மீன்களைப் பக்குவமாக வைத்திருக்கத் தேவையான பனிக்கட்டியை உடனுக்குடன் மலிவாகத் தயார்செய்து கொடுக்க வேண்டும். எல்லா கடலோரப் பகுதிகளிலும் பனிக்கட்டி உற்பத்தி நிலையங்களை ஏற்படுத்த வேண்டும். மண்டபத்திலுள்ள கடல் ஆராய்ச்சி பகுதியை விரிவுபடுத்த வேண்டும். ஏற்கெனவே மண்டபத்திலிருந்த ஒரு பகுதி கேரளாவுக்கு போய்விட்டது. ஆகவே, இருக்கிற பகுதியை நல்லமுறையில் அபிவிருத்தி செய்ய வேண்டும்.

கடல் உயிரினங்கள் பாசிகளை ஆராய்ச்சி செய்யும் குருசடை தீவில் கட்டிடங்கள் பழுது பார்க்கப்பட வேண்டும். அங்கே ஆராய்ச்சியாளர்கள், நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் வந்து தங்கி ஆராய்ச்சி செய்யக்கூடிய அளவில் வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

அயல்நாட்டுப் படகுகள் வந்து மீன்பிடிப்பதிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும். விளாத்திக்குளத்திற்குப் பக்கத்தில் கன்னிசேரிக்கு அருகில் கடந்த 17, 18 தேதிகளில் தைவான், ஜப்பான் படகுகள் வந்து மீன் பிடித்துக்கொண்டு போய்விட்டன. இதுபோன்று வாலிநோக்கத்திலே கடந்த 2 மாதங்களுக்கு முன்புகூட 8 படகுகள் வந்து மீன் பிடித்துக்கொண்டு போய்விட்டன. இது தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றது. இப்படித் தொடர்ந்து மீன்பிடிக்கப் பட்டும் இதுபற்றி எந்தவிதமான பாதுகாப்பு நடவடிக்கைகளையும் எடுத்த தாகத் தெரியவில்லை. பாதுகாப்புக்காக மண்டபத்தில் வைக்கப்பட்ட சிறிய படைப்பிரிவு வேடிக்கைதான் பார்த்துக்கொண்டிருக்கின்றது. அந்தப் படைப் பிரிவை அபிவிருத்தி செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யவேண்டும்.

கடல் வேவு விமானங்கள் கடல் எல்லை முழுவதையும் கண்காணிக்க வேண்டும். இலங்கை கடற்படை கச்சத்தீவைக் கைப்பற்றியதற்குப் பிறகு

அடிக்கடி மோதல் ஏற்படுகின்றது. சுடப்படுகிறார்கள். செத்துமடிகிறார்கள். கூட்டாகக் கைது செய்துகொண்டு போகிறார்கள். அதுகுறித்து எந்த நடவடிக்கையும் இல்லாமல் உள்ளது. பாதுகாப்பை பலப்படுத்த வேண்டும்.

அடுத்து மீன் பிடிப்பதில் புதிய நவீன முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். 150 படகுகளுக்கு மேல் 4 நிலையங்களிலே கட்டப்பட்டு அவை இரண்டு வருடங்களாக என்ஜின் பொருத்தப்படாமல் வெய்யிலிலும் மழையிலும் காய்ந்துகொண்டிருக்கின்றன. அந்தப் படகுகள் எல்லாம் கெட்டுப்போகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே அவைகளுக்கு உடனடியாக இன்ஜின் பொருத்தி சாதாரண மக்களுக்கு மீன் பிடிக்க உதவி செய்கின்ற வகையிலே அந்தப் படகுகளைக் கொடுக்கவேண்டும். அதிலே ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு வேலை உத்தரவாதம் செய்யப்படவேண்டும். அதிகமான போட்டுகளைச் செய்து மலிவு விலையில் அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கின்றபோது ஆபத்துக்குள்ளாகி இறந்தால் அவர்களுக்கு ரூபாய் 10,000 கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். பல மனுக்கள் இன்னும் பைசல் செய்யப்படாமல் இருக்கின்றன. அவைகளை எல்லாம் உடனடியாகப் பைசல் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்து சங்கு எடுப்பதற்கு முன்பு இருந்தது போன்று எநதவிதமான நிபந்தனைகளும் இல்லாமல் கடலில் சங்கு எடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேணடும். சங்குக்கு நியாய விலை கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். சங்கிலிருந்து வளையல், மோதிரம் ஆகியவற்றைச் செய்யும் தொழிற்சாலைகளை இங்கேயே ஆரம்பிக்கவேண்டும். இப்போது கல்கத்தாவிலேதான் அத்தனையும் செய்யப்படுகின்றது. சமீபத்திலே தமிழகத்திலே சங்கு குளிப்பது என்ற அந்தப் பணியே நின்றுவிட்டது. நல்ல தரமான முத்துக்களை உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். தமிழகத்திலே முத்துக்குளிப்பது என்பது ஒரு பழமையான பணியாக இருந்தாலும் அது சமீப காலத்திலே நின்றுவிட்டது. அதை அபிவிருத்தி செய்யவேண்டும்.

அடுத்து கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த கிறிஸ்துவ பரதவர்களுக்கு சலுகை அளிப்பதைப்போல் நெல்லை முகவை மாவட்ட பரதவர்களுக்கும் எல்லா சலுகைகளையும் அளிக்கவேண்டும். அடுத்து முத்து குளிக்கும்போது 20, 30 அடி ஆழம் கடலுக்குள் மூச்சைப் பிடித்துக் கொண்டு போகிறார்கள். அவர்களுக்கு நவீன சாதனங்களைக் கொடுத்து தொழில் நடத்தவேண்டும். அவர்களுக்கு மீன்கள், சுழல்களால் ஆபத்து ஏற்பட்டால் அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கவேண்டும். ஆக்ஸிஜன் வாயு

நிரப்பப்பட்ட சிலிண்டர் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். அடுத்து வலம்புரிச் சங்கு கிடைத்தால் அதனை எடுத்து வந்த தொழிலாளர்களுக்குத் தான் அதன் விலையிலே பெரும்பகுதி கொடுக்கப்படவேண்டும்.

அடுத்து விசைப்படகுகள் ஒதுக்குவதைப் பொறுத்தவரையிலே முன்பு போல் அரசாங்கமே ஒதுக்கவேண்டும். தற்போது பாங்குகள் இதைச் செய்வதால் செலவு அதிகமாக ஆகின்றது. வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த வேண்டும் என்றால் மீன்கள் வலையிலே படாதபோது மீனவர்களால் எப்படி முடியும்? ஆகவே அந்த மீனவர்களுக்கு உதவி செய்கின்ற வகையிலே வாங்கிய கடன்களைத் தள்ளுபடி செய்யவேண்டும். அடுத்து கன்னியாகுமரி மாவட்டத்திலே கடன்கள் பூராவும் கட்டி முடிக்கப்பட்டும் பல மீனவர்களுக்கு இன்னும் 'ஓனர்ஷிப்' அவர்கள் பெயருக்கு மாற்றப்படவில்லை. உடனடியாக அதை மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். உலக வங்கி கடன் கொடுத்து கண்டிஷன் போடுகின்றது என்பதற்காக முழுவதும் ஆழ்கடல் மீன்பிடிவழியில் சென்றுவிடக் கூடாது. ஆகவே சிறிய நாட்டுப் படகுக்காரர்களுக்கு உதவி செய்யக்கூடிய வகையிலே நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இந்த நவீன காலத்திலேகூட சினாவில் கட்டுமரத்தை வைத்துத்தான் மீன்பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். இதை எல்லாம் கணக்கிலே எடுத்துக்கொண்டு கட்டு மரத்தின் மூலமே மீன்கள் அதிகமாகப் பிடிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

அடுத்து மீனவர்களுக்கு படிப்புக்காக இலவசப் புத்தகம் கொடுக்க வேண்டும். அவர்களின் குழந்தைகள் படிப்பதற்குரிய வசதியைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ரேஷன் கடைகளில் சப்ளை செய்யும் அரிசி மிகவும் தரம் குறைந்த தாக உள்ளது. நல்ல அரிசியாக சப்ளை செய்யவேண்டும். நாள் ஒன்றுக்கு ஒரு குடும்பத்துக்கு 2 கிலோ அரிசி வீதம் வாரத்திற்கு 14 கிலோ அரிசி சப்ளை செய்யப்பட வேண்டும்.

அடுத்து கிராமங்களிலும் டவுன்களிலும் 500 கார்டுகளுக்கு ஒரு ரேஷன் கடை வீதம் கடைகள் திறந்து சப்ளை செய்யப்பட வேண்டும். அரிசி, பருப்பு, மண்ணெண்ணை போன்ற அத்தியாவசியப் பொருட்கள் தட்டுப்பாடு இன்றி கடைகளில் வியாபாரம் செய்யவேண்டும்.

1981 ஏப்ரல் 25] (திரு. செ. சிவசாமி)

பல இடங்களில் இன்னும் கார்டுகள் சரியானபடி சப்ளை செய்யப்பட வில்லை. விடுதலாகியுள்ள யாவருக்கும் உடனடியாக கார்டுகள் கொடுக்க ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

(பிற்பகல் 12-50)

தராசு படிக்கற்கள் யாவும் ஒழுங்கான முறையில் இருக்கின்றனவா என்று அடிக்கடி அதிகாரிகள் பார்வையிட வேண்டும். கொடுக்கப்படும் சீனி போது மானதாக இல்லை. கூடுதலாகக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவைகளையெல்லாம் உடனடியாகக் கவனித்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, சந்தர்ப்பம் அளித்தமைக்காக நன்றி சொல்லி அமர்கிறேன். வணக்கம்.

திரு. த. வீராசாமி: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மீன்வளத் துறை, நுகர் பொருள் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது பேச வாய்ப்பு அளித்தமைக்காக உங்களுக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இன்று நாட்டில் மிக முக்கியமான உணவு பொருள் வழங்கு துறையின் மீது நல்ல பல திட்டங்களை தீட்டி இந்த அவையிலே சமர்ப்பித்திருக்கிறார்கள். கடந்த காலத்தில் இருந்த மன்னர் களும், பல ஆட்சியாளர்களும் இந்த உணவுப் பொருள் வழங்குத் துறையிலே நல்ல அக்கறையைக் காட்டாததினால்தான் மன்னர்கள் முடியிழந்தார்கள், அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தவர்கள் மக்களின் நம்பிக்கையை இழந்தார்கள் என்பதை நாம் நன்கு அறிவோம்.

இன்று புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே உணவுத் துறையைப் பொறுப்பேற்றிருக்கிற மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், நாட்டு மக்களுக்கு நல்ல நியாயமான முறையிலே உணவினை வழங்கிட நல்ல பல திட்டங்களை தீட்டி, கிராமப்புறத்து மக்களும், நகர்ப்புறத்து மக்களைப் போன்று, இன்று சகாய விலையிலே உணவுப் பொருள்களை பெருகிற நல்ல நிலைமையை ஏற்படுத்தி, இந்த சமுதாயம் நல்ல உணவினைப் பெற்று நிம்மதி யாக உணவு உண்டு வாழ்வதற்கான ஒரு ஏற்றத்தை உருவாக்கித் தந்திருக் கிறார்கள். அதற்காக நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்களை நான் மனமாரப் பாராட்டி நன்றி தெரிவிக்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

மீன்வளத் துறையை எடுத்துக்கொண்டால், மீன் ஒரு நல்ல புரதச் சத்து நிறைந்த உணவுப் பொருள் என்பது மட்டும் அல்லாமல், இன்றைக்கு நாட்டிற்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகிற வகையில் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கிற துறையாக இருக்கிற காரணத்தால், மீன் வளத் துறையில் அதிக அக்கறை எடுத்துக்கொண்டு, 1951-52 லே 81,700 டன்களாக இருந்த மீன் உற்பத்தியை 1979-80 ஆம் ஆண்டிலே 3,76,689 டன்களாக உயர்த்துவதற்கான முயற்சிகள் செய்யப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்து, புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே மீன் உற்பத்தியை அதிகரித்திருப்பதற்காக, இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே இன்று மீன் பிடிப்பது என்பது பொருளாதார வளர்ச்சியில் முக்கிய இடத்தைப் பெற்று, அந்நியச் செலவாணியை ஈட்டுகிற ஒரு தொழில் என்ற முறையில், தமிழக அரசு மீன் வளத்துறைக்கு அதிக அக்கறை காட்டி, அந்தத் துறையில் மீன் பிடிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிற மீனவர்கள் நல்வாழ்வு பெறுவதற்கு, அரும்பாடு பட்டுக் கொண்டிருக்கிறார்கள், என்பதையும் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

மீன் உணவு என்று சொன்னால், கிராமப்புறங்களிலே குறிப்பாகச் சொல்வார்கள். உணவு சரியாக உண்ணாதவன்கூட மீன் குழம்பு என்று சொன்னால், சற்று அதிகமாக சோறு உண்பான் என்று சொல்வார்கள். அந்த வகையில் மீன் உணவு இன்று தமிழகத்தில் எல்லோரிடத்திலேயும் சிறப்பான ஒரு இடத்தை பெற்றிருக்கிறது, என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிப்பட்ட அந்த மீன்வளத் துறையிலே, இன்று மீன் பிடிப்பதில் ஈடுபட்டிருக்கக் கூடிய அந்த மீனவர்களுக்கு, தமிழக அரசு நல்ல பல நன்மைகளை செய்து வருகிறது. உதாரணமாக, மீனவர்களுக்கு வசிக்கக் கூடிய கிராமங்களுக்கு சாலைகள் அமைக்கிற பணிக்காக இந்த அரசு 30 லட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறது. அதுமட்டும் அல்லாமல், மீனவர்களுக்கு ஆண்டுதோறும் 100 லட்சம் ரூபாயை ஒதுக்கி, அதன்கீழ் இதுவரை 580 லட்சங்கள் வழங்கப்பட்டு, 9,931 மீனவர் குடியிருப்புகளைக் கட்ட வகை செய்யப்பட்டதில், 4,705 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு, பாக்கி வீடுகளை இந்த ஆண்டில் கட்டவும் வகை செய்யப்பட்டுள்ளது. இதற்காக இந்த அரசை நான் பாராட்ட விரும்புகிறேன்

இந்த அரசு இன்று மீன்பிடிப்பதில் ஈடுபட்டிருக்கிற மீனவர்கள் தங்கள் உயிரை இழக்கும் நேரத்தில், அவர்களது குடும்பத்தினருக்கு ரூ. 5,000 அளிக்கிற நிலையையும் அதற்கும் மேலாக அவர்கள் குழந்தைகள் மேல் படிப்பிற்காக ரூ. 5,000 உதவி அளிக்கிற ஒரு நிலையையும் இந்த அரசு உருவாக்கியிருக்கிறது.

நான் மாண்புமிகு அவை முன்னவர், நாவலர் அவர்களை வேண்டிக் கொள்வது என்னவெனில், தமிழ்நாடு முத்துக்குளிப்பதில் மிகவும் சிறந்து விளங்கியது. கிரேக்கம், ரோம போன்ற நாடுகளிலிருந்து வியாபாரிகள் வந்து நம்முடைய சங்க காலத்தில் முத்துக்களை வாங்கிச் சென்ற ஒரு நிலை தமிழ்நாட்டில் இருந்தது என்பதை நான் நினைவூட்டி மறுபடியும் அந்த நிலையை உருவாக்க மாண்புமிகு நாவலர் அவர்கள் முத்துக்குளிக்கும் தொழில் நல்ல சிறந்த தொழிலாக விளங்கிட ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று உணவுத் துறையை எடுத்துக்கொண்டால் நாட்டில் இன்று இரண்டு வகையான பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. நாட்டில் எவ்வளவுதான் உற்பத்தி பெருகியிருந்தாலும்கூட அப்படி பெருகியிருக்கிற உற்பத்தி விளை பொருள்களை முறையாக சீராக பகிர்ந்துகொடுக்காவிட்டால் அங்கே பற்றாக் குறை ஏற்படுகிறது. செயற்கை முறையில் பற்றாக்குறை ஏற்படுகிறது. அதே நேரத்தில் நாட்டில் இயற்கைச் சீற்றம் காரணமாக விளைபொருள்கள் பாதிக்கப்படுகிற நிலை காரணமாகவும் பற்றாக்குறை ஏற்படுகிறது. அதிகமாக விளைந்தும் செயற்கைமுறையில் உருவாக்கப்படுகிற பற்றாக்குறை, மறுபுறம் இயற்கைச் சீற்றம் காரணமாக ஏற்படும் பற்றாக்குறை என்று இருவகைகளில் பற்றாக்குறை ஏற்படுகிறது. அரசாங்கம் நல்லமுறையில் விளைபொருள்களை உற்பத்தி செய்கிற உற்பத்தியாளர்களிடமிருந்து உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களை வாங்கி சேமித்து வைத்து சீரான சிறப்பான முறையில் நாட்டு மக்களுக்கு பகிர்ந்து கொடுக்கக்கூடிய நிலையில்தான் அங்கே நல்லமுறையில் விநியோகம் ஏற்படுகிறது. நாட்டில் இருக்கிற மக்கள் குறைந்த விலையில் தரமுள்ள பொருள்களை வாங்கி தாங்கள் உண்டு நல்லமுறையில் வாழ்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அந்த வகையில் நாவலர் அவர்கள் இன்று நாட்டில் வறுமை ஏற்பட்டிருந்தாலும்கூட இன்று உற்பத்தி செய்த பொருள்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் வாங்கி சீரான முறையில் நாட்டுமக்களுக்குப் பகிர்ந்தளிக்கக்கூடிய வகையில் லெவி முறையைக் கொண்டுவந்து இன்று விவசாயிகள் பாதிக்கப் படாத வகையில்—அன்னிய நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிற பொருள்களுக்கு லெவி முறை இல்லாத நிலையில்—இன்று மொத்த வியாபாரி

களிடமிருந்து 40 சதவிகிதம் லெவி பெற்று நாட்டுமக்களுக்கு நல்லமுறையில் உணவு பகிர்ந்தளிக்கிற ஒரு நல்ல லெவி முறையைக் கொண்டு வந்திருக்கிறார்கள், அந்த லெவி முறையை பாராட்டி வரவேற்கிறேன்.

இன்று 1980 நவம்பர் திங்கள் தமிழ்நாட்டில் 7,500 டன்னிலிருந்து 11,000 டன் அரிசி பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கிறது பொது விநியோக முறையில். 1980 ஜனவரி திங்கள் 18,000 டன் அரிசி பொது விநியோக முறையில் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கிறது. 1981 ஜனவரியில் 27,000 டன் அரிசி இன்று பொது விநியோக முறையில் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கிறது.

இன்று நெல் கொள்முதல் விலையை எடுத்துக்கொண்டால் 1981-ம் ஆண்டு ரூ. 105,109,113 என்று தமிழக அரசு நாட்டு மக்களுக்கு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் கொடுத்தார்கள். சாதாரண ரகத்திற்கு ரூ. 115, சன்ன ரகத்திற்கு ரூ. 119, மிக சன்ன ரகத்திற்கு ரூ. 125 என்று தமிழக அரசு நெல் விலையை உயர்த்தி விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது. நெல் விலையை எடுத்துக்கொண்டால் கொடுக்கப்படுகிற விலை விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலையாக இருக்கிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். இன்று மத்திய விவசாய விலைவாசி நிர்ணயக் குழு கோதுமைக்கு க்விண்டாலுக்கு ரூ. 130 என்று நிர்ணயித்திருக்கிறது. அதே நேரத்தில் இன்று நெல்லுக்கு 105,109,113 என்ற முறையில் தரத்திற்கேற்ப விலை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நெல்லுககு க்விண்டால் ஒன்றுக்கு ரூ. 130 மத்திய அரசு நிர்ணயிக்கவேண்டும் என்று வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று என் உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

(பிற்பகல் 1-00)

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மாமன்றத்தினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, நுகர்பொருள் வழங்கல் பற்றிய மானியக் கோரிக்கையில் நான் சார்ந்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தப் பேரவையின் முன் வைக்கப்பட்டிருக்கிற நுகர்பொருள் வழங்கல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பை நான் ரொம்பக் கவனமாகப் படித்துப் பார்த்தேன். அதிலே நம்முடைய நிதியமைச்சர் அவர்கள், மரியாதைக்குரிய நாவலர் அவர்கள் ஒரு உண்மையை

1981 ஏப்ரல் 25] [திரு. அ. ரகுமான்கான்]

ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அத்தியாவசியப் பண்டங்களின் விலை உயர்ந்திருக்கிறது. ஓட்டல் பண்டங்களின் விலை உயர்ந்திருக்கிறது ; அரிசி விலை உயர்ந்திருக்கிறது ; கோதுமை விலை உயர்ந்திருக்கிறது ; சர்க்கரை விலை உயர்ந்திருக்கிறது, துவரம்பருப்பு, கடலைப்பருப்பு, பச்சைப்பருப்பு போன்ற பருப்பு வகைகளின் விலை உயர்ந்திருக்கிறது ; தேங்காய் எண்ணை, கடலை எண்ணை, நல்லெண்ணை போன்ற சமையலுக்குத் தேவையான எண்ணைகள் எல்லாம் விலை உயர்ந்திருக்கிறது ; மற்றும் தானியங்களின் விலை உயர்ந்திருக்கிறது ; கரும்பின் விலை உயர்ந்திருக்கிறது ; மிளகாய் விலை உயர்ந்திருக்கிறது. புளி விலை உயர்ந்திருக்கிறது என்று இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற இந்த பாலிசி நோட்டிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் இங்கே உங்கள் மூலமாக, இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவதெல்லாம், நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் இன்றைக்கு, அண்ணா தி.மு.க. ஆட்சியில் விலைவாசி உயர்ந்திருக்கிறது, அத்தனை பொருள்களின் விலையும் உயர்ந்திருக்கிறது என்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், அ.தி.மு.க.-வைச் சார்ந்த ஆளும் கட்சியைச் சார்ந்த ஒரு சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் இந்த அவையிலே சொன்னார்—என்னுடைய குடும்பம் பரம்பரை பரம்பரையாக சைவக் குடும்பம் ; ஆனால் என்னால் மீன் சாப்பிடாமல் இருக்க முடியவில்லை ; ஆகவே, இன்றைக்கு இதுபோன்ற பொருள்களின் விலையை விசாரித்துப் பார்த்தால், ஆட்டுக் கறி கிலோ ரூ. 20-க்கு விற்கிறது ; அதுபோல் கோழிக் கறி அரை கிலோ ரூ. 8-க்கு விற்கிறது என்று 80 பட்ஜெட்டிலே பேசுகின்றபோது, ஆளும் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார். ஆகவே, மொத்தத்தில் இன்றைக்கு விலைவாசி ஏறியிருக்கிறது.

இந்த விலைவாசியைக் குறைக்க, கட்டுப்படுத்த, தடுக்க இந்த சர்க்கார் என்ன கொள்கையை வைத்திருக்கிறது ? என்ன நடைமுறையை வைத்திருக்கிறது ? என்று இந்த கொள்கைக் குறிப்பிலே நமது நிதியமைச்சர் அவர்கள் சொல்லியிருந்தால், அதை வரவேற்கலாம். ஆனால், அதை விட்டுவிட்டு, விலைவாசியைக் குறைக்க, கட்டுப்படுத்த, அதற்கான வழி வகைகளைச் சொல்லாமல், இந்த விலைவாசி ஏன் ஏறியிருக்கிறது தெரியுமா என்று சமாதானங்கள் எல்லாம் சொல்லுகின்ற முறையில், ஒருபுறத்திலே வறட்சி, இன்னொரு புறத்திலே சர்க்கரை வருவதிலே உள்ள இடர்ப்பாடு, பொருள்களை சாலை மூலம் கொண்டுவருவதிலே ஏற்படும் வாகனச் செலவு, உணவு உற்பத்தி செய்கின்ற மாநிலங்களிலே விதிக்கப்படுகின்ற கட்டுப்பாடு இருக்கிறது என்றெல்லாம் இன்றைக்கு பல்வேறு காரணங்களை நம் நிதியமைச்சர் அவர்கள் இந்தக் கொள்கைக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்களே

தவிர, இன்றைக்கு இந்த விலைவாசியைக் கட்டுப்படுத்துகின்ற முறையைச் சொல்லவில்லை. நம்முடைய நிதியமைச்சர் தான் அப்படியென்றால், முதலமைச்சர் அவர்கள்கூட இதே கருத்தைத் தான் இந்த மாமன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள். திரு. உமாநாத் அவர்கள் தேங்காய் எண்ணை விலை ஏறியிருக்கிறதே என்று சொல்லிய நேரத்திலே, அன்றைக்குப் பேசிய நமது முதலமைச்சர் அவர்கள் தேங்காய் எண்ணை விலையேற்றத்திற்குக் காரணம் என்னவென்று சொல்லும்போது, நாம் தென்னை வளர்த்தால் தேங்காய் எண்ணை விலை குறையும் என்று சொல்லி, இரண்டாவது வகுப்பிலே படித்த ஒரு கதையைக்கூடச் சொன்னார்கள். ஒரு கிழவன் தென்னங் கன்றை வைக்க, பள்ளம் பறித்துக் கொண்டிருந்தான். அதைக் கண்ட ராஜா, கிழவனைப் பார்த்து, தென்னங் கன்று வைக்கிறாயே, அதனால் உனக்கு என்ன பலன் வரப் போகிறது என்று கேட்டதற்கு, அந்தக் கிழவன் சொன்னானாம்—ராஜா, ராஜா, எனக்காக வைக்கவில்லை, பிற்கால சந்ததிக்காக வைக்கிறேன் என்று எல்லாம் விளக்கினானாம். தென்னங்கன்று வைத்தவுடனே தேங்காய் எண்ணை விலை குறைந்துவிடும் என்ற அளவிற்குச் சொன்னார். ஆனால், இன்றைக்கு தமிழக மக்களுடைய நிலை என்ன? தேர்தல் காலத்தில், நாங்கள் ஆட்சிக்கு வந்தால், விலைவாசியைக் கட்டுப்படுத்துவோம், விலைவாசியை நிச்சயமாக குறைத்துக் காட்டுவோம் என்றெல்லாம் ரேடியோவிலும், டெலிவிஷனிலும் பேசிய நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எங்கள் ஆட்சியின் போது, விலைவாசி எப்படியிருந்தது? எங்கள் ஆட்சியின்போது ஒரு கிலோ அரிசி ரூ. 1.30-க்கு விற்கப்பட்டது. ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு, அதே அரிசி ஒரு கிலோ ரூ. 2.80-க்கு விற்கப்படுகிறது. எங்கள் ஆட்சியிலே வெளி மார்க்கெட்டிலே கிலோ ரூபாய் 3.50-க்கு விற்கப்பட்ட சர்க்கரை இன்று ரூபாய் 6.50-க்கு விற்கப்படுகிறது. எங்களுடைய ஆட்சியிலே நல்லெண்ணெய் ரூபாய் 9.50-க்கு விற்கப்பட்டது. இன்றைக்கு நல்லெண்ணெய் ரூபாய் 15-க்கு விற்கப்படுகிறது, என்று டெலிவிஷனிலே முதலமைச்சர் அவர்கள் தேர்தல் நேரத்திலே பேசி அகில இந்திய அண்ணா தி.மு.க. கலைக்கப்பட்ட காரணத்தாலே விலைவாசிகள் உயர்ந்துவிட்டது. மீண்டும் ஆட்சிக்கு வந்தால் விலைவாசிகள் குறைக்கப்படும் என்று ஏழை எளிய மக்களை, பாமர மக்களை நம்பிக்கையூட்டி இன்றைக்கு நீங்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறீர்கள். அப்படி ஆட்சிக்கு வந்தபிறகு அதை இன்றைக்கு குறைக்கின்ற முயற்சிகள் இருக்கிறதா என்று கேட்டால், நிச்சயமாக இல்லை.

அதுமட்டுமல்லாமல் உங்களுடைய கவனத்திற்கு கொண்டு வரவிரும்பு கிறேன். நம்முடைய நாவலர் அவர்கள் தமிழை கற்றவர். உண்மையை ஒப்புக்கொண்டு சொல்லியிருக்கிறார் " இப்படி விலைவாசி ஏறியிருப்பது அரசுக்கு கவலை தருகிறது " என்று கூறியிருக்கிறார். எங்களுக்கு

1981 ஏப்ரல் 25] [திரு. அ. ரகுமான்கான்]

விலைவாசி ஏறியிருப்பது சந்தோஷத்தையா கொடுக்கும். விலை வாசி உயர்ந்திருக்கிறது என்று சொல்ல ஒரு அமைச்சர் தேவையில்லை. இதற்கு ஒரு சர்க்கார் தேவையில்லை. கவலை அளிக்கிறது என்று சொல்ல ஒரு அரசு, அதிகாரம் உங்களுக்கு தேவையில்லை. விலையை கட்டுப்படுத்துவோம் என்று சொல்லி ஆட்சிக்கு வந்த பிறகு கட்டுப்படுத்த வேண்டாமா? என்று நான் மக்கள் சார்பாக கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். காரணம் நீங்கள் பேசிய பேச்சை அடிப்படையாக வைத்து தான் இந்த கேள்வியை கேட்கிறேனே தவிர வேறு மாதிரியாக கேட்பதாக நினைக்க வேண்டாம். நோயாளியை பார்த்து உனக்கு நோய் இருப்பது கவலையாக இருக்கிறதென்று ஒரு டாக்டர் சொல்லக்கூடாது. நோய் தீர்ப்பதற்கான முறையை சொல்ல வேண்டும். ஆகவே டாக்டர் நாவலர் அவர்கள் கவலை அளிக்கிறது என்று சொல்லக் கூடாது என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் உங்கள் மூலமாக, மாற்றுத்தலைவர் அவர்களே, நான் கவனத்திற்கு கொண்டு வர விரும்புவது எல்லாம், இன்றைக்கு மக்கள் விலைவாசி உயர்வால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒருபுறத்திலே பஸ் கட்டண உயர்வு, இன்னொரு புறத்தில் பால் விலை ஏற்றம், குடிசை மாற்று வாரியத்தில் வீடுகளுடைய 'ரென்ட்' எல்லாம் இன்றைக்கு உயர்த்தப் பட்டிருக்கிறது. அதோடு அத்தியாவசிய பொருள்கள் விலை ஏறுகிற போது இன்றைக்கு சாதாரண ஏழை மக்கள் உங்கள் பாணியிலே சொல்வது என்றுச் சொன்னால், வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கக்கூடிய மக்கள், நடுத்தர மக்கள், என்.ஜி.ஓ.-க்கள் எல்லாம் இன்றைக்கு வாழ்க்கை நடத்துவது ஒரு சுமையாக இருந்துவிடக் கூடாது. எனவே இந்த அரசு விலைவாசிகளை கட்டுப்படுத்துவதற்கு ஈடுபட வேண்டுமென்று மக்கள் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டிருப்பதாக இந்த கொள்கை குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த நியாய விலைக் கடைகள் அநியாய விலைக் கடைகளாக இருக்கின்றன என்று குற்றம் சுமத்த விரும்புகிறேன். தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், டாக்டர் கலைஞர் அவர்கள் இதே மன்றத்தில் சுமைதாங்கி கிராமத்தில் இருக்கிற நியாய விலைக் கடை என்ற கடையில், வெளியில் தனியார் கடைகளை விட அதிகமான விலையில் விற்கப்படுவதை; நியாய விலைக் கடைகளில் இன்றைக்கு விற்கிற பொருள்களுடைய பட்டியலை எல்லாம் எடுத்துச் சொல்லி எப்படி அந்த சுமைதாங்கி கிராமத்திலிருக்கிற நியாய விலைக் கடையில் அநியாய விலைக் கடையாக அதிகமான விலையில் விற்கிற நிலைமைகள் இருக்கிறது என்ற

நிலைமைகளை எல்லாம் பட்டியல் போட்டு காட்டினார்கள். நமது நாவலர் அவர்கள் விசாரித்துப் பார்த்தால் இன்னும் பல்வேறு இடங்களிலே அதைப் போன்ற நிலைமைகள் இருப்பதை அறியலாம்.

இன்றைக்கு நியாய விலைக் கடைகள் 17,300 நியாய விலைக் கடைகள் இருப்பதாக கொள்கை குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் மலைப் பிரதேசங்களிலே நியாய விலைக் கடைகள் திறக்கப்படவில்லை என்ற தகவல் கிடைத்திருக்கிறது. ரெவின்யூ கிராமங்களுக்கு மட்டுமல்லாமல் எல்லா கிராமங் களுக்கும் நியாய விலைக் கடைகள் வைக்கப்பட வேண்டும். அரிசன காலனிகள், ஆதி திராவிட மக்கள் காலனிகள் பல்வேறு காலனிகளில் எல்லாம் நியாய விலைக் கடைகள் இல்லை. ரேஷன் கார்டுகள் இல்லை. அந்த அரிசன காலனிகளில் நியாய விலைக் கடைகள் திறக்கப்பட வேண்டும் என்று சொல்லி பல சட்டமன்ற உறுப்பினர்கள் வெட்டு பிரேரணைகளை கொடுத்திருக் கின்றார்கள். அவற்றை அரசு அக்கறையோடு அதிலே நியாயமாக நடந்து கொண்டு நியாய விலைக் கடைகளை திறப்பதற்கு முயற்சிகள் செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு ரேஷன் கார்டுகள் எப்படி இருக்கிறது என்று சொன்னால், அதன்மூலம் அரிசி தருகிறோம், கோதுமை தருகிறோம், கோதுமை பொருள்கள் தருகிறோம், மண்ணெண்ணெய் தருகிறோம், பாம் ஆயில் தருகிறோம், முக்கியமான பருப்பு வகைகள் வழங்கப்படுகிறது என்றும், தமிழகம் முழுவதும் 107 இலட்சம் ரேஷன் கார்டுகள் வழங்கப்பட்டிருக்கிறது என்றும் இந்தக் கொள்கை குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் என்ன நிலைமை? இன்றைக்கு சென்னையிலே இருக்கிற எங்களைப் போன்ற சென்னை நகர மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் முழு வேலை எங்களை சந்திக்க வருகின்ற தொகுதி மக்கள், அத்தனை பேருக்கும் ரேஷன் கார்டுகள் இல்லாத காரணத்தைப் போக்குவதற்கு முயற்சி எடுத்து, சந்திக்கிற அத்தனை பேருக்கும் கொண்டு வருகிற மனுக்களின் மீது சிபார்சு செய்து இவர்கள் சொல்வது நியாயம் தான், எங்கள் தொகுதியை சேர்ந்தவர் தான், ரேஷன் கார்டு இல்லை தான், கொடுக்க வேண்டும் என்று நாங்கள் சிபார்சு செய்து அனுப்பியதற்கு பிறகும் கூட ஆயிரக்கணக்கான பேர்களுக்கு ரேஷன் கார்டு கொடுக்கப்படவில்லை. அவர் சொல்கிற கருத்துக்கள் உண்மைதான். அவருக்கு ரேஷன் கார்டு இல்லை, கொடுக்க வேண்டும் என்று நாங்கள் சிபாரிசு செய்து அனுப்பியும்கூட ஆயிரக்கணக்கான

(பிற்பகல் 1-10)

வர்களுக்கு ரேஷன் கார்டுகள் இன்னும் வழங்கப்படவில்லை. அது மட்டுமல்ல. தாசில்தாரும் அங்கே இருக்கிற அதிகாரிகளும், சட்டமன்ற உறுப்பினராக இருந்தால் என்ன அல்லது வேறு யாராக இருந்தால் என்ன, சட்டமன்றத்திலே வேண்டுமானால் குறைசொல்லலாம், எங்களை ஒன்றும் ஆட்டமுடியாது, அசைக்க முடியாது என்று சொல்லக்கூடிய அளவுக்கு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஏழை மக்கள், நடுத்தர மக்கள் நியாய விலைக் கடைகளிலே வாங்கமுடியாத அளவுக்கு விலைகள் ஏறியிருக்கின்ற இந்த நேரத்திலே அவர்கள் குறைந்தபட்ச வருமானத்தை வைத்துக்கொண்டு வாழ்க்கையோடு போராடிக்கொண்டிருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே அவர்களுக்கு முறையாக ரேஷன் கார்டுகள் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கேட்டால் அந்த தாசில்தார் சொல்கிறார். நீ கிராமத்திற்கு போய் அங்கே இருக்கின்ற தாசில்தாரிடத்திலே சர்டிபிகேட் வாங்கி வா என்று சொல்லி அந்த ஏழை மக்களும் 400, 500 மைல் தூரம் போகிறார்கள், போய் அங்கே சர்டிபிகேட் வாங்கிவந்தாலும்கூட அந்த சர்டிபிகேட்டை வைத்து அதை அடிப்படையாக வைத்துக் கொடுக்கிறார்களா என்றால் இல்லை, அவர்கள் நாள் பார்த்து, நேரம் பார்த்து நட்சத்திரம் பார்த்து சூழ்நிலை பார்த்து ரத்தத்தின் ரத்தமா என்று பார்த்து, சதையின் சதையா என்று பார்த்து நரம்பின் நரம்பா என்று பார்த்து எலும்பின் எலும்பா என்று பார்த்துத்தான் வழங்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்று சொன்னால் எந்த வகையிலே அது நியாயமாக இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக நான் இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவருவது எல்லாம் என்யூமரேஷன் லிஸ்ட் என்று சொல்கிறார்களே, அந்த அடிப்படையிலே இன்றைக்கு ரேஷன் கார்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றனவா என்றால் இல்லை. ஐந்து ஆண்டுக் காலத்திற்கு முன்னாலே எடுக்கப்பட்ட பட்டியலை வைத்துக்கொண்டு வழங்கப்பட்ட ரேஷன் கார்டுகள் தான். புதிய லிஸ்டை இன்றைக்கு உள்ள நிலைமையை வைத்து எடுத்துக் கொடுத்திருக்கிறார்களா என்றால் இல்லை. நாம் பல தேர்தல்களைச் சந்தித்து இருக்கிறோம். பல வாக்காளர்கள் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு இருக்கின்றன. அந்த அடிப்படையிலே புதிய ரேஷன் கார்டுகளை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காலதாமதம் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. அ. சகுமான்கான்] [1981 ஏப்ரல் 25

நியாய விலைக் கடைகளிலே ரேஷன் கார்டுகளுக்கு எல்லாப் பொருட்களும் கிடைக்கின்றனவா என்றால் அதுவும் இல்லை. குறிப்பாக பாம் ஆயில், சமையல் எண்ணெய் மிக முக்கியமானது. இன்றைக்கு சென்னை நகரிலும் மற்ற இடங்களிலும் தமிழகம் முழுவதும் ரேஷன் கார்டுகளை எடுத்துக் கொண்டு தாய்மார்களும் பெரியவர்களும் நியாய விலைக் கடைகளுக்குப் போகிறார்கள். அது கிடைக்கிறதா என்றால் இல்லை. அந்தக் கடையிலே இருக்கிற ஒருவர் சொல்கிற ஒரே பதில் ஸ்டாக் இல்லை, சப்ளை இல்லை என்பது தான். இப்படித்தான் எல்லாக் கடைகளிலுமே சொல்கிறார்கள். அதனால் பலபேர்கள் பாதிக்கப்படுகிறார்கள். எனக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையிலே நான் சொல்கிறேன். அமைச்சர் ஆதாரம் கேட்பார் என்று சொன்னாலுங் கூட நான் எனக்குக் கிடைத்த தகவலைச் சொல்கிறேன். எனக்கு தெரிந்த அடிப்படையிலே நான் சொல்கிறேன். என்னுடைய பகுதியிலே பரவலாக பலபேர்கள் என்னிடம் வந்து முறையிடுகிறார்கள். நியாய விலைக் கடைகளிலே பாம் ஆயில் கடத்தப்படுவதாகச் சொல்லப் படுகிறது, தமிழகம் முழுவதும். சில இடங்களிலே இதுபோன்ற தப்புகள் நடைபெறுகின்றன. இவைகளையெல்லாம் இந்த அரசு கண்காணிக்கவேண்டும். இதற்கென்று ஒரு சி.ஐ.டி. விஜிலன்ஸ் இலாகா, புலன் ஆய்வுத் துறை இருக்கிறதே அது என்ன செய்கிறது? அது எங்கே தன்னுடைய ஆராய்ச்சியைச் செய்துகொண்டிருக்கிறது என்று தெரியவில்லை. இதுபோன்ற தவறுகள் நடைபெறாத அளவுக்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். மைதா, கோதுமை ரேஷன் கார்டுகளுக்கு சரியாகக் கிடைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நியாய விலைக் கடைகளிலே அநியாயமாக விலை ஏறியிருக்கிறது. அநியாய விலை விற்கிறதே, நியாய விலைக் கடைகளிலே நாம் நியாயமான விலையிலே பொருட்களை வாங்கலாம் என்று தாய்மார்களும், பெரியவர்களும் போனால் 2, 3 மைல்கள் நீளத்திற்கு பெரிய கியூக்கள், தியேட்டர்கள் முன்னாலே நியாய விலைக் கடைகள் வைக்கப்படுகின்றன, அதிக பஸ் போக்குவரத்து இடங்களிலே வைக்கப் படுகின்றன, இதனாலே ஒருபுறத்திலே ஜனநெரிசல், இன்னொரு புறத்திலே நீண்ட கியூக்கள், இந்த கோடைகால வெயிலில் நிற்கிறார்கள். இப்படிப்பட்ட துன்பங்களுக்கு இடையே காத்திருந்து வாங்கவேண்டியிருக்கிறது. ஒரு கர்ப்பிணிப் பெண் கியூவிலே நிற்கவேண்டியிருந்தால் அங்கேயே பிரசவம் ஏற்பட்டுவிடுமோ என்ற நிலைமை இருக்கிறது. அந்த அளவுக்கு நெருக்கடி இருந்துகொண்டிருக்கிறது, கியூவை குறைக்கவேண்டும். இரண்டாயிரம் கார்டு களுக்கு ஒரு ரேஷன் கடை வைக்கவேண்டுமென்று அரசுத் தரப்பிலே உத்திரவு இருப்பதாக கேள்விப்படுகிறேன். அரசு அதை மறுபரிசீலனை செய்யவேண்டும்,

எதை எதையோ மறுபரிசீலனை செய்கிற அரசு 500 அல்லது ஆயிரம் கார்டு களுக்கு ஒரு கடை வைக்கவேண்டுமென்று கன்ஸ்ட்ராக்டிவ் சஜ்ஜஷன் கொடுக்க விரும்புகிறேன்.

அது மட்டுமல்லாமல் மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் அவர்கள் ஒரு திருத்தத்தைச் செய்து இருக்கிறார்கள். வருமான அடிப்படையிலே ரேஷன் கார்டுகளுக்கு சர்க்கரை வழங்குவது என்ற முறையைக் கொண்டுவந்திருக்கிறார்கள். கேட்டால், இதை முறையிடுகிறார்கள், ஆகையினாலே கொண்டு வந்தோம் என்று சொல்கிறார்கள். ஆனால் நான் நிதியமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், இந்த முறை சரிதானா? இன்றைக்கு நீங்கள் கொண்டுவந்திருக்கின்ற முறைப்படி மாதம் ரூபாய் ஆயிரமும், அதற்கு மேலும் சம்பளம் வந்தால் 5 கிலோ சர்க்கரை வழங்கப் படுகிறது; மாதம் ரூபாய் 500-க்கும் 999-க்கும் இடையே வருமானம் வந்தால் மாதம் 3 கிலோ சர்க்கரை வழங்கப்படுகிறது; 499 ரூபாய் வரை மாதச் சம்பளம் இருக்குமேயானால் இரண்டு கிலோ சர்க்கரை வழங்கப்படுகிறது. நான் கேட்கிறேன், ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகின்ற ஒருவருக்குக் குழந்தைச் செல்வமே கிடையாது அல்லது அவருக்கு ஒரு குழந்தைதான் இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். ஆனால் 200 ரூபாய், 300 ரூபாய் சம்பளம் வாங்குகின்றவருக்கு, அவருக்கு வேறு பொழுது போக்குகள் இல்லாத காரணத்தினாலே குழந்தைகளையாவது பெற்றெடுப்போம் என்று அந்தப் புனிதக் காரியத்திலே ஈடுபட்டு ஏழு குழந்தைகள், எட்டுக் குழந்தைகள் என்று பெற்றெடுக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். நான் கேட்கிறேன், ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகின்றவர் நினைத்தால் ஓப்பன் மார்க்கெட்டிலே விலை எவ்வளவாக இருந்தாலும் சர்க்கரையைப் பணம் கொடுத்து வாங்கிக் கொள்ளலாம்; ஆனால் 300 ரூபாய், 200 ரூபாய் சம்பளம் பெறுகின்ற ஒருவர் சென்னை போன்ற நகரங்களிலே வாழ்க்கையோடு போராடிக் கொண்டிருப்பவர் . . .

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாற்றுத் தலைவரவர்களே, நான் பிறகு பதில் சொல்வதைவிட இப்பொழுதே குறுக்கிட்டுச் சொன்னால் விளக்கம் பெறலாம் என்பதற்காக நான் குறுக்கிடுகிறேன். ஏற்கனவே, சென்னை மாநகரத்திலேயும், அதன் சுற்றுப்புறங்களிலேயும் மற்ற இடங்களிலேயும் எல்லோருக்குமே ஐந்து கிலோ; கிராமங்களில் எல்லோருக்கும் ஒரு கிலோ. அதுதான் நியாயம் என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கருதுகிறார்களா? அதைவிடக் கொஞ்சம் சீரான நியாயம் இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்த ஏற்பாடு. இந்த ஏற்பாடு வேண்டாமென்றால், ஒவ்வொரு குடும்பத் தினுடைய எண்ணிக்கையைப் பார்த்துத்தான் தர வேண்டுமென்று சொன்னால், 19,500 டன்னையும் அந்த வகையில் பிரித்துத் தந்தால் அதிலே நியாயம் வருமா

விடுமா ? ஆகவே, பயன்படுத்துகின்றவர்கள், பயன்படுத்துகின்ற எண்ணிக்கையை மட்டும் வைத்தால், பலபேர் பயன்படுத்தாத குடும்பத்திற்குப் போவதன் காரணமாகத்தான் அது அதிகமாகக் கள்ள மார்க்கெட்டிலே விற்கப்பட்டு, ஹோட்டல்களுக்கும் மற்றவைகளுக்கும் எட்டு ரூபாய், ஆறு ரூபாய்க்கு விற்றுச் சம்பாதிக்கிறார்கள் என்ற குறைபாடுகளெல்லாம் வந்தன ; ஆகவே, அதிலே முழு நியாயமும் வந்துவிடும் என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவிக்கிறார்களா ? எனக்கு விளக்கம் தான் தர வேண்டுமென்று கேட்கிறேனே தவிர, அதுவே நியாயம் என்று சொன்னால் அந்த நியாயத்திற்குப் போவதைப்பற்றி எனக்கு ஒன்றுமில்லை. இப்பொழுது வழக்கு ஒன்று உயர்நீதிமன்றத்திலே இருக்கிறது. எல்லோருக்கும் சரிசமமாகப் பிரித்துக் கொடுங்கள் என்று சொன்னால் 19,500 டன்னையும் ஒரு கோடியே ஏழு இலட்சம் கார்டிலே வகுத்துத் தந்து விடலாம் ; அது அரசுக்கு ரொம்ப எளிது. அதிலேயும் நியாயம் இருக்குமா என்பதையும் யோசிக்க வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு இந்த மாமன்றத்தினுடைய மாற்றுத் தலைவரவர்களே, நம்முடைய நிதியமைச்சரவர்கள் என்னிடத்திலே எது நியாயம் என்று கேட்கிறார்கள். ஆகவே, அவருக்கு நான் உங்கள் மூலமாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதெல்லாம் இன்றைக்கு அவர் போட்டிருக்கக்கூடிய இந்த உத்தரவை வாபஸ் வாங்கி அதற்காக ஒரு சர்வ கட்சி உறுப்பினர்களைக் கொண்ட கமிட்டியைப்போட்டு அதுகுறித்துத் தாராளமாக விவாதித்து ஒரு முடிவை எடுக்கலாம். ஆனால் என்னைப் பொறுத்தமட்டில் வருமான அடிப்படையிலே இன்றைக்குக் கொடுக்கின்ற முறை சரிதான் என்ற சர்க்காரின் வாதம் சரியாக இருக்க முடியாது.

ரேஷன் கார்டுகளைக்கூடப் பலபேர் விற்று விடுகிறார்கள் என்று எங்களுக்குத் தகவல் வந்திருக்கிறது, ஆகையினாலே ரேஷன் கார்டுகளே தேவையில்லை என்ற முடிவுக்கு இந்தச் சர்க்கார் வராது. எதிலேயும் சில தவறுகள் நடக்கலாம் ; சில குறைபாடுகள் நடக்கலாம் ; அவைகளையெல்லாம் இந்தச் சர்க்கார்தான் கண்காணிக்க வேண்டுமே தவிர அதற்காக முழுமையாக இந்த முறையை நான் கொண்டுவருகிறேன் என்று சொல்வது சரியாக இருக்க முடியாது என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்து என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாற்றுத் தலைவரவர்களே, உங்கள் மூலமாக நான் சொல்ல விரும்புவதெல்லாம், இன்றைக்குச் சென்னை நகரம் போன்றவற்றில் பல சட்டமன்ற உறுப்பினர்களே இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் வசதி படைத்தவர்கள் அல்ல. அரண்மனைக்காரரின் அரசியல் கோடை வாசஸ்தலமாக இருந்த ... களெல்லாம் அரசியலுக்கு வாலாம் ;

ஆலமரத்தடிவாசிகளெல்லாம் அரசியலுக்கு வரலாம் என்ற ஒரு நிலையை உருவாக்கியவர் அண்ணா. ஆகவே, சட்டமன்ற உறுப்பினராக இருப்பதனாலேயே எல்லோரும் மாளிகைக்காரர்கள் அல்ல; மிட்டா மிராசுகள் அல்ல. இன்றைக்கு அவர்கள் பொதுவாழ்க்கையிலே இருப்பவர்கள். அவர்களைச் சந்திப்பதற்காகப் பலபேர் வருகிறார்கள். விருந்தோம்பல் பண்பிலே தலைசிறந்த தமிழக மக்களாக இருக்கின்ற நாம், வருகின்றவர்களுக்கு டீ, காப்பி கொடுக்க வேண்டுமென்று சொன்னால்கூட 670 ரூபாய், 800 ரூபாய் சம்பளத்திலே ஒரு நியாயபூர்வமான வாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் மத்தியிலே இந்தச் சம்பளம் போதுமானதாக இருக்க முடியுமா? ஆகையினாலே அவர்களைப் பொறுத்த மட்டிலே இந்தக் கிலோ என்று சொன்னால் என்ன பொருள்? இவ்வளவுதான் என்று சொன்னால் என்ன பொருள்? சட்டமன்ற உறுப்பினர்களுக்காக மட்டும் நான் வாதாடவில்லை. நான் மக்களுக்காகவும் சொல்கிறேன்; இன்றைக்கு வருமான அடிப்படை என்று சொல்லுவது ஏழை எளிய மக்களைப் பாதிப்பதாக இருக்கிறது, இதை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு இந்தச் சர்க்கரையைப் பொறுத்தவரையில் 65 சதவிகிதம் லெவி; 35 சதவிகிதம் ஓப்பன் மார்க்கெட்டுக்குத் தர வேண்டுமென்ற ஒரு நிலைமையிருக்கிறது. நான் உங்கள் மூலமாக நம்முடைய நிதியமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இதையே நீங்கள் 100 சதவிகிதம் லெவி என்று ஏன் வைக்கக்கூடாது? காரணம் 65 சதவிகிதம் லெவி என்று வைத்துவிட்டு 35 சதவிகிதத்தை . . (மணியடிக்கப்பெற்றது) திரு. ரமணியும், திரு. உமாநாத்தும் 40 நிமிடங்கள் பேசினார்கள். அதே விதிகள்தான் எனக்கும் பொருந்தும். தயவுசெய்து, நான் விதியை மீறவில்லை. நான் உங்களுக்கு ஏற்கனவே சொல்லிவிட்டுத்தான் பேசுகிறேன். அதற்குள் முறையாக முடித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-20)

ஆக, மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைக்கு 65 சதவிகிதம் லெவி என்ற முறை மாற்றப்பட்டாக வேண்டும். முழுமையாக 100 சதவிகிதம் லெவி இருக்க வேண்டும். 65 சதவிகிதம் லெவி கொடுத்துவிட்டு, மீதியிருக்கக்கூடிய 35 சதவிகிதம். (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 65 சதவிகிதம் லெவிக்கு ஒதுக்கிவிட்டு 35 சதவிகிதம் ஓப்பன் மார்க்கெட்டுக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று முடிவெடுப்பது மத்திய அரசு. மத்திய அரசுதான் சென்ற நவம்பரிலே இந்த முடிவை எடுத்துச் சொன்னது. அதிலே தலையிடுவதற்கோ எந்த மாற்றமும் செய்வதற்கோ நமக்கு, மாநிலத்திற்கு எந்த உரிமையும் இல்லை. எந்த மாற்றம் செய்வதாக இருந்தாலும் மத்திய அரசுதான் செய்யவேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : எல்லாமே மத்திய அரசு என்று சொல்லிவிட்டால், இந்த இலாகாவிற்கே வேலையில்லாமல் போய்விடும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எல்லாவற்றையும் சொல்ல வில்லை, இதைத்தான் சொல்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாற்றுத் தலைவர் அவர்களே, பாலிசி நோட்டைப் பார்த்தால் தெரியும், எல்லா விலையேற்றத்திற்கும் காரணம் மத்திய அரசு தான். எல்லா விலை ஏற்றத்திற்கும் காரணம், இன்றைக்குத் தமிழக சர்க்கார் அல்ல. கொள்முதல் விலையை உயர்த்த வேண்டுமென்றால், தமிழக சர்க்காராலே உயர்த்த முடியாது. Agricultural Produces Price Fixing Commission தான் விலை நிர்ணயிக்க வேண்டுமென்று பல்வேறு கட்டங்களிலே சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்காராக இருந்தாலும், மாநில சர்க்காராக இருந்தாலும், மக்களுடைய நன்மையைக் கருதி சொல்லப் படுகிற யோசனை, இந்த மாதிரி லெவி கொள்கையைப் பொறுத்த மட்டிலே லெவி குறைவாக இருக்கிறது. பாக்கி 35 சதவிகிதம் தனியாகக் கொடுக்கின்ற காரணத்தாலே, ஓப்பன் மார்க்கெட்டிலே அதிகமான விலைக்கு விற்கப் படுகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. மக்கள் நலன் கருதி, லெவியை அதிகமாக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. மத்திய சர்க்காராக இருந்தாலும், மாநில சர்க்காராக இருந்தாலும் இந்த மாமன்றத்திலே சொல்லப்படுவதன்மூலம், அது மக்களுக்குப் போய், மத்திய சர்க்காருக்குப் போய், மாநில சர்க்காருக்கும் போய், நல்ல கருத்து பிறக்கும் என்ற நல்லெண்ணத்திலேதான் சொல்லப் படுகிறது.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு இந்தச் சர்க்கரையைப் பொறுத்த பட்டிருக்கிற சர்க்கரை பல இடங்களிலே கள்ள மார்க்கெட்டிலே கிராமங்களில் சொல்கிறார்கள். கிராமங்களிலே பலருக்குச் சர்க்கரை

தரப்படுவதில்லை. நகரங்களிலே விற்று விடுகிறார்கள் என்ற புகார்கள் எல்லாம் வருகின்றன. அதோடு மட்டுமல்லாமல், மலிவு விலையிலே உணவுப்பொருட்கள் போலீஸ்காரர்களுக்கும், தீயணைப்புப் படையைச் சேர்ந்தவர்களுக்கும் தரப்பட்டிருப்பதாக இந்த அறிக்கையிலே சொல்லப்படுகிறது. நான் கேட்கிறேன், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களுக்குத் தரப்பட வேண்டாமா? தொழிலாளர்களுக்கு அது தரப்பட வேண்டாமா? என்.ஜி.ஓ.-க்களுக்கு அது தரப்பட வேண்டாமா? இப்படிச் சொல்வதாலே, போலீஸ்காரர்களுக்கு நாங்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், விரோதிகள் அல்ல. அவர்களுக்கும் தரப்பட வேண்டும், மற்றவர்களுக்கும் தரப்பட வேண்டும். அதை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இலவச அரிசி வழங்கப் போவதாக தேர்தல் நேரத்திலே கூடச் சொன்னார்கள். ஐந்து கிலோ அரிசி வாங்கினால், ஒரு கிலோ அரிசி தருவோம் என்று சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு நடைமுறையில் யார், யாருக்கு அந்த இலவச அரிசி என்று கேட்டால் . . .

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மணியாகிவிட்டது, உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

திரு. அ. ரகுமான்கான்: சார், நான் இன்னும் முடிக்கவில்லை, எனக்கு 40 நிமிடம் கொடுக்கவேண்டும், ஒயின்டிங் அப் செய்வதற்கு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது. உங்களுடைய கட்சிக்கு கொடுக்கப்பட்ட நேரமும் முடிந்துவிட்டது.

திரு. அ. ரகுமான்கான்: நீங்கள் வந்தவுடனே முடி என்று சொன்னால் எப்படி?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொடுத்த நேரத்தில் முடிக்கவில்லை யென்றால் நான் என்ன செய்வது? 25 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள்.

திரு. அ. ரகுமான்கான் : ஐந்து நிமிடங்கள் கொடுங்கள், நான் சட்ட விரோதமாகப் பேசவில்லை. நாற்பது நிமிடம் சகோதர உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எங்கள் கட்சியிலே இரண்டு பேர்தான் பேசுகிறோம். யாருடைய நேரத்தையும் எடுக்கவில்லை. திரு. பொன்னுரங்கம் 15 நிமிடம்தான் பேசியிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள், உங்கள் கட்சிக்குக் கொடுத்த நேரம் முடிந்துவிட்டது.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, முறைப்படி நான் கேட்கிறேன். * * நான் நியாயத்துக்காக வாதாடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஒரு உறுப்பினர் என்ற வரைமுறைக்குள்ளே வரவேண்டும். வரைமுறை இல்லாமல் பேசுவது என்றால் என்ன அர்த்தம்? மானியக் கோரிக்கையை அமைச்சர் அவர்களுடைய பதிலே இல்லாமல் முடித்துவிட வேண்டுமா? மணி இப்போதே 1-25 ஆகிவிட்டது. நான் தங்களை அனுமதிக்க முடியாது. உங்கள் கட்சிக்குக் கொடுத்த நேரம் முடிந்துவிட்டது.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, வைன்டிங்-அப்-க்கு எவ்வளவு நேரம் என்று சொல்லுங்கள். ஐந்து நிமிடம் தாருங்கள், அப்போது தான் என்னுடைய கருத்தை முடிக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரம் ஆகிவிட்டது. உட்காருங்கள். நான் உங்களை அனுமதிப்பதாக இல்லை. நீங்கள் 'சேருக்'-கு ஒபே பண்ண வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : * * நான் சட்டவிரோதமாகப் பேசவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நடவடிக்கை எடுக்கின்ற நிலைக்கு என்னை ஆளாக்காதீர்கள். நீங்கள் பேசினாலும் அது அவைக்குறிப்பிலே ஏறாது. விதண்டாவாதத்தை நான் அனுமதிப்பதாக இல்லை.

திரு. அ. ரகுமான்கான் : *

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மற்ற கட்சித் தலைவர்களுக்குக் கொடுத்ததைவிட உங்களுக்கு அதிக நேரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. காலையிலேயே கட்சிக் கொறடா திரு. சு. பாலன் அவர்களிடம் உங்களுக்கு 20 நிமிடம்தான் கொடுக்கப்பெறும் என்று சொல்லி இருக்கிறேன். நீங்கள் இப்போது 25 நிமிடங்கள் பேசி இருக்கிறீர்கள். வேறு பல கட்சித் தலைவர்கள் பேச வேண்டும் என்று சொன்னதற்குக்கூட, நேரம் இல்லாததால் அனுமதிக்க முடியவில்லை.

திரு. அ. ரகுமான்கான்:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரம் இல்லை. அமைச்சர் பதில் சொல்லியாக வேண்டும். இப்போதே நீங்கள் 25 நிமிடங்களுக்கு மேல் பேசி இருக்கிறீர்கள். அதுபோதும்.

திரு. அ. ரகுமான்கான்:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டுபேர்கள் பேசினாலும் உங்கள் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது. இரண்டு மணி நேர விவாதத்தில் 40 நிமிடங்கள் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். அதற்கு மேல் எப்படித் தரமுடியும். இரண்டு மணி நேர விவாதத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 40 நிமிடங்கள் ஒதுக்கியது தவறு என்று சொல்லுகிறீர்களா? தப்பு என்று சொல்லுகிறீர்களா? கொடுக்கப் பட்ட நேரத்திற்கு மேல் பேசியிருக்கிறீர்கள். ஆகவே தலைவருக்குக் கட்டுப் பட்டு அமர வேண்டும்.

THIRU A. RAHUMANKHAN: * *

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு, அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனளத் துறை பற்றியும், நுகர்பொருள் வழங்கல் பற்றியும் இந்தப் பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள், இந்த இரண்டு துறைகளும் எதிர்காலத்தில் எந்தெந்த வகைகளில் மேம்பாடு அடையலாம் என்ற முறையிலே தங்கள் தங்கள் கருத்துக்களைச் சிறப்பாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், வெட்டுத் தீர்மானங்கள் மூலமாகவும் பல கருத்துக்களை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அது மட்டுமல்லாமல், இங்கே மன்றத்தில் பல உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் பல்வேறு வகைகளில் சிந்தித்து முடிவு எடுக்கவேண்டிய தன்மையில் இந்த அரசு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இந்தத் துறைகள் மேம்பாடு அடையத்தக்க வகையில் கருத்துக்களை வழங்கியதற்காக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

பசி வந்திடப் பத்தும் பறந்து போகும் என்பார்கள். இது பசி நேரம். அது மட்டுமல்ல. இப்போது மீனைப்பற்றியும் நினைவு படுத்தவேண்டி யிருக்கிறது. உணவு பற்றியும் நினைவுபடுத்த வேண்டியிருக்கிறது. நான் நீண்ட நேரம் அவற்றைப்பற்றியெல்லாம் பேசவேண்டும் என்று விரும்பினாலும், காலத்தின் அருமை கருதி, சுருக்கமாக என்னுடைய உரையை முடித்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். உறுப்பினர்கள் அதிகமான நேரம் எடுத்துக்கொண்டு பேசினால் என்னுடைய பேச்சின் அளவு குறையும். நான் என்னுடைய பேச்சைக் குறைத்துக்கொள்வதைப்பற்றி ஆட்சேபனை இல்லை. குறைத்துக்கொள்ள நான் ஆயத்தமாக இருக்கிறேன். அதுமட்டுமல்லாமல், ஆளும் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் 129 பேர் இருந்தாலும் கூட அவர்கள் எடுத்துக்கொள்கிற நேரம் மிகமிகக் குறைவு தான். ஆகவே, எல்லோருடைய ஒத்துழைப்பின் அடிப்படையில் இந்த அவை நடைபெற வேண்டும் என்று நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த இரண்டு மானியக் கோரிக்கைகள் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த நியாயமான கருத்துக்கள், உண்மையான குறைகள் ஆகியவற்றை அரசு எண்ணிப்பார்த்து, அதன் மீது நடவடிக்கை எடுக்கவும், அந்தக் குறைகளை நீக்கவும் அதேபோன்று நியாயமான முறையிலும், உண்மையான வகையிலும், சுட்டிக் காட்டிய குற்றங்களைக் களைவதற்கும் இந்த அரசு ஆயத்தமாக இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

விலைகள் ஏறுகின்றன என்பதற்கான வகையில் சுட்டிக்காட்ட பல்வேறு விவரங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துக் காட்டினார்கள். மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் எந்த அளவிற்கு உணவுப் பண்டங்கள் விலை ஏறியிருக்கின்றன, எதுயெது எந்த அளவிற்கு ஏறியிருக்கிறது, ஏறியிருப்பதாக அறிவிக்கப்பட்டு இருக்கிறது என்று குறிப்பிட்டுக் காட்டினார்கள். வாங்குபவர்களுக்கு அதைக் கேட்க கஷ்டமாக இருந்தாலும் கூட, உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு மிகமிகச் சந்தோஷமாக இருக்கக்கூடிய அளவிற்கு, ஆஹா, இவ்வளவுக்கு உயர்ந்து

1981 ஏப்ரல் 25] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

விட்டதா புளி விலை; நெல் விலை, மற்ற உணவுப் பண்டங்களின் விலை. ஆகவே, நாம் இன்னும் அதிகம் கொடுக்கவேண்டும் என்று கேட்பது நியாயமல்ல என்று எண்ணத்தக்க அளவிற்கு—நுகர்வோருக்குக் கஷ்டம் இருந்தாலும், அவற்றை உற்பத்தி செய்கிறவர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கலாம் என்பது உண்மை. ஆகவே, ஏற்பட்டு இருக்கும் நிலைமை நமக்குக் கவலை தருவதாக இருக்கிறது. இந்த நிலைமைகளை அறிந்து மக்களின் குறைகளை நிவர்த்தி செய்யவேண்டும் என்ற அடிப்படையில், அரசு எல்லோருடைய ஒத்துழைப்பின் அடிப்படையிலும் அதை நிறைவேற்ற இருக்கிறது. ஆகவே, உங்களுடைய கவலையோடு அரசும் கவலைப்பட்டுக்கொண்டு இருக்கிறது என்று நான் சொல்லிக்கொள்கிற இந்த நேரத்தில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நான் இங்கே எப்படி தமிழகத்தின் நிதி அமைச்சர் என்ற முறையில் பேசிக்கொண்டு இருக்கிறேனோ, அதைப்போலவே இந்தியப் பாராளுமன்றத்தில் மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் திரு. ஆர். வெங்கட்டராமன் அவர்கள் பேசுகின்ற போது சொல்லியிருக்கிறார்கள்.

Finance Minister R. Venkataraman to-day shared the members' concern in the Lok Sabha over the price-rise in general

பொதுவாக, விலைவாசி ஏறியிருப்பதைப் பற்றி உறுப்பினர்கள் சுட்டிக்காட்டிய அந்த உணர்வுகளோடு நானும் சேர்ந்து கவலைப்படுகிறேன் என்று அவர் சொல்லி இருப்பதோடு மட்டுமல்லாமல்,

.... He said the Government was worried over the general price increase which he attributed partly to factors inside the country and partly to international inflation..........................

என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, விலைவாசிகள் எல்லா வகைகளிலும் ஏறியிருக்கின்றன. இது கவலை தருகின்ற அளவிற்கு இருக்கிறது என்று 68 கோடி மக்களை ஆளுகின்ற பொறுப்பில் இருக்கின்ற இந்திய நிதி அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது, 4 கோடியே 8 லட்சம் மக்கள் சார்பாக இருக்கின்ற தமிழக அரசின் சார்பில் இருக்கிற நானும் கவலைப்படாமல் எப்படி இருக்கமுடியும். கவலைப்பட்டுத்தான் தீரவேண்டும். இதற்குக் காரணம் இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள விளைவு மட்டுமல்ல.

பாதி காரணம், அகில உலகத்திலும் ஏற்பட்டு இருக்கும் சூழ்நிலையின் விளைவாக ஏற்பட்ட பாதிப்புதான் இந்த அளவிற்கு விலைவாசிகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

ஏறுவதற்குக் காரணம் என்பதைச் சுட்டிக்காட்டி, அத்தனை பேருடைய ஒத்துழைப்பின் அடிப்படையில் தான் அதை நிறுத்தமுடியும் என்றும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்

அதற்கான நடவடிக்கைகள் எடுப்பதுபற்றி அவர்கள் சொல்கிறபோது

........These included incentives to increase production, imports, if necessary to augment supply of essential commodities and emphasis on the public distribution system........

என்ற குறிப்பிட்டிருக்கிறார்கள். நாம் இந்த விலைகளைக் கட்டுப்படுத்த என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அதை முறைப்படி எடுத்து வருகிறோம். உணவுபற்றிச் சொல்லும்போது அதைப்பற்றி நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன்.

முதலிலே மீனளத் துறை பற்றிச் சொல்லும்போது அதற்கு ஒதுக்கப் பட்டிருக்கிற தொகை குறைவாக இருக்கிறது ; அது போதுமானது அல்ல என்று பல மாண்புமிகு உறுப்பினர்கள், குறிப்பாக திரு. பொன்னுரங்கம் அவர்கள் சொன்னார்கள். ஒரு துறைக்கு இவ்வளவுதான் ஒதுக்க வேண்டும் என்ற உச்சவரம்பு இல்லை. ஆனால் நிதி ஆதாரத்தை வைத்துப் பார்க்கும் போது, வழி வழியாக வருகின்ற அதே அடிப்படையில் பார்க்கும்போது ஒவ்வொரு துறைக்கும் ஒரு நியாயமான அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அந்த வகையிலே இந்த ஆண்டுக்கும் இந்தத் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஒதுக்கீட்டிலே கூட ஆண்டுக்கு ஆண்டு மீனளத் துறை வளர்ச்சிக்கான திட்டங்கள் தீட்டப்பட்டு, அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்திருக்கிறதே தவிர, ஏற்கெனவே இருந்த ஒரு ஆட்சியில் செய்யப்பட்ட நன்மைகளை குறைக்கின்ற வகையிலோ அல்லது சலுகைகள் எடுக்கப்படுகின்ற அளவிலோ இல்லை ; அவை மேலும் பெருகுகின்ற வகையிலேதான் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மீனளத் துறையில் இன்றைக்கு நான் கேட்டிருக்கிற தொகை 3,41,14,000 ரூபாய். இந்தத் தொகையைக் கேட்டிருந்தாலும், இவ்வளவுதானா என்று குறிப்பிட்டார்கள். 55-வது மானியக் கோரிக்கையிலும் 56-வது மானியக் கோரிக்கையிலும் 'காபிட்டல் அவுட்லே ஆன் ஃபிஷரீஸ்' என்ற வகையிலும் வேறுபல மானியக் கோரிக்கைகளின் கீழும் மேற்கொண்டு 2,10,84,000 ரூபாய்

இந்த மீனளத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதையும் சேர்த்துப் பார்த்தால் மொத்தம் இந்த மீனளத் துறைக்கு இந்த ஆண்டுக்கு 5,51,98,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். மற்றத் துறைகளுக்கு ஒதுக்கப்படுகின்ற அடிப்படையில் நியாயமான வரன்முறையில் இந்தத் துறைக்கு எந்த அளவுக்கு நாம் அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்ய முடியுமோ அந்த அளவுக்குச் செய்திருக்கிறோம். மேலும் வாய்ப்பு இருந்தால் அதிக நிதி ஒதுக்கித் தருவதில் சங்கடம் ஒன்றும் இல்லை. இப்போது ஒதுக்கியிருக்கின்ற தொகை போதுமா என்று கேட்டால் போதாது என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இருக்கின்ற நிதி ஆதாரத்தில் மற்ற துறைகளுக்கு ஒதுக்கியிருக்கிற அடிப்படையில் இந்த அளவுக்குத்தான் இப்போது ஒதுக்க முடிந்திருக்கிறது.

மீனளத் துறையைப் பொறுத்தவரையில் நாளுக்கு நாள் மேம்பாடு செய்ய திட்டங்கள் தீட்டியிருக்கிறோம். தமிழக கடற்கரைகளில் மீன் பிடிக்க நல்ல வாய்ப்பு இருக்கிறது. நம்முடைய கடற்கரையை எடுத்துக் கொண்டால் இந்தியாவிலேயே அதிகமான கடற்பரப்பைக் கொண்ட இரண்டாவது மாநிலம் நம்முடைய மாநிலம்தான். இந்தியாவிலேயே முதலிடத்தைப் பெறுவது குஜராத் மாநிலம். தமிழகம் இரண்டாவது இடத்தைப் பெறுகிறது. ஆந்திரப்பிரதேசம் மூன்றாவது இடத்தைப் பெறுகிறது.

மீன் உற்பத்தியை எடுத்துக்கொண்டால் கேரளம் முதல் இடத்தைப் பெறுகிறது. மகாராஷ்டிரம் இரண்டாவது இடத்தைப் பெறுகிறது. நம்முடைய மாநிலம், தமிழகம் மூன்றாவது இடத்தைப் பெறுகிறது. மேலைக் கடற்கரைக்கும், கீழைக் கடற்கரைக்கும் இருக்கிற வித்தியாசத்தைப் பார்த்தால் மேலைக் கடற்கரையில் இருக்கிற அளவுக்கு உப்பங்கழிகள் கீழைக் கடற்கரையில் இல்லை. அதைப்போல அலை வீசுகின்ற அளவும் கீழைக் கடற்கரையில் அதிகமாக இருக்கிறது. ஆக, கேரளமானாலும் சரி, மகாராஷ்டிரமானாலும் சரி, அங்கே இருக்கிற அளவுக்கு தமிழகத்தில் உப்பங்கழிகள் இல்லை. அதனால் அந்த அளவுக்கு இங்கே மீன் வளர்க்க வசதி இல்லை. அதனால் தான் தமிழ்நாடு 3-வது இடத்தைப் பெற்றிருக்கிறது. இருந்தபோதிலும் இரால் உற்பத்தியைப் பெருக்க 6-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே முறைப்படி பல திட்டங்களை நாம் போட்டிருக்கிறோம். அந்தத் திட்டங்கள் நன்கு வெற்றி பெறுகிற சூழ்நிலைகளை நாம் பெற்றிருக்கிறோம். போகப் போக அதிகமான மீன் உற்பத்தியில் நாம் வெற்றி பெற்றால் மூன்றாவது இடத்தில் இருக்கிற தமிழகம் இரண்டாவது இடத்திற்கு வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

உள்நாட்டு நீர்நிலைகள் வாயிலாக உற்பத்திச் செய்யப்படும் மீன் அளவை எடுத்துக்கொண்டால் மேற்கு வங்கம் முதலிடத்தைப் பெறுகிறது; தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பெறுகிறது; மூன்றாவது இடத்தை மத்தியப் பிரதேசம் பெறுகிறது. உள்நாட்டு மீன் உற்பத்தியைப் பெருக்க நாம் மேலும் பல திட்டங்களைப் போட்டிருக்கிறோம். உள்நாட்டு குளங்கள், ஏரிகள், நீர்நிலைகள் மூலம் மீன் குஞ்சுகளை வளர்த்து, கோடிக்கணக்கில் அபிவிருத்தி செய்வதன் மூலம் இரண்டாவது இடத்தில் இருக்கிற நாம் எதிர் காலத்திலே முதல் இடத்திற்கு வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்றுமதியை எடுத்துக்கொண்டால் கேரளம் முதல் இடத்தைப் பெறு கிறது; மகாராஷ்டிரம் இரண்டாம் இடத்தில் இருக்கிறது; தமிழ்நாடு மூன் றாவது இடத்தை வகிக்கிறது என்றாலும் இறால் வளர்ச்சியில் ஓரளவு முன்னேற்றம் ஏற்படுமானால் மூன்றாவது இடத்திலிருக்கிற தமிழகத்தை இரண்டாவது இடத்திற்குக் கொண்டுவர முடியும்.

மீன் கிடைக்கின்ற தன்மையைப் பார்க்கிறபோது இந்தியாவில் சராசரியாக ஒரு நபருக்கு 3.7 கிலோ கிடைக்கிறது. தமிழகத்தில் உள்ள சராசரியை மட்டும் எடுத்துக்கொண்டால் ஒருவருக்கு சராசரியாக 7.9 கிலோ கிடைக் கிறது. உலக நாடுகளின் சராசரியை எடுத்துக் கொண்டால், சராசரியாக ஒருவருக்கு 10.5 கிலோ கிடைக்கிறது. ஆனால் ஜப்பானில் ஒருவருக்கு சராசரியக 50 கிலோ என்ற அளவுக்கு கிடைக்கிறது. அகில இந்திய சராசரியைவிட தமிழ்நாட்டின் சராசரி கூடுதலாக இருந்தாலும் இதையும் கூடுதலாக்க நாம் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். அதற்கான திட்டங் களைத் தீட்டி வருகிறோம். திட்டங்களை நல்ல முறையில் செயல்படுத்த நடவ டிக்கை எடுத்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

(பிற்பகல் 1-40)

ஏற்கெனவே 6-வது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்தில் நம்முடைய மாநிலத்தில் மீன் உற்பத்தி 3,77,000 டன்கள் என்ற அளவுக்கு இருந்தன. ஆனால் 6-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே நாம் போட்டிருக்கின்ற திட்டத்தினுடைய அடிப்படையில் திட்டங்களை முறைப்படி நிறைவேற்றி வைப்பதன் மூலமாக நாம் எதிர்பார்ப்பது 6-வது ஐந்தாண்டு இறுதியில் 5,10,000 டன் உற்பத்தியை எய்தக்கூடும். அந்த அளவுக்கு நாம் வந்திருக்கி றோம். மீன் பிடிப்பதற்கு இப்போது கிட்டத்தட்ட 30,000 கட்டுமரங்கள் இருக்கின்றன. 4,000-க்கு மேற்பட்ட விசைப்படகுகள் இருக்கின்றன. ஆகவே விசைப் படகுகளை ஒவ்வொருவரும் வாங்கவேண்டும் என்று சொல்கிற

1981 ஏப்ரல் 25] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

போது 50,000 ரூபாய்; 60,000 ரூபாய்; 1,00,000 ரூபாய் என்ற அளவுக்கு போகின்ற காரணத்தால் இப்போது அவர்கள் பயன்படுத்துகின்றவைகளையே மேம்பாடு செய்வதன் மூலம் இன்னும் அதிகமான அளவுக்குக் கடலிலே போகவும் அதிகமான அளவுக்கு மீன்களை அரிக்கவும் முடியுமா என்பதைப் பற்றி எல்லாம் ஆராய்ந்து கொண்டு வருகிறோம். அதற்காகத்தான் கட்டு மரங்களிலே அவுட்போர்ட் என்ஜின் என்று சொல்லத்தக்க வகையில் அத்துடன் வைத்து, நாட்டுப் படகுகளிலேயே அவுட்போர்ட் என்ஜின் வைத்து, பெரிய படகுகளிலேயும் என்ஜின் வைத்து குறைந்த செலவிலே அவற்றைக் கொண்டு செலுத்துவதற்கான முறையிலே வழிவகைகள் இருக்குமா என்பதைப் பற்றி நாம் ஆராய்ந்துகொண்டிருக்கிறோம். அது ஓரளவுக்கு வெற்றி பெறுகிற சூழ்நிலை ஏற்பட்டால் அதற்கு மானியமாகவும் கடனாகவும் உதவி அளித்து அதை மேம்பாடு செய்வதற்கான திட்டங்களைத் தீட்டிக்கொண்டு வருகிறோம். அதேபோன்று கட்டுமரங்களிலேயும் என்ஜின் பொருத்து வதற்கு 10,000 ரூபாய் செலவாகிறது. 18 அடி கண்ணாடியிழைப் படகு வெளிப்புற இன்ஜினுடன் 30,000 ரூபாய் ஆகின்றது. 25 அடி படகு உட்பட 75,000 ரூபாய் வரை விலை ஆகின்றது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டிலே இரண்டு பெரிய டிராலர்களை நாம் வைத்து இருக்கி றோம். மேற்கொண்டு 4 டிராலர்களை வாங்குவதற்கான முயற்சிகளைச் செய்துகொண்டிருக்கிறோம். அந்த இரண்டும் ஓரளவுக்கு ஆழ் கடலிலே போய் மீன் பிடித்துக்கொண்டு வருவதன் காரணமாக கணிசமான அளவுக்கு இப்போது நன்மைகள் நமக்குக் கிடைத்து வருகின்றன. ஆகவே 1979-80-லே 5,36,000 ரூபாய் லாபம் கிடைத்தது. இப்போது 1980-81-லே 9,23,000 ரூபாய் இதிலே லாபம் கிடைத்திருக்கிறது. ஆகவே மேற்கொண்டு டிராலர் வாங்கி மீன்பிடித்து விற்றால் அதிலே லாபமும் கிடைக்கக்கூடும். அதன் மூலமாக மீன் வளத்தைப் பெருக்குவதற்கும் வாய்ப்பு ஏற்படும் என்ற தன்மையை நாம் பெற்று இருக்கிறோம். தமிழ்நாட்டிலே தற் போது 3,500-க்கு மேலான விசைப் படகுகள் இயங்குகின்றன. அவைகள் தங்குவதற்கான தளங்களைக் கட்டுவதற்கான அத்தகைய முயற்சிகளிலே நாம் துறைமுகங்களைக் கட்டிக்கொண்டு வருகி றோம். இன்றைய சூழ்நிலையில் தூத்துக்குடி துறைமுகத்தில் 400 படகுகள் தங்குவதற்கும் இராமேஸ்வரத்திலே 40 படகுகள் தங்குவதற்கும் மண்டபத்தில் 10 படகுகள் தங்வதற்கும், மல்லிப்பட்டனத்திலே 50 படகுகள் தங்குவதற்கும் நாகப்பட்டினத்திலே 10 படகுகளும், கடலூரிலே 40 படகுகள் தங்குவதற்கும் ஆக 550 படகுகள் தங்குவதற்கும் பரிசிலனை செய்யப்பட்டிருக்கின்றது. சென்னையிலே மத்திய அரசினுடைய உதவியின் பேரால் 11 கோடி ரூபாய் செலவிலே மீன்பிடித் துறைமுகத்தை உருவாக்குவதற்கு விரைவிலே அதை

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1981 ஏப்ரல் 25

நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. இங்கு 500 விசைப் படகுகள் தங்குவதற்கும், 50 நாவாய்கள் தங்குவதற்கும் வாய்ப்பு ஏற்படும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் இருக்கும்போது சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளும் மிகச் சிறப்பான தன்மைகளைப் பெறும். சின்னகுட்டம் துறைமுகத்துக்கு திட்ட மதிப்பீடு 2,78,00,000 ரூபாய். இத்தகைய திட்டத்திலே அங்கே ஒரு துறைமுகம் கட்டுகிறோம். அதைக் கட்டி முடிக்கின்ற சூழ்நிலையில் 250 படகுகள் அங்கே தங்கக்கூடும். வாலிநோக்கத்திலே சிறு துறைமுகத்தை உருவாக்குவதற்கு 1,24,000 ரூபாய் திட்ட மதிப்பீடு போட்டிருக்கிறோம். அங்கே 150 படகுகள் தங்கக் கூடும். தஞ்சை மாவட்டம் பழையாறையில் ஒரு தங்குதளம் கட்டுவதற்குத் திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. விரைவிலே அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளக்கூடும். மேலும் துறைமுகங்கள் அல்லது தங்கு தளங்கள் கட்டுகின்ற இடங்களிலே எல்லாம் பனிக்கட்டி நிலையம், மீன் உலர்த்தும் இடம், பேக்கிங் செய்யும் இடம், சாலைகள், தண்ணீர் வசதிகள், வழிகாட்டி விளக்குகள் முதலியவற்றைச் செய்து தருவதற்கு வாலிநோக்கத்திற்கு 17 இலட்சத்து 71 ஆயிரம் ரூபாயும், பழையாறையில் உள்ள பகுதிக்கு 27,18,000 ரூபாயும், மல்லிப்பட்டணம் பகுதிக்கு 2,74,000 ரூபாயும் கோடியக்கரை பகுதிக்கு 3,22,000 ரூபாயும் ஒதுக்கப்பட்டு அந்தப் பணிகளும் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. 1981-82-லே தொண்டியிலே இத்தகைய வசதிகளை ஏற்படுத்த அரசு திட்டம் தீட்டி இருக்கின்றது. தமிழ்நாட்டிலே 3.69 இலட்சம் ஹெக்டேர் உள்நாட்டு நீர் நிலைகள் இருக்கின்றன. ஆகவே இவைகளிளெல்லாம் மீன் உற்பத்தியைப் பெருக்க கிட்டத்தட்ட 35 கோடி மீன் குஞ்சுகளை உருவாக்க இந்த ஐந்தாண்டுத் திட்டத்திலே நாம் திட்டங்களை உருவாக்கி இருக்கிறோம். கிட்டத்தட்ட இயற்கையிலேயே இப்போது உருவாவது நான்கு கோடி குஞ்சுகள்தான். ஆனால் நாம் திட்டமிட்டு செயல்படுத்தினால் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியிலே 35 கோடி மீன் குஞ்சுகளை உருவாக்குவதற்கு வாய்ப்பு ஏற்படும். அந்த வகையிலே திட்டங்களை மேற்கொண்டிருக்கிறோம். 17 இடங்களில் மீன் குஞ்சு உற்பத்திக்கான பண்ணைகள் அமைக்கப்பட்டு இந்த ஆண்டிலே நாம் 2 கோடி மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்கின்ற தன்மையினைப் பெற்றிருக்கிறோம். இதை வர வரப் பெருக்கி 35 கோடியை இந்த 6-வது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள்ளாக பெறுவதற்கான பெரும் முயற்சியை நாம் மேற்கொண்டு வருகிறோம்.

அடுத்து முத்து உற்பத்தியைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். இப்போது 20 ஆண்டுகள் ஆயிற்று. அவை முதிர்ச்சி அடைந்த நிலையிலே தான் முத்துச் சிப்பிகளை எடுக்க முடியும். முத்துக் குளிப்பதற்கு சிலபல மானியங்களும், சில கடன்களும் வழங்குகிறோம். அதாவது பொருட்கள் மற்ற பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கெல்லாம் இவ்வாறு வழங்குகிறோம்.

1981 ஏப்ரல் 25] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

முத்தை செயற்கை முறையில் உற்பத்தி செய்யும் வகையில் ஜப்பானில் எப்படி செயற்கை முறையில் முத்து உற்பத்தி செய்யப்படுகிறதோ அப்படியே சிப்பியை எடுத்து வந்து, முத்து உற்பத்தியாவதற்கான அளவிற்கு இன்ஜெக்ஷன் ஒன்று செய்து, அதை மறுபடியும் பாதுகாப்பான இடத்திலே வளர் விட்டு, முத்துக்களை சிறப்பாக எடுக்கிற முயற்சியிலே ஜப்பானியர்கள் வெற்றி கண்டிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலேயும் அப்படிப்பட்ட ஆராய்ச்சிகள் செய்யப்படுகின்றன. அவைகள் நமக்கு வெற்றி தரும் என்று நம்புகிறோம். இங்கே இருக்கக்கூடிய நீர்நிலை பாங்குகளும், மீன்களின் தன்மைகளும் அவற்றிற்கு ஒத்ததாகவே வருகின்றன என்று கணக்கிடப்பட்டிருப்பதன் காரணமாக, அதற்கென்று 12 லட்சத்து 8 ஆயிரம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறோம். இந்த ஆராய்ச்சி நிறைவுதரும் வகையில் இருக்கிறது.

முத்துச் சிப்பிகளே முத்தை உருவாக்கித் தருவதைவிட, நாமே அதற்கு இன்ஜெக்ஷன் செய்து, பாதுகாப்பான நீர்நிலை இடங்களில் விட்டுவிடுவோமேயானால், அதிகமான அளவு முத்துக்களைப் பெற முடியும். அப்படி வருகிற போது ஐந்து ஆண்டு காலத்திற்குப் பிறகு, ஒரு லட்சம் முத்துக்களைக்கூட நாம் பெற முடியும் என்று ஒரு கணக்கைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையிலே பெறுவதற்கான ஒரு திட்டத்தையும் இந்த அரசு மேற்கொள்ளும் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மீன்பிடி படகுகள் விசைப் படகுகள் மாற்றம் குறித்து நான் முதலிலேயே குறிப்பிட்டேன். அவர்களுக்கு ஓரளவு மானியம் தரவும் கடன் வழங்கவும் முயற்சிகள் மேற்கொண்டு, அவர்களை ஊக்குவிப்பதற்கான முயற்சியிலே நாம் ஈடுபட்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறேன். மீன்பிடித் துறையிலே பயிற்சி பெறுகின்ற அளவிற்கும் வழி வகைகளைச் செய்திருக்கிறோம். மீன்களை எப்படிப் பிடிப்பது என்று பயிற்யைப் பெறுவதற்கும், என்ஜின்களை ஓட்டுவதற்கும், பழுது ஏற்பட்டால் அதைச் சரிப்படுத்துவதற்கும் கிட்டத்தட்ட ஐந்து வருடம் அனுபவம் பெற்றவர்கள் பயிற்சி பெறவேண்டும் என்ற அடிப்படையில் பயிற்சி கொடுக்கிறோம். இதில் சேருவதற்கு படிப்பு இருக்க வேண்டும் என்று முதலிலே சொன்னார்கள். பிறகு படிப்பு இல்லாவிட்டாலும் கூட பரவாயில்லை, அனுபவம் இருந்து அவைகளையெல்லாம் கற்றுக்கொள்ளக் கூடிய திறமை இருக்குமேயானால், அப்படிப்பட்டவர்களையும் சேர்த்துக் கொள்ளலாம் என்ற நிலைமைக்கு நாம் கொண்டு வந்திருக்கிறோம்.

அந்த வகையில் இதுவரையில் தூத்துக்குடியில் 1,160 பேர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். நாகப்பட்டினத்தில் 889 பேர்கள், சென்னையில் 663 பேர்கள், மண்டபத்தில் 768 பேர்கள், கடலூரில் 657 பேர்கள், குளச்சலில் 677

பேர்கள் என்றும் முறையாக மொத்தம் 4,814 பேர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். இது தவிர, பயிற்சி பெறுபவர்களுக்கு கடந்த ஆண்டு வரை மாதத்திற்கு 50 ரூபாயாக இருந்த உபகாரச் சம்பளம் 1979 முதல் 80 ரூபயாக உயர்த்திக் கொடுப்பதென முடிவு செய்து உயர்த்தப்பட்டிருக்கிறது.

டிரைசன் என்று சொல்லப்படுகிற திட்டத்தின் கீழ் வேலையற்ற இளைஞர்களுக்கு, உவர்நீர் பரப்புகளில் மீன் மற்றும் இரால் வளர்ப்பதற்காக பயிற்சியை தமிழகத்தில் ஆறு இடங்களில் தருவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. இதுவரை 504 இளைஞர்கள் அந்தப் பயிற்சியைப் பெற்றிருக்கிறார்கள். பழவேற்காடு, அடையாறு, கோவளம், பரங்கிப்பேட்டை, நாகப்பட்டினம் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் இந்தப் பயிற்சிகள் தரப்படுகின்றன. இந்தப் பயிற்சி 45 நாட்களுக்குத் தரப்படுகிறது. இந்தப் பயிற்சிக்காக அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் உபகாரச் சம்பளம் கொடுத்து, பயிற்சி விக்கிறோம். இந்தப் பயிற்சியைப் பெற்றவர்கள் இந்தத் தொழிலிலே சிறப்பான நிலைமையை ஏற்படுத்துவார்கள் என்ற நிலைமையில்தான் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மீன் வள தலைமையிடமும், ஆராய்ச்சி நிலையமும் மண்டபத்தில் இருந்தது. இரண்டையும் கொச்சிக்கு மாற்றலாம் என்று மத்திய அரசு முயற்சி செய்தது. அப்படி முயற்சி செய்த நேரத்தில், மீன் ஆராய்ச்சி நிலையம் மண்டபத்திலேதான் இருக்க வேண்டும் என்று மாநில அரசும் வற்புறுத்தியது, அந்தப் பகுதியிலே இருப்பவர்களும் வற்புறுத்தினார்கள். அதற்குப் பிறகு, தலைமையிடத்தை மட்டும் கொச்சியிலே வைத்துக்கொண்டு, இங்கே ஒரு இணை இயக்குநரை வைத்து, ஆராய்ச்சிகளையும் மற்றவைகளையும், இங்கே தொடர்ந்து நடத்தலாம் என்று மத்திய அரசு வழிவகை செய்திருக்கிறது. அதன்படி முயற்சிகள் தொடர்ந்து நடைபெறும் என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

கடல் அரிப்பு நடவடிக்கைகளுக்கு நான் முன்பே பல கேள்விகளுக்குப் பதில் சொல்லும்போது குறிப்பிட்டிருக்கிறேன். 18 இடங்களில் அதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் இத்தகைய நிலைமை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஈரோடு என்ற இடத்தில் 16 இலட்சம் ரூபாய் அளவில் வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. ராமன்துறை என்ற இடத்தில் 15 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் அளவில் மதிப்பீடு போடப்பட்டு வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. உள்ளூர் துறையில் 6 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் செலவில் வேலைகள் ஒப்பந்தப்படி முடிவு செய்யப்பட வேண்டும். இளையபுத்தன் துறையில்

1981 ஏப்ரல் 25] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

2 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய்க்கு வேலை நடந்து கொண்டிருக்கிறது. பெரிய கட்டில் 21 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் வேலைகள் நடக்கின்றன. கோவன்புத்தன் துறையில் 14 இலட்சத்து 88 ஆயிரம் மதிப்பீட்டுச் செலவில் வேலைகள் நடக்கின்றன. பொடியன் கரையில் 14 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவிலும், மார்த்தாண்டம் துறையில் 15 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவிலும், பள்ளம் என்ற இடத்தில் 3 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவிலும் கோவளத்தில் 21 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவிலும், சின்னவிளையில் 13 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவிலும், ராஜாக்கமங்கலம் என்ற இடத்தில் 5 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவிலும் வேலைகள் நடக்கின்றன. வாணியக்குடியில் 74 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவிலும் வேலை ஆரம்பிக்கப்பட வேண்டும். கரியப்பட்டணம் என்ற இடத்தில் 9 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் வேலைகள் நடைபெறுகின்றன.

மேல்மனக்குடியில் 13 இலட்சம் ரூபாய் செலவில் வேலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். பெரியவளையில் 9 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் செலவில் வேலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். முட்டன்துறையில் 14 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் வேலைகள் முடியும் தருவாயில் உள்ளது. ஆக, கிட்டத்தட்ட 18 இடங்களில் இந்தக் கடல் அரிப்புகளைத் தடுப்பதற்கான முயற்சிகள் நடக்கின்றன. வேறு சில இடங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை மீனளத் துறையினர் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த நிலை வருகிறபோது வரும்.

(பிற்பகல் 1-50)

படகு கட்டும் துறை பற்றி உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். நான்கு இடங்களில் படகு கட்டும் துறை 1974-ல் ஆரம்பிக்கப்பட்டது. சென்னையில் இரண்டு இடங்கள், மண்டபம் ஆகிய இடங்களில் வருகின்றன. அங்கே 728 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அதில் 96 இடங்கள் காலியாக இருக்கின்றன. அந்தக் காலியிடங்களை இப்போது நிரப்ப வேண்டாம் என்று சொல்லி வைத்திருக்கிறோம். தொழிலாளர்கள் நன்மையைக் கருதி எப்படியாவது அவை நடைபெற வேண்டும் என்ற தன்மையில் திரு. வெங்கட்ராமன் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு அறிக்கை கேட்டு அறிக்கையும் தந்திருக்கிறார்கள். எப்படி சீர்படுத்தலாம், செம்மைப்படுத்தலாம், ஒழுங்குபடுத்தலாம், எப்படி அதனால் இலாபம் வரும், தொழிலாளர்கள் நலன் பாதிக்கப்படாமல் இருக்க என்ன செய்யலாம் என்று

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1981 எப்ரல் 25

கேட்டிருக்கிறோம். இதுவரை அந்த நான்கு படகு கட்டும் துறைகளால் ஏற்பட்ட நஷ்டம் 87 இலட்சம் ரூபாய். இருந்தாலும் இந்த நஷ்டம் வரக் காரணம் என்ன என்று கண்டு அதைக் களைந்துவிட்டு இலாபம் நஷ்டம் இல்லாத அளவிற்கு இதை நடத்துவதற்கு . . .

திரு. ப. பொன்னுரங்கம்: இந்தப் படகு கட்டும் துறை காரணமாக 87 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகச் சொன்னார்கள் ஏழு கோடி ரூபாய் நாம் கார்ப்பரேஷனுக்குக் கொடுத்திருக்கிறோம். பெரும்பாலும் நஷ்டம் தான். அட்மினிஸ்ட்ரேட்டிவ் எக்ஸ்பெண்டிச்சர்தான் காரணம். ரூ. 6.87 கோடி என்று புள்ளிவிவரம் தந்திருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களை எப்படியாவது காப்பாற்றுங்கள், அதுதான் என் வேண்டுகோள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதை நினைவூட்டியதற்கு நன்றி. 87 இலட்சம் மட்டும் போகவில்லை, ஏழு கோடி போயிருக்கிறது என்று அவைக்கு நினைவுபடுத்த மாண்புமிகு உறுப்பினர் உதவி செய்திருக்கிறார்கள் தொழிலாளர்கள் நன்மை கருதி வைத்திருக்கிறோம். இதை என்ன செய்யலாம் என்பதைப்பற்றி யோசிக்கிறோமே தவிர இல்லாவிட்டால் இந்த நான்கு படகு கட்டும் துறைகளை மூடவேண்டுமென்ற கருத்துத்தான் முதலில் சொல்லப்பட்டிருக்கிறது. கோளாவில் கூட படகு கட்டும் துறைகளை மூடிவிட்டார்கள். அவர்களுக்கு நஷ்டம் தொடர்ந்து வந்ததால் மூடிவிட்டார்கள். விரிவாக அறிக்கை தந்திருக்கிறார்கள். அதை துறை ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆராய்ந்து தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று வரும்போது அதற்கு தொழிலாளர்கள் ஒத்துழைப்பு மற்றவர்கள் ஒத்துழைப்பு எல்லாம் சேர்ந்து ஒரு ஒருமித்த முடிவு வந்த பிறகு சீரான நிலையை ஏற்படுத்தலாம் என்று கருதுகிறேன். அந்த நிலை வரும் போது எல்லோருடைய ஒத்துழைப்பும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

ட்ரெட்ஜர் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். அந்த ட்ரெட்ஜர் ஸ்டேட் போர்ட் டிப்பார்ட்மென்டால் உபயோகப்படுத்தப்படுகிறது. மண்டபம், மன்னார் வளைகுடா பகுதியில் பணி செய்து பாக்வளை குடாவில் மண்வாரி வேலையை அந்த ட்ரெட்ஜர் செய்துகொண்டிருக்கிறது.

அதல்லாமல் வேறு பல திட்டங்களுக்கும் பழையாறு ரோடு போடுதல், மற்றும் பாலங்கள் கட்டுதல் போன்றவற்றுக்கும் பணம் ஒதுக்கப்பட்டிருப்பது பற்றி விரிவாகத் தரப்பட்டிருக்கிறது.

1981 ஏப்ரல் 25] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வீடுகள் கட்டுவது பற்றிச் சொன்னார்கள். 1975 வரை, கிட்டத்தட்ட அதற்கு முன்னால் இலவச வீடு கட்டும் திட்டத்தின் கீழ் முன்பு கடன், மானியம் வழங்கப்பட்ட காலத்தில் கட்டப்பட்டவை பற்றி உறுப்பினர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். 5,934 வீடுகள் அந்த வகையில் கட்டப்பட்டன. 1975-க்குப் பிறகு கட்டப்பட்ட வகையில் 4,705 கட்டப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டத்தில் 9,931 கட்டுவதற்கான திட்டத்திற்கு ஒப்பளிப்பு செய்யப் பட்டிருக்கிறது. இதில் 4,705 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. 1,461 கட்டப்பட்டு வருகின்றன. மீதி முறைப்படி நாளாவட்டத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. ப. பொன்னுரங்கம்: எந்தெந்த மாவட்டங்களில் கட்டுகிறார்கள்? சொல்ல முடிந்தால் சொல்லுங்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றிய விளக்கக் குறிப்பு இப்போது இல்லை. நேரமும் ஆகிவிட்டது. தனியாகக் கேட்டால் விவரங்கள் தருகிறேன்.

தலைவர் அவர்களே, மீனுக்குப் பிறகு உணவுக்கு வருகிறேன். இதுபற்றி அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை. பேரவையிலேயே நிரம்பக் கேள்விகள் கேட்டு அதுபற்றிய விளக்கங்கள் பல தடவை சொல்லப்பட்டு விட்டன. அதுபற்றி திரும்பத் திரும்ப சொல்லவேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன். நியாய விலைக் கடைகள் மற்றவை மூலம் நடைபெற்று வரும் டிஸ்ட்ரிப்யூஷன் சிஸ்டம் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். 22 மாநிலங் களில் உள்ள பங்கீட்டு முறையில், தமிழகம்தான் தலையாக இருக்கிறது என்று பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மத்திய அரசு நமது பங்கீட்டு முறையைப்பற்றி ஒரு டாகுமெண்டரி பிலிம் எடுப்பது குறித்து, ஒரு மாதத்திற்கு முன்பு அனுமதி கேட்டு கடிதம் வந்து, அதை எடுத்துக் கொள்ளலாம் என்று அனுமதி தந்திருக் கிறோம். அந்த அளவிற்கு நம்முடைய டிஸ்டிரிபியூஷன் சிஸ்டம் இருக்கிறது. அகில இந்திய மாநாட்டிலே அதிகாரிகளுடன் கலந்து பேசும்போது, தமிழ கத்தில் செய்யப்பட்டிருக்கின்ற பணிகளைப் பற்றி பேசி, அதைப் பின்பற்ற வேண்டுமென்று சொல்லப்பட்டது. மற்ற மாநிலங்களிலே உள்ள அதிகாரி களும், மற்றவர்களும் இதைப் பின்பற்ற வேண்டும் என்று மத்திய அரசாங்கம் சொல்லியிருக்கிறது. குறிப்பாக, பல அதிகாரிகளும், மற்றவர்களும் இங்கே வந்து போயிருக்கிறார்கள். அவ்வப்போது சில அமைச்சர்களும் என்னிடத்

திலே வந்து பேசியதோடு, அதிகாரிகளையும் சந்தித்துச் சென்றிருக்கிறார்கள். குறைபாடுகள் இல்லை என்று சொல்லவில்லை. நம்மால் இந்த அளவிற்குத் தான் செய்ய முடிந்தது; இதிலே குறைபாடுகள், குற்றங்கள் இருக்கலாம். இங்கே பல்லாயிரக்கணக்கான, பல லட்சக்கணக்கான பேர்களை வைத்துக் கொண்டு நடத்திக்கொண்டு வருகின்றபோது, சில பல குறைபாடுகள் வரத் தான் செய்யும். அவர்களை நம்பித்தான் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. அவர்களிடத்திலே இந்தப் பொறுப்பைத் தந்தி ருக்கிறோம். எவ்வளவோ பெரிய இயேசுநாதர்கூட 12 சீடர்களை நம்பினார், எவ்வளவோ பெரிய இயேசுநாதர் அவர்கள் 12 சீடர்களை நம்பி அதில் ஒருவன் காட்டிக் கொடுப்பான் என்று அவருக்குத் தெரியவில்லை. 12 பேர்களை நம்பிச் செய்யும்போது, அந்த இயேசுநாதருக்கு இந்தக் கதி என்றால், நம்மைப் போன்ற ஏமாளிகளுக்கு எப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் வரும் என்பதைக் காணலாம். நம்மால் நியமிக்கப்பட்டவர்கள் அத்தனை பேருமே நாணயமற்றவர்கள் என்று சொல்ல முடியாது; ஒரு சிலர் தவறு செய்யலாம். ஆகவே, கடமை உணர்வோடு, பொறுப்போடு செம்மையாகப் பணிகளைச் செய்ய பல பேர்கள் இருக்கிறார்கள்; சிலர் ஆங்காங்கே தவறு செய்கிறார்கள்.

நாம் இன்றைக்கு 17,300 கடைகள் வைத்திருக்கிறோம். அந்தக் கடை களைத் தனியாக வைக்க வேண்டுமென்கின்ற அளவிலே வைத்திருக்கிறோம். இட வாடகையும், மற்றவையும் கொடுத்து நடத்தி வருகிறோம். இப் போது அதிலே நாம் பயிற்சி பெற்ற பணியாளர்களை வைத் திருக்கிறோம். அவர்களுக்கு மாதம் 100 ரூபாய் சம்பளமாகத் தருகிறோம். 100 ரூபாயை வாங்கிக்கொண்டு, அவர்கள் காலையிலே 4, 5 மணி நேரம், மாலையிலே 4, 5 மணி நேரம் திறந்து வைக்க வேண்டுமென்று சொல்கிறோம். இந்தக் காலத்தில், பலப்பல தொழில்களிலே வாங்குகின்ற சம்பளத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்த 100 ரூபாயை வாங்கிக்கொண்டு, அவர்கள் இந்த பணியைச் செய்ய முடிவதில்லை. பார்ட்-டைம்மாகத்தான் நாம் இந்த வேலையை வைத்திருக்கிறோம். ஆனால், ஒரு வேலையும் இல்லாதவர்கள் தான் இந்த வேலைக்கு வருகிறார்கள். வேறு ஒரு வேலையை செய்து கொண்டு, இங்கேயும் வேலை செய்து, அதிலேயும் சம்பாதித்துக் கொண்டு, இன்னும் கூடுதலாக சம்பாதிக்கலாம் என்று போட்டாலும்கூட, அதிலே வந்து சேருகின்றவர்கள் வேறு எந்த வேலையும் செய்யாதவர்கள், ஒன்றும் இல்லாத வர்கள் 'சம் திங் இஸ் பெட்டர் தான் நத்திங்' என்ற அளவிலேதான், இந்த 100 ரூபாய் வேலைக்கு வருகிறார்கள். சில இடங்களில் சில பல தவறுகள் நடக்கின்ற நிலைமை வந்துவிடுகிறது. ஆகவே, இந்தத் தவறுகளை கூடுமான வரையில் களைவதற்கு மேற்பார்வை அதிகாரிகளையும், கண்காணிப்பு

அதிகாரிகளையும், ஆங்காங்கே அமைத்திருக்கிறோம். மாவட்டம்தோறும் அதிகாரிகளையும் அலுவலாளர்களையும், மற்றும் அலுவல் சார்பற்றவர்களையும் உறுப்பினர்களாகக் கொண்ட குழுவை ஆங்காங்கே அமைத்திருக்கிறோம். மேலும் ஆங்காங்கே உள்ள நியாய விலைக் கடைகளில் தவறுகள் நடக்கின்றதா, இல்லையா என்பதையெல்லாம் கண்டறிந்து சொல்வதற்கு உத்தியோக சார்பற்ற ஒரு குழுவைப் போட்டு, அவர்கள் நடவடிக்கை எடுக்கக்கூடாது, என்ன என்ன குற்றங்கள், குறைகள் செய்கிறார்கள் என்பதை எடுத்துச் சொல்லும் அளவிற்கு, ஆங்காங்கு ஏற்படுத்தலாமா என்று ஆய்ந்து கொண்டிருக்கிறோம். ஆகவே, வட்ட அளவிலும், மாவட்ட அளவிலும் இத்தகைய குழுக்கள் மூலம் நடவடிக்கை எடுத்தால், கொஞ்சம் தவறுகளைக் குறைக்க முடியுமா, இதற்கு வசதிகள் ஏற்படுமா என்று கருதிக் கொண்டிருக்கிறோம்.

ஒவ்வொரு கடைக்கும் 2,000 கார்டுகள் என்று வைத்திருக்கிறோம். 2,000 கார்டுகளுக்கு மேல் போகுமானால், தனிக் கடைகளைத் திறக்க வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறோம். 400 கார்டுகள், 200, 300 கார்டுகள், 500 கார்டுகள் உள்ள கடைகள்கூட வைத்திருக்கிறோம். அதிலே பல கடைகள் ஆட்கள் வராமலே நடந்து கொண்டிருக்கின்றன; சில கடைகள் மூடப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். ரூ. 100 சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கின்றவர்கள், வேறொரு வேலை வந்தால் அதற்குப் போய் விடுகிறார்கள். வேறு ஒருவரை அதற்காகக் கூப்பிடும்போது, $1\frac{1}{2}$ மாதம் வரையிலும்கூட அந்தக் கடைக்கு ஆள் வராத நிலைமை சில இடங்களிலே இருக்கின்றது. அப்படி இருக்கும்போது, மற்றக் கடைகளில் இருப்பவரைக் கூப்பிட்டு, அந்தக் கடையை ஒரு 3 மணி நேரமும், இந்தக் கடையை ஒரு 3 மணி நேரமும் திறந்து வை என்று ஏற்பாடு செய்யும்போது அந்தக் கடை ஒரு 3 மணி நேரம், இந்தக் கடை ஒரு 3 மணி நேரம் மூடி வைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது. இன்னும் சில இடங்களில், அந்தக் கடைகளை மூட வேண்டிய நிலைமையும் ஏற்பட்டு விடுகிறது. அப்படியிருந்தும், நாம் ஆங்காங்கே ஸ்டெபலைசான அளவிலே டிஸ்ட்ரிபியூஷன் செய்து வருகிறோம்.

மத்திய அரசு நெல்லுக்கு நிர்ணயிக்கின்ற விலையைப் பற்றி இங்கே நான் சொல்ல வேண்டியதில்லை, அது உங்களுக்கே தெரியும். அவர்கள் ரூ. 105, ரூ. 109, ரூ. 113 என்று நெல்லை 3 ரகங்களாகப் பிரித்து, மோட்டா ரகம் என்றும், சன்ன ரகம் என்றும், மிகச் சன்ன ரகம் என்றும் கொடுக்கிறார்கள். ஆனால், நம்மைப் பொறுத்த அளவில் மோட்டா ரக நெல்லுக்குக் கூடுதலாக ரூ. 10 கொடுத்து, ரூ. 115 என்று நுகர்பொருள் வாணிபக் கழகம் வாங்கிக் கொள்ளலாம் என்றும், சன்ன ரகத்திற்கு ரூ. 119 என்றும், மிகச் சன்ன ரகத்திற்கு ரூ. 125 என்றும் சொல்லியிருக்கிறோம். அப்படி வாங்கினாலும்கூட,

ஓபன் மார்க்கெட்டிலே வியாபாரிகளும், மற்றவர்களும் அதைவிட அதிக விலை கொடுக்கின்ற காரணத்தினால், நம்முடைய இருப்பிற்கு வர வேண்டியது வெளி மார்க்கெட்டிலே இருந்து வருவதில்லை. நமக்கு ஐந்நூற்றுச் சில்லறை டன்தான் வந்தது.

(பிற்பகல் 2-00)

அதற்குமேல் வரவில்லை; உற்பத்தி குறைந்து, வறட்சி நிலை பரவலாக ஏற்பட்டது. நாமோ ஒரு கோடியே எட்டு லட்சம் கார்டுகளுக்கு அரிசி கொடுக்க வேண்டிய பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். மக்கள் வருகிறது. ரேஷன் கார்டு கணக்குப்படி பார்த்தால் 5½ கோடி மக்கள் தொகை சென்சஸ் கணக்குப்படி 4 கோடியே 80 இலட்சம்தான் இருக்கிறார்கள். ஆகவே போகஸ் கார்டு இருக்கிறது என்பது அதற்கு அர்த்தம். அதைக் கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு இருக்கிறோம். சென்சஸிலே இப்போது ஒரு கணக்கு எடுத்திருக்கிற காரணமாகவும், அதையும் வைத்துக்கொண்டு ஓரளவு ஏற்கெனவே இருப்பதை புதுப்பித்து ஒரு ஒழுங்குபடுத்தி, சீர்படுத்தலாமென இருக்கிறோம். அதற்கு ஏழு, எட்டு மாதங்கள் ஆகும். ஆனால் அதனுடைய ரிப்போர்ட் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இப்போது நாம் நியாய விலைக் கடைகளிலே எப்படி கொடுக்கிறோம் என்றால் ஒரு கோடியே ஏழு இலட்சம் குடும்ப கார்டுகளுக்கு கொடுக்கின்ற அரிசியை நாம் வாங்குகிற விலையைவிட 65 காசு, அல்லது 70 காசு குறைத்து 'சப்சிடியிலே'தான் நாம் தருகிறோம். இப்படி தருவதின் காரணமாக ஸ்டெபிலைஸ் ஆகிறது. வெளி மார்க்கெட்டிலே அதிகமான விலை போகாது, குறிப்பிட்ட விலைக்கு மேலே போகாத அளவிற்கு இருக்கிறது. ஏன் நியாய விலை கடைகளை வைத்திருக்கிறோம் என்றால் மற்றவர்கள் பதுக்கி வைக் காமல் இருப்பதற்கும், அவர்கள் அதிகமாக விற்காமல் இருப்பதற்கும், பொது மக்களுக்கு ஓரளவு போக வேண்டும் என்பதற்காகவும் தான் அதை வைத்திருக் கிறோம். கிட்டத்தட்ட அரசுக்கு 10 கோடிக்கு மேல் இதன் மூலமாக நஷ்டம் ஏற்படுகிறது. நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு நாம் இந்த அளவிற்கு தரவேண்டுமென்று குறித்து கொடுப்பதன் காரணமாக இது ஏற்படுகிறது. ஆகவேதான் வெளி மார்க்கெட்டிலே 3.50 3.80 ரூபாய் என்று விற்கிற இடத்திலே நாம் 1.75, 2.00, 2.15 என்று தந்து கொண்டிருப்பது சாதாரண மக்களுக்கு, கார்டு வைத்திருப்பவர்களுக்கும் பயன்பட வேண்டு மென்பதற்கும், கட்டுப்படுத்த வேண்டும் என்பதற்காகவும்தான்.

1981 ஏப்ரல் 25] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

லெவி வேண்டாம், லெவி வேண்டாம் என்று சொல்கிறார்கள். லெவி வைக்க வேண்டுமென்று நமக்கு ஆசையே கிடையாது. லெவி ஏன் வைத்தோம் என்றால் நமக்கு இருப்பு வேண்டும். இந்த ஒரு கோடியே எட்டு இலட்சம் கார்டுகளுக்கு நியாயவிலை கடைகள் 17,300 கடைகள் மூலமாக அங்கு அரிசியை வழங்குவதற்கு நம்முடைய கிடங்குகளிலே இருப்பு இருக்க வேண்டும். இருப்பு இருக்க வேண்டுமென்றால் நாமும் 'ஓபன் மார்க்கெட்டிலே' வங்க முயன்று ஐந்நூறு சில்லறை டன்தான் வந்தது. ஆகவேதான் நமக்கு இருப்பு இல்லாத நிலையில் கார்டுகளுக்கு வழங்க முடியாது. அரிசி ரேஷன் கடைகளிலே இல்லை என்ற நிலை ஏற்படுமானால் அதற்கு பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு அரசைச் சார்ந்தது. அதற்கு முன்னாலே மத்திய அரசு லெவி போட வேண்டுமென்று நமக்கு வற்புறுத்தினார்கள். அந்தத் தொல்லை வியாபாரிகளுக்கோ, உற்பத்தியாளர்களுக்கோ தர வேண்டாம் என்றுதான் கொஞ்சம் நிலைமை சீர்படும் என்று கருதினோம். பிறகு வேறு வழியில்லாமல் ட்ரேடர்ஸ் லெவி மட்டும் போட்டிருக்கிறோமே தவிர உற்பத்தியாளர்களுக்கு நாம் லெவி போடவில்லை. ஆனால் ட்ரேடர்ஸ் லெவி போடுவதன் காரணமாக நாம் 40 சதவீதம் என்று போட்டிருக்கிறோம்.

ஆந்திர மாநிலம் உபரி மாநிலம்தான். வெளி மாநிலங்களுக்கு அரிசி அனுப்புகிற அளவிற்கு, நாம் போய் வாங்கிக் கொண்டு வருகிற அளவிற்கு நிலைமை இருக்கிறது. அப்படி இருந்தாலும் ஆந்திர மாநிலம் லெவி 50 நாட்டில் முதன்முதலில் நெல்/அரிசி வாங்கும்போதுதான் இந்த 40 சதவீதம் போட்டிருக்கும்போது நாம் 40 சதவீதம்தான் போட்டிருக்கிறோம். அது இந்த தமிழகத்திலே உற்பத்தி ஆகிற நெல்லை ஒரு மொத்த வியாபாரி தமிழ் நாட்டில் முதல்முதலில் நெல்/அரிசி வாங்கும்போது தான் இந்த 40 சதவீதம் லெவி போடுகிறோம் அல்லது தனி உபயோகத்திற்கு, சொந்த உபயோகத்திற்கு எடுத்துக்கொண்டு போவார்களேயானால் அதற்கு லெவி கிடையாது. உரிய அதிகாரிகளிடம் அதற்கு அத்தாட்சி வாங்கிச் செல்வார்களானால் அதற்கு லெவி கிடையாது. சில்லறை வியாபாரிகளுக்கு வருகிறபோதுகூட லெவி கிடையாது. சில்லறை வியாபாரி இன்னொரு மொத்த வியாபாரிக்கு தருகிறபோதுதான் லெவி போடுகிறோம். ஆந்திராவிலிருந்து வந்த நெல் இங்கு நாம் 40 சதவீதம் ஆரம்பத்தில் லெவி போட்டோம். அப்படி லெவி போட்டதன் காரணமாக ஆந்திராவிலிருந்து தமிழகத்திற்கு வரவேண்டிய நெல், அரிசி வராமல் தடைபடும், தேங்கி விடும் என்று சொன்னார்கள். ...னே நிலைமையை உணர்ந்து இப்போது ஆந்திராவிலிருந்து வருகிற அரிசிக்கோ, நெல்லுக்கோ லெவி கிடையாது என்று எடுத்து விட்டோம். தாராளமாக எவ்வளவு வேண்டுமானாலும் ஆந்திராவிலிருந்து வரலாம். தமிழகத்திலிருந்து வெளி மாநிலங்களுக்குப் போனால் 40 சதவீதம் தரவேண்டு

மென்று வைத்திருக்கிறோம். இப்போது ஏற்கனவே 11 ஆயிரத்திலிருந்து 15 ஆயிரம் டன் வரையில் மாதம் ஒன்றுக்கு நியாயவிலை கடைகள் மூலமாக அரிசி விநியோகம் செய்கிறோம். இப்போது எந்த நிலைக்கு வந்திருக்கிறோம் என்றால் 40 ஆயிரம் டன், 50 ஆயிரம் டன், 60 ஆயிரம் டன் என்று கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அடுத்த மாதம், அதற்கடுத்த மாதம், அதாவது வருகிற மே, ஜூன், ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர் வரை நாம் சமாளித்து தீர வேண்டும். அதுவரையில் சமாளிக்க வேண்டுமெனறால் நமக்கு இருப்பு இருக்க வேண்டும். நாளுக்கு நாள் குடும்ப கார்டுகளின் மூலமாக அரிசி வாங்குகிறவர்கள் நிலை அதிகமாகிறது. 11 ஆயிரம் டன் செலவழித்த இடத்திலே இன்றைக்கு 35 ஆயிரம், 50 ஆயிரம் டன் செலவழிக்க வேண்டியிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் நுகர்பொருள் வாணிப கழகத்தின் மூலமாக ஆந்திராவிலிருந்து அரிசி வாங்குவதற்கு நாங்கள் தனியாக பேசாமல், ஆந்திரா அரசிடமே பேசியிருக்கிறோம்.

அங்கே இருக்கிற நுகர்பொருள் வாணிப கழகம் வாங்கி நம்முடைய நுகர்பொருள் கழகத்திற்கு தருவதற்கு அண்மையிலே பதினைந்து நாட்களுக்கு முன்னால் ஆந்திராவிற்கு சென்று அங்கே இருக்கிற முதலமைச்சர் அவர்களை கண்டேன்; அங்கேயிருந்த உணவு அமைச்சர் அவர்களைக் கண்டேன். அவர்கள் மிக மகிழ்ச்சியோடு, இன்னும் சொல்லப்போனால் பெருந்தன்மையோடு ஒரு இலட்சம் டன் நமக்கு ஒதுக்கி தருவதற்கு வாக்குறுதி தந்திருக்கிறார்கள். எங்களுக்கு மேற்கொண்டு ஒரு லட்சம் டன் தேவைப்படும் என்று கேட்டபோது அவ்வப்போது நாங்கள் கொள்முதலுக்கேற்ப தருகிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நெருக்கடி நிலையை உணர்ந்து குறைந்தது ஒரு லட்சம் டன் தர முன்வந்து மேற்கொண்டு ஒரு லட்சம் டன் தருவதற்கு முயற்சி செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுவரையிலே நாம் மகிழ்ச்சியடையவேண்டியவர்களாக இருக்கிறோம். இதைத் தவிர, பஞ்சாப், ஹரியானா போன்ற இடங்களிலே நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக அல்லது கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக நெல் எவ்வளவு வாங்க முடியுமோ அவ்வளவு வாங்கிக்கொண்டு வரலாம் என்று சொல்லியிருக்கிறோம். அதிலே இருக்கின்ற கஷ்டங்கள் வேகன்கள் கிடைப்பதில்லை. மத்திய அரசு ஒதுக்கிய அரிசியை இங்கே கொண்டுவந்து சேர்க்க முடியாமல் நாம் தவித்துக்கொண்டிருக்கிறோம், வேகன்கள் ஒதுக்கிடப்படவில்லை. நிலக்கரிக்கு நமக்கு வந்திருக்கிற அதே தகராறுதான் நெல்லுக்கும் வந்து சேர்ந்திருக்கிறது. இதைத்தவிர மத்திய அரசிடத்திலே கேட்டிருக்கிறோம்,

ஒரு 5 லட்சம் டன்னாவது செப்டம்பர் வரை தமிழகத்திலே நிதானமான அளவுக்கு கொண்டு போக மக்களுக்கு இந்த இடர்ப்பாடு இல்லாமல் இருக்க வேண்டுமென்றால் ஒரு 5 லட்சம் டன் உங்கள் கையிருப்பிலிருந்து தரவேண்டு மென்று கேட்டிருக்கிறோம். அதற்கான முடிவையும் அவர்களிடமிருந்து எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட நிலைமைகள் வருமானால் ஓரளவுக்கு இந்த நிலைமைகள் சீர்படும் என்று கருதுகிறோம். சர்க்கரை யைப் பொறுத்தவரையில் பல தடவைகள் சொல்லிவிட்டதன் காரணமாக ஏற்கெனவே இருந்ததைவிட இது நியாயம் என்று கருதுகிறோம். எல்லோரும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்து விடுவோமானால் ஆயிரம் ரூபாய்க்கு மேலே இருக்கிறவன் பண வசதி உடையவன்தான் அவனுக்கு இந்த ரேஷனிலே கொடுக்க வேண்டாம் என்று எல்லோரும் சேர்ந்து முடிவு செய்துவிட்டால் குறைவாக சம்பளம் வாங்குகிற ஏழை எளியவர்களுக்கு அதைப் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்றும் அவன் எப்படியாவது வாங்கிக் கொள்ளட்டும் என்று முடிவு எடுத்தால் ஏற்றுக்கொள்வதற்குக்கூட தயாராக இருக்கிறேன். ஏற்கெனவே இருப்பதிலே ஒரு மாற்றம் செய்யப்பட்டு இருக்கிறது, அப்படி வைத்தால் அந்தக் குறைபாடுகள் வரும் என்பதற்கான நிலைமைகள் இருக் கின்றன. இது நாமே செய்கிற மாற்றம்தான். அதிலே இன்னமும் மாற்றம் செய்ய வேண்டுமென்று யோசனைகளை எழுதி அனுப்பினாலும் சரி அல்லது சொன்னாலும் சரி அதைக் கேட்பதற்கு அரசு ஆயத்தமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அட்டைகளைப் பொறுத்தமட்டில் கூடுமானவரை புதுப்பித்தல் வேலை, மற்றவைகள் நடைபெற்று வருகின்றன. அத்தாட்சி தாருங்கள், தொலைந்துவிட்டது என்று எழுதித் தாருங்கள், அதற்காக சான்று தாருங்கள் என்று கேட்டால் அதைக் கொடுக்காத இடத்திலேதான் டிலே ஆகிறதே தவிர மற்ற இடங்களிலே விரைவாக கொடுக்கப் படுகின்றன. இந்த நியாயவிலைக் கடைகளிலே பெருங்கூட்டம் வருகிறது. அதைச் சீர்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். ஒரு மாதத்திற்கு வேண்டியவர்கள் அத்தனை பேருமே ஒரு நாளிலேயே ஓரே நேரத்திலேயே வந்து உட்கார்ந்து விட்டால் என்ன செய்ய முடியும். மேலை நாட்டிலே இருக்கின்ற மாதிரி வரவேண்டுமென்றுகூடச் சொன்னேன். அங்கே என்ன செய்கிறார்கள் என்றால் வாரத்திலே 6 நாட்கள் என்றால் அந்த ரேஷன் பொருட்களுக்கு எல்லாம் நீ திங்கட்கிழமை வா, நீ செவ்வாய்க்கிழமை வா அதிலே கூட பிற்பகல் 9 மணி முதல் 10 மணி வரை நீ வா, 10 முதல் 11 வரை நீ வா, 11 முதல் 12 மணி வரை நீ வா என்று அவரவர்கள் வேலைகளுக்குத் தகுந்தாற்போல் அவர்களுக்கு வேலையில்லாத நேரங்களிலே யார் யார் எந்த எந்த நேரத்திலே வேலைக்குப் போகிறார்களோ அதையெல்லாம் கருத்திலே

கொண்டு அந்த அந்த நேரங்களை அவரவர்களுக்கு ஒதுக்கிவிடுகிறார்கள். அப்படி வந்தால் பெரிய கியூக்கள் இருக்கின்ற நிலைமைகள் இருக்காது. அதற்காக ஒவ்வொரு ரேஷன் கடையைப் பொறுத்தவரையிலும் ஒரு ஊரைப் பொறுத்தவரையிலும் ஒரு குழுவை அமைத்து அதன் மூலமாக அதை ஒழுங்கு படுத்தி இன்னார் புதன்கிழமை தான் போய் வாங்கவேண்டும் என்று சொல்லி நெரிசல் இல்லாமல் பார்த்துக்கொள்கிறார்கள். ஆனால் தவறிவிட்டால் என்ன செய்யலாம் என்பதற்கு விதிவிலக்குகள் வைத்துக்கொள்ளலாம். கூடுமானவரையில் நெரிசல் தவிர்க்கப்படுகின்ற முறையிலே ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று இருக்கிறோம். முறைப்படி அது செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோதுமையைப் பொறுத்தவரையில் 65 ஆயிரம் டன் கொடுக்கிறார்கள். மைதாவுக்காக உருளை மாவு ஆலைகளுக்காக, 31 பெரிய ஆலைகள் இருக்கின்றன. 65 ஆயிரம் டன் கொடுக்கிறது மத்திய அரசு. அதை மத்திய அரசு திடீரென்று குறைத்துவிட்டார்கள். 20 ஆயிரம் டன்னுக்கு குறைத்து விட்டார்கள். ஆகவே உற்பத்தியும் குறைகிறது. மாவும் கிடைக்காத நிலை ஏற்படுகிறது. நாம் மேற்கொண்டு வற்புறுத்தி வருகிறோம். குறைந்த அளவு ஒரு 40 ஆயிரம் டன்கள் தந்தால்தான் ஓரளவுக்கு நிலைமையைச் சமாளிக்கலாம் என்று மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அது வந்ததற்குப் பிறகு நிலைமைகள் ஓரளவிற்கு சீர்படும். சர்க்கரை 19,500 டன்தான் தந்து வருகிறார்கள். அதைத்தான் பிரித்து பலருக்கு தர வேண்டியிருக்கிறது. நாம் வெளி மாநிலத்திலே பார்த்தால் 10 நாட்களுக்கு முன்னாலே இந்திய வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. ராவ் பிரேந்திர சிங் அவர்கள்கூட சொல்லியிருக்கிறார்கள். சர்க்கரை விலை அநியாயமாக ஏறியிருக்கிறது, என்ன காரணம் என்று எங்களுக்குத் தெரியவில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. சர்க்கரை கிடைக்காத சூழ்நிலை வருகிறபோது வெளிநாட்டிலிருந்து சர்க்கரை வரவழைக்க வேண்டுமென்றாலும் வரவழைக்க ஆயத்தமாக இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியெல்லாம் வந்தால் ஓரளவுக்கு சர்க்கரையை கூடுதலாகத் தரலாம். நாம் கூட்டுறவு சங்க ஆலைகளிடத்திலே பேசி வாங்கி வெளிமார்க்கெட்டிலே விற்பதைகூட 8, 9 ரூபாய் அளவுக்கு போகாமல் இப்போது 6.25 காசுக்கு நாம் தந்து வருகிறோம். இதை 7 ரூபாய் சில்லரைக்கு தர வேண்டிய கட்டத்திற்கு நாம் வந்திருக்கிறோம். ஆனால் வெளிமார்க்கெட்டிலே 8½ ரூபாய் 9 ரூபாய் போவதைக்கூட அவர்கள் அநியாய விலைக்கு விற்காமல் தடுப்பதற்காக லெவி சர்க்கரை கொடுப்பதோடு கூட நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பாக ஓப்பன் சந்தையிலே பேக்கரி, மற்றும் ஓட்டல்

1981 ஏப்ரல் 25] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

(பிற்பகல் 2-10)

களுக்கு, ஹாஸ்டல்களுக்கு தருவதையெல்லாம் அந்த விலைக்குத் தரலாமா என்று யோசித்துக்கொண்டு இருக்கிறோம். அது வந்தால் ஓரளவுக்கு வரும் இன்னும் கூடுதலாகக் கேட்டுக்கொண்டு இருக்கிறோம்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் மண்ணெண்ணெய் 44,000 மெட்ரிக் டன்கள் தேவை; இப்பொழுது கிடைப்பது 27,000 மெட்ரிக் டன்கள் என்று 30,000 தான் தருகிறார்கள். அதைச் சென்னை நகரத்திற்கு, ஓரளவுக்குக் கைவண்டிக்காரர்களுக்கு சென்னை நகரம் மற்றவைகளுக்கு 100 லிட்டர் தினமும் தருகிறோம்; வெளியூர்களில் 50 லிட்டர் தருகிறோம்; குடும்பக் கார்டுகளுக்கு சென்னை, புறநகர் ஆகியவற்றிற்கு 10 லிட்டர் தருகிறோம் மாதத்திற்கு. ஏனைய நகராட்சிகளுக்கு 6 லிட்டர்; நகரியம் மற்றும் பேரூராட்சிகளில் 5 லிட்டர்; ஊராட்சிகளில் 3 லிட்டர் தருகிறோம். இதனுடைய அளவு கூடுமேயானால் இந்த அளவையும் ஓரளவுக்குக் கூட்டிக்கொள்ளலாம் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் கடலையெண்ணெய் ஒன்றுதான் உபரியாக இருப்பது. இந்த ஆண்டு வறட்சியின் காரணமாக அதிலேயும் 30,000 டன் அளவிற்கு நமக்குப் பற்றாக்குறை ஏற்படும் என்ற நிலைமை இருக்கிறது. நல்லெண்ணெய் வெளிமாநிலத்திலேயிருந்துதான் வரவழைக்கப்படவேண்டும். தேங்காயெண்ணெயைப் பெரும்பாலும் கேரளத்திலிருந்து வரவழைக்க வேண்டும். அங்கேயே விலை ஏறியிருக்கிறது, அங்கேயே தேங்காயின் விலையும் ஏறியிருக்கிறது; எண்ணெயின் விலையும் ஏறியிருக்கிறது. இந்த விலைகளையெல்லாம் பார்க்கிறபொழுது, பாமோலின் 8 ரூபாய் 25 காசுக்குக் கிடைக்கிறது. அதையும் நாம் பத்தாயிரம் டன் கேட்டிருக்கிறோம். நமக்குத் தருவது மூன்றாயிரம் டன்தான். கொஞ்சம் அதிகமாகத் தருகின்ற சூழ்நிலை வருமேயானால் அதை 2 கிலோவோ 3 கிலோவோ ஆக்குவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படும் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றைய சில்லறை அங்காடிகளில் பணியாற்றுவதைப்பற்றியும், சில்லறை அங்காடிகள் ஏற்படுத்த வேண்டுமென்பதைப்பற்றியும், ஆங்காங்கே உள்ள குறைபாடுகளைப் பற்றியும் வெட்டுத் தீர்மானங்களிலே பலரும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவையெல்லாம் அதிகாரிகளால் குறிக்கப்பட்டிருக்கின்றன. என்னுடைய கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இந்தக் குறைபாடுகளெல்லாம் நீங்குகின்ற அளவிற்குத் தாராளமாகவும், நியாயமான அளவிலேயும் உணவுப் பொருள்களைக் கட்டுப்படுத்துகின்ற அளவிற்கு இருக்க வேண்டும்.

ஒன்றை மட்டும் நான் இந்த அவையிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். நாம் அச்சப்பட வேண்டிய அளவிற்கு அரிசியின், நெல்லினுடைய நிலைமை வைக்கப்படவில்லை. நாம் அச்சப்படாமல் செப்டம்பர் மாதம் வரையிலும் இழுத்துக்கொண்டு போகின்ற அளவிற்கு, நாம் அதைரியப்பட வேண்டிய அளவிற்கு இல்லாத அளவிற்கு உணவுப் பொருட்கள் இங்கே இருக்கின்றன. அதற்கான அளவிற்கு மற்றைய இடங்களில் பேசி எடுத்துக் கொண்டு வருகிறோம். அதற்கான அளவிற்கு நுகர்பொருள் வாணிபக் கழகம் எச்சரிக்கையாகவும் இருக்கிறது ; அதற்கான முன் முயற்சிகளையும் எடுத்துக்கொண்டு வருகிறது என்பதைத் தெளிவாக்க விரும்புகிறேன்.

அரிசி பற்றவில்லை; அரிசி கிடைக்கவே இல்லை என்ற நிலை தமிழகத்திலே ஏற்படாது என்பதை மட்டும் உறுதியாக இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். எந்த நிலைமையையும், மற்ற நிலைமைகளையும் நாம் சீர்படுத்த முடியும் ; அது மட்டுமல்லாமல் நீங்கள் டெல்லி, கல்கத்தா, பம்பாய், ஆமதாபாத், பாட்னா என்று எந்த ஊருக்குப் போய்விட்டுத் தமிழகத்திற்கு வந்தாலும் இங்கேதான் முழுச் சாப்பாடு, நல்ல சாப்பாடு 2½ ரூபாய்க்கு கிடைக்கிற ஹோட்டல் தமிழ்நாட்டிலே மட்டும்தான். மற்றயிடங்களிலேயெல்லாம் 4½ ரூபாய், 6½ ரூபாய், 8½ ரூபாய், 9½ ரூபாய்.

அது மட்டுமல்ல, எந்தவகை உணவுப் பண்டங்களை எடுத்துக்கொண்டாலும் அகில இந்தியாவிலே இருக்கின்ற மாநகரங்களிலே தமிழகத்திலேதான் விலை குறைவு. அதுவும் சென்னையிலேதான் விலை குறைவு ; மற்றத் தலைநகரங்கள் அத்தனையையும் எடுத்துக்கொண்டு புள்ளிவிவரங்களையெல்லாம் பார்ப்பீர்களேயானால் தெரியும். ஆனால் இன்னும் கட்டுப்படுத்த நாங்கள் முயற்சி செய்கிறோம். அதற்கு அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், ஹோட்டல்காரர்களெல்லாம் எங்களுக்குக் கணிசமான விலையிலே குறைத்துக் கொடுங்கள், நாங்களும் கணிசமான விலைக்குத் தருகிறோம், எங்களுக்குக் கட்டுப்படியாகின்ற அளவிற்குத்தான் வைக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவேதான், ஹோட்டல்களை மூன்று வகையாகப் பிரித்து மூன்றுவித விலைகளைப் போட்டு வசதியான ஹோட்டலுக்கு ஒரு விலை, வசதிக் குறைவான ஹோட்டலுக்கு ஒரு விலை என்று கூறும்படி சொல்லியிருக்கிறோம். அதையும் கண்காணிக்கும்படி சொல்லியிருக்கிறோம். இந்த நிலைமைகளையெல்லாம் பார்த்து நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்த முடியும். மேலும் நல்ல ஒத்துழைப்பும், ஆதரவும் தர வேண்டும்.

1981 ஏப்ரல் 25] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஆங்காங்கு இருக்கின்ற குறைபாடுகளையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் அவ்வப்பொழுது சுட்டிக் காட்டுகின்றபொழுது அதைக் கவனத்திற்குக் கொண்டு வருவதன் காரணமாக நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே, கூடுமானவரையில் பொறுப்புணர்ச்சியோடு, கடமை உணர்ச்சியோடு பணியாற்றுகின்றவர்கள் பல பேர் இருக்கிறார்கள். கடமை தவறுகின்றவர்களும் இருக்கிறார்கள். இல்லையென்று சொல்லவில்லை. அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கடமையுணர்ச்சி கொண்ட மேலதிகாரிகள் ஈடுபட வேண்டுமென்று மென்று வற்புறுத்தியிருக்கிறோம். அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரும்பொழுது அதைக் களையவும் முடியும்.

அந்த அளவிற்கு இந்த அவையிலே உள்ள உறுப்பினர்கள் அத்தனைபேரும் தங்களுடைய முழு ஒத்துழைப்பையும், ஆதரவையும் தந்து இந்த இரண்டு மானியக் கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது இன்னும் நன்றாக வளர வேண்டும் வளர வேண்டும் என்று எல்லோரும் சொல்லிவிட்டு, வெட்டு வெட்டு என்றும் சொன்னால் அது சரியாக இருக்காது. ஆகவே, இன்னும் கொஞ்சம் அதிகமாக ஒதுக்கு என்று கேட்ட நீங்கள் அதை வெட்டு என்று சொல்லாமல் அதையெல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு நிறைவேற்றித் தர வேண்டுமென்று உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் துறையிலே பணியாற்றுகின்ற அதிகாரிகள், மற்றும் அலுவலாளர்கள் ஆகிய அத்தனைபேருக்கும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்து இந்த மன்ற உறுப்பினர்களுக்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் 21—மீனளம்.

திருவாளர்கள் சு. பாலன், டி. மணி, செ. சிவசாமி ஆகியவர்களுடைய அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திரு. எஸ். இராசாராமன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் டைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண் 21—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 8,61,14,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 35—நுகர்பொருள் வழங்கல்.

திரு. கே. ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

திருவாளர்கள் த. வேணுகோபால், கே. கல்லன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண் 35—நுகர்பொருள் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,96,25,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, திங்கட்கிழமை 27—4—1981 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.16 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

364. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் மரவள்ளி வற்றல், மரவள்ளி மாவு மரவுள்ளி மாவுப் பொருள், புகையிலை, தேங்காய் மற்றும் தேங்காய் உற்பத்திப் பொருள்கள், புளி, வெங்காயம், துவரம்பருப்பு ஆகியவற்றைக் கொள்முதல் செய்தல் மற்றும் விற்பனை செய்தலின் மீது கட்டுப்பாடு செலுத்துதலை

அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 11-12-1980 ஆம் தேதியிடப் பெற்ற 2357 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

@ 162. கோரிக்கை எண் 21—மீனளம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1981-82 (தமிழ், ஆங்கிலம்).

† 163. கோரிக்கை எண் 35—தமிழ்நாடு உணவு நிலைமை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

† 164. மீனளம் குறித்த செயல்முறைத் திட்டம், 1981-82 (ஆங்கிலம்).

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு I

(2 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 874-க்கான விடையைக் காண்க.)

விவர அறிக்கை.

திருவாளர்கள் இராமச்சந்திரா கெமிக்கல்ஸ் என்ற நிறுவனம் எப்பொழுதும் மூடியே இருக்கிறது. இது ஒரு கனரகத் தொழிற்சாலை. இந்நிறுவனத்தின் சார்பில் பதில் சொல்ல ஒருவரும் இல்லை.

2. நேரிடையாக அரசு எந்தவித கடன் உதவியையும் இந்நிறுவனத்துக்கு கொடுக்கவில்லை எனினும், இத்தொழிற்சாலை, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TII.I C.) தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT) மற்றும் இந்தியன் வங்கி ஆகிய மூன்று நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்றிருந்ததாகவும், தற்போது கீழ்க்கண்ட தொகைகள் நிலுவையில் இருப்பதாகவும் தெரிய வருகிறது :—

(1) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்துக்குச் சேர வேண்டிய தொகை.	ரூ. 41.43 இலட்சம்.
(2) தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்திற்குக் கொடுபட வேண்டிய தொகை.	ரூ. 28.11 இலட்சம்.
தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்திற்குக் கொடுபட வேண்டிய தொகை மத்திய நிதி உதவி (மானியத் தொகையாக).	ரூ. 5.00 இலட்சம்.
(3) இந்தியன் வங்கிக்கு சேர வேண்டிய தொகை. (சென்னை உயர்நீதி மன்றத்தில் இதற்காக இரண்டு வழக்குகள் தொடரப்பட்டுள்ளன).	ரூ. 56.69 இலட்சம்.

இந்நிறுவனம் புதுக்கோட்டை எலக்ட்ரிசிடி சிஸ்டம் என்ற அமைப்பிற்கும் மின்சார பாக்கியாக ரூபாய் 1,44,012.76 செலுத்த வேண்டியிருப்பதாகவும் இது குறித்து சிவில் கோர்ட்டில் டிக்ரி (Decree) ஒன்றும் மேற்படி வாரியத்தாரால் (Board) பெறப்பட்டுள்ளது என்றும் தெரிய வருகிறது.

1981 ஏப்ரல் 25]

இந்நிறுவனத்தைத் திரும்பவும் இயங்கச் செய்ய இவ்வரசின் நிதி நிறுவனங்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் யாவும் பயனளிக்கவில்லை என்பது வருந்தத்தக்கது. இத்தொழிற்சாலையிலுள்ள குறைபாடுகளை நீக்கி அதனை இயங்க வைக்க யாரும் முன்வரவில்லை. ஆகவே, கடனுதவி அளித்துள்ள நிறுவனங்கள், அவைகளுக்குள் கலந்தாலோசித்து தொழிற்சாலையை விற்றுவிட முடிவெடுத்துள்ளன.

இணைப்பு

(64 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மீன் வளத்துறை

கொள்கைக் குறிப்பு

1981-82

சாதாரண மக்கள் வாங்கி உண்ணும் அளவிற்கு மலிவான விலையில் கிடைக்கும் மீன் அதிக புரதச் சத்து நிறைந்ததாக தொடர்ந்து விளங்குகின்றது. இந்த மீன் உணவை அதிக அளவில் உற்பத்தி செய்வது மாத்திரமல்லாது, ஏழை எளிய மக்களுக்கும் நியாயமான விலையில் கிடைக்க வேண்டும் என்பதும் அதே நேரத்தில் அந்த மீனைக் கொண்டு வரும் மீனவர்களுக்குப் போதிய வருமானத்தையும் கொடுக்க வேண்டும் என்பதும் அரசின் முக்கிய நோக்கமாகும். தமிழகத்தில் கடல், நன்னீர் மற்றும் உவர் நீர் ஆகிய வற்றிலிருந்து கிடைக்கும் மீன்வளம் அதிக அளவில் இருக்கின்றது. தமிழகத்தில் 1,000 கிலோ மீட்டர் நீளமுள்ள கடலோரப் பகுதியில் கடல் மீன்கள் பிடிப்பதற்கு நல்ல வாய்ப்பு உள்ளது. அதேபோன்று சுமார் 3.69 இலட்சம் ஹெக்டேர் பரப்புள்ள உள்நாட்டு மற்றும் உவர் நீர் நிலைகளிலும், மீன்கள் வளர்ப்பு செய்ய வாய்ப்புள்ளது.

2. தமிழ்நாட்டின் சிறந்த மீன் வளத்தைக்கருத்தில் கொண்டு தமிழக அரசு ஒரு பணிக் குழுவை ஏற்படுத்தி ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்கான மீன்வள அபிவிருத்தி திட்ட அறிக்கையை மத்திய அரசின் திட்டக் குழுவோடு கலந்து பேசி தயார் செய்து மீன் வளத்திற்கு ரூ. 2,400 இலட்சம் ஒதுக்கீடு செய்ய முடிவு செய்துள்ளது. உலக வங்கியின் பொருளாதார உதவியோடு அமல் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள பெரிய அளவு மீன் வளத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூ. 1,000 இலட்சமும் இதில் அடங்கும்.

திட்டக் குறிக்கோள்கள் :

3. துறையின் சீரிய நோக்கங்கள் பின்வருமாறு :

1. ஊட்டச்சத்து நிறைந்த மீன்களை கடல், நன்னீர் மற்றும் உவர் நீர் நிலைகளில் அதிக அளவில் கிடைக்கச் செய்தல் ;

2. கடலோரத்தில் எளிதில் கரையேற்றக் கூடிய வெளிப்புற அல்லது உட்புற இயந்திரங்கள் பொருத்தப்பட்ட கண்ணாடி இழைப்படகுகளை மீனவர்களுக்குக் கொடுத்துதவுதலும், கட்டுமரம், தோணி இவைகளின் மீன்பிடி திறனை அதிகப்படுத்தி சிறு அளவு மீன்வளத் திட்டத்தை மேம் படுத்தவும்;

3. தமிழக எல்லையினுள் ஆழ்கடலின் மீன்வளத்தை ஆய்வும் செய்து, ஆழ்கடல் மீன்பிடிப்பதற்கு வழிவகை செய்தல்;

4. விசைப்படகுகளும், மீன்பிடிக் கப்பல்களும் தங்குவதற்கு அதிகமான மீன்பிடித் துறைகள் அமைத்தல் ;

5. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் மூலம் மக்களுக்கு நல்ல முறையில் பக்குவப்படுத்தப்பட்ட தரமான மீன்களை நியாயமான விலைக்கு தமிழகத்தில் பெரிய நகரங்களிலும், பட்டணங்களிலும் கிடைக்க ஏற்பாடு செய்தல்;

6. மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் மூலம் குளங்களை நீண்ட கால குத்தகைக்குக் கொடுத்தும் மீன்வளர்ப்பு, மீன் பராமரிப்பு ஆகியவற்றில் மீனவர்களுக்கு பயிற்சி அளித்தும் கூட்டுறவு மற்றும் தனிப்பட்ட நபர் களுக்கும் ஊக்கமளிப்பது மூலமும் தரமான மீன் குஞ்சுகளின் உற்பத்தியை அதிகரித்தல் ;

7. உவர்நீர் நிலைகளைப் பயன்படுத்தி பெருமளவில் மீன் மற்றும் இறால் வளர்த்தலை மேற்கொள்ளுதல் ;

8. மீனவர்களுக்கு மீன்படிப்பில் பல்வகைப்பட்ட மாற்று முறைகளை புதுமையான முறையில் கையாள பயிற்சியளித்தல், மீன்வளத் திட்டங்களின் வளர்ச்சிக்காக பிரத்தியேகப் பிரிவுகளில் மீன்துறை அலுவலர்களுக்கு பயிற்சி அளித்தல் ;

9. சமூகப் பொருளாதார அமைப்பில் நலிவுற்ற மீனவர்கள், மீனவப் பெண்டிர் ஆகியோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் ;

10. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம், விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றிலிருந்து உதவிகளைப் பெற்று மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்குப் புது வலிமையூட்டுதல் ;

11. எல்லோருக்கும் குறிப்பாக மீனவர்களுக்கும், மீனவப்பெண்டிர்க்கும் வேலை வாய்ப்பு அளித்தல்.

4. தமிழ்நாட்டில் மீன் உற்பத்தி :

1950-லிருந்து மீன் துறை மேற்கூறிய நோக்கத்துடன் திட்டங்களை அமுல்படுத்தி வருகின்றது. இத்திட்டங்களினால் 1950-ல் 81,700 டன்களாக இருந்த மீன் உற்பத்தி 1960-ல் 1,24,300 டன்களாகி, 1970-ல் 2,93,800 டன்களாக உயர்ந்து தற்போது மொத்த மீன் உற்பத்தியின் அளவு 3,76,689 டன்களாக எட்டியுள்ளது. கடந்த முப்பது ஆண்டுகளில் மீன் உற்பத்தி 4½ மடங்காக உயர்ந்துள்ளது.

4. 2. அயல் நாடுகளில் இராலுக்கு நல்ல வரவேற்பு இருப்பதால், தமிழகதிலுள்ள சுமார் 2,300 விசைப்படகுகளும் இரால் பிடிப்பில் கவனம் செலுத்துவதால் இதர உணவு மீன்கள் பெரும் அளவு சுமார் 38,000 நாட்டுப் படகுகள் மற்றும் கட்டுமரங்கள் மூலம் பிடிக்கப்படுகின்றன. 1979-80-ல் மொத்த இரால் உற்பத்தி 7,121 டன்களை எட்டியது. இதன் மதிப்பு இதே அளவுள்ள மீன்களின் மதிப்பைப் போல் பன்னிரண்டு மடங்காகும். 1962-ல் ஏற்றுமதி செய்யப்பட்ட இரால் மற்றும் இதர மீன் உணவுப் பொருட்களின் அளவு 4,566 டன்களாக இருந்தது. இது 1979-ல், 8,294 டன்களாக உயர்ந்தது. இதன் மதிப்பு ரூ. 29.83 கோடியாகும். நாட்டுப் படகுகளை இயந்திரமயமாக்குவதாலும், பெரிய மீன்பிடிக் கப்பல்களைக் கொண்டு வருவதாலும் பர்சீன் வலைகளைக் கொண்டு மீன்பிடிப்பதாலும் தற்போதுள்ள 2.17 இலட்சம் டன் கடல் மீன் உற்பத்தி ஆறாவது ஐந்தாண்டு திட்ட இறுதியில் 3.00 இலட்சம் டன்களாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

4.3. முறையாக, மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்வதாலும், நீர்த்தேக்கங்களில் மீன் குஞ்சுகளை விடுவதாலும், உள்நாட்டு மீன் உற்பத்தி தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்ப காலத்தில் 1,20,000 டன்களாக இருந்த உள்நாட்டு மீன் உற்பத்தி 1979-80 ஆம் ஆண்டு இறுதியில், 1,60,000 டன்களாக உயர்ந்தது. இந்த உயர்வு 33 1/3 சதவீதம் ஆகும்.

[1981 எப்ரல் 25

மீன்குஞ்சுகளின் உற்பத்தி அதிகரிப்பதாலும், மீன் நாற்றங்கால் வசதிகளைப் பெருக்குவதாலும் 6-வது ஐந்தாண்டு திட்ட கால முடிவில் மேற்குறிப்பிட்டுள்ள 1,60,000 டன்களிலிருந்து 2,10,000 டன்களாக உயருவதற்கு வழி வகை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

5. நிதி :

இந்தத் துறையின் திட்டங்கள் தொடர்ந்து செயல்பட 1981-82 ஆம் ஆண்டுத் திட்டத்திற்கு மாநில அரசு கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கம் செய்துள்ளது:—

	(ரூபாய் இலட்சத்தில்.)
அ. திட்டத்தில் சேராத நடவடிக்கைகள்	211.29
ஆ. மாநில திட்டப் பணிகள்	131.93
மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்	23.83
தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்திற்கு உதவி	20.03
வேளாண்மைப் பல்கலைக் கழகம்	35.00
மொத்தம்	422.08

5.2. மேலும் மீனவ கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள், மீனவர்க்கு வீடுகள் கட்டித்தருதல் ஆகிய பணிகளுக்கும் அரசு கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கம் செய்ய ஒப்புதல் அளித்துள்ளது.

		(ரூபாய் இலட்சத்தில்.)
1. மீனவ கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள்	30.00	(நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறை மூலமாக செயல்படுத்தப் பட்டிருக்கிறது)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 25]

மீனவர்களுக்கு வீட்டு வசதி	100.00	(தமிழ்நாடு ஆதி திராவிட வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தால் கட்டப்பட விருக்கின்றது)
மொத்தம் ..	130.00	

ஆ. மாநில திட்டப் பணிகள் 131.93

6. ஆராய்ச்சி, மீன்வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் மீனவர் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்கள் முதலியன மீன்துறையினரால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. வியாபார நோக்கமுள்ள திட்டங்களான விசைப்படகுகள் கட்டி வழங்குதல், பெரிய மீன்பிடிக்கப்பல்களைக் கொண்டு ஆழ்கடலில் மீன் பிடித்தல், மீன்களைப் பக்குவப்படுத்தி விற்பனை செய்தல், மீன்தூள் உற்பத்தி மற்றும் விற்பனை ஆகிய திட்டங்கள் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தால் 1974 ஜூலை திங்கள் முதற்கொண்டு செயல் படுத்தப்பட்டு வருகின்றன. இக்கழகத்திற்கு நிதி உதவி வங்கியின் மூலம் கிடைக்கின்றது. எனினும் கழகத்திற்கு வங்கிகளின் மூலம் கிடைக்கும் நிதி உதவிகளைத் தவிர மாநில அரசும் கீழ்க்கண்டாவறு நிதி உதவியைத் தொடர்ந்து அளிக்கிறது.

	(ரூபாய் இலட்சத்தில்.)
1. பங்கு மூலதனம்	190.30
2. இறுதிநிலை ஒதுக்கீடு	127.65
3. வழிவகைகள் முன்பணம்	45.27
4. மெக்சிக்கோ மீன்பிடிக் கப்பல்கள் (டிராலர்கள்)	14.22
5. புயல் நிவாரண நிதிக்கு மானியம் மற்றும் கடன்களுக்கு	38.00
6. வளர்ச்சித் திட்டங்கள்	26.00
7. வட்டி மான்யம்	120.29
8 மூலதன மான்யம்	24.72
9. இதர திட்டங்களுக்கான மான்யம்	109.52
மொத்தம்	695.37

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

[1981 ஏப்ரல் 25

7. திட்ட காலத்தில் மீன்துறையாலும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தாலும் அமுல்படுத்தவிருக்கும் கொள்கைகளும் வளர்ச்சித் திட்டங்களும் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

1. உள்நாட்டு மீன்வளம் :

மீன்குஞ்சு உற்பத்தி

நமக்கு கிடைக்கும் தரமான மீன் குஞ்சுகளின் உற்பத்தி அளவு மிகவும் குறைவானதாகும். இது உள்நாட்டு மீன் உற்பத்தியின் அளவு அதிகரிப்பதற்குத் தடையாக இருக்கின்றது. கடந்த ஆண்டுகளில் பல்வேறு மீன்குஞ்சு உற்பத்தி மற்றும் விநியோக நிலையங்களிலிருந்து நமக்கு 60 மில்லியன் மீன் குஞ்சுகள் கிடைத்துள்ளன. இவற்றில் 40 மில்லியன் மீன் குஞ்சுகள் இயற்கையிலேயே ஆறுகளிலிருந்தும், 20 மில்லியன் மீன் குஞ்சுகள் செய்யற்கைமுறை தூண்டுதல் மூலம் இன அபிவிருத்தியாலும் கிடைத்தன. தமிழகத்திலுள்ள 3.69 இலட்சம் ஹெக்டேர் உள்நாட்டு நீர் பரப்புகளில் இருப்பு செய்வதற்கு 350 மில்லியன் மீன்குஞ்சுகள் தேவைப்படும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. எனவே மீன் குஞ்சுகளின் உற்பத்திக்கும் தேவைக்கும் பெரிய இடைவெளியைப் பூர்த்திச் செய்ய பொருத்தமான இடங்களில் மீன் நாற்றங்கால்களை ஏற்படுத்தி மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக 100 மில்லியன் மீன் குஞ்சுகளை கூடுதலாக உற்பத்தி செய்யும் வகையில் மீன் நாற்றங்கால்கள் கட்டவும், மீன் வளர்ப்புக் குளம், மீன் இன விருத்திக்குளம், முதலியவை கட்டுவதற்கும் நாட்டின் 10 இடங்களில் இவைகளை அமைப்பதற்கும் ரூ. 110 இலட்சம் செலவில் ஓர் மூன்றாண்டு திட்டத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இவற்றைக் கட்டும் பணி 1980-81-ம் ஆண்டு முடிவில் எடுக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட 10 இடங்களிலும் மீன்பண்ணைகள் கட்டி முடிக்கப்பட்டு மூன்றாவது ஆண்டின் இறுதியில் முழுமையாகச் செயல்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இப்பண்ணைகளால் கூடுதலாக நமக்கு 30 ஹெக்டேர் பரப்புள்ள நாற்றங்கால்கள் கிடைக்கின்றன. இதனால் மேலும் 100 மில்லியன் மீன் குஞ்சுகளை திட்ட கால இறுதியில் உற்பத்தி செய்யலாம்.

மேலும் 1981-82-ல் திருச்சி மாவட்டத்திலுள்ள சிந்தாமணி அகூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சித்தார் ஆகிய இடங்களில் அதிக நாற்றங்கால் நிலையங்கள் கட்டுவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால் மேலும் 11 மில்லியன் மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்ய வாய்ப்

1981 ஏப்ரல் 25]

புள்ளது. மீன் குஞ்சுகளின் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு சென்னை சேத்துப்பட்டு மீன் பண்ணையில் மீன்குஞ்சு பொறிக்கும் நிலையம் ஒன்று அமைக்கப்படவிருக்கிறது.

புதிய நீர்த்தேக்கங்களிலும் பெரிய நீர்ப்பாசன குளங்களிலும் பெருமளவில் மீன் குஞ்சுகளை இருப்பு செய்து பாதுகாத்து மீன் உற்பத்தியை அதிகரிப்பது நடைமுறைச் செயல் திறமையாகும். இத்திட்டத்தின் மூலம் மதுரை மாவட்டத்திலுள்ள வரதமாநதி நீர்த்தேக்கத்தில் மீன் வளர்ப்பை மேற் கொண்டு வருடத்திற்கு 20 டன் மீன்களை உற்பத்தி செய்ய உத்தேசிக்கப் பட்டுள்ளது. 1981-82-ல் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள சிறிய நீர்ப்பாசன குளங்களிலும் மீன் குஞ்சுகளை இருப்பு செய்து மீன் உற்பத்தியைப் பெருக்கு வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. குளங்களின் உரிமை என்ற பாகுபாடு இல்லாது மீன் உற்பத்தியை மட்டுமே முக்கியமாகக் கொண்டு இக்குளங்கள் யாவற்றிலும் மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்படும்.

(2) மீன்வளர்ப்பு மேம்பாட்டு முகமைகள்:

ஒரு ஹெக்டேருக்கு சராசரி மீன் உற்பத்தி 300 கிலோ வரை குளங் களில் இருந்து வருகிறது. கூட்டு இன மீன் வளர்ப்பு மற்றும் மேற்பார்வைத் திறன் மூலம் இந்த உற்பத்தியை ஒரு ஹெக்டேருக்கு 1,500 கிலோ வரை அதிகரிக்க முடியும். இந்த நோக்குடன், மாநிலத்தில் அதிக அளவில் மீன் பண்ணைகளை ஏற்படுத்தி, மீன் வளர்ப்பு மேம்பாட்டு முகமைகளையும் அமைத்து உறுப்பினர்களுக்கு பொருளாதார ரீதியான உதவியும், நீண்ட கால குத்தகைக்கு குளங்களை வழங்கி செயல்படுத்துவதற்கு மத்திய அரசு மாநிலங்களுக்கு உதவி புரிகிறது. வணிக வங்கிகளும் மாநில அரசின் உத்திர வாதத்துடன் மீனவ விவசாயிகளுக்கு கடன்களை வழங்குகின்றன. இதன் பயனாக, தஞ்சாவூர், திருச்சி, மதுரை, தர்மபுரி முதலிய மாவட்டங்களில் மேம்பாட்டு முகமைகள் அமைக்கப்பட்டு மீன் உற்பத்தியும் அதிகரித்திருக் கிறது. தர்மபுரி மாவட்டத்தில் ஹெக்டேருக்கு 480 கிலோவாகவும், தஞ்சை மாவட்டத்தில் ஹெக்டேருக்கு 1,200 கிலோவாகவும் மீன் உற்பத்தி அதிகரித் துள்ளது. இவை மாநிலத்தின் மற்ற பகுதிகளில் சராசரி மீன் உற்பத்தியான ஒரு ஹெக்டேருக்கு 300 கிலோவைவிட அதிகமாகும். மீனவ விவசாயிகளின் வருவாயும் உயர்ந்திருப்பதோடு இத்திட்டத்திற்கு அவர்களின் மிகுந்த ஊக்கமும் இருந்து வருகிறது. எனவே இத்திட்டம் 1980-81-ல் செங்கல்பட்டு, தென்னாற்காடு, திருநெல்வேலி ஆகிய மூன்று மாவட்டங்களில் விரிவாக்கப் பட்டுள்ளது.

(3) உவர்நீர் மீன் பண்ணைகள்:

அடையாறில் அமைக்கப்பட்டுள்ள ஆராய்ச்சி மீன் பண்ணை 90-லிருந்து 120 நாட்களுக்குண்டான ஒரு போகத்தில் 500 கிலோ எடையுள்ள இரால் மீன் உற்பத்தியை ஏற்படுத்தி சாதனை புரிந்திருக்கிறது. தமிழ் நாட்டில் உள்ள உவர்நீர் நிலைகளை முழுவதும் பயன்படுத்தி நன்மை பெறும் வகையில் எல்லா கழிமுக மற்றும் உவர் நீர் நிலைகள் யாவும் இரால் மற்றும் மீன் வளர்ப்பதற்காகவும், மீன் துறை அல்லது மீனவர் கூட்டுறவுச் சங்கங்களால் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்று அரசு ஒரு கொள்கை அளவில் முடிவெடுத்துள்ளது. மேற்குறிப்பிட்ட முடிவின்படி தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த அதிராம்பட்டினத்தில் 50 ஹெக்டேர் பரப்பளவுள்ள இடத்தில் கூட்டுறவு முறையில் உவர் நீர் மீன் பண்ணை ஒன்று வணிக வங்கிகளின் நிதி உதவியுடன் அமைக்க நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கிள்ளையில் 6 ஹெக்டேர் பரப்பளவுள்ள இடத்தில் துறையைச் சார்ந்த உவர்நீர் மீன் பண்ணை ஒன்று ரூ. 11.92 இலட்சம் செலவில் மத்திய பிரிவுத் திட்டத்தில் கீழ் மத்திய அரசின் நிதி உதவியுடன் உருவாகிக் கொண்டு வருகிறது.

இந்தப் புதிய செயல் முறைத் திட்டத்தினால் இரால் வளர்ப்பு தொழில் நுணுக்கங்கள் மக்களிடையே தெரியப்படுத்தப்பட வேண்டும். இதற்கு பயிற்சி பெற்ற நபர்கள் இல்லாததால், உவர் நீர் இடங்களில் இரால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு மீனவர்களுக்கும், மீனவ விவசாயிகளுக்கும் தொழில் நுணுக்கங்களை பயிற்றுவிப்பதற்கு 1980-81-ல் ரூ. 7.50 இலட்சம் செலவில் 10 செயல் முறை விவக்க இரால் வளர்ப்பு பண்ணைகளை நிறுவுவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தப் பண்ணைகள் தற்போது கட்டப்பட்டு வருகின்றன மீன்பிடிப் பயன்களுக்கும் மற்றும் கிராம இளைஞர்களுக்கும் சுயவேலைவாய்ப்புக்கு வழி காணும் வகையில் அவர்களுக்கு ட்ரைசெம் (TRYSEM) திட்டத்தின் கீழ் உவர் நீர் மீன் வளர்ப்பில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மற்ற மீனைவிட, இரால் மீன் அதிக வருவாயைக் கொடுக்கிறது. ஆகவே செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள கொளவாய் ஏரிக் கருகில் ஓர் முன்னோடி நன்னீர் இரால் செயல் விளக்கப் பண்ணை அமைத்து, அதில் நன்னீர் இரால் வளர்க்கும் சாத்தியக் கூறுகளைக் கண்டறியும் முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இம் முயற்சி வெற்றி பெறின், மீனவர்கள் மற்றும் மீனவ விவசாயிகளின் நன்மைக்காக இதர உள்நாட்டு நீர் நிலைகளுக்கும் இத்திட்டம் விரிவாக்கப் படும்.

1981 ஏப்ரல் 25]

2. கடல் மீன் வளம் :

நாட்டுப்படகுகளுக்கு உதவி :

கடந்த ஐந்தாண்டு திட்டங்களின்போது இயந்திரமுறைப் பட்ட விசைப் படகுகளை அறிமுகப்படுத்துவதில் தனிக்கவனம் செலுத்தப்பட்டது. கடல் மீன்பிடிப்பில் 70 சதவிகிதம் நாட்டுப் படகுகளின் மூலம் பிடிக்கப்படு கின்றது. இருந்தும் நாட்டுப்படகுகளின் (கட்டுமரம், வள்ளம்) மூலம் மீன் பிடிக்கும் மீனவர்களிடையே பொதுவாக தாங்கள் சரியாக கவனிக்கப்படுவ தில்லை என்ற எண்ணமும், நம்பிக்கையற்ற உணர்வும் இருந்து வருகிறது. எனவே ஆறாவது திட்ட காலத்தில் கட்டுமரம், வள்ளம் ஆகிய நாட்டுப் படகுகளின் திறமையை விஸ்தரிக்கும் பொருட்டு அவசரமான மற்றும் அவசியமான உதவி தேவைப்படுகின்றது. மாநிலப் பணிக் குழுவும் மற்றும் இந்திய அரசின் திட்டக் குழுவும் மேற்கண்ட கருத்தை ஆதரித்து எழுதி யிருப்பதோடு இந்த மீனவர்களுக்கு (அ) கண்ணாடி இழைப் படகுகள் (ஆ) உட்புறம் பொருத்தும் என்ஜின் (இ) வெளிப்புறம் பொருத்தும் என்ஜின் (ஈ) கூட்டு வலைகள் முதலானவற்றை விநியோகிப்பதில் தேவையான தனி நிதி ஒதுக்கீடுகளைச் செய்ய வேண்டும் என்றும் கூறியுள்ளன. எனவே இதனை கருத்தில் கொண்டு 1981-82-ம் ஆண்டுத் திட்டத்தில் இம்மீனவர் களுக்கு கீழ்க்கண்டவாறு உதவியை விரிவாக்க அரசு உத்தேசித்துள்ளது:—

(அ) உட்பொருத்தப்பட்ட/வெளியில் பொருத்தப்பட்ட இயந்திரங் களுடன் கூடிய நூறு கண்ணாடி இழைப்படகுகள் மற்றும் கூட்டு வலைகள் வாங்குவதற்கு 20 சதவிகிதம் மானியம் வழங்குதல்;

(ஆ) கடன் மற்றும் 20 சதவிகிதம் மானிய அடிப்படையில் வெளிப் புறம் பொருந்தும் இயந்திரங்களையும் கூட்டு வலைகளையும் கட்டு மர மீனவர்களுக்கு விநியோகித்தல்;

(இ) 80 சதவிகிதம் விலையில் நாட்டுப்படகு மீனவர்களுக்கு நைலான் நூல் விநியோகித்து அதன் விலையை தவணைகளில் வசூல் செய்தல்.

3. ஆழ்கடல் மீன்பிடிப்பு.

மீன்வளங்களை அளவிடுதல்:

கடற்கரை நெடுகிலும் 10 பாதம் (Fathoms) ஆழம் வரை அண்மைக்கடல் மீன்வளங்களை அறிய மீன் துறை ஏற்கனவே அளவாய்வு செய்து கொண்டு வருகிறது. மத்திய அரசைச் சேர்ந்த

[1981 ஏப்ரல் 25

மீன்பிடி ஆராய்ச்சி நிலையத்தால் 40 (Fathom) பாதம் ஆழம் வரை ஆழ்கடல் சென்று (40 athoms) பாதத்திற்கு அப்பால் அளவாய்வு செய்ய உதவும் பொருத்தமான பெரிய மீன்பிடிக் கப்பல்கள் இல்லாததாலும் ஆழ்கடல் பகுதியிலுள்ள மீன்வளத்தின் தன்மை தெரியாததாலும் அப்பகுதியிலுள்ள மீன் வளத்தைப் பெறுவதற்கு நாம் இதுவரை முயற்சி எடுக்கவில்லை. ஆழ்கடல் பகுதிகளை அளவாய்வு செய்து அங்குள்ள மீன்வளத்தினை அறிவது முக்கியமாகும். அப்படி அறிந்தால் அப்பகுதிகளில் அதிகமான மீன்பிடிக்கப்பல்களைக் கொண்டு மீன்பிடிக்க வாய்ப்புகள் இருக்கும். தேவையான அறிவும், தொழில் நுட்பமும் பெற்ற பிறகே இவ்விடங்களில் உள்ள கடல் மற்றும் மீன்வளங்களைத் தக்க அளவில் பயன்படுத்த இயலும். இதனைக் கருத்தில் கொண்டு இந்த அரசு வெளிநாடுகளின் உதவியோடு உதாரணமாக உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம் போன்றவற்றின் உதவியினைக் கொண்டோ அல்லது இந்திய அரசின் இயந்திரப் பிரிவைக் கொண்டோ கிழக்கு கடற்கரைப் பகுதியினை அளவாய்வு செய்யுமாறு மத்திய அரசை அணுகியுள்ளது.

4. கரையோர வசதிகள் :

(அ) கரைசேர மற்றும் கலன்களை கட்ட வசதிகள்.

வானிலை சாதகமற்ற பருவங்களில் மீன்பிடி விசைப்படகுகளை பாதுகாப்பாக நங்கூரத்தில் இருத்தும் நோக்குடன் மத்திய அரசின் உதவியுடன தகுந்த இடங்களில் மீன்பிடித் துறைமுகங்களும் கரைசேர்க்கும் அமைப்புகளும் அமைக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் தூத்துக்குடியில் ஒரு பெரிய மீன்படித் துறைமுகமும், கடலூர், நாகப்பட்டினம், மல்லிப்பட்டினம், மண்டபம் மற்றும் இராமேஸ்வரம் ஆகிய இடங்களில் சிறிய இறங்கு துறைகளையும், படகுத் துறைச் சுவர்களையும் அமைத்து ஒரே சமயத்தில் சுமார் 550 மீன்பிடி விசைப்படகுகளை நங்கூரமிட்டிட வசதி செய்யப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்டத்தில் கோடிக்கரையில் மேலும் ஒரு விசைப்படகு இறங்குமுகம் கட்டுமானத்தில் உள்ளது. இவை தவிர சென்னையில் ரூ. 10 கோடிக்கு மேலான அளவில் சுமார் 500 மீன்பிடி விசைப்படகுகளும் 50 பெரிய மீன்பிடி கப்பல்களும் நங்கூரமிடக் கூடிய ஒரு பெரிய மீன்பிடித் துறைமுகம் கட்டப்பட்டு வருகிறது. இத்துறைமுகம் 1981-82ம் ஆண்டில் செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1981 ஏப்ரல் 25]

இத்திட்டத்தின்கீழ் சுமார் ரூ. 278 இலட்சம் செலவில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சின்னமுட்டத்தில் ஒரு மீன்பிடித் துறைமுகமும், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வாலி நோக்கத்தில் சுமார் ரூ. 124 இலட்சம் செலவில் சிறிய இறங்குதுறை கட்டவும் மதிப்பீடுகள் முடிவு செய்யப்பட்டு மத்திய அரசின் திட்ட அங்கிகாரத்திற்காகவும் செயற்பாட்டு அங்கிகாரத்திற்காகவும் அனுப்பப்பட்டு ஒப்புதல் எதிர்நோக்கப்படுகிறது.

(ஆ) அடிப்படை வசதிகள் :

தமிழ்நாட்டிலுள்ள அநேக மீனவர் கிராமங்களில் கரைசேரும் மீனைக் கையாள, பதப்படுத்த, மற்றும் விற்பனை செய்திடத் தேவையான அடிப்படை வசதிகள் போதுமான அளவில் இல்லை அனுகுசாலை அமைத்தல், நன்னீர் வழங்கல், பதப்படுத்தும் கொட்டில் கட்டுதல், மின்வசதி அளித்தல், பனிக்கட்டி நிலையங்கள் அமைத்தல் ஆகிய அடிப்படை தேவைகளை 75 சதவீதம் மத்திய அரசின் நிதி உதவியுடன் ரூ. 52.045 இலட்சம் செலவில் தஞ்சை மாவட்டத்தில் உள்ள பழையார் மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள வாலிநோக்கம் ஆகிய மீனவர் கிராமங்களில் கிடைத்திட வழி செய்து மேற்படி பணிகள் செயற்பாட்டில் உள்ளது.

மத்திய அரசு தற்போது 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் மேற்கண்ட பணிகளுக்குத் தொடர்ந்து நிதி உதவி அளித்திட மறுத்துவிட்ட போதிலும் இதன் முக்கியத்துவத்தையும் தேவையையும் கருத்திற்கொண்டு மாநில அரசே அதன் நிதி வசதிக்குட்பட்டு இப்பணியைத் தொடர உத்தேசித்துள்ளது. 1981-82-ல் இம்மாதிரி வசதிகளை இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள தொண்டியில் ஏற்படுத்திட உத்தேசித்துள்ளது.

(இ) வழிகாட்டி விளக்குகள் அமைத்தல் :

தமிழ்நாட்டின் கடற்கரையோர மீனவ கிராமங்களிலிருந்து சுமார் 38,000 நாட்டுக் கலன்களும் 2,300-க்கும் மேற்பட்ட மீன்பிடி விசைப்படகுகளும் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளன. மீன் பிடித்துக் கரை சேர்க்கையில் பகல் நேரங்களில் நில அமைப்புக்களை சரியாக கணித்து படகுகள் கரைசேர முடிகின்றது. ஆனால் இரவு காலங்களில் பாதுகாப்பாக சரியான கரையினை சேர்ந்திடுவதில் இன்னல்கள் அடைகின்றனர். எனவே இரவு நேர வழிகாட்டி விளக்குகள் ஏற்கனவே இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மண்டபம், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள புத்தந்துறை போன்ற கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது தஞ்சை மாவட்டத்தில் ஆறு

இடங்களிலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் 3 இடங்களிலும் நெல்லை மாவட்டத்தில் ஒரு கிராமத்தில் ஆக மேலும் 10 இடங்களில் மீனவர்களைப் பாதுகாப்பாய் கரைசேர்த்திட இவ்வித விளக்குகளை அமைத்திட இவ்வரசு தேவையான நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. 1981-82-ல் சுமார் ரூ. 2.50 இலட்சம் செலவில் மேலும் 10 வழிகாட்டி விளக்குகளை கரையோர முக்கிய மீனவ கிராமங்களில் அமைத்திடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஈ) மீன் இறக்குமேடைகள்.

கரைசேரும் மீனைச் சுகாதார முறையில் கையாளவும் விற்கவும் வழி செய்திட மீனவ கிராமங்களில் மீன் இறக்கு மேடைகள் கட்டுவதற்கு நிதி உதவி அளித்திட கொச்சியிலுள்ள கடல் பொருள் ஏற்றுமதி அபிவிருத்தி கழகம் முன்வந்துள்ளது. இத்துறை ஏற்கனவே 1980-81-ல் செங்கை மாவட்டதிலுள்ள பழவேற்காட்டிலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கோட்டைப்பட்டிணத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இராமேஸ்வரத்திலும் இவ்வித மீன் இறக்குமேடைகள் அமைத்திட நிதி உதவி பெற்று பணிகள் செயற்பாட்டில் உள்ளன. இவ்வித மேடைகளை அமைத்திட கொச்சியிலுள்ள கடல் பொருள் ஏற்றுமதி அபிவிருத்திக் கழகத்தில் நிதி உதவி பெற மேலும் 11 இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிந்துரை செய்யப் பட்டுள்ளது.

4. இதர திட்டங்கள்.

அ. முத்து வளர்த்தல்.

மன்னார் வளைகுடாவில் முத்துச் சிப்பிகள் இயற்கையாக வளர்ச்சி பெறுவதை ஆய்வு செய்கையில் இவை வாணிபம் செய்யும் அளவிற்கு முத்துக் குளித்தல் நடத்த நிலையற்றதாய் உள்ளது. 1955-61-க்குப் பிறகு முத்துக் குளித்தல் நடைபெறவில்லை. கடந்த சில காலமாய் முத்து வளர்த்தல் குறித்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு 1973-ம் ஆண்டில் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தைச் சார்ந்த மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிறுவனத்துடன் மீன் துறையும் இணைந்து ஜப்பானிய தொழில் நுட்பத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள வேப்பலோடையில் முத்து வளர்ப்பு முறையில் வெற்றி கண்டுள்ளது. வரும் ஆண்டுகளில் தரமான ஒளிர்வான நல்ல வடிவும் வளர்ச்சியும் உடைய முத்துக்களை வளர்த்திடும் முறையை ஆராய்ச்சிக் கூட அளவில் விரையுறுத்துள்ளது. 1981-82-ல் ரூ. 4.58 இலட்சம் முதலீட்டில் 5 வருட காலத்திட்டமாக ஒரு முன்னோடி

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திட்டம் தயாரிக்கப்பட்டு தூத்துக்குடியில் நிறுவிடவும் இதன் மூலம் வாணிப ரீதியில் அதிக அளவு வளர்ப்பு முத்துக்களை உண்டாக்கிடவும் உத்தேசிக்கப் பட்டுள்ளது.

ஆ. பயிற்சிகள்.

மீன் வளத்தில் முன்னேற்றம், மீன் வளர்ப்பு முறைகளில் முன்னேற்றம் மீன்வள நடைமுறையில் முன்னேற்றம் மீன் பிடிப்பு மற்றும் பதனப்படுத்துதல் ஆகியவற்றில் முன்னேற்றம் காணும் பொருட்டு மீன்துறையைச் சேர்ந்த அலுவலர்களும் பணியாளர்களும் நவீன விஞ்ஞான முறைகளைப் பயில பம்பாயிலுள்ள மத்திய மீன்வளக் கல்லூரி, பாரக்பூரில் உள்ள மத்திய உள்நாட்டு மீன்வள ஆராய்ச்சி நிலையம், கொச்சியில் உள்ள ஒருங்கிணைந்த மீன்வளத் திட்டம்; கொச்சி மற்றும் சென்னையில் உள்ள மத்திய மீன்வளப் பயிற்சி மற்றும் கடல் பொறியியல் பயிற்சி நிலையம் ஆகிய பல இடங்களுக்குத் தொடர்ந்து அனுப்பப்படுகின்றனர். தவிர வணிக நிர்வாகம், மற்றும் வளர்ச்சி குறித்த திட்டம், இதர பயிற்சிகளுக்கும் அலுவலர்கள் அனுப்பப்படுகின்றனர். இப் பயிற்சிகள் துறை வளர்ச்சிக்கு பயனுள்ளது எனபதாலும் இது தொடர்ந்து நீடித்திட வேண்டிய ஒன்று என்பதாலும் 1981-82-ம் ஆண்டுத் திட்டத்திலும் இதனை நீடித்திட வழிவகை செய்யப்படுகிறது.

இதன் ஒரு கட்டமாக தற்போது சென்னையில் ஒரு வாடகைக் கட்டிடத்தில் இயங்கி புதிதாக துறைக்கு வருபவர்களுக்கு துறை மூலம் பயிற்சி அளித்திடும் மீன்துறை அலுவலர் பயிலகத்திற்கு, தற்போது அடையாறில் துறைவசம் உள்ள நிலத்தில் அரசுக்கு சொந்தமாக ஒரு கட்டிடம் கட்டி இப்பயிற்சி நிலையத்தை அமைத்திட இத்திட்டத்தில் ஒரு பகுதியாக உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இ. விரிவாக்கப்பணிகள்:

நடைமுறை செயலாக்கத்தாலும் விளக்கங்களாலும் மீன்வளத்தில் அடைந்துள்ள முன்னேற்றங்களை மீனவசமூகத்திடையே பரப்புவது அவசியமாகிறது. எனவே இம்மாநிலத்தின் கிழக்கு மற்றும் தெற்கு மாவட்டங்களை உள்ளடக்கி இவ்விஸ்தரிப்புப் பணியைச் செய்திட இத்துறை தஞ்சையிலும், தூத்துக்குடியிலும் இரண்டு விஸ்தரிப்பு நிலையங்களை நிறுவியுள்ளது. மீன்வளர்ப்பில் கண்டுள்ள முன்னேற்றங்களையும், மீனைக் கையாளுதல், விற்பனை செய்தல் போன்ற பல மீனள முன்னேற்றங்களை மீனவர் மற்றும் மீன்வளர்ப்போரிடையே பரப்பிட கோவை, நீலகிரி, சேலம், தாமபுரி,

பெரியார் மற்றும் வட ஆற்காடு மாவட்டங்களை உள்ளடக்கி கோவையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கிட மேலும் ஒரு விஸ்தரிப்பு நிலையம் அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மீனவப் பெண்டிரிடையே வலை பின்னுதல், மீனை சுத்தமான முறையில் வியாபாரம் செய்தல், இரால் குஞ்சுகள் சேகரம் செய்தல், கடல்பாசி வளர்த்தல் ஆகியவற்றை பயிற்றுவித்து விளம்பரப்படுத்தி அதன்மூலம் அவர்களும் மீனள முன்னேற்றத்தில் பங்குகொண்டு மீனவ குடும்பத்தில் கூடுதல் வருவாய் ஈற்றி வகைசெய்யும் நோக்கோடு பெண்டிர் விஸ்தரிப்பு பணி ஒன்றை நிறுவிட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. செங்கை மாவட்டத்தில் திருச்சினாங்குப்பத்திலும், தஞ்சை மாவட்டத்தில் கரையூர் தெரு மீனவர் இருப்பிலும், நெல்லை மாவட்டத்தில் தருவைக்குளத்திலும் மாதிரி மீனவப்பெண்டிர் கூட்டுறவு சங்கங்கள் நிறுவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஈ. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்.

தமிழ்நாட்டில் மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அதன் உறுப்பினர்கட்கு மீன்பிடிக்கலன், வலைகள் மற்றும் மீன் குஞ்சுகள் போன்றவற்றை ஐம்பது சதவிகித மானியத்துடன் வாங்கிட ஒரு வாய்ப்பாக இருக்க அமைவது ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம். இத்திட்டத்தில் தனிப்பட்ட மீனவர்களுக்கும் 33-1/3 சதவிகிதம் மானியத்தில் மீன்பிடிக்கலன்கள், வலைகள், மீன் குஞ்சுகள் முதலியன கொடுக்கப்படுகின்றன, மாவட்ட ஆட்சியரின் ஒத்துழைப்புடன் அதிகபட்ச மீனவர்களுக்கு வரும் ஆண்டுகளில் உதவி நல்கிட இத்துறை தக்க நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

உ. கூட்டுறவு :

1. இம்மாநிலத்தில் 277 கடல் மீனவர் கூட்டுறவுகளும், 194 உள்நாட்டு மீனவர் கூட்டுறவுகளும் உள்ளன. நிலுவையில் உள்ள கடன்களைத் தீர்க்கவும் மீன்பிடி உபகாரணங்கள் வாங்கவும் மீனவர்களுக்கு நீண்ட, மத்தியகால மற்றும் குறுகிய கால கடன் அரசால் வழங்கப்படுகிறது. 1981-82-ல் மீன் விற்பனை, நுகர் பொருள் விநியோகம், மீன்பிடி உபகரணங்கள் வாங்கி விற்றல் போன்ற மீனவத் தேவைகளைப் பூர்த்தி செய்திட மீனவ கூட்டுறவுகளுக்கு நடைமுறை மூலதனமாக ரூ. 5 இலட்சம் ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1981 ஏப்ரல் 25]

2. மீனவர் கூட்டுறவுகளுக்கு உதவி.

விவசாயப் பொருட்கள், உணவுப் பண்டங்கள் மற்றும் அறிவிக்கப்பட்ட பண்டங்களின் உற்பத்தி, பதனிடுதல், இருப்பில் வைத்தல், விற்பனை, ஏற்றுமதி, இறக்குமதி முதலியன இந்திய நாடளவில் கூட்டுறவுகள் மூலம் நடத்திடும் பொறுப்பினை தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகத்திடம் ஒப்புவிக்கப்பட்டுவிட்டுள்ளது. இவ்வுதவி மாநில அரசு செயற்படுத்தும் மற்ற பல திட்டங்களுக்கும் கூடுதலானதாகும். தமிழ்நாட்டில் 1978-79 முதல் இவ்வுதவி மானியம் மற்றும் கடனுடன் மீனவர் கூட்டுறவுகளுக்கு கிடைத்து வருகிறது. 1978-79 முதல் 1980-81 வரை தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மொத்தம் ரூபாய் 57,05,900 உதவியாக ஒதுக்கியுள்ளது. இதில் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் பங்கான ரூபாய் 36,30,400 கடனாகவும், ரூபாய் 10,37,750 மானியமாகவும் ஆகும். இதில் மாநில அரசின் பங்கு ரூபாய் 10,37,750 ஆகும். இத்தொகை 12 மீனவர் கூட்டுறவுகளுக்கு டீசல் விற்பனை நிலையம், மொத்த மீன் வியாபாரம், சில்லரை மீன் விற்பனை நிலையங்கள் அமைத்தல், கிடங்குகள் கட்டுதல், ஊர்திகள் வாங்குதல், மீன்பிடி விசைப் படகுகள் வாங்குதல் போன்றவற்றிற்காக வழங்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய காரணங்களுக்காக மேலும் 1980-81-ல் தமிழ் நாட்டிலுள்ள மீனவர் கூட்டுறவுகளிடமிருந்து பெறப்பட்ட மனுக்களைப் பரிசிலித்து 10 கூட்டுறவுகளுக்கு ரூபாய் 35,42,400 வழங்கிட மொத்தத் தொகைக்கு பரிந்துரை வழங்கி, புதுடெல்லியிலுள்ள தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி பரிந்துரைகளின் மேல் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் 1981-82 ல் அங்கீகாரம் வழங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அந்நிலையில் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் பங்காக ரூபாய் 21,72,940 கடனாகவும், 6,84,730 மானியமாகவும் அமையும். இதில் தமிழ்நாடு அரசின் பங்காக ரூபாய் 6,84,730 ஆகும்.

ஊ. அலுவலர் குடியிருப்புகள்.

கடலோர மற்றும் பல உள்நாட்டு திட்டமைப்புப் பகுதிகளில் உள்ள மீனளஅலுவலகங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளும், குடியிருப்பும் கிடைப்பதில்லை. அளவை செய்தல், மீன்குஞ்சு இருப்பு செய்தல். பாதுகாப்புப்பணி, ரோந்துப்பணி, மீன்பிடி செய்தல் போன்ற முக்கியப்பணிகளை கவனித்திட முக்கியமாக நீர்க்கட்டுப் பகுதிகளில் இவ்வலுவலர்கள் பணியிடத்திலேயே இருக்கவேண்டிய நிலையில் அவர்களுக்கு குடியிருப்பு வசதிகளை அளித்திடல் அரசின் கடமையாகிறது. அரசு

மற்றும் தனியார் குடியிருப்புகள் இல்லாத நிலையில் இப்பணியிடங்களுக்குச் செல்லும் அலுவலர்கள் பலவித அல்லற்பட நேரிடுகிறது. தஞ்சை மாவட்டத்தில் உள்ள அக்கரைப்பேட்டை, மல்லிப்பட்டிணம் ஆகிய இடங்களில் 1981-82-ல் அலுவலர்கள் குடியிருப்பு அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

5. சமூகப் பொருளாதாரப் பணிகள்.

அ. குடியிருப்பு.

1975 முதல் கடல் மீனவர் குடும்பங்களுக்கு குடியிருப்பு வசதி அளித்திடும் பேராவலுடைய ஒரு திட்டத்தைச் செயலாற்றி வருகிறது. இத்திட்டத்தின் நோக்கபடி ஒவ்வொரு கடல் மீனவர் குடும்பமும் அவர்களின் பணியிடத்திற்கு அருகிலேயே அவர்களுக்குச் சொந்தமான குடியிருப்புகளைப் பெறவேண்டும் என்பதாகும். ஒவ்வொரு ஆண்டும் அரசு ரூபாய் 100 இலட்சத்தினை இதற்கென ஒதுக்கி அதன்படி இதுவரை ரூபாய் 580 இலட்சங்கள் வழங்கப்பட்டு 9,931 மீனவர் குடியிருப்புகளைக் கட்டிட வகை செய்துள்ளதில், 4,705 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டும், 1,461 குடியிருப்புகள் கட்டுமான நிலையிலும் உள்ளன. இத்திட்டத்தினை 1981-82-லும் தொடர் வகை செய்து 1981-82-ல் ரூபாய் 100 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

ஆ. சாலைகள்.

முக்கிய சாலைகளுடன் மீனவ கிராமங்களை இணைக்கும் பொருட்டு இணைப்புச் சாலைகளும், ஏதைகளும் அமைக்கப்படுகின்றன.

1979-80-ல் 37 இணைப்புச் சாலைகள் ரூ. 93.50 இலட்சம் செலவில் கட்டுமானத்திற்காக எடுக்கப்பட்டுள்ளது. 1980-81-ல் 42 சாலைகள் அமைத்திட ரூபாய் 30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தினை 1981-82-ல் தொடர ரூபாய் 20.00 இலட்சம் ஒதுக்கப்படவிருக்கிறது.

இ. மீனவர்களின் துயர் தணிப்பு.

மீன்பிடிக்கும் அல்லது சங்கு குளிக்கும் மீனவர், தொழிலில் ஈடுபட்டு இருக்கும்பொழுது இறந்தால் அவர்களது குடும்ப நிவாரணத்திற்கு ரூபாய் 6,000 உதவியாக வழங்கிடும் திட்டம் தொடரப்படுகிறது. இதுவரை 138 குடும்பங்கள் இதனால் பயனடைந்துள்ளனர். இவ்வித துயருக்கு உட்பட்ட மீனவரின் குழந்தைகளின் வாழ்க்கைத் தொழில் சார்ந்த மேற் படிப்பிற்காக மேலும் ரூபாய் 5,000 உதவி செய்யப்படுகிறது.

1981 எப்ரல் 25]

6. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் பணிகள்:

வரும் ஆண்டுகளில் மீன்வளர்ச்சிக் கழகத்தின் பணிகள் பின்வரும் பணிகளை முன்னிட்டு அமையும்:—

அ. மீன்பிடிக் கப்பல்களை வாங்கி நடத்துதல்:

ஏற்கனவே இக்கழகம் இரண்டு பெரிய மீன்பிடி கப்பல்களை மெக்ஸிகோ நாட்டிலிருந்து இறக்குமதி செய்து விசாகப்பட்டிணத்தை இருப்பிடமாகக் கொண்டு இயங்கிவருகிறது. இக்கப்பல்கள் இரால் பிடிப்பதற்கு முக்கியத்துவம் கொடுத்து இலாபகரமாக இயங்கி வருகிறது. 1980 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 3 ஆம் நாள் முடிய 1980 ஆம் ஆண்டில் ரூபாய் 36.90 இலட்சம் மதிப்புள்ள 19.370 டன் இராலையும், 82.720 டன் மீனையும் பிடித்துள்ளது. இந்த அனுபவத்தினால் மீன் வளர்ச்சிக் கழகம் மேலும் பல மீன்பிடிக் கப்பல்களை இயக்கி ஆழ்கடல் மீன் பிடிப்பினை நடத்திட உறுதி கொண்டுள்ளது.

மத்திய அரசின் கொள்கைப்படி, 200 மைல் பொருளாதார கடல் எல்லையை முழுதும் பயன்படுத்தும் வகையில் இக்கழகம் பலவகை மீன் பிடிப்புக்கு ஏற்ற மேலும் நான்கு மீன்பிடிக் கப்பல்களைப் பெற்று நடத்திடும் செயற்குறிப்புகளைத் தயாரித்துள்ளது. இக்கப்பல்களை பெற்றவுடன் வாட்ஜ்பேங்க், பெட்ரோபேங்க், மன்னார் வளைகுடா, பாக்ஜலசந்தி ஆகிய பகுதிகளில் உள்ள ஆழ்கடல் மற்றும் கடல் மேற்பரப்பில் முழுவதும் பயன்படுத்த நடத்தப்படும்.

ஆ. பர்சு-சீன் கலன்களை இயக்குதல்:

ஏற்கனவே மத்திய அரசிடமிருந்து பெற்ற பொருளுதவியினால் தமிழகத்தின் தென்மேற்கு, தென்கிழக்குப் பகுதியில் உள்ள கடல் மேற்பரப்பில் இருக்கும் மீன் வளங்களை பயன்படுத்துவதற்காக தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் ஒரு 41 அடி நீளமுள்ள பர்சு-சீன் கலனை வாங்கியுள்ளது. இந்த கலன் மங்களூர் கடல் பகுதியில் மாதிரி மீன்பிடிப்பு நடத்தியது. இந்த கலன் மீன் மீன் பிடித்தலில் நல்ல முடிவைக் காட்டியது. தென்மேற்கு, தென்கிழக்கு கடலோரப் பகுதியிலும் பாக்ஜலசந்தியிலும் கடல் மேற்பரப்பில் உள்ள வளங்களைப் பயன்படுத்த தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மேலும் 5 கலன்களைப் பெறுவதற்காக நடவடிக்கை எடுத்துள்ளது.

இ. சிறிய படகுகளை அறிமுகப்படுத்துதல்:

புயல் நிவாரண பணிக்காக மத்திய அரசு வழங்கிய பொருளுதவியினால் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் ஏற்கனவே 18 அடி நீளம் கொண்ட வெளியில் பொருத்தப்பட்ட இயந்திரம் கொண்ட 30 கண்ணாடி இழைப்படகுகளை வழங்கியுள்ளது. இந்த வெளியில் பொருத்தப்பட்ட இயந்திரம் கொண்ட சிறிய படகுகளை அதன் செயல் திறனையும் ஏற்கும் முறையையும் அறிவதற்காக மீனவர்க்கு தேர்வுமுறையாக வழங்கப்பட்டன. வரும் காலத்தில் இத்திட்டம் விரிவாக்கும் பொருட்டு இதன் முடிவுகள் ஆராயப்படுகின்றன.

உணவு, மற்றும் விவசாயக்கழகம் வங்கக் கடலில் நமது பகுதியில் சிறுபான்மை மீன்வளப் பெருக்கத்திற்கு வெள்ளோட்ட முறையாக சிறு மீன்பிடிப்படகு, முன்னேற்றமடைந்த உள்நாட்டுக்கலன்கள், அடித்தட்டை கலன்கள் (Surf Boats) முதலியவற்றைப் பயன்படுத்தி திறமையான சிறிய மீன்பிடி கலன்களை நிர்ணயிக்கும் பணியினை செய்கிறது. இதன் முடிவுப்படி, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மீனவர்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு உதவும் வகையிலும், மீன்பிடிப்பை அதிகரிக்கும் வகையிலும் பெரும்பாலான நிரூபிக்கப்பட்ட சிறு மீன்பிடி கலன்களை உபயோகிக்க திட்டமிட்டுள்ளது. மேலும் சிறிய 25 அடி கொண்ட உட்பக்கம் பொருத்தப்பட்ட இயந்திரம் உடைய படகுகளையும் அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது.

ஈ. விற்பனை:

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் தற்போது சென்னையில் 31 சில்லறை மீன் விற்பனை அங்காடிகளும், மதுரை, கோவை மற்றும் பெரியார் மாவட்டங்களில் 16 மீன் விற்பனை அங்காடிகளையும் நடத்துகிறது. கன்னியாகுமரி, திருநெல்வேலி, இராமநாதபுரம் மற்றும் தஞ்சாவூர் மாவட்ட கடலோர முக்கிய மீன்பிடி இடங்களிலிருந்து மீன் கொள்முதல் செய்யப்படுகிறது. இது தவிர, ஆந்திரப்பிரதேசம் மற்றும் கர்நாடக மாநிலங்களிலிருந்தும் வழக்கமான மீன் கொள்முதல் செய்யப்படுகிறது. இந்த சில்லறை அங்காடிகளில் தற்போது சராசரியாக 35 முதல் 40 டன் மீன் மாதந்தோறும் விற்பனை செய்யப்படுகிறது.

நுகர்வோருக்கு தரமான மீன்களை குறைந்த விலையில் கிடைக்கச் செய்வதே இத் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் முகமாக இம் மீன் வளர்ச்சிக் கழகம் உள்ளமைப்பு வசதிகளைக் கொண்ட பனிக்கட்டி நிலையும், குளிர்பதனக்

1981 ஏப்ரல் 25]

கிடங்கு, உறைபனி நிலையம் முதலியவைகளை முக்கிய மீன்பிடி மையங்களிலும், விற்பனை நிலையங்களிலும் நிறுவியுள்ளது. இம் மீன் வளர்ச்சிக் கழகம் விற்பனையை தீவிரப்படுத்தவும், அதிகரிக்கவும் அதிகமான அங்காடிகளை சென்னையிலும் மற்றும் முக்கிய நகரங்களான கோவை, மதுரை, திருச்சி முதலியவற்றில் நிறுவ எண்ணியுள்ளது.

முடிவுரை :

மேலே மாநில அரசின் மீன் வளர்ச்சித் திட்டத்தின் செயல்படுத்தும் முறைகளைச் சுருக்கமாகக் கூறப்பட்டது. இயற்கையிலேயே இந்தக் கொள்கை மாறக்கூடாதது அல்ல. மேலும் காலம் மற்றும் சூழ்நிலைக்குத் தகுந்தவாறு இக்கொள்கையில் மாறுபாடு ஏற்படலாம். எல்லோருடைய ஒத்துழைப்பினாலும் மேற்கூறிய திட்டங்களைச் செயலாக்க முடியும் என்றும், மேலும் மீன்பிடித் தொழிலை அதிகரிக்கவும், அதன் மூலம் நல்ல சத்துள்ள மீன் உணவை மக்களுக்கு வழங்கவும் முடியும் என்றும் அரசு நம்புகிறது.

இணைப்பு III.

(64 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

தமிழகத்தில் உணவு நிலைமை.

I. அரிசி நிலைமை—கொள்முதலும், விற்பனையும்.

1. அரிசி நிலைமை.

தமிழகத்தில் அரிசி கிடைக்கும் நிலைமை தொடர்ந்து திருப்திகரமாகவே உள்ளது. வெளி அங்காடியில் அரிசி கிடைக்கவில்லை என்று யாரும் புகார் செய்யவில்லை. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் பொது விநியோகத்திற்குப் போதுமான அரிசி கையிருப்பில் உள்ளது. வெளி அங்காடியில் அரிசி கிடைப்பதுடன் குடும்ப அட்டைகளுக்கு சில்லறைக் கடைகள் மூலமாக பொது விநியோக முறையில் அரிசி விற்கப்பட்டு வருகிறது. பொது விநியோக முறையில் விற்பனையாகும் அரிசியின் அளவு உயர்ந்து வருகிறது. 1980 நவம்பர் வரை பொது விநியோக முறையில் மாதம் ஒன்றுக்கு சுமார் 7,500 டன்கள் முதல் 11,000 டன்கள் வரை விற்பனையாகி வந்த அரிசியின் அளவு முக்கியமாக இம்மாநிலத்தின் சில பகுதிகளில் மோசமான பருவநிலையும் வறட்சியும் நிலவி வருவதன் காரணமாக 1980 டிசம்பர் மாதத்திலிருந்து அதிகரித்துள்ளது.

2. கொள்முதல்.

வணிகர்களிடம் லெவி விதித்து அரிசியைக் கொள்முதல் செய்யும் முறை 1979 ஜூன் முதல் நாளிலிருந்து கைவிடப்பட்டது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், அதன் நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மூலமாக விவசாயிகள் முன்வந்து அளித்த நெல்லை வாங்கியது. இம்முறையினால், பொது விநியோக முறையில் வழங்குவதற்குப் போதுமான அரிசி அரசுக்குக் கிடைக்காததால், வர்த்தக லெவி முறையில் அரிசியைக் கொள்முதல் செய்ய அரசு முடிவு செய்துள்ளது. மாநிலம் முழுவதிலுமுள்ள மொத்த விற்பனை வணிகர்கள் முதல் தடவையாக நெல் அல்லது அரிசி வாங்கும்போது அவர்களுக்கு 40 சதவீதம் லெவி விதிக்கப்பட்டுள்ளது. அரசு கூட்டுறவுச் சங்கங்களுக்கும் சில்லறை விற்பனை வணிகர்களுக்கும் லெவியிலிருந்து விலக்களித்துள்ளது. மாநிலத்தில் எந்த இடத்திலும் நெல் அல்லது அரிசி வாங்க வணிகர்களுக்கு வசதி அளிக்கப்பட்டுள்ளது. ஏனைய மாநிலங்களிலிருந்து இம்மாநிலத்திற்குள் இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கு லெவியிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. எனினும் இந்த அரிசியை மற்ற மாநிலங்களுக்கு எடுத்துச் சென்றால் அல்லது மற்ற மாநிலத்தவர் இங்கு வந்து இந்த நெல்லை வாங்கி வேறு மாநிலத்திற்கு எடுத்துச் சென்றால் லெவி கொடுக்க வேண்டும். விவசாயிகளுக்கு லெவி விதிக்கப்படுவது இல்லை.

மாநிலத்திற்குள் அல்லது மாநிலத்திலிருந்து மற்ற மாநிலங்களுக்கு நெல்லை அல்லது அரிசியை எடுத்துச் செல்வதற்குத் தடை ஏதும் கிடையாது. சொந்தமாக நிலம் வைத்துள்ளவர்கள் தங்கள் நிலத்தில் விளைந்த நெல்லை அல்லது அரிசியை வட்ட வழங்கல் அதிகாரியிடமிருந்து அனுமதி பெற்று, தங்கள் சொந்த உபயோகத்திற்கு அல்லது தங்கள் குடும்பத்திலுள்ளவர்கள் சொந்த உபயோகத்திற்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள். அவர்கள் ஆறு மாதங்களுக்குத் தேவையான நெல் அல்லது அரிசியை ஒரு தடவையில் எடுத்துச்செல்லலாம்.

3. நெல் கொள்முதல் விலை.

விவசாய விளைபொருள் விலைவாசி ஆணைக் குழுவின் பரிந்துரையின் பேரில் மத்திய அரசு நெல்லுக்கான கொள்முதல் விலையை நிர்ணயிக்கிறது. உழவர்களுக்கு ஆதாயம் கிடைக்கின்ற வகையில் நெல்லின் விலையை நிர்ணயிக்க இவ்வரசு முயற்சி செய்து வருகிறது. சாதாரண ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 130 என்றாவது அல்லது கோதுமைக்குரிய கொள்முதல் விலைக்கு சமமாகவாவது நிர்ணயிக்குமாறு இவ்வரசு மத்திய அரசிடம் இவ்வரசின் இடைவிடா முயற்சியால், மத்திய அரசு

1981 ஏப்ரல் 25]

1980-81 பயிர் ஆண்டுக்கு சாதாரண ரக நெல்லின் விலையை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 95லிருந்து, ரூ. 105 ஆகவும், சன்ன ரக நெல்லின் விலையை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 99 லிருந்து ரூ. 109 ஆகவும் மிகச் சன்ன ரக நெல்லின் விலையை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 103 லிருந்து ரூ. 113 ஆகவும் உயர்த்தியுள்ளது. என்றாலும் மத்திய அரசு இவ்வாறு நிர்ணயித்த கொள் முதல் விலைகள் கூட போதுமானதல்ல. எனவே, விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கும் பொருட்டு தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் நேரடிக் கொள்முதல் விற்பனை நிலையங்களில் வந்து விற்கும் விவசாயிகளுக்கு ஆதரவு அளிக்கும் விலையாக சாதாரண ரகத்திற்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 115-ம் சன்ன ரகத்திற்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 119-ம் மிகச் சன்ன ரகத்திற்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 125-ம் கொடுப்பதாக மாநில அரசு அறிவித்துள்ளது. இதனால் குவிண்டால் ஒன்றுக்குக் குறைந்தது ரூ. 115 கிடைக்கும். நடப்பு ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்து மத்திய அரசு கோதுமை விலையை குவிண்டால் ஒன்றுக்கு 130 ரூபாய்க்கு மேலும் உயர்த்தும் வரை இவ்விலை கோதுமை கொள்முதல் விலைக்கு (ரூ. 117.50) மிக அடுத்திருந்தது.

I அரிசியின் சில்லறை விற்பனை விலை.

குடும்ப அட்டைகளுக்கு 1981 சனவரி இறுதிவரை நியாய விலைக் கடைகளில் சாதாரண ரக அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ. 1.60 ஆகவும் சன்ன ரக அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ. 1.85 ஆகவும் மிகச் சன்ன ரக அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ. 2.00 ஆகவும் விற்கப்பட்டன. மோட்டா ரக நெல் கொள்முதல் விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 74 ஆக இருந்தபோது மேற்சொன்ன விலைகள் நிர்ணயிக்கப்பட்டன. நெல் கொள்முதல் விலை மேலும் அதிகரித்திருக்கும்போது இந்த விலைகளில் அரிசி விற்பதால் அரசுக்கு ஏற்படும் இழப்பு மிக அதிகமாக இருக்கும். எனவே, மாநில அரசு, அரிசி விற்பனை விலைகளை 1—2—1981 லிருந்து பின்வருமாறு அதிகரித்துள்ளது.

சாதாரண ரகம்	கிலோ ஒன்றுக்கு ரூ. 1.75.
சன்ன ரகம்	கிலோ ஒன்றுக்கு ரூ. 2.00
மிகச் சன்ன ரகம்	கிலோ ஒன்றுக்கு ரூ. 2.15

அரிசி விலை வீதத்தை இவ்வாறு அதிகரித்த பின்னரும்கூட வெளி அங்காடியில் விற்கும் விலையைக் காட்டிலும் இது மிகவும் குறைவே. சில்லறை விற்பனை விலை கொள்முதல் விலையையொட்டியே நிர்ணயிக்கப்பட வேண்டும்.

சில்லறையில் வழங்கப்படும் அரிசிக்குரிய விற்பனை விலையை அதிகரித்த போதிலும், விற்பனை விலையை விட அடக்க விலை அதிகமாய் உள்ளதால் அரசிற்கு பெரும் இழப்பு ஏற்படுகிறது.

II. பொது விநியோக முறையில் இன்றியமையாப் பொருட்களை வழங்குதல்.

5. தமிழ்நாடு முழுவதிலும் பொது விநியோக முறை செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநிலத்தில் தற்போது 17,300 நியாய விலைக் கடைகள் உள்ளன. இவற்றில் 15,400 கடைகள் கிராமப் பகுதிகளிலும், 1,900 கடைகள் நகர்ப் பகுதிகளிலும் உள்ளன. இந்த நியாய விலைக் கடைகள் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தாலும் கூட்டுறவுச் சங்கங்களாலும் ஏனைய நிறுவனங்களாலும் நடத்தப்படுகின்றன. தனிப்பட்ட வணிகர்கள் இதிலிருந்து முற்றிலும் நீக்கப்பட்டுள்ளனர். இதுவே இந்த விநியோக முறையின் சிறப்பாகும். மற்ற நிறுவனங்களால் 83 நியாய விலைக் கடைகள் நடத்தப் படுகின்றன. இவற்றில் தொழிற்சாலைகளும் மலைத் தோட்ட நிர்வாகத் தினரும் நடத்தும் தொழிலாளர் பண்டகசாலைகளும் அடங்கும். 1-1-1980 ஆம் நாள் நிலவரப்படி 17,000 நியாய விலைக்கடைகள் இருந்தன. 1980 ஆம் ஆண்டில் 300 புதிய கடைகள் திறக்கப்பட்டன. மாநிலம் முழுவதிலும் 107 இலட்சம் குடும்ப பங்கீட்டு அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. பங்கீட்டு அட்டை வைத்திருப்பவர்களுக்கு, நியாய விலைக் கடைகள் மூலமாக அரிசி, லெவி கோதுமை, கோதுமைப் பொருட்கள், லெவி சர்க்கரை, மண்ணெண்ணெய், பாமோலின் எண்ணெய், பருப்பு வகைகள் முதலியவை வழங்கப்படுகின்றன.

6. அரிசி.

பொது விநியோக முறையில் நியாய விலைக் கடைகள் மூலமாக அரிசி தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. ஆண்டுத் தொடக்கத்தில் அரிசி அதிக அளவிற்கு இக்கடைகளில் விற்பனையாகவில்லை. 1980 நவம்பர் வரை மாதம் ஒன்றுக்கு 7,500 டன்கள் முதல் 11,000 டன்கள் என்ற அளவிலேயே அரிசி விற்பனையாயிற்று. 1980 டிசம்பரில் அரிசி விற்பனை 18,000 டன்களாகவும், 1981 சனவரியில் 24,000 டன்களாகவும் அதிகரித்துள்ளது. நியாய விலைக் கடைகளின் மூலமாக 1979 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட 1.5 இலட்சம் டன்களோடு, 1978 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட 0.93 இலட்சம் டன்

1981 ஏப்ரல் 25]

கொண்டும் ஒப்பிடுகையில் 1980 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட மொத்த அரிசி 1.5 இலட்சம் டன்களாகும். மாநிலத்தின் சில பகுதிகளில் வறட்சி நிலவுவதால் இக்கடைகளில் வாங்கப்படும் அரிசியின் அளவு அதிகரித்துள்ளது.

7. கோதுமை, கோதுமைப் பொருட்கள் --

குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ. 1.55 வீதம் மாதம் ஒன்றுக்கு அட்டை ஒன்றுக்கு 5 கிலோ லெவி கோதுமை வழங்கப் படுகிறது. மத்திய அரசு 1980 ஜூலை வரை மாநிலத்திற்கு கோதுமையைத் தாராளமாக ஒதுக்கி வந்தது. 1980 ஆகஸ்டிலிருந்து மாதம் ஒன்றுக்கு 3,000 டன்கள் கோதுமை ஒதுக்கப்பட்டது. இவ்வரசு பலமுறை வேண்டிக் கொண்டதன் பேரில் மத்திய அரசு ஏப்ரல் திங்களுக்கு 4,000 டன்கள் கோதுமை ஒதுக்கீடு செய்துள்ளது. இக்கோதுமை நியாய விலைக் கடைகள் மூலமாக வழங்குவதற்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஒதுக்கப்பட்டது. பின்னர், குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கு லெவி கோதுமை அதிக அளவு தேவைப்பட்டதால், திங்கள் ஒன்றுக்கு 10,000 டன்கள் கோதுமையை ஒதுக்குமாறு நாம் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளோம்.

மத்திய அரசு கோதுமையை, கோதுமைப் பொருட்களாக மாற்ற மாநிலத் திலுள்ள கோதுமை உருளை மாவு ஆலைகளுக்கு வழங்குவதற்காகவும் கோதுமையை ஒதுக்குகிறது. இம்மாநிலத்தில் 31 உருளை மாவு ஆலைகள் இருக்கின்றன. 1980 ஜூலை வரை மத்திய அரசு உருளை மாவு ஆலைகளுக்கு மாதம் ஒன்றுக்கு சுமார் 65,000 டன்கள் கோதுமையை ஒதுக்கியது. ஆனால் இது பின்னர் குறைக்கப்பட்டது. தற்போது மாதம் ஒன்றுக்கு சுமார் 30,000 டன்கள் கோதுமை ஒதுக்கப்படுகிறது. கோதுமைப் பொருட்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டபோது பொது விநியோகத்திற்காக தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேவைப்படும் அளவு மைதா, ரவை இவற்றை வழங்குமாறும் எஞ்சியுள்ள இருப்பை மட்டுமே வெளி அங்காடியில் விற்குமாறும் மாவு ஆலைகளுக்கு சட்டப்படிக்கான கட்டளையிடப்பட்டது. கோதுமைப் பொருட்கள் விநியோகத்தின்மீது கட்டுப்பாடு எதுவும் இல்லையென்றாலும் அதிக அளவில் கோதுமை பயன் படுத்தும் ரொட்டிக் கடைகள், பிஸ்கட் தொழிற்சாலைகள், சேமியா தயாரிப்ப வர்கள், உணவு விடுதிகள் மாணவர் விடுதிகள் ஆகியோருக்குத் தேவைப்படும் கோதுமைப் பொருட்களை நிர்ணயித்துள்ள விலையில் வழங்க அரசு

நடவடிக்கை எடுத்துள்ளது. குடும்ப அட்டை வைத்திருப்பவர்கள் ஒவ்வொருவருக்கும் நியாய விலைக் கடைகள் மூலமாக மாதம் ஒன்றுக்கு 5 கிலோ மைதா, 5 கிலோ ரவை வழங்கப்படுகிறது.

8. சர்க்கரை விநியோகம் :

லெவி சர்க்கரை வழங்குமுறை மீண்டும் கொண்டு வரப்பட்டதால் மத்திய அரசு சர்க்கரை ஆலைகளிடமிருந்து லெவிக்காக உற்பத்தியில் 65 சதவீதத்தை எடுத்துக் கொண்டு அவற்றைப் பொது விநியோகத்திற்காக மாநிலங்களுக்கு ஒதுக்குகிறது. இம்மாநிலத்திற்கு மாதம் ஒன்றுக்கு சுமார் 19,790 டன் லெவி சர்க்கரை கிடைக்கிறது.

1981 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 1 ஆம் நாளுக்குமுன் குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கு லெவி சர்க்கரை நியாய விலைக் கடைகள் மூலமாகப் பின்வருமாறு வழங்கப்பட்டது :

			கிலோ
1	சென்னை மாநகரம் அதன் புறநகர்ப் பகுதி மாவட்டத் தலைமையிடங்கள்.	திங்கள் ஒன்றுக்கு குடும்ப அட்டை ஒன்றுக்கு.	5
2	ஏனைய நகராட்சிகள் மாவட்டத் தலைமையிடங்களையொட்டிய புறநகர் பகுதிகள், நகரியங்கள்.	ஷ	3
3	பேரூராட்சிகள், ஊராட்சிகள்	ஷ	1

கிராமப்பகுதிகளில் குடும்ப அட்டை வைத்திருப்போருக்கு லெவி சர்க்கரை வழங்கப்படுவது போதுமானதாயில்லை என்றும், அந்த அளவு, நகர்ப் பகுதிகளில் உள்ள அளவிற்குச் சமமாக உயர்த்தப்பட வேண்டுமென்றும் அரசுக்குப் பல முறையீடுகள் வந்தன. லெவி சர்க்கரை வழங்கப்படும் அளவு, குடும்ப அட்டை வைத்திருப்போரின் மாதாந்திர வருமான அடிப்படையில் இருக்க

1981 ஏப்ரல் 25]

வேண்டும் என்றும் முறையீடுகள் வரப்பெற்றுள்ளன. 1981 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 1 ஆம் நாளிலிருந்து வருமான அடிப்படையில் லெவி சர்க்கரை பின்வரும் அளவுகளில் வழங்கப்படுகிறது.

	அட்டை ஒன்றுக்கு, திங்கள் ஒன்றுக்கு. (கிலோ.)
I நகர்ப் பகுதிகள்.	
திங்கள் ஒன்றுக்கு ரூ. 1,000-மும் அதற்கு மேலும் வருமானமுடைய குடும்ப அட்டை வைத்திருப்போர்.	5
திங்கள் ஒன்றுக்கு ரூ. 500 முதல் ரூ. 999 வரை வருமானமுடைய குடும்ப அட்டை வைத்திருப்போர்	3
திங்கள் ஒன்றுக்கு ரூ. 499 வரை வருமானமுடைய குடும்ப அட்டை வைத்திருப்போர்.	2
II. கிராமப் பகுதிகள்.	
திங்கள் ஒன்றுக்கு ரூ. 1,000-மும் அதற்கு மேலும் வருமானமுடைய குடும்ப அட்டை வைத்திருப்போர்.	3
திங்கள் ஒன்றுக்கு ரூ. 500-லிருந்து ரூ. 999 வரை வருமானமுடைய குடும்ப அட்டை வைத்திருப்போர்.	2
திங்கள் ஒன்றுக்கு ரூ. 499 வரை வருமானமுடைய குடும்ப அட்டை வைத்திருப்போர்.	1

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மாநிலத்தில் சர்க்கரை பற்றாக் குறை ஏற்படுகையில் அந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்கு வெளிச்சந்தையில் சர்க்கரையை வாங்கி முடை இருப்பு வைத்து வருகிறது.

பொது விநியோக முறையில் சர்க்கரை தங்குதடையின்றிக் கிடைப்பதற்காக 1980 ஆகஸ்டு முதல் 1980 செப்டம்பர் வரையில் 15,020 மெட்ரிக் டன்கள் சர்க்கரை இறக்குமதி செய்யப்பட்டது. தீபாவளி, பொங்கல் பண்டிகைகளின் போது பல மாநிலங்களில் சர்க்கரை கிடைக்காதபோது, குடும்ப அட்டை

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வைத்திருப்போருக்கு நமது அரசு இடைவிடாமல் சர்க்கரையை விநியோகிக்க முடிந்தது. வெளிச்சந்தை சர்க்கரையை பெருமளவில் வாங்குவோர் சர்க்கரையை அதிகமாகப் பயன்படுத்துவோராவர். உணவுப் பொருள் வாணிபக் கழகம், கிலோ ஒன்றுக்கு ரூ. 6.25 என்ற வீதத்தில் அவர்களது தேவையை நிறைவு செய்வதால், வெளிச்சந்தை சர்க்கரை விலை உயராமல் தடுக்கப்படுகிறது. இதன் காரணமாக சர்க்கரை கிடைக்கவில்லை என்றோ, வெளிச் சந்தையில் விலை உயர்வாக உள்ளது என்றோ புகார்கள் எவையும் வரவில்லை.

கட்டுப்பாடின்றி விற்பதற்கான சர்க்கரை முழுவதையும் மாநிலத்திடம் ஒப்படைக்க இந்திய அரசு முடிவு செய்தபோது பிற மாநிலங்களில் பின்பற்றப் பட்டதுபோன்று நமது மாநிலத்தில் தனிப்பட்ட மொத்த விற்பனையாளர் களைச் சேர்க்காமல் முழு இருப்பும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு, 1980 செப்டம்பர் முதல் 1980 நவம்பர் வரையில் பெருமளவு பயன்படுத்துபவர்களுக்கும் குடும்ப அட்டை வைத்திருப் போருக்கும் கிலோ ஒன்றுக்' ரூ. 6 வீதம் மாநிலம் முழுவதும் சர்க்கரை கிடைக்கச் செய்யப்பட்டது. இச்செயல் அவைக்கு மகிழ்ச்சி அளிக்கக் கூடிய ஒன்றாகும்.

9. மண்ணெண்ணெய் விநியோகம் :

விளக்கு எரிப்பதற்கும் சமைப்பதற்கும் பயன்படுகிற ஓர் இன்றியமையாப் பொருள் மண்ணெண்ணெய். உலக நாடுகள் அனைத்திலும் பெட்ரோலியம் பொருட்கள் பற்றாக்குறையாக உள்ளன. 1979 ஆம் ஆண்டில் மண்ணெண் ணெய் பற்றாக்குறை ஏற்பட்டபோது மண்ணெண்ணெயைப் பயன்படுத்தும் மக்களுக்கு அதனைக் கிடைக்கச் செய்வதற்காக பொது விநியோக முறையின்கீழ் மண்ணெண்ணெயை வழங்க அரசு முடிவு செய்தது. பின்வரும் அளவில் மாநிலத்தில் குடும்ப அட்டை வைத்திருப்போருக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது.

1981 ஏப்ரல் 25]

குடும்ப அட்டை ஒன்றுக்கு
திங்கள் ஒன்றுக்கு லிட்டர்.

1. சென்னை மாநகரமும், அதன் புறநகர்ப் பகுதியும், மாவட்டத் தலைமையிடங்கள் உள்ள நகராட்சிகளிலும்	10
2. ஏனைய நகராட்சிகள்	6
3. நகரியங்கள் மற்றும் பேரூராட்சிகள்	5
4. ஊராட்சிகள்	3

பொது விநியோக முறையின்கீழ் மண்ணெண்ணெய் வழங்கப்படுவது தவிர தங்கள் பிழைப்பிற்கு இத்தொழிலையே நம்பியுள்ள கை வண்டிக்காரர்களுக்கும் தனிப்பட்ட வணிகர்களுக்கும் விற்பனை செய்வதற்காக ஒவ்வொரு வேலை நாளுக்கும் சென்னை நகரிலும் அதன் புறநகர்ப் பகுதியிலும் உயரளவு 100 லிட்டர் வரையிலும் வெளியூர்களில் 50 லிட்டர் வரையிலும் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. தொழிற்சாலைகள், அச்சகங்கள், உணவகம் நடத்துபவர்கள், மாணவர் விடுதிகள் முதலியன போன்ற பெருமளவு மண்ணெண்ணெய் பயன்படுத்தும் நிறுவனங்களின் தேவைகளும் நிறைவு செய்யப்படுகின்றன. தற்போது வழங்கப்படும் அளவின்படி பார்த்தால், மாநிலத்தில் மொத்த மண்ணெண்ணெய் தேவை மாதம் ஒன்றுக்கு சுமார் 44,000 டன்களாகும். ஆனால் இந்திய அரசு திங்கள் ஒன்றுக்கு 27,000 முதல் 30,000 டன்கள் வரை இம்மாநிலத்திற்கு ஒதுக்கி வருகிறது. இம்மாநிலத்திற்குத் திங்கள் ஒன்றுக்கு குறைந்தளவு 30,000 டன்களாவது ஒதுக்குமாறு இந்திய அரசை இவ்வரசு வலியுறுத்தி வருகிறது.

மண்ணெண்ணெய் விநியோகத்தில் மொத்த விற்பனை நிலையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தையும் கூட்டுறவுச் சங்கங்களையும் சேர்த்துக் கொள்வதன் அவசியம் குறித்து இவ்வரசு இந்திய அரசிடம் வற்புறுத்திக் கூறி வருகிறது. இது பொது விநியோக முறையின்கீழ் மண்ணெண்ணெய் விநியோகம் செய்வதற்கு மிகவும் அவசியமாக உள்ளது. எண்ணெய் நிறுவன வணிகர்களாக நியமிக்க ஆதி திராவிடர், பழங்குடியினர் ஆகியோருக்காக ஒதுக்கப்படும் 25 சதவீதம் பங்கீட்டளவு நீங்கலாக எஞ்சிய அளவை விற்பனை செய்வதற்காக நுகர்பொருள் வாணிபக் கழகத்தை நியமிக்க முதலில் இந்திய அரசு ஒப்புக் கொண்டது. பின்னர், எண்ணெய் நிறுவனங்களின் வணிகர்களை நியமிப்பது குறித்து தனது கருத்தை இந்திய அரசு மாற்றிக் கொண்டு பொதுத்துறை நிறுவனங்களை அல்லது கூட்டுறவு சங்கங்களை வணிகர்களாக நியமித்திட பங்கீட்டளவு எதனையும் அது ஒதுக்கவில்லை. இந்த நிறுவனங்

களும் மண்ணெண்ணெயை விற்பனை செய்யும் உரிமையைப் பெறுவதற்காக ஏனைய தனிப்பட்ட நபர்களுடன் போட்டியிட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே மத்திய அரசு தனது முடிவினை மறு ஆராய்வு செய்து மண்ணெண்ணெய் மொத்த விற்பனையாளர்களாக தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தையும் கூட்டுறவுச் சங்கங்களையும் நியமிக்குமாறு இவ்வரசு வேண்டியுள்ளது. மண்ணெண்ணெய் மொத்த விநியோகம் செய்யும் வியாபாரிகளுக்கான காலியிடங்களில் எப்பிரிவினருக்கும் ஒதுக்கப்படாத பொதுப் பங்கீட்டளவில் 30 விழுக்காடு இடங்களை விளம்பரமின்றி மாநில நிறுவனங்களுக்கு அளிக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

மண்ணெண்ணெய் விநியோகம் சமையல் வாயு விநியோகத்துடன் தொடர் புடையதாயிருப்பதால், சமையல் வாயு விநியோகம் செய்வதில் மாநில அரசையும் சேர்த்துக்கொள்ளுமாறு இந்திய அரசிடம் இவ்வரசு வற்புறுத்தி வருகிறது. சமையல் வாயு வழங்குவதில் பற்றாக்குறையோ தாமதமோ ஏற்படும்போது, அதைப் பயன்படுத்துபவர்களுக்கும் மண்ணெண்ணெய் தேவைப்படுவதால், திடீரென அதன் தேவை அதிகரிக்கிறது. ஆனால் இது குறித்து, நமது கோரிக்கைகளுக்கு மத்திய அரசிடமிருந்து இதுவரை ஆதரவான பதில் கிடைக்கவில்லை.

10. சமையல் எண்ணெய்கள் :

தமிழ்நாட்டில் கடலை எண்ணெய் மட்டுமே உபரியாக உற்பத்தியாகிறது. நல்லெண்ணெய்க்கும், தேங்காய் எண்ணெய்க்கும் இங்கு பெரிதும் பற்றாக்குறை உள்ளது. கடலை எண்ணெய்க்கும்கூட இம்மாநிலத்தில் மாரிக்காலப் பயிர் விளைச்சல் பாதிக்கப்பட்டுவிட்டதால், கடலை எண்ணெய் கிடைப்பது பெரிதும் கடினமாயுள்ளது. ஆனால் குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கு கிலோகிராம் ஒன்றுக்கு ரூ. 8.25 வீதம் இறக்குமதி செய்யப்பட்ட 'பாமோலின்' எண்ணெய், பொது விநியோக முறையில் வழங்குவதனால் இந்நிலை ஓரளவிற்குச் சீர்பட்டுள்ளது. 1979 ஆகஸ்ட் முதல் 1981 சனவரி வரை மத்திய அரசு, 24,000 மெட்ரிக் டன்கள் எண்ணெய் ஒதுக்கீடு செய்துள்ளது. மத்திய அரசு, திங்களொன்றுக்கு 2,500 முதல் 3,000 டன்கள் வரை ஒதுக்கீடு செய்து வருகிறது. திங்களொன்றுக்கு குறைந்தது 5,000 டன்களாவது வழங்க வேண்டுமென நாம் வலியுறுத்தி வருகிறோம். 1981 மார்ச் மாதத்திற்கு 3,50(மெட்ரிக் டன்கள் அளவு எண்ணெய் மட்டுமே ஒதுக்கீடு செய்துள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட 'பாமோலின்' எண்ணெயின் பயன் குறித்துப் பொதுமக்களுக்கு எடுத்துச் சொல்ல மாநில அரசு மேற்கொண்ட பல்வேறு முயற்சிகளின் பயனாகவும், அதன் விலை மலிவு காரணமாகவும் 'பாமோலின்'

1981 ஏப்ரல் 25]

எண்ணெயைப் பொதுமக்கள் தற்போது பெருமளவில் வாங்குகின்றனர். குடும்ப அட்டை வைத்திருப்பவர் அனைவரின் தேவைகளுக்கும் இவ்வொதுக்கீடு போதுமானதாக இல்லை. நடப்பு ஆண்டு மே மாதம் முதல், திங்களொன்றுக்கு, அட்டை ஒன்றுக்கு ஒரு கிலோ வீதம் வழங்கப்படும். 'பாமோலின்' எண்ணெய் வழங்கப்படுவதால், வெளி அங்காடியில் சமையல் எண்ணெய்களின் விலை, அதுவும் குறிப்பாக கடலை எண்ணெயின் விலை ஏறாமல் தடுப்பதற்கு மிகவும் உதவியாயுள்ளது.

III : கிராம நியாய விலைக் கடைகள்.

11. வருவாய்க் கிராமம் ஒவ்வொன்றிலும் ஒரு நியாய விலைக் கடை திறப்பதற்கு அரசு எடுத்த முடிவினையொட்டி, கிராம மக்களுக்கு இன்றியமையாப் பொருட்கள் வழங்குவதை உறுதி செய்வதற்காக, எல்லா கிராமங்களிலும் நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன. கிராம மக்களின் நலனைக் கருதி இக்கடைகள் நடத்துவதில் ஏற்படும் இழப்பை ஈடு செய்வதற்காக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், ஆண்டொன்றுக்கு சுமார் நாலு கோடி ரூபாய் உதவித் தொகையை அரசு வழங்கி வருகிறது. நியாய விலைக் கடைகளில் பணி செய்பவர்கள் தற்செயல் விடுப்பில் செல்லும்போது, அக்கடைகள் மூடப்படுவதாகப் புகார்கள் வந்தன. குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கு எல்லா நாட்களிலும் பொருட்களை வழங்கும் பொருட்டு, 1,000 கடைகளுக்கு இருபது பதிலிப் பணியாளர்கள் வீதம் நியமிக்குமாறு ஆணையிடப்பட்டுள்ளது.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

இந்த நியாய விலைக் கடைகள் நெடுந் தொலைவிலுள்ள கிராமங்களிலும் கூட செயல்படுகின்றன. இக்கடைகள் தினமும் திறக்கப்பட்டு, குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கு விநியோகம் செய்வதற்காகப் போதுமான அளவில் பொருட்கள் இருப்பில் வைக்கப்படுகின்றன என்பதை உறுதி செய்வதற்காக, கடைகள் தொடர்ந்து மேற்பார்வை செய்யப்படுகின்றன. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம், கூட்டுறவுச் சங்கங்களால் நியமனம் செய்யப்பட்ட தல அதிகாரிகள் தவிர, உணவுப்பொருள் வழங்கு துறை, வருவாய்த் துறை அதிகாரிகள், வளர்ச்சிப் பணி அதிகாரிகள், கிராம சேவிகள் போன்ற பிற உள்ளூர் அதிகாரிகளும் கிராமங்களைப் பார்வையிட வரும்போது இந்நியாய விலைக் கடைகளுக்குச் சென்று பார்வையிட்டு, இக்கடைகள் செம்மையாக நடைபெறுகின்றனவா என்றும், இன்றியமையாப் பொருட்கள் இக்கடைகளில் உள்ளனவா என்றும் தெரிவிக்கும்படியும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

[1981 ஏப்ரல் 25

IV. வணிகத்தை முறைப்படுத்தும் ஆணைகள்.

12. பொதுமக்கள் அனைவருக்கும், இன்றியமையாப் பொருட்களை நியாய மான விலையில் சமமாகப் பகிர்ந்தளிப்பதை உறுதி செய்யும் நோக்குடன், நெல், அரிசி, சர்க்கரை, பருப்பு வகைகள், வனஸ்பதி, வேர்க்கடலை, கடலை எண்ணெய், கோதுமை, கோதுமைப் பொருட்கள், மண்ணெண்ணெய் ஆகிய பொருட்களின் வணிகத்தை ஒழுங்குபடுத்தவும், முறைப்படுத்தவும் இந்திய அரசின் ஒப்புதலுடன் 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ், வணிகத்தை முறைப்படுத்தும் ஆணைகளை மாநில அரசு பிறப்பித்துள்ளது. முறைப்படுத்தும் இந்த ஆணைகளின்கீழ், உரிமம் வழங்கும் முறை வரையறுக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இன்றியமையாப் பொருட்களில் வணிகம் செய்ய விரும்பும் ஒவ்வொருவரும், சம்பந்தப்பட்ட கட்டுப்பாட்டு ஆணையில் வரையறுக்கப்பட்ட அளவைவிட அதிக அளவில் வணிகம் செய்தால் அவர் உரிமம் ஒன்றைப் பெற வேண்டும். பதுக்கலையும், அதனால் உருவாகும் செயற்கைப் பற்றாக்குறை நிலையையும், அதன் விளைவாக ஏற்படும் விலை யேற்றத்தையும் தடுக்கும் பொருட்டு, நெல், அரிசி, சர்க்கரை, சமையல் எண்ணெய், பருப்பு வகைகள் போன்ற பொருட்களை எந்த அளவிற்கு வைத்திருக்கலாம் என்பது வரையறுக்கப்பட்டுள்ளது.

உணவுப் பொருள் வழங்கு துறையின் செயல் பிரிவும், அத்துறையைச் சேர்ந்த புலனாய்வுப் பிரிவும் உரிமதாரர்களின் கடைகளை திடீரெனச் சோதனையிடுகின்றனர். அவர்கள் கணக்குகளை ஆய்வு செய்து, பொருட் களை நேரடியாகச் சரிபார்த்து முறைகேடுகள் கண்டறியப்படும் போது நடவடிக்கை எடுக்கின்றனர். 1977 ஆம் ஆண்டு தமிழ்நாடு இன்றியமையாப் பொருட்கள் (இருப்புகளையும், விலைகளையும் விளம்பரப்படுத்தல், கணக்கு களை எழுதி வைத்தல்) ஆணையின்படி இருப்பையும் அவற்றின் விலை களையும் பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக, ஆணையின் விவர அட்ட வணையில் குறிப்பிடப்பட்ட பொருட்களின் இருப்பு, அவற்றின் விலை விபரம் ஆகியவை எழுதப்பட்ட அறிவிப்புப் பலகை ஒன்றை கடைக்கு முன்னால், எல்லோரும் காணக் கூடிய ஓரிடத்தில் வணிகர்கள் வைத்து வர வேண்டும். நுகர்பொருள் குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகளும், உணவுப் பொருள் வழங்கு துறை அதிகாரிகளும் இதனைச் செயல்படுத்துகின்றனர். மண்ணெண் ணெய், சர்க்கரை ஆகியவை நீங்கலாக மற்ற பொருட்கள் அனைத்திற்கும் ஒரே உரிம முறை கொண்டுவர அரசு தீர்மானித்துள்ளது. இது குறித்து இந்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. விரைவில் ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

1981 ஏப்ரல் 25]

V. அரிசி அரைவை ஆலைகளை நவீனமயமாக்குதல்.

13. அரிசி அரைவை ஆலை உரிமையாளர்கள் தங்களது அரிசி ஆலைகளை சட்டப்படி நவீனமயமாக்க வேண்டும். மத்திய அரசின் தற்போதைய ஆணைகளின்படி, இருக்கின்ற அரிசி அரைவை ஆலைகள் நவீனமயமாக்கு வதற்கு அனுமதிக்கப்பட்ட காலவரையறை, 1975 ஆம் ஆண்டு ஏப்ரலுக்கு முன்பாக ஏற்படுத்தப்பட்ட ஒரே அரைவை இயந்திரம் உள்ள ஆலைகள் நீங்கலாக ஏனைய ஆலைகளைப் பொறுத்தவரை 30—4—1981-க்குள்ளும் ஒரே அரைவை இயந்திரத்துடன் ஏற்கெனவேயுள்ள ஆலைகளை பொறுத்த வரை 6—9—1981-க்குள்ளும் முடிவடைந்துவிடும். அரிசி அரைவை ஆலை களை நவீனமயமாக்குவதற்குரிய காலக் கெடுவை மேலும் நீட்டிக்குமாறு மத்திய அரசுக்கு இந்த அரசு பரிந்துரை செய்துள்ளது.

இம்மாநிலத்தில் உள்ள சுமார் 10,000 அரிசி ஆலைகளில் சுமார் 900 அரிசி ஆலைகள் மட்டுமே நவீனமயமாக்கப்பட்டுள்ளன. அரிசி அரைவை ஆலை களை நவீனமயமாக்கும் பணியை விரைவுபடுத்தும் பொருட்டு ஆலை உரிமை யாளர்களுக்கு வழிகாட்டவும், நிதி முதலியவற்றைப் பெற உதவி செய்யவும், குழு ஒன்றை மாநில அரசு அமைத்து அக்குழுவில் மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கங்களையும் உறுப்பினர்களாக சேர்த்துக்கொண்டுள்ளது. இக்குழு இதுவரை ஐந்து கூட்டங்களை நடத்தி அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர்களையும் அவரவர் சங்கங்களில் உறுப்பினராக உள்ள ஆலை அதிபர்களிடம் அவர்களின் ஆலைகளை இனியும் காலதாமதமின்றி நவீனமயமாக்க வேண்டிய அவசியத்தைப் பற்றி எடுத்துக் கூறுமாறு இக்குழு கேட்டுக் கொண்டுள்ளது. நெல்லிலிருந்து அதிக அளவு அரிசியைப் பெற அரிசி அரைவை ஆலைகளை நவீனமயமாக்குவது மிக அவசியமாகும்.

VI. விலைவாசி நிலைமை.

14. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், மழையும் பயிர் விளைச்சலும் வழக்கமான அளவிற்கு உள்ள ஆண்டில், தானியங்கள், கடலை எண்ணெய், கரும்பு, மிளகாய் ஆகியவை ஓரளவு உபரியாகவும், ஏனைய இன்றியமையாப் பொருட்கள் பற்றாக்குறையாகவும் இருக்கும். ஆனால் நடப்பாண்டில், வறட்சி நிலைமை காரணமாகப் பல மாவட்டங்களில் பயிர் சாவியாகிவிட்டது. தவிர, சரக்கு ரயில்பெட்டிகள் கிடைப்பதில் இடர்ப்பாடு, சாலை மூலம் சரக்குகள் ஏற்றிச் செல்வதற்காகும் அதிகச் செலவு, உபரியாக உள்ள மாநிலங்களில் ஊகவாணிகம் நிலவுதல், பயிர் விளைச்சலுக்கு ஆகும் உயரிய செலவுகள், உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் சில மாநிலங்கள் விதிக்கும் கட்டுப்

பாடுகள் ஆகியவை காரணமாக இன்றியமையாப் பொருட்களின் விலைகள் பொதுவாக உயர்ந்துவிட்டன. எனினும், இம்மாநிலத்தைப் பொறுத்த வரையில் இருப்புநிலை போதுமானதாகவே இருக்கிறது.

அரிசி :

1979 ஆம் ஆண்டு ஜூன் முதல் நவம்பர் வரையிலான கால அளவில் அரிசி உற்பத்தி 34.67 இலட்சம் டன்களாக இருந்தது. 1980 ஆம் ஆண்டில் ஜூன் முதல் நவம்பர் வரையிலான கால அளவில் அரிசி உற்பத்தியளவு 32.05 இலட்சம் டன்களாகக் குறைந்துவிட்டது. குறுவைச் சாகுபடி மனநிறைவளிக்கும் வகையில் இருந்தபோதிலும், கணிசமான ஒரு பகுதி கேரளத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுவிட்டது. அதே நேரத்தில் ஆந்திர மாநிலத்திலிருந்து இம்மா நிலத்திற்கு வழக்கம்போல் வரவேண்டிய அரிசி, அங்குள்ள விலை உயர் வினாலும், போக்குவரத்து அனுமதிச் சீட்டு வழங்குவதில் உள்ள கட்டுப் பாட்டினாலும், போக்குவரத்து இடர்ப்பாடுகளினாலும் வரவில்லை. வழக்கமாக அரிசி உபரியாக இருக்கும் வட ஆற்காடு, செங்கல்பட்டு, தென் ஆற்காடு மாவட்டங்களில் நெற்பயிர் விளைச்சல் தவறிவிட்டதும், வெளி அங்காடியில் அரிசி விலை ஏற்றத்திற்கு மற்றொரு முக்கிய காரணமாகும். மாநிலத்தில் சில பகுதிகளில் வறட்சி நிலைமை நிலவுகிறது. இவையும் அரிசி விலை ஏற்றத் திற்குக் காரணங்களாகும். அதன் விளைவாக, கடந்த ஆண்டில் கிலோ ரூ. 2 ஆக இருந்த புழுங்கல் அரிசி (நடுத்தரம்) இப்போது ரூ. 2.80 வரை விற்கப் படுகிறது. வெளிச்சந்தை விலை அதிகமாக உள்ளபோதிலும் சாதாரண ரக அரிசி கிலோ ரூ. 1.75 என்கிற மிகக் குறைந்த விலையில் பொது விநியோக ஏற்பாட்டின் மூலம் வழங்கப்படுகிறது. பொது விநியோக முறையில் வழங்கப் படும் அரிசி விலைகள் 1—2—1981 முதல் பின்வருமாறு உயர்த்தப் பட்டுள்ளன —:

ரகம்.	கிலோ ஒன்றுக்கு ரூபாய்.
(1)	(2)
சாதாரண ரகம்	1.75
சன்ன ரகம்	2.00
மிகச் சன்னரகம்	2.15

1981 ஏப்ரல் 25]

அரிசி விலை உயர்ந்ததாலும், சாகுபடி செலவுகள் அதிகரித்ததாலும் பயிர்கள் சாவியடைந்ததாலும் கடந்த ஆண்டில் கிலோ ரூ. 1.25 என விற்று வந்த சிறு தானியங்களின் விலைகள் தற்போது கிலோ ஒன்றுக்கு ரூ. 1.80 என விற்கப்பட்டு வருகின்றன.

கோதுமை :

1980 பிப்ரவரியில் வெளி அங்காடியில் கிலோ ரூ. 1.80 ஆக இருந்த கோதுமை தற்போது ரூ. 2.15 ஆக உள்ளது. கோதுமை விளைச்சல் தவறியதாலும், வட இந்திய மாநிலங்களிலிருந்து, கோதுமையைக் கொண்டுவர சரக்கு ரயில் பெட்டிகள் கிடைப்பதில் இடர்ப்பாடுகள் இருப்பதாலும் இவ்வாறு விலை உயர்ந்துவிட்டது. பொதுவிநியோக முறையில் வழங்க மத்திய அரசு நடப்பு ஆண்டு ஏப்ரல் திங்களுக்கு 4,000 டன்கள் கோதுமை ஒதுக்கீடு செய்துள்ளது. கோதுமை உருளை மாவு அரைவை ஆலைகளுக்கு ஒதுக்கப்படும் கோதுமையின் அளவு மாதம் ஒன்றுக்கு 65,000 மெட்ரிக் டன்கள் என்றிருந்தது, இப்போது 30,000 மெட்ரிக் டன்களாகக் குறைக்கப்பட்டுள்ளது.

பருப்பு வகைகள் :

பருப்பு வகைகளைப் பொறுத்தவரையில் இம்மாநிலம் மொத்தம் 5.35 இலட்சம் டன்கள் அளவிற்குக் கீழ்க்கண்டவாறு பற்றாக் குறையாக உள்ளது.

பருப்பின் பெயர்.	தேவை.	உற்பத்தி.	பற்றாக் குறை.
(1)	(2)	(3)	(4)
	(இலட்சம் டன்களில்.)		
1. துவரம் பருப்பு ..	2.00	0.16	1.84
2. உளுத்தம்பருப்பு ..	1.50	0.34	1.16
3. பச்சைப் பருப்பு ..	0.50	0.11	0.39
4. கடலைப் பருப்பு ..	2.00	0.04	1.96
		மொத்தம் ..	5.35

[1981 ஏப்ரல் 25

இவ்விதமாக எல்லா வகையான பருப்பு வகை உற்பத்தியிலும் தமிழ்நாடு மிகவும் பற்றாக்குறையாக உள்ளது. இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், உத்தரப்பிரதேசம், மகராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம் போன்ற பருப்பு உற்பத்தி செய்யும் வடமாநிலங்களையே நமது மாநிலம் நம்பியுள்ளது. அம்மாநிலங்களில்கூட பயிர் விளைச்சல் தவறிவிட்டது. இதனால் அம்மாநிலங்களில் விலை மிகவும் உயர்ந்துள்ளது. தவிர, போக்குவரத்துச் செலவு அதிகரித்துள்ளதாலும், போதிய அளவு சரக்கு ரயில் பெட்டிகள் கிடைக்காததாலும், வெளி அங்காடியில் பருப்பு வகைகளின் விலைகள் உயர்ந்துள்ளன.

துவரம் பருப்பின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 5.35 வரை விற்கிறது. கடந்த ஆண்டின் விலையை விட இது கிலோவுக்கு 70 காசு அதிகம். உளுத்தம் பருப்பு கிலோ ஒன்றுக்கு ரூ. 4.45 வரை விற்கிறது. கடந்த ஆண்டின் விலையை விட இது 25 காசு அதிகம். பச்சைப் பருப்பு கிலோவுக்கு 60 காசு உயர்ந்து தற்போது ரூ. 5.45 வரை விற்கிறது. கடலைப் பருப்பு விலை, விளைச்சல் தவறியதாலும், உற்பத்தியாகும் மாநிலங்களில் ஊக வாணிகம் காரணமாகவும் கணிசமான அளவுக்கு உயர்ந்துள்ளது. முன்பு கிலோவுக்கு ரூ. 3.25 ஆக விற்ற இப்பருப்பு தற்போது ரூ. 5.35 வரை விற்கிறது. பருப்பு வகைகள் நீண்டநாள் இருப்பில் வைக்க ஏற்றவையல்ல என்றபோதிலும் அங்காடி விலையைக் காட்டிலும் குறைந்த விலைகளில் பருப்பு வகைகளை பொதுமக்களுக்குக் கிடைக்கச் செய்யும் பொருட்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும், கூட்டுறவுச் சங்கங்களும் குறைந்த அளவு வாங்கி விநியோகம் செய்தன.

சர்க்கரை :

நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளில் உற்பத்தியாகும் மொத்த சர்க்கரையில் 65 விழுக்காடு மத்திய அரசு லெவி சர்க்கரையாக எடுத்துக் கொள்கிறது. இச்சர்க்கரை, மத்திய அரசு நிர்ணயித்த விலையில் குடும்ப அட்டை வைததிருப்பவர்களுக்கு வழங்கப்படுகிறது. எஞ்சிய 35 விழுக்காடு உற்பத்தியை சர்க்கரை ஆலைகள் வெளி அங்காடியில் விற்க அனுமதிக்கப்படுகின்றன. அச்சர்க்கரைக்கு விலைக்கட்டுப்பாடு கிடையாது. 1981-82 சர்க்கரை ஆண்டில் கரும்பு விலையும் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டில் இதே மாதத்தில் விற்ற சர்க்கரை விலையைக் காட்டிலும் தற்போதுள்ள விலை அதிகமாயுள்ள போதிலும், 1980 நவம்பரில் சர்க்கரை கிலோ ரூ. 8.40 ஆக விற்று வந்ததைவிட இப்போது குறைவாகவேயுள்ளது. கடந்த ஆண்டில் வெளி அங்காடியில் சர்க்கரை கிலோ ரூ. 5.50 ஆக விற்கப்பட்டு வந்தது.

[1981 ஏப்ரல் 25

தற்போது வெளி அங்காடியில் சர்க்கரை கிலோ ரூ. 7.30 ஆக உள்ளது. வெளி அங்காடியில் சர்க்கரையின் விலையைக் கட்டுப்படுத்த, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம், சர்க்கரையை அதிக அளவில் பயன்படுத்து வோருக்கு கிலோ ரூ. 6.25-க்கு விற்று வருகிறது.

சமையல் எண்ணெய் :

தமிழ்நாட்டில் கடலை எண்ணெயைத் தவிர மற்ற சமையல் எண்ணெய்கள் மிகவும் பற்றாக்குறையாக உள்ளன. கடலை எண்ணெய் நமது மாநிலத்தில் ஓரளவு உபரியாக உள்ளது, ஆனால், மாரிக்காலப் பயிர் நம் மாநிலத்தில் சாவியாகி விட்டது. 1979 மழைக் காலத்தில் வணிக மதிப்பீட்டில் 2.27 இலட்சம் டன்கள் மணிலாப் பயறு விற்பதற்கு உபரியாக இருந்தது. ஆனால், 1980 மாரிக்காலத்தில் 1.31 இலட்சம் டன்கள் மட்டுமே விற்பனைக்கு வந்த உபரியென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது, கடந்த ஐந்து ஆண்டுகளில் மிகக் குறைந்த அளவாகும். 1980 மாரிக்காலத்தில் நம் மாநிலத்தில் வேர்க் கடலைச் சாகுபடி நல்ல விளைச்சலைத் தரவில்லை. நல்லெண்ணெயைப் பொறுத்த வரையில் நம் மாநிலம் எள்ளை இறக்குமதி செய்வதில் ஆந்திரப் பிரதேசம், இராஜஸ்தான் மற்ற வட இந்திய மாநிலங்களையே பெரிதும் நம்பி வருகின்றது. எள்ளை உற்பத்தி செய்யும் மாநிலங்களில் எள்ளின் விளைச்சல் நல்ல பலனைத் தராததால், நல்லெண்ணெயின் விலை உயர்ந்துள்ளது. தேங்காய் எண்ணெயைப் பொறுத்த மட்டில், நமது தேவை முழுவதும், கேரள மாநிலத்திலிருந்து நிறைவு செய்யப்படுகிறது. வேர்க்கருகல் நோய் காரண மாக அம்மாநிலத்தில் தென்னை நல்ல பலனைத் தரவில்லை. அதனால், அம்மாநிலத்திலுங்கூட, தேங்காய் எண்ணெயின் விலை மிக அதிகமாக உள்ளது. எண்ணெய் வித்துப் பயிர்கள் சாவியானதாலும், மாநிலத்திற்குப் போதிய அளவு பாமோலின் எண்ணெய் ஒதுக்காததாலும் சமையல் எண்ணெய்களின் விலைகள் ஆண்டு முழுவதும் ஏறுமுகமாகவே இருந்தன. கடலை எண்ணெயின் தற்போதைய நடப்பு விலை கிலோ ரூ. 14.10 ஆகும். இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூ. 3.75 அதிகமாகும். நல்லெண் ணெயின் நடப்பு விலை கிலோ ரூ. 14.45 ஆகும். இது கடந்த ஆண்டைவிட ரூ. 1.90 அதிகமாகும். தேங்காய் எண்ணெயின் நடப்பு விலை கிலோ ரூ. 19.85 ஆகும். இது கடந்த ஆண்டைவிட ரூ. 3.55 அதிகமாகும்.

1981 ஏப்ரல் 25]

இம்மாநிலத்தில் சமையல் எண்ணெயின் நிலவரம் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது :—

எண்ணெயின் பெயர்.	தேவைப்படும் அளவு.	கிடைக்கும் அளவு.	பற்றாக் குறை.
(1)	(2)	(3)	(4)
	(இலட்சம் டன்களில்.)		
1. கடலை எண்ணெய்	1.74	1.44	0.30
2. நல்லெண்ணெய்	0.96	0.59	0.37
3. தேங்காய் எண்ணெய்	0.30	0.15	0.15
		மொத்தம்	0.82

இப்பற்றாக்குறையை ஈடு செய்ய 1979 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் முதல் 1981 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் வரையில் பொது விநியோக முறையில் பாமோலின் எண்ணெய் கிலோ ஒன்றிற்கு ரூ. 8.25 வீதம் 20,018 டன் வழங்கப்பட்டது. பாமோலின் எண்ணெய் ஒதுக்கீட்டளவைக் கூடுதலாக்குமாறு நாம் மத்திய அரசைக் கேட்டுள்ளோம்.

உணவு துணைப் பொருட்கள் (நறுமணப் பொருட்கள்):

கடந்த ஆண்டில், ஒரு கிலோ மிளகாய் விலை ரூ. 7.26 ஆக இருந்தது. இவ்வாண்டில் அது கிலோ ஒன்றிற்கு ரூ. 8.10 வரை விற்கிறது. கடந்த ஆண்டில் ஒரு கிலோ புளியின் விலை ரூ. 5.30 ஆக இருந்தது. இவ்வாண்டில் அது ரூ. 6.50 வரை விற்கிறது. இம்மாநிலத்தில் ஆண்டொன்றுக்கு தேவைப்படும் புளியின் அளவில் சுமார் 70 விழுக்காடு பற்றாக்குறையாக உள்ளது. புளி விளையும் உபரி மாநிலங்களில் புளியின் விலை உயர்ந்துள்ளது. கொத்தமல்லிப் பயிர் விளைச்சல் தவறியதன் காரணமாகவும், இம்மாநிலத்தில் கொத்தமல்லி குறைந்த அளவு நிலப் பரப்பிலேயே பயிரிடப்பட்டிருப்பதாலும் கடந்த ஆண்டில் கிலோ ரூ. 4.70 ஆக இருந்த அதன் விலை தற்போது ரூ. 6.95 ஆக உயர்ந்துள்ளது.

15. உணவு விடுதிகளில் பண்டங்களின் விலை :

உணவு விடுதிகளில் விற்கப்படும் உணவுப் பண்டங்களின் விலைகள் உயர்ந்துள்ளன. இந்நிலை அரசுக்குப் பெரும் கவலை அளிப்பதாக உள்ளது. குறிப்பிட்ட சில உணவுப் பண்டங்களின் விலையைக் குறைக்க வாய்ப்பு

1981 ஏப்ரல் 25]

உள்ளது என்றும், உணவு விடுதி உரிமையாளர்கள் அரசின் இக்கருத்தை ஏற்று உணவுப் பண்டங்களின் விலையைக் குறைத்து விட வேண்டுமென்றும் அரசு அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளது. உணவு விடுதி உரிமையாளர்கள் சங்கம், 15—9—1980 ஆம் நாள் முதல், பின்வரும் உணவுப் பண்டங்களை குறைந்த விலைக்கு விற்பனை செய்யத் தாமாகவே முன்வந்தது.

	உணவு விடுதிகளின் வகைப்பாடு.		
	ஏ	பி	சி
	(காசுகள்.)		
இட்டலி	35	30	30
காப்பி	50	45	40
தேநீர்	35	30	25

அரசு நிர்ணயம் செய்துள்ள விலைக்கு மண்ணெண்ணெயும் அங்காடி விலையை விட குறைவான விலைக்குச் சர்க்கரையும் உணவு விடுதிகளுக்கு வழங்கப்பட்டன. 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களிலிருந்து மேற்சொன்ன உணவுப் பண்டங்களின் விலைகளை இச்சங்கம் தன்னிச்சையாக உயர்த்திய போது அதிகாரிகள் அவர்களோடு கலந்துரையாடி அவர்கள் முன்னர் விற்பதற்காக ஒப்புக் கொண்ட விலைக்கே பண்டங்களை விற்க வேண்டுமென்று வலியுறுத்தினர். ஆனால் உணவுவிடுதி உரிமையாளர்கள் சங்கம், விலையின் ஒரு பகுதியை மட்டுமே குறைத்து உள்ளது. இவ்வாறு, மேற்சொன்ன தாமாகவே முன்வந்து விற்பனை செய்வதற்கு ஒப்புக்கொண்ட குறைந்த விலைக்கு விற்பனை செய்யத் தவறிய உணவு விடுதிகளுக்கு குறைந்த விலைக்கு வழங்கப்பட்டு வந்த, இன்றியமையாப் பொருட்களை அவ்வாறு குறைந்த விலைக்குத் தொடர்ந்து வழங்குவது நிறுத்தப்பட்டு விட்டது. மேற்சொன்ன விலை வீதங்களைக் கடைப்பிடித்து வரும் உணவு விடுதிகளுக்கு இன்றியமையாப் பொருட்கள் தொடர்ந்து குறைந்த விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போதைய நிலையை அரசு கூர்ந்து கவனித்து வருகிறது. உணவு விடுதிகளில் உணவுப் பண்டங்கள் தொடர்ந்து அதிக விலைக்கு விற்கப்பட்டு வருமானால் பொது நலனைக் கருத்தில் கொண்டு உணவுப் பண்டங்களின் விலையை நிர்ணயம் செய்து ஆணையிட வேண்டிய கட்டாய நிலை அரசிற்கு ஏற்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1981 ஏப்ரல் 25

உணவுப் பொருள் வழங்குதுறையின் குற்றப் புலனாய்வுத்துறை.

16. உணவுப் பொருள் வழங்கு துறையின் குற்றப் புலனாய்வுத் துறை, காவல்துறைக் கூடுதல் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஒருவரின் தலைமையில் செயற்பட்டு வருகிறது. உணவுப் பொருட்களைப் பதுக்கல் செய்வதையும், கடத்தல் செய்வதையும் தடுக்கும் பொருட்டு திருச்சிராப்பள்ளியைத் தலைமை யிடமாகக் கொண்டு 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களிலிருந்து பதுக்கல் தடைத் தனிப் பிரிவு ஒன்று செயற்பட்டு வருகிறது.

1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட பல்வேறு கட்டுப்பாட்டு ஆணைகளை, குறிப்பாக அரிசி, சர்க்கரை, பருப்பு வகைகள், சமையல் எண்ணெய்கள் ஆகியவற்றின் இருப்பு அளவுகள் மற்றும் கணக்குகள் முதலியவற்றை எழுதி வருதல் தொடர்பான விதித் துறைகளை உணவுப் பொருள் வழங்கல் துறையின் குற்றப் புலனாய்வுத் துறைப் பிரிவு செயற்படுத்தி வருகிறது. பொது மக்களின் தகவலுக்காக பொருட்களின் விலைகள், கைவசமுள்ள பொருட்களின் இருப்புகள் ஆகிய வற்றைக் குறிப்பிட்டு அறிவிப்புப் பலகைகளை வணிகர்கள் வைத்து வருவதை உறுதி செய்யும் பொருட்டு பொருட்களின் விலைகள், அவற்றின் இருப்புகள் ஆகியவற்றை அறிவித்து வரவேண்டும் என்பதை இப்பிரிவு செயல்படுத்தி வருகிறது.

1980 ஆம் ஆண்டில் இப்பிரிவு 1,522 வழக்குகளைப் பதிவு செய்துள்ளது. இது, 465 இனங்களில் வழக்குகளைத் தொடர்ந்துள்ளது; இவற்றில் 255 வழக்குகள் தண்டனையில் முடிந்தன. ஆறு வழக்குகள் விடுதலையில் முடிந்தன. குற்றஞ்சாட்டப்பட்டவர் ஒருவர் இறந்து விட்டதால் ஒரு வழக்கு முடிக்கப்பட்டு விட்டது. ஏனைய வழக்குகள் அனைத்தும் புலனாய்வில் உள்ளன.

1980 ஆம் ஆண்டில் இப்பிரிவு, சுமார் 5 கோடி ரூபாய் மதிப்புள்ள பல்வேறு இன்றியமையாப் பொருட்களைக் கைப்பற்றியுள்ளது ; இச்சாதனை, 1964 ஆம் ஆண்டில் உணவுப் பிரிவு அமைக்கப்பட்டதிலிருந்து இதுவரை சாதித்த செயல்களில் மிகச் சிறப்பானதாகும்.

தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம்.

17. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் முழுவதும் மாநில அரசுக்குச் சொந்தமான ஒரு நிறுவனமாகும். இக்கழகம் 1972 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. உணவுப் பொருள் வழங்கு துறையிடமிருந்து இன்றிய

1981 எப்ரல் 25]

மையாப் பொருட்களைக் கொள்முதல் செய்தல், இருப்பு வைத்தல், விநியோகித்தல் போன்ற பணிகளை இக்கழகம் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டுள்ளது. மாநில அரசு விதிக்கின்ற லெவியின் கீழ் அல்லது தனது நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மூலம் ஆதரவு விலையில் வெளி அங்காடியில் நெல், அரிசி இருப்புகளைக் கொள்முதல் செய்து பொது விநியோக முறையைச் செயல்படுத்துவதற்காக அரிசியை வழங்குவதே தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் முக்கிய பணியாகும். நெல் அறுவடையும், பருவ மழையும் ஒரே காலத்தில் ஏற்படும் குறுவைப் பருவத்தில் விவசாயிகள் தங்களது விளை பொருட்களை கட்டுப்படியாகும் விலையில் விற்பதில் உள்ள இடையூறுகளைத் தவிர்க்கும் பொருட்டு இக்கழகம் தனது நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மூலமாக, விவசாயிகளிடம் இருந்து தஞ்சாவூர், தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் பெரும் அளவில் நெல்லைக் கொள்முதல் செய்கிறது. 1980 ஆம் ஆண்டு குறுவைப் பருவத்தின்போது இக்கழகம், சுமார் 80,000 டன்கள் நெல்லைக் கொள்முதல் செய்துள்ளது. இந்திய அரசு இம்மாநில அரசுக்கு மத்தியத் தொகுப்பிலிருந்து ஒதுக்கிய அரிசியையும் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் பெற்று வழங்கி வருகிறது. இக்கழகம், இந்திய உணவுக் கழகத்தின் இருப்பிலிருந்து சுமார் 1,75,000 டன்கள் அரிசியை இரயில் மூலமாகவும் சாலைப் போக்குவரத்து மூலமாகவும் ஆந்திர மாநிலத்திலிருந்து கொண்டு வந்தது. இக்கழகம், ஆந்திர நுகர் பொருள் வணிகக் கழகத்திடமிருந்தும் பச்சரியைக் கொள்முதல் செய்து, தனது "அமுதம்" விற்பனைக் கூடங்கள் மூலம் வெளி அங்காடியில் விற்கும் விலையை விடக் குறைந்த விலையில் விற்பனை செய்து வருகிறது. இந்த அரிசிக்கு வாடிக்கையாளர்களிடையே நல்ல வரவேற்பு உள்ளது. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் 1980 ஆம் ஆண்டில் பொது விநியோக முறையின்கீழ் 1.50 இலட்சம் டன்கள் அரிசியை விற்பனை செய்துள்ளது.

நெல், அரிசி மட்டுமின்றி, இக்கழகம், மாநில அரசின் மொத்த விற்பனை முகவராக லெவி சர்க்கரையையும் கொள்முதல் செய்து விநியோகித்து வருகிறது. இந்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ள லெவி சர்க்கரை இருப்புகளை விலை கொடுத்துப் பெற்று அவற்றை சர்க்கரை ஆலைகளிடமிருந்து மாநிலம் முழுவதுமுள்ள தனது சேமிப்புக் கிடங்குகளுக்கு எடுத்துச் சென்று பின்னர் சில்லறை நியாய விலைக் கடைகளுக்கு வழங்குகிறது. நீதிமன்ற ஆணைகளின் காரணமாக இக்கழகம், லெவி சர்க்கரைக்கு இந்திய அரசு வரையறுத்துள்ள விலைகளைவிட அதிக விலை கொடுத்துள்ளது. இந்த வகையில் 1980-81 ஆம் ஆண்டிற்கு மட்டும் இந்திய அரசிடமிருந்து சுமார் 736 இலட்சம் ரூபாய்

வரவேண்டியுள்ளது. லெவி சர்க்கரை மட்டுமின்றி இக்கழகம், அதிக அளவு சர்க்கரை பயன்படுத்துவோர்க்கும் குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கும் வழங்கப்படும் லெவி சர்க்கரைக்குக் கூடுதலாகத் தேவைப்படும் சர்க்கரையை விற்பனை செய்வதற்காக 1980-81 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட 15,020 டன்கள் சர்க்கரை உட்பட 42,000 டன்கள் அளவுக்கு வெளி அங்காடி சர்க்கரையை வாங்கியுள்ளது. இக்கழகம் வாங்கிய வெளி அங்காடி சர்க்கரையின் மதிப்பு சுமார் ரூபாய் 20 கோடி ஆகும். இக்கழகம் வெளி அங்காடி சர்க்கரையைப் போதிய அளவிற்கு முடையிருப்பில் வைத்திருந்ததால், தீபாவளி, பொங்கல் பண்டிகைக் காலங்களில் நாட்டின் பல பகுதிகளில் சர்க்கரை கிடைக்காதபோது இம்மாநிலத்தில் பொதுமக்களுக்குத் தேவையான சர்க்கரையை இவ்வரசால் வழங்க முடிந்தது. இக்கழகம், சிமிட்டி, மண்ணெண்ணெய், பாமோலின் எண்ணெய் போன்ற ஏனைய இன்றியமையாப் பொருட்களை வழங்கவும் தொடங்கியது. இந்த அரசு தொடர்ந்து செய்துவந்த வேண்டுகோளின் விளைவாக சென்னை மாநகரில் ஜார்ஜ் டவுன், கோபாலபுரம் பகுதிகளில் மண்ணெண்ணெய் விற்கும் மொத்த விற்பனையாளராக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தை, இந்திய எண்ணெய் நிறுவனம் நியமித்துள்ளது. இக்கழகம், 1980-81 ஆம் ஆண்டில் சுமார் 1.9 இலட்சம் டன்கள் சிமிட்டியைக் கொள்முதல் செய்து, அனுமதிச் சீட்டு வைத்துள்ளவர்களுக்கு வழங்கியுள்ளது.

இந்திய அரசு, பாமோலின் எண்ணெயை ஒவ்வொரு திங்களிலும் இம்மாநிலத்திற்கு ஒதுக்கி வருகிறது. இதனை தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம், மாநில அரசின் முகவராக பாரத வணிக நிறுவனத்திடமிருந்து இருப்புகளை வாங்கி, சில்லறைக் கடைகளுக்கு வழங்கி வருகிறது. 1980-81 ஆம் ஆண்டில், 1981 சனவரி வரையில், இக்கழகம் 9.6 கோடி ரூபாய் மதிப்புள்ள சுமார் 14,000 மெட்ரிக் டன்கள் "பாமோலின்" எண்ணெயை கொள்முதல் செய்து வழங்கி வந்துள்ளது. பாரத வணிக நிறுவனம் இவ்வெண்ணையை சென்னை துறைமுகத்தில் மட்டுமே வழங்கி வருகிறது. இதனைத் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் இம்மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் கொண்டு சென்று குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கு இக்கழகத்தின் நியாயவிலைக் கடைகள் மூலமும் வழங்கி வருவதோடு, கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தி வருகின்ற நியாய விலைக் கடைகள் மூலமும், வழங்கி வருகிறது.

1981 ஏப்ரல் 25]

சென்னை மாநகரில் விறகுப் பற்றாக்குறை ஏற்பட்டபோது, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் வனத் துறையிலிருந்து விறகை வாங்கி, அதனுடைய நியாய விலைக் கடைகள் மூலமாக விற்றது. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தைச் சேர்ந்த 32 நியாயவிலைக் கடைகள் விறகு விற்பனையில் ஈடுபட்டுள்ளன. இச்சில்லறை விற்பனைக் கடைகள் மட்டுமின்றி, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் பொது விநியோக முறையின்கீழ் 49 "அமுதம்" கடைகளையும் நடத்தி வருகின்றது. "அமுதம்" கடைகளில் ஒப்பனைப் பொருட்கள், நறுமணப் பொருட்கள் முதலியவை உட்பட எல்லாப் பொருட்களும் விற்பனை செய்யப்படுகின்றன. 1980-81 ஆம் ஆண்டுக் காலத்தில் நுகர்பொருள் வாணிபக் கழகம் ரூ. 75 இலட்சம் மதிப்புள்ள 2,750 மெட்ரிக் டன்கள் உளுந்து வாங்கியுள்ளது. மேலும் ரூ. 80 இலட்சம் விலை மதிப்புள்ள 2,000 மெட்ரிக் டன்கள் துவரம்பருப்பு வாங்குவதென திட்டமிட்டு அதில் இதுகாறும் சுமார் 1,000 டன்கள் துவரம்பருப்பைக் கொள்முதல் செய்துள்ளது.

நியாய விலைக் கடைகளுக்கு இன்றியமையாப் பொருட்களை வழங்கும் பொருட்டு அவற்றைச் சேமித்து வைப்பதற்காக இம்மாநிலத்தில் பல்வேறு பகுதிகளிலும் சேமிப்புக் கிடங்குகளை அமைக்க வேண்டியது அவசியம். தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் ரூ. 7.20 கோடி மதிப்புள்ள 110 சேமிப்புக் கிடங்குகளைச் சொந்தமாகக் கொண்டுள்ளது. அச்சேமிப்புக் கிடங்குகளின் சேமிப்புத் திறன் 2.06 இலட்சம் மெட்ரிக் டன்களாகும். கூடுதலாக 19,000 டன்கள் சேமிப்புத் திறன் கொண்ட 8 கிடங்குகளை ரூ. 76 இலட்சதம் செலவில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், 43,000 டன்கள் சேமிப்புத் திறன் கொண்ட 32 சேமிப்புக் கிடங்குகளை ரூ. 1.72 கோடி செலவில் கட்டுவதென இக்கழகம் முடிவு செய்துள்ளது. சேமிப்புக் கிடங்குகள் கட்டுவதற்காகும் செலவைத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இதுவரை தனது நிதியிலிருந்து மட்டுமே செலவிட்டுள்ளது.

நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம், கூட்டுறவுப் பிரிவிடமிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட பதின்மூன்று நவீன அரிசி ஆலைகள் உள்ளன. நுகர்பொருள் வாணிபக் கழகம் வாங்கும் நெல், நவீன அரிசி ஆலைகள் மூலமாகவும், தனிப்பட்ட அரிசி அரவை ஆலை முகவர்களின் ஆலைகள் மூலமாகவும் அரிசியாக மாற்றப்படுகிறது. நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கென கூடுதலாக நெல்லரைக்கும் திறன்கொண்ட ஆலையை அமைக்கும்

பொருட்டு, ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 180 இலட்சம் செலவில், நாளொன்றுக்கு 120 டன்கள் நெல்லரைக்கும் திறன் கொண்ட நவீன அரிசி ஆலை ஒன்றை அமைக்கும் செயற்குறிப்பு ஒன்றுள்ளது.

காவல்படைப் பணியாளர்கள், இயணைப்புத்துறைப் பணியாளர்கள் ஆகியோருக்கு இன்றியமையாப் பொருட்களைக் குறைந்த விலையில் வழங்கவும் முதியோர் ஓய்வூதியம் பெறுபவர்கள், விதவைகள், உடல் ஊனமுற்றோர் ஆகியோருக்கு இலவசமாக அரிசி வழங்கவும் மாநில அரசு அனுமதி அளித்துள்ளது. மேற்கூறிய அனைத்துத் திட்டங்களின்கீழ் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் இன்றியமையாப் பொருட்களை வழங்குகிறது. திங்கள் ஒன்றுக்கு இத்திட்டங்களின்கீழ் வழங்கப்படும் இன்றியமையாப் பொருட்களின் மதிப்பு சுமார் ரூ. 60 இலட்சங்களாகும்.

கிராமந்தோறும் நியாயவிலைக்கடை திறக்கும் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், திருநெல்வேலி, தஞ்சாவூர், தருமபுரி, தென்னாற்காடு மாவட்டங்களில் மொத்தம் 4,053 நியாய விலைக் கடைகளைத் திறந்து நடத்தி வருகின்றது. இக்கடைகள் மூலமாக, 1980-81 ஆம் ஆண்டு காலத்தில், 1980 டிசம்பர் வரையில் ரூ. 15.39 கோடி பெறுமான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இக்கழகம் 1973-74 முதல் 1977-78 வரை ஆதாயத்தில் நடைபெற்று வந்தது. நெல்லையும், அரிசியையும் முடையிருப்பில் வைத்திருந்ததாலும், மத்திய அரசு நிர்ணயித்த கொள்முதல் விலையைக் காட்டிலும் அதிக விலைக்கு நெல்லை சாகுபடியாளர்களிடமிருந்து வாங்கியதாலும், அரசு நிர்ணயித்த கட்டுப்படியாகக் கூடிய விலையைக் காட்டிலும் குறைந்த விலைக்கு அரிசியை விற்பனை செய்ததாலும் குறிப்பாக 1978-79 ஆம் ஆண்டிலிருந்து இழப்பு ஏற்பட்டது. 1978-79 ஆம் ஆண்டுக் காலததில் ஏற்பட்ட இழப்பு சுமார் ரூ. 995 இலட்சங்களாகும். 1979-80 ஆம் ஆண்டுக் காலத்தில், கழகத்தின் பணிகள் விரிவாக்கப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட இழப்பு 2.65 இலட்சங்களாகக் குறைந்தது. இதனால் ஏற்பட்ட மொத்த இழப்பு ரூ. 12.60 கோடியாகும்

1981 ஏப்ரல் 25]

IX. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்.

18. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 51 மையங்களில் சேமிப்புக் கிடங்குகளைப் பராமரித்து வருகிறது. சொந்தமாகக் கட்டப்பட்ட கிடங்குகளின் கொள்திறன் 1.97 இலட்சம் மெட்ரிக் டன்களாகும். 1980-81 ஆம் ஆண்டுக் காலத்தில், சுமார் 35,100 மெட்ரிக் டன்கள் கொள்திறனுடைய 13 சேமிப்புக் கிடங்குகள் கட்டும் பணியை மேற்கொண்டுள்ளது. 1981-82 ஆம் ஆண்டுக் காலத்தில் ரூ. 1.50 இலட்சம் செலவில் 18,600 மெட்ரிக் டன் திறனுடைய சேமிப்புக் கிடங்குகளைக் கட்டக் கருதியுள்ளது. இவ்வாறு சொந்தமாகச் சேமிப்புக் கிடங்குகளை வைத்திருப்பதோடு, 54,505 மெட்ரிக் டன்கள் திறனுடைய தனியார் சேமிப்புக் கிடங்குகளையும் வாடகைக்கு எடுத்துக் கொண்டுள்ளது. "ஸ்பிக்" நிறுவனம், சென்னை உரத் தொழிற்சாலை, இந்திய உணவுக் கழகம், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் ஆகியவற்றின் சேமிப்பு வசதித் தேவைகளையும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் நிறைவு செய்கிறது.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் ஆதாயத்தில் நடைபெறுகிற தென்பதை பின்வரும் விபரங்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.—

ஆண்டு.		சேமிப்புக் கட்டனமாகக் கிடைக்கும் வருமானம். (ரூபாய் இலட்சத்தில்.)	நிகர ஆதாயம் (ரூபாய் இலட்சத்தில்.)
1975-76	..	56.80	28.85
1976-77	..	62.01	18.52
1977-78	..	95.71	42.59
1978-79	..	99.94	38.63
1879-80	..	79.63	22.35

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1981 ஏப்ரல் 25

இக்கழகத்தின் 1979-80 ஆம் ஆண்டு வரையிலான கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டுள்ளன. சேமிப்புக் கிடங்குகளில் ஒழுங்கீனங்களும் முறைகேடுகளும் ஏற்படுவதைத் தடுக்கும் பொருட்டு, 1979, ஏப்ரல் முதல் சேமிப்புக் கிடங்குகளை அடிக்கடி திடீர் சோதனை செய்யும் நோக்கத்துடன், நிர்வாக இயக்குநரின் நேரடி கட்டுப்பாட்டில் ஒழுக்கக் கண்காணிப்பு ஆய்வுப் பிரிவொன்று தனியாக நியமிக்கப்பட்டுள்ளது. உணவு தானியங்களை அறிவியல் முறையில் சேமித்து வைப்பதற்கான வசதியை அளிப்பதன் மூலமாகத் தமிழ் நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் பயனுள்ள பணியாற்றி வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS
28 APR 1982